தேம்பாமாலை.

✠

சேசு மரி சூசை துணை.

தேம்பா மாலை.

இஃது
சங். வீரமாமுனிவர்செய்தருளிய
தேம்பாவணியிலிருந்து
எடுத்தசிலவிசேஷ பாகங்களும்
இன்னும் அவர் இயற்றிய
வெண்கலிப்பா, மாலை, தேவாரம்,
கலம்பகம், அந்தாதியும்
அடங்கியுள்ளது.

3-ம் பதிப்பு.

1929

Cath. Mission
Press,
Pondicherry.

புதுவை
மாதாக்கோவில்,
அச்சுக்கூடம்.

Imprimatur:

† ELIAS-JOSEPHUS,

Archiepiscopus.

Pudicherii, 15 Jan. 1929



PONDICHERY.

Imprimerie de la Mission Catholique.

இப்பிரபந்தத்தைப்
பிரசித்தப்படுத்தியவராற்

பாயிரம்.

மங்காவொளியோடு விளங்குங் கீர்த்திப்பெயர்பெற்ற வீரமாமுனிவர் செய்தருளிய தேம்பாவணியென்னும் நிகரற்றகாப்பியத்தி னினிமையைச்சுகிக்க அநேக ரத்தியந்தவாசைகொண்டிருந்தாலு மதனைவாங்க வவகாசம்போதாமையாலதனைப் படிக்குமின்ப மவர்களுக்குக் கிடையாததைக்கண்டிரங்கி யவ்வுத்தம காப்பியத்திலடங்கிய வுச்சிதமான பொருட்களிற் பிரதானமானவைகளைச்சேர்த் தித்தேம்பாமாலையைக் கோர்த்தோம். ஆயினு மிதனு லாத்துமவிரட்சண்ணியத்துக்குரிய ஞானப்பலனை விசேஷமாய்விரும்பி யாவர்க்கு மெய்ஞ்ஞான வுணர்வோ டின்பத்தைப் பெறுவிக்கத்தக்க நானுவித சரித்திரங்களையுஞ் சிறந்த வருணிப்புகளையும்விட்டு வேதபோதகங்களுந்தேவஸ்துதிகளு மடங்கிய செய்யுட்களைத் தெரிந்துகொண்டோம். ஆதலா லெல்லோருஞ் சத்திய வேதத்தைத் தெளிந்தறியவும்வேண்டும்போதெல்லாந் தேவதோத்திரங்களைப்பாடவு நன்மையுபயோக மாக விதனி விரண்டு பிரிவுண்டாம். தேவவாக்கியத்தி லுண்டாகிய ஞானப்பால் கவிகளினினிமையோடு யான்மாவி லூறும்பொருட்டுத் தேம்பாவணியிலிருக்கும் ஞானுபதேசப்பாட்டுகளைக் குறிப்பிடத்து வரிசைப்பிரகாரமாய் முதற்பிரிவிலேசேர்த்தோம்.

சர்வேசுரனையு மவதரித்த பரமநாதனையுந் தேவமாதாவையும் அர்ச். சூசையப்பனையுந் துதிப்பதற்குரிய திருப்பாடல்களை யிரண்டாம்பிரிவிலே கூட்டி யவைகளைப் பாடத்தக்க திருநாட்களையு மற்ற விசேஷ சமயங்களையுங் குறித்தோம். ஆயினுமொவ்வொருவ ரிஷ்டமான வெந்நேரத்திலு மவைகளைப்பாடுதலும் நலமாம்.

தேம்பாவணியின் மாட்சிமையு மினிமையு மலங்காரமு முத்தேசித் ததனைத்தக்கபடி படிப்பதற்கும் விரும்புவதற்கு மிப்பிரபந்தமே வழியாமென்றெண்ணுகிறோம்.

மீளவும் வீரமாமுனிவர் தாமே செய்தருளிய அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பாவும், அடைக்கலமாலையும், தேவாரமுந், திருக்காவலூர்க்கலம்பகமும், அன்னையழுங்கலந்தாதியும் யாவர்க்கு மதிக பிரயோசனமாக இத்தோடிணைத்துத்தருகின்றோம்.

தேம்பாவணி.

முதற் பிரிவு.

ஞானோபதேசத்துக்குரியபாடல்கள்.

கடவுள் வணக்கம்.

(27ம். படலம். 132, 133.)

தேமா, தேமா, கூவிளம், தேமா, தேமா, கூவிளம்.

ஆதியீறிரண்டிலோ யாசிலோயமைந்தமுப்
போதிலோயுறுப்பிலோய் பொற்பெலாமணிந்துளோய்
கோதிலோயெதிர்ப்பிலோய் கோவணங்குமொன்றுளோய்
நீதியாதிநீரொலா நீர்த்தணிந்தநாதனே.

உரை.— துடக்கமுடிவென் றிரண்டுமின்றி முக்குற்ற மின்றி முப்பொழுதின்றி யுறுப்புடலின்றிக் குறையொன் றின்றி யெதிர்நிகரின்றி யழகியயாவையு மணிந்தோய், வா ன்மேல்வணங்கப்படுவோய் நீதிமுத லெலாநன்மை யியல் பாகக்கொண்டநாதனே.

இங்குமங்குமெங்குமொன் றென் றுநின்றெருங்குளோய்
தங்குகின்றவென்குறை தாங்கிநீங்கிவீடிட
வங்கமொன்றியுற்றியே யங்குறுதுநானிவண்
பொங்குகின்றவின்பொடுன் பூம்பதங்கள்போற்றினேன்.

உரை. — எவ்விடத்துமொன்று யொவ்வோரிடத்து முழுதாய்நின்றகடவுளே யடியேன்கொண்ட தீவினை நீயேதா ங்கியறுத்தொழித் தென்னை வான் வீட்டிற்செலுத்தும்ப டியவதரித் துடலோடு மனிதனாய்ப்பிறந்தாயே, நீபிறந்த விடத் தடியேன் வரமாட்டா திங்கேநின்று மிக்கவின்பத் தோ டுன்பூந்திருவடியை வணங்குகின்றேன்.

ஒரே தெய்வமுண்டென்பதற்குறுதி.

(27ம். படலம். 151, 152, 153.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

குலநலமெனனுவாய்ந்த குணநலமுணராக்காவ
லிலநலம்விற்குமாத ரிழிப்படுநிலைவிற்கொப்ப
வலநலம்புணர்மெய்ந்நாதன் மாபுகழொருவனன்றிப்
பலநலம்பிரிந்ததேவர் பணிதல்பேதமையாமன்றே.

உரை.— உரிமையைப்பாரா தெல்லாரையும் வேண்டு மென்பது குலமுங்குணமும்பாராம லெவர்க்குந் தம்மழ கினைவிற்கு மொருகாவலில்லாத பொதுமகளிர் நீச நிலை விற்கொப்ப அளவிறந்தவல்லமையுடைய மெய்க்கடவுளு க்குரிய வியற்கையையாராயாம லொருவனன்றிப் பலதே வரைவணங்குவதே யறியாதபேதமையாமல்லவோ.

குருசிலர்க்கமைச்சர்வீரர் கொள்கையின்முதல்வர்சூழ்ந்து
வருசிலர்தேவரொன்னில் வழுவதோவென்னப்புல்லோர்
குருசிலர்காமந்தானுங் கோவுரிப்பணிவுஞ்சூழ்ந்து
வருசிலர்க்கிட்டகாலே வழுவன்றேவென்பர்சான்றோர்.

உரை.— அதற்கறிவீனர் அரசனைச்சூழ்ந்த மந்திரிமா ரும் படைவீரரும்போல முதல்வனைநிற்குங் கடவுளைச்சூ ழ்ந்த பலருண்டென் றவரைத் தேவரொன்றுவணங்கினற் குறையோவென்பார், அறிஞரோவென்றால் மந்திரிகளும் வீரர்களு மரசரொன்னும்பெயரிட் டரசர்க்குரிய வணக்க மு மவர்க்குச்செய்தாற் குற்றமல்லோவென்பார். ஆகை யால் முதற்கடவுளைச் சூழ்ந்தவ ருண்டாயினு மவரைத் தேவரொன்னவுந் தேவர்க்குரிய பூசைசெய்து வணங்கவு மொண்ணுதென்பதாயிற்று.

இரவலர்மாட்சியொப்ப வீடறிவின்மைகாட்டும்
புரவலர்சூழ்ந்தவைவேற் பொருனருமமைச்சர்தாமு
முரவலநாதன்றன்னு லுணரவுஞ்செயவும்வல்லாய்ப்
பரவலனூலும்வேலும் பரிசிலாதிழிவாமென்பார்.

உரை.— ஆயினுங் கடவுளுக்கு மந்திரிகளும் படைத்த லைவருமில்லை. அதேனெனில், அரசர் படைவீரரையு மந்

திரிகளையும் வைத்திருப்பது பெருமையெனும் பெயர்பெற்றதன்றிப் பலரிடத்திரப்போர் பெருமையதாகி யரசர்தங் கைத்திறத்தின்தன்மையைக்காட்டும் படைகளே, அவரொல்லாவற்றையு முணரா தறிவின்மையைக்காட்டு மந்திரிகளே. அளவிலாவல்லமையுள்ளகடவுளோவெனிற் றன்னுலெல்லாவற்றையு மறியவுஞ் செய்யவும் வல்லவனுகையி லவற்கு மற்றொருவ னுணர்வும் வேறு முதவியாகவுண்டென்னி லவற்கியலாம லிகழ்ச்சியாமே யென்பாரறிஞர்.

தெய்வத்துக்குரிய வாறிலக்கணவிளக்கம்.

(27ம். படலம். 156-165.)

விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

ஈறிலநன்மைநிறைவுமோர்குறைமுற் றின்மையுந்தொழத்தகுந் தெய்வ
மாறிலவியல்பேவேரிதாய்க்கிளைத்து வரும்பலசினையெனநூலோ
ராறிலக்கணங்களுரைத்தவையுள்ளோ னுண்டகையிலனலனென்றூர்
தாறிலசுடரைமைவரிந்தன்ன சாற்றுதும்புன்சொலாலவையே.

உரை.— மட்டின்றியெல்லாநன்மை நிறைவுமெல்லாக் குறையின்மையுமென் றிவ்விரண்டே யெவரும்வணங்கத் தகு மெய்க்கடவுட்குரிய மாறுதகுணமதாமே. அதுவேராகக்கொண்டு கிளைத்தபலகொம்புகளின்றன்மையா லிக்குணத்தைவிரித்து நூலோர் மெய்யானதேவனை யறிவதற்காறிலக்கணங்களைச்சொல்லி யவையெலா முடையோன் தேவனேயென்றூர், அவற்றுளொன்றாயினுங் குறைந் தெல்லாவற்றையு மில்லாதவன் தேவனல்லவென்றூர். ஆகையா லளவிறந்த கதிருளசூரியனை மையாலெழுதினாற்போல நானு மென்புற்சொல்லா லத்தேவாறிலக்கணங்களைச் சொல்லிக்காட்டுவேன்.

தன்வயத்தாதன்முதலிலனுதல் தகும்பொறியுருவிலனுதல்
மன்வயத்தெல்லாநலமுளனுதல் வயின்றொறும்வியாபகனுதல்

பின்வயத்தின்றியொருங்குடனனைத்தும் பிறப்பித்தகாரணனாதல்
பொன்வயத்தொளிர்வான்முதலெலாவுலகும் போற்றுமெய்யிறை
மையி னிலையே.

உரை.— தன்னாலாதலுந் துடக்கமின்றி யாதலுமைம் பொறிக்குரிய வுருவிலனாதலு நிலைபெற்ற சகலநன்மையு ளனாதலு மெங்கும்வியாபகனாதலுந் தன்னையல்லா தோருதவியின்றி யெல்லாவற்றையு மொருங்குடன் படைத்த வாதிகாரணனாதலுமென் றிவ்வாறிலக்கணங்கள் பொன்னொளிர் வானுலகுமுத லெவ்வுலகும்வணங்கத்தகு மெய்க் கடவுளின் தேவதத்துவமிதே.

மிக்கதுந்தன்னோடொப்பதுமில்லா மேன்மையேயிறைமையி
னியல்பா
யொக்கதுபடைத்தகாரணமின்றி யொருங்குதானாதலுநிலையே [னத்
தக்கதுந்தன்னாலன்றிமற்றொருவன் றடக்கையால்வரின்வழுவென்
தொக்கதுநீக்கித்தன்வயத்தாதல் சொல்லியவாறினுண்முதற்றே.

உரை.— தனக்குமிக்காருமின்றி யொப்பாருமின்றி நிற் குமேன்மையே தேவதத்துவத்தியல்பாகையி னுள்ளதேவ தத்துவத்தைப்படைத்த காரணமின்றிக் கடவுடானாதலு நிலைபெறுதலு முழுதுந்தன்னாலாகுமொழிய வேறொருவ னால்வந்தாற் கடவுளுக்கிதுகுறையா மென்றமையாற் கு றையொன்றில்லாத கடவுள் தானாயிருப்பது சொன்னவா றிலக்கணங்களின் முதலிதுவே.

அன்னவாய்தன்னையாக்கினோனில்லா தாயினகாலமுமில்லா
துன்னவாயாகிவந்தநாளுளதேற் றோற்றுவித்தியற்றினோனுளதா
மென்னவாய்ந்திணையாச்சிறப்புமெய்யிறையோ னின்றுளனன்றில
னென்று [ன்.
மன்னவாயென்றுந்தானுளனாகி மாய்ந்தநாளனைத்தையுங்கடந்தோ

உரை.— அங்ஙனங் கடவுளையாக்கின காரணமில்லா மையாற் கடவுளாகித்துவக்கினகாலமுமில்லை, இங்ஙனே யிராமற் கடவுள்தோன்றின வழியுண்டாகித் துவக்கிவ ந்தநா ளின்னதென்றிருந்தா லவனைத்தோற்றுவித்தகார ணமு முண்டாமென்றமையா னிகலரிலாச்சிறப்பிற்பொலி

ந்தகடவு ளிக்காலத்துள்ளு யக்காலத்திலனுயினுனென்று சொல்லாம னிலைகொண்டெக்காலத்துமுள்ளவனுகி யநாதியாகி யிறந்தகாலங்கள்யாவையுங் கடவாநின்றேன்.

எல்லையேயிடுமோர்காரணமிறைவற் கில்லதாலெல்லையுமில்லைக்
குல்லையேநின்ற‍ெவ்வோருறுப்பெல்லைகொண்டனவில்லதேல்வடிவு
மில்லையேயவ்வாறளவுளதன்றி யிடரிடுமுருவுடலென்ன
வல்லையேமிக்கோரளவிலாற்கில்லை. வழங்குமைம்பொறிக்குரிவடி
[வே.

உ-ை.— கடவுட்கொரு மட்டிடும்படி யவனைப்படைத்த காரணமில்லாமையா லவற்குமட்டுமில்லை, சிறுமைபெருமையென் றதற்கதற்குரியவளவோடு நின் றேருடலையுண்டாக்கும் பலவுறுப்புக ளொவ்வொன்று தன்னெல்லைக்குள்ளே நில்லாதேபோனுல் வடிவுமில்லை, ஆகையால் மட்டில்லாதகடவுளுக்குடலுமில்லை, அதுவுமன்றி யுடலென்னப்பட்டயாவுந் துன்பம்விளைவிக்குமாகையால் வல்லமைமிக் கொரு துயரில்லாதகடவுளுக் குடலுமில்லை, ஐம்பொறிக்குரிய வடிவுமில்லை, ஆகையா லாண்டவன் கண்ணுக்குரியசோதியுமல்ல, மூக்குக்குரிய வாசமுமல்ல, வாய்க்குரியசுவையுமல்ல, காதிற்குரியசத்தமுமல்ல. கைக்குரியகண்டிப்புமல்ல.

சீர்வளர்ஞானநீதியன்பூக்கந் திறன்றயையானந்தமற்றை
யேர்வளர்குன்றுநன்னருண்டாகி யெலா மனைத்தாகியொன்ருகி
நேர்வளர்பொலிவின்மிகைகுறைபன்மை நீப்பனநிறைப்பனவாகிப்
பேர்வளரிறைவற்குருவிதேயுரிய பிணைவிலவியல்பிதேயன்றே.

உ-ை.— மீளவுங்கடவுளுக்குச்செல்வமும் ஞானமுநீதியுமன்பும்வீரமுந் திறமுந்தயையு மானந்தமு மற்றவழகிய நன்மையெல்லா மொன்றுங்குறையாமலுளவாகி யிவையெலாமெல்லாமாகி யொன்றுமாகி யொருசீராய்த் தம்முட்பொலிந்து மிகாமலுங்குறையாமலும் பலவகையாயாகாமலு நிறைந்தனவாகிப் பெருமையிற்சிறந்த கடவுளுக்குரிய வுருவிதுவே, பலவைகூடிப் புணராம லொன்றுகிய வுரியவியற்கையிதுவே. இவ்வண்ணமே அவையெ

லா மெல்லாமாகி யொன்றுமாகி யென்றமையால் ஞானமேநீதியாய்த் தயையாய் மற்றவையாகவும் நீதியேஞானமாய்த் தயையாய் மற்றவையாகவு மித்தன்மைத்து மற்றக்குணங்களுமாகி யொவ்வொரு நன்மை யெல்லாநன்மையாகையிற் றம்முள்வேறுபடாம லெல்லா மொன்றுமாகையாற் பலநன்மைகள்கூடிப் புணரப்பட்டதோர் பொருள் கடவுளல்ல, இதுவுமதுவு மென்னாது பலகுணமுளவனென்னா தொருகுணமா யோரியல்பாய் நின்றான் கடவுள்.

எப்பொருளனைத்துமெவ்வுலகனைத்து மிடைவிடாநிறைப்படநின்
றே [யா
யப்பொருடொறுந்தான்குறுகிலா முழுநின் றப்பொருளழிவிறானழி
மெய்ப்பொருள்ஞானத்தனைத்தையுமுணர்ந்து விளைதிறனீதியான
டவி [நின்றான்.
மைப்பொருடளராச் சோதியாய்நிலையாய் மன்னனாயனைத்துமாய்

உரை.— மீளவுங் கடவுளெல்லாவுலகத்தினு மவ்வுலகங்களுள்ள வெல்லாப்பொருளினு மிராதவிடம்விடாமனிறையநின்றவனா யொவ்வொருகுறுகின வற்பப்பொருளாயினுந் தான்குறுகா ததிலேமுழுதுநின்றவனாய்த் தானிற்கும் பொரு ளழியுங்காலத் ததனோடு தானுமழியாதவனாய் மெய்ப்பொருளுணர்ந்தஞானத்தா லெல்லாவற்றையு மறிந்தவனா யளவிறந்ததிறத்தானு நீதியானு மெல்லாவற்றையு நடத்தினவனா யெல்லாவற்றிற்குந்தானே மயங்காதஞானத்தாற் சோதியுமாய்த் திறத்தானிலையுமாய் நீதியாலரசனுமாயனைத்துமாய்நின்றான் கடவுள்.

இருவகைவழங்குகாரணமின்றி யிலையவினையின்றிநாளின்றி
வருவகைகாட்டுமாத்திரையின்றி வரும்பொருளெண்ணளவின்றித்
திருவகைபொறித்தவிற்றுவீற்றனைத்துஞ் செய்தளித்தழிப்ப வல்
[லொருவ
னருவகைவயத்தோர்காரணமுதலா யாதியாயந்தமாய்நின்றான்.

உரை.— மீளவு முதற்காரணமுந் துணைக்காரணமு மென்றிரண்டின்றிப் பிரயாசமின்றி நேரமின்றிச் செய

த்தகும் பொருள்கட்குப் புறத்துமாத்திரையின்றிச் செய்த பொருள்கட் கெண்ணிக்கையு மளவுமின்றி யெழுதியதன் மைத் தழகிற்பொலிந்தனவாய் மட்டிலாவேற்றுமை தம் முளுள்ளனவா யனைத்தையுமுண்டாக்கி நிலைபெறக்காத் துப் பின்னரழிப்பதற்குத் தானொருவன்வல்லவனாகி யரிய முறைதிறத்துயர்ந்த முதற்காரணமாகி யெல்லாவற்றிற்குந் தானேயாதியுமாகி யந்தமுமாகிநின்றோன்கடவுள். (முத ற்காரணந் துணைக்காரணமென் றிரண்டாவன: தச்சர் க்குமரமே முதற்காரணம், வாச்சிப்பலவுந் துணைக்காரண மென்க.)

சீரியசவியமிக்கனவமான சிறப்பனதூயனயாவு
நீரியமுறையிலுளனவன்றேவ னீங்கிலொன்றவனலனாகிக்
காரியநலத்தவ்விலக்கணமாறுங் கடவுள்வாயுளவென்பாரவற்றொன்
றுரியவனப்பிற்றன்னிடத்தில்லா னாண்டகையவனலனன்றே.

உரை.— அங்ஙன நன்மையாயினவு மழகாயினவுமே லாயினவு மளவில்லாயினவுஞ் சிறந்தனவுங் குறையொன் றின்றித் தூயனவுமாகிக் கருதப்படு நல்லவையாவையு நீர்த்தமுறையோடுடையோ னவனேதேவனும், அவற்று ளொன்றாயினுங் குறைந்தா லவனே தேவனல்லவென்ற மையாற் சொன்னவாறிலக்கணங்கள் கடவுட்குண்டென் பார் நூலோர், அவ்வாறினுள்ளு மொன்றுகுறைய வெல் லாமில்லாதவ னவன்கடவுளல்லவென்க.

சீரொலாமொருவற்கியல்பெனவாகிச் சேர்த்தியபலர்க்கெவனுண்
[டா
மூரொலாமொருவனுளரசாய்மற் றொருவர்கேட்டொழுகுதலரசோ
வேரொலாமுளபற்றேவர்வேறாக விவற்குளதொன்றவற்கிலதாய்
[லென்போம்.
நீரொலாமிலவொவ்வொருவற்கொன்றின்றி நீர்த்தவோரிறையுமில்

உரை.— இவையெலா மிங்ஙனேயாகையி லாண்டவ னன்மையெல்லா மொன்றினையும் விடாம லுடையவனாக வேண்டியிருக்க வொருவற்கெல்லா மிருக்கையி லவனோ டு பலருண்டென்று சேர்த்திவைத்தா லவர்க்கென்னவுண்

டாம்? அவனே முதல்வனாகி மற்றவரவற்குக் கீழ்ப்படிந்து நடக்குந் தேவரென்பீராகினு நாட்டிலுள்ள வூரெலாம் பொதுவற வோரரசனுளாநிற்ப வவனேவலைக்கேட்டு நடக்கு மற்றவரு மரசரென்பீரோ வில்லையே, மீளவும் பலதேவருண்டாகி யொவ்வொருவற் கெல்லாநன்மையுளதாயினுந் தம்முள் வேறாகும்படி யோருநன்மையாயினு மிவற்குளவாகி யவற்கிலதாமாகையா லொவ்வொருதேவற்கொன்றுகுறையும், ஒருகுறையுளதெனி லொருவருந்தேவனல்ல, ஆகையிற் பலதேவருண்டென்று லொருமெய்யானதேவனு மில்லையென்னத்தகுமே. இப்படியிருக்கவொரோதெய்வமாத்திர முண்டென்பது நிச்சயம்.

—⁂—

உலகின்சிருஷ்டிப்பு.

(14ம். படலம். 93, 94, 95, 96.)

காய், காய், மா, தேமா, காய்.

செய்ப்பட்டவானுலகும்வான்மீன் றிங்கள் செஞ்சுடரு
மொய்ப்பட்டநீருலகுநீரிற்றுப்பும் முத்தணியு
மைப்பட்டபூவுலகும்புனலும்வெற்பு மைந்திணையுங்
கைப்பட்டவெவ்வுலகுஞ்செய்தானிந்நற் காதலனே.

உரை.— மேற்சொல்லிய அன்புள்ளநாதன்றானே சிவந்தவானத்தையும் வானத்தின்மீன்களையு மதியையுஞ் சூரியனையு மலைபொருதகடலையுங் கடலிலுள்ளபவளமுத்துக்களையு மழகியபூமியையு மதிலேயாறுகளையு மலைகளையுங் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென்னுமைந்திணையையு மற்றுள்ளவுலகங்கள்யாவையு முளவாக்கினன்.

சீராருமணியினமும்பைம்பூமுப்பா றிளையினமும்
பாராருங்கூழினமுங்கனியுந்தீந்தேன் பல்லினமு
மோராருநிறத்தினமுமின்புய்த்தாரு மிசையினமு
நீராரும் பூவுலகின்செல்வங்கூறு நிலையிலதே.

உரை.— இங்குள்ளசெல்வமணிவகையு நீர்ப்பூகொடிப்பூ கொம்பிற் பூவென்னு மூவிடத்துள்ளமலர் பலவகையு

நிறைந்தபலபயிர்வகையுங் கனிவர்க்கமு மினியதேன்பொ ழியும்பலவகையு மழகியவண்ணங்களு மினியவோசைக ளும் பூவுலகின்மற்றுள்ளசெல்வங்களை விரித்துச் சொல் லுந்தன்மையல்ல.

கூறுறநான்கூறுங்கால்கூற்றுங்குன்றக் குவிந்ததிரு
வேறுறவேறுய்ப்பாப்பிமண்மேனீர்மேல்விண்டிசைமேற்
பாறுறவாழ்புள்ளினமுநீர்வாழ்மீன்கட் பல்லினமு
மாறுறநீணிலத்துயிருமெண்ணற்றீட்டி வகுத்தனனே.

உரை.— வகுப்பறுத்துச்சொல்லுவதற் கென்சொல் குறையாநிற்கும்படி திரளாய்க்கூட்டியசெல்வங்களை வேறுவேறாக வங்கங்கேபரப்பியபின்பு மண்ணிடத்தும் நீரிடத்தும் வானிடத்தும் விரிவாகப்பறந்துவாழும் பறவைகளினத்தையு நீரிடத்துவாழு மீன்களின்பலவினங்களையுந் தம்முண்மயங்கிநடந் தூர்ந்து நிலத்தில்வாழும் பல்லுயிரினங்களையு மட்டின்றித்தோற்றுவித்தான்.

மட்டற்றபுல்லுயிர்கட்கரசனாக வானவர்போற்
கட்டற்றவேண்டுதல்வேண்டாமைவல்ல கருத்துயிரை
நட்டற்றநிகர்கடந்தவுருவின்மாமை ஞாயில்பொறித்
திட்டற்றமின்றிமனுக்குலத்தையீன்று னித்திறத்தான்.

உரை.— மட்டின்றியுண்டாக்கிய நல்லறிவில்லாத முற்சொன்ன புல்லுயிர்க் கெல்லா மரசனாகும்படி வானவனைப் போலப்புறத்திறத்தாற் கட்டப்படாமற்றோன்றியபொருளை வேண்டும்வேண்டாமென்னும்படி வல்லகருத்தினையுள்ள வுயிரைநட்டுச் சூழநிகரில்லாதவடிவினையுள்ள வுடலாகிய வழகியமதிலையெழுதிவைத்துச் சோர்வொன்றின்றி மனுக்குலத்தையுண்டாக்கின னளவிறந்தவல்லமையுடைத்தான நம்முடைய கடவுள்தானே.

:0:

சம்மனசுகளின் சிருஷ்டிப்பு மியல்பும், பசாசுகளுண்டானவகையும்.

—*—

(28ம். படலம். 61, 62, 64, 65, 66, 67. 68, 69, 70, 71, 72, 73, 75, 76, 77, 78.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

ஆடியகடவுளன்றி யனைத்துமேபடைப்புண்டாகி
நீடியவுலகமூன்று நிமலனுமொருவன்செய்தான்
கோடியதெவையுங்கோதாற் கோடியதன்றிமுற்பால்
வாடியகுறையொன்றின்றி வனப்புறமுடித்ததன்றே.

உரை—. சொன்னவாண்டவ ரொருவனன்றி மற்றதெல்லாம் படைக்கப்பட்ட பொருள்களாகி யெல்லா வுலகங்களையு மவற்றுளயாவையு மாண்டவன்றானே புறத்துணையின்றி யொருவனு யுளவாக்கினன். மீளவு மிக்காலத்துக் கோணித் தோன்றினயாவும் பாவத்தாற்கோணினதொழியப் படைப்புண்டகாலத்துக் குறையுமெலிவுமின்றி யழகோடுமுடித்ததாயிற்று.

கட்புலத்துருவிற்புல்லாக் கவினலந்தீட்டிவாய்ந்த
வுட்புலத்துடலமில்லா வுயிரொனவிழுப்பமோங்க
மட்புலத்திணையொன்றில்லா மனங்களையெண்ணினுதன்
விட்புலத்திறைவற்சூழும் வீரரொன்றமைத்தானந்நாள்.

உரை.— அங்ஙன மனைத்தையு மாண்டவன்படைத்த பொழுதிற் காணப்படுமுருவினு லடையப்படாதவழகினைத்தீட்டி யுடலில்லாத வுளமுளவுயிர்களாக வோங்கிய நன்மைமிகுதியா லிப்பூவுலகி னிகரில்லா தெண்ணப்படாத மனங்களை வானுலகிடத்தாளு மரசனைச்சூழ்ந்த வீரரைப் போல நிற்கும்படி யாண்டவனுண்டாக்கினன்.

விண்ணவரமரரும்பர் மேலினரமுதரையர்
பண்ணவர்வானோரொன்னும் பற்பெயர்தருவதல்லாற்

திண்ணவர்படைப்புண்டாகித் தேவவொன்றுணாக்கல்வேண்டா
நண்ணவர்வணங்குந்தேவ நாயகன்றுணையற்றென்றும்.

உரை.— நான்சொன்னவர் விண்ணவர் முதலாயின பல பெயருடையரொழியப் படைப்புண்டமையாற் றேவ வொன்பதொன்றுதவரு மொருங்குடன்கூடி வணங்குந்தே வன்றுணையொன்றின்றி யொருவனாய் நின்றோனும்.

வானுறைகுலத்தோராகி வரங்களும்வயமுமிக்கார்
கோனுறைகோயில்வைகிக் கோக்கணமென்னத்தோன்றிற்
கானுறையுலகினுங்கொள் கசடறவரந்தந்தோம்ப
மானுறைவளமில்லாராய் வணக்குரித்தேவரல்லார்.

உரை.— சொன்னவானோர் வானுலகிருக்குங் குலத் தோராகி யடைந்தவரங்களாலும் வலிமையாலு மிக்கவ ராகி யெல்லாவற்றையு மாளுங்கோனாகிய கடவுள் விளங்கித் தோன்று நிற்குங் கோயிலாகிய வானத்திலிருந்த வரசர் கூட்டமாகத் தோன்றினுங் காடு சூழ்ந்த பூவுலகிற்கிடந்த நாமுள்ளகுறைகளைத் தீர்ப்ப விரட்சிக்கவு நமக்கு வேண் டின வரங்களைக்கொடுக்கவு மாட்சிமையுள்ளவல்லமையில் லாதாராகையில் வணங்கத்தகுந் தேவருமல்ல.

வரந்தருந்தன்மைத்தெல்லா வையகத்தொன்றுநாதன்
புரந்தருங்குணந்தன்பாலாய்ப் புகன்றவனேவுந்தன்மைத்
துரந்தருமுறுதிசொல்லி யுதவியவரங்கள்கேட்டுச்
சுரந்தருந்துயரிற்றேற்றுந் துணைசெயல்வானோர்பாலே.

உரை.— நமக்கு வேண்டிவரங்களைத்தந்து நம்மை யிரட்சிக்குந்தன்மை யெல்லாவுலகத்திலு மொன்றாய் நிற் குங் கடவுளினுரிமையாமே. அக்கடவு ளேவினதன்மைத் து நமக்குறுதிகளைச்சொல்லவும் வேண்டியவரங்களை ய வனைக் கேட்டுவாங்கிக்கொண்டுவந்து நாமடைந்த துய ரிலாறுதலைச்சொல்லி யரிய வழியே நடக்கு நமக்குத் துணையாய்நிற்பது சொன்னவானோருரிமையாமே.

விண்ணெனும்பதியோராகி மேவினருணாக்குந்தன்மை
மண்ணெனும்பதியோர்க்கன்றி வானவர்க்கொவ்வாப்பாலாய்க்

கண்ணெனுமிமையாவொன்றுங் கடிமலர்வாடாதென்றும்
பெண்ணெனுமாணுமென்றும் பெயர்தகாவுருவில்லார்க்கே.

உரை—. மீளவுந்தேவவென்னப்படாமல்வான்பதியோ ராகையி லிந்துமதத்தா ரவரியல்பினையுரைக்குந்தன்மை மண்பதியோர்க்கல்லாதே வானவர்க்கொவ்வாத வியல்பாகி யவர்கண்ணுடையவென்று மிமையாவென்று மணிந்தமாலை வாடாதென்றுஞ் சிலர் பெண்ணென்றுஞ் சிலராணென்றும் வானவர்க் குடலு முருவுமில்லாமையா லவையெல்லாஞ்சொல்லத்தகாது.

திருத்தகுந்தேவவென்று செயிர்தகுந்தமதுகாமத்
துருத்தகுங்கதைகள்வீக்கி யுளத்துனைவிரகநோயிற்
கருத்தகும்வினைகள்பாவிக் கைப்படைபலவுந்தோற்றிச்
செருத்தகும்பகையுந்தம்முற்றினைத்துளமெலிவாரென்பர்.

உரை.— மீளவு மிந்துமதத்தார் வானவரைத் தேவவென்றபின்பு பாவம்விளைவிக்குந் தங்கள்காமத்துரிய பல கதைகளைச்சேர்த்தி யத்தேவர் காமநோயில்வருந்தி யவருக்குச்சங்கமுங் கருப்பமும் பிறப்புமுண்டென்றுபாவித்து மீளவும் பலவகை யாயுதங்க ளவர்க்குத்தந்து தம்முட்பகைப்பவும் போரைச்செய்யவுந் தோர்த்து மனதின் மெலியவுஞ் சொல்வார்.

சிட்டிடைவானினின்று தேவர்பொன்னுலகந்தன்னி
னெட்டிடைநெறிகணீண்ட நெற்றியங்குன்றங்குன்று
மொட்டிடைமலர்ந்தபொய்கைமொய்திரைக்கங்கைகான்விள்
மட்டிடைமலர்ந்தசோலை வகுத்துமண்ணெப்பச்சொல்வார்.

உரை.— மீளவுஞ் சிவந்த வானி னிற்பாவொன் றம்மதத்தார் தங்கள் தேவரிருக்கும் பொன்னுலகிடத்து நீண்ட வழிகளு முயர்ந்த மலைகளு மெலியாமதுமலர்த் தடாகங்களு மதிர்ந்தலைந்தோடுங் கங்கையும் வாசமதுமலர்பூத்தப் சோலைகளு மிவையெலா மங்கே யுண்டென்று சொல்லிப் பூவுலகொப்ப வானுலகாக்கிச்சொல்வார்.

இனையவேபலவுங்கூறி யிருவிழிக்குருடர்யானை
யனையவேமுசலந்திண்கை யடியுரல்செவிகள்சூர்க்கை
வனையவேயுரைத்தவண்ணம் வடுமனுக்குலத்தின்சாயல்
புனையவேயுயர்ந்தவானோர் புன்மையில்வினைதனன்றே.

உரை.— இவற்றையும் பலவற்றையுஞ்சொல்லி யிரு கண்கெட்ட குருடர் யானையைத்தடவி யுவமைசொல்லுமிடத்துத் தாமுன்னறிந்தவற்றைக்கொண்டு துதிக்கையை யுலக்கையென்றும் அடியை யுரலென்றுஞ் செவியைச்சுளகென்றுஞ்சொன்னதுபோல வம்மதத்தாரும் பாவத்தமிழ்ந்தின மனிதர்குலத்தின்சாயலாக மாட்சியிலுயர்ந்த தேவரைப் புன்மைபடச்சொல்வதுநல்லதல்ல.

ஒக்களவகன்றுமின்மீ னெத்திராப்புறத்துநீக்கித்
தொக்களவகன்றசீர்கொள் சுடருலகுரிமையங்கட்
புக்களவறிதலன்றிப் புன்கரத்துளருந்தன்மை
நக்களவஃகுமிச்சீர் நயத்தளவுணர்தலாமோ.

உரை.— வான்வீடெத்தன்மைத்தோவெனில் அளவெலாமொவ்வாதென் றகன்று வான்மீன்முதலாயதற்கொத்தனவல்லவென்று வான்வீட்டின்புறத்துத்தள்ளி மட்டொன்றின்றி யெல்லாநன்மையிற்சிறந்து விளங்கின வுலகமாகையி லதினுரிமையை நாமங்கேசென்று கண்டவளவிலறிவோமொழியக் குறுகினபுன்கையாற் றடவினற்போல விங்கேயிருந்து பூவுலகின்வாழ்வுகள் நக்குதற்கும் போதாமையா லிவற்றினளவாக வான்வீட்டு வாழ்வுகளை யெண்ணுவது பேதமையல்லோ.

உள்ளுமாறகன்றவாழ்வுத் தும்பரைப்படைத்தபின்னர்த்
தெள்ளுமாறகன்றாங்காரஞ் சிலருறியிறைவனேவிக்
கொள்ளுமாறகன்றதீமை குணித்தளவுரைத்தசாபத்
தெள்ளுமாறகன்றவானோ ரொரியுழிப்பேய்களானர்.

உரை.— அங்ஙன நினைக்கத்தகுந்தன்மையின் மேலாகியவாழ்வுகளைத்தந்து கடவுள் வானவரைப்படைத்தபின்ன ரவருட் சிலரோ தெளியா மயக்கத்தாங்காரத்தைக்கொண்டு தமக்காண்டவ னேவினபடியிற் செய்யமாட்டாமற்

றீவினை மனதிற் கொண்டமாத்திரத் தாண்டவனிட்ட சாபத்தினு லிகழாதகுணத்தோடு படைப்புண்டவானவருட் சிலர் தீநரகத்தின் பசாசுகளானுர்.

பேய்வினைவெருவக்கண்டப்பேய்கள்செய்தவனுரென்பர்
ஆய்வினைவயத்தோன்செய்த தொழில்கெடவுணர்ந்தபாவம்
போய்வினைகொணர்ந்துபேய்தம் புழுங்கினஞ்செய்ததென்னுத்
தீய்வினையுளத்துட்புக்காற் செய்பகையறியலாமே.

உரை.— சிலர் பசாசுகள்செய்யும் வினையைக்கண்டஞ் சி யவற்றைப்படைத்தவனுரென் றுவினுவுவார். தூயமுறை யோடெல்லாவற்றையு முடித்த கடவுள்செய்ததொழில் கெடும்படி நினைத்தபாவநுழைந்து வினையைக்கொண்டுவிட் டதுதானே புழுங்கினபசாசினமாக்கினதென்று தீவினை மனதிற்புகுந்தவளவிற் செய்யுங்கொடியபகையை யிதிலே யறியலாம்.

வேறு.—காய், காய், காய், காய்.

வானவரையுரைக்குங்கால் வாய்மையறவுணர்ந்ததுபோ
ரூனவரையென்னுங்காற் றடநீங்கிமயல்வேண்டா
மானவரைவேறெண்ணி யழற்கிடக்கும்வெறிவெருய்
நானவராமறைவிதித்த நன்னூலாலெண்ணேனே.

உரை.— வானவரைச்சொன்னவிடத்து மெய்மைதப் பி இந்துமதத்தார் நினைத்ததுபோல வசுரரைச்சொல்லு ம்போதும் வழிதப்பி மயங்கவேண்டாம், ஆகையாலசுரர் வேறே நரகத்திற்கிடக்கும்பசாசுகள்வேறேயென்று வேத நூலைப்பற்றி நானெண்ணு திரண்டொன்றுக நினைக்கத்தகும்.

விண்ணோர்க்குப்பகைசெய்து வெல்லறியாவரங்குன்ற
மண்ணோர்க்குவினைசெய்து மன்னுயிர்கணரகுய்ப்பப்
புண்ணோய்க்குவைத்தனதீப் புழுங்குமெனந்தாங்கதிகீத்
தண்ணோய்க்குத்தகப்பகையோர்ந் தயிரடுந்தீதுணர்குலமே.

உரை.— பேயின மெத்தன்மைத்தோவெனில் வானவ ரைப்பகைத்து வெல்லமாட்டாம னல்லறங்கெடும்படி மனி

தர்க்கு வினையைச்செய்து நரகத்திற்செனுத்த மிகவும் வருந்திப் பட்டபுண்மேல்வைத்த தீக்கோபித்தாற்போலத் தாம் வான்வீட்டுக்கதியை யிழந்ததனு லுட்கொண்டதுயராளவாக நாமுமக்கதியையடையாதபடி தம்மைப்பகைத்துப் பாவம் விளைவிக்கு முணர்வினையுடைய குலமதே.

நற்செய்கையனைத்துமற நலம்பகைத்தோர்தூயதவர்
தற்செய்கைநெடுநாளுந் தாமுடிப்பவரம்பெற்று
விற்செய்கையமர்பூட்டி விண்ணவனைப்புண்படுத்தி
மற்செய்கைவழங்கசுர ரென்றறைதல்மருளன்றே.

உரை.—இங்ஙனமாகையி னல்வினையாவையுங் கெடுக்கப் பகைத்த வசுரர்தாமே நெடுநாள்தவஞ்செய்தா ரொன்றுஞ் செய்ததவத்தால் வரங்களையடைந்தாரொன்று மடைந் வரங்களால் வில்லைக்கொண்டு செய்த போர்முகத்து வானவர்க்குப் புண்ணைப்படுத்தினுரொன்று மித்தொகைப்பட்ட வல்லதொழில்கள் யசுராருடையரென்பது மயக்கமல்லோ.

வீடிழந்ததீயினமே விளைத்தசெருக்குளத்தொழியாப்
பீடிழந்ததன்மையெரி பிளிர்ந்திடித்துப்பிளந்தமுகி
னீடிழந்தவசனிகள்போ ஹீதிபரன்வயப்பயத்தாற்
சேடிழந்தநரகூழித் தீவீழ்ந்துபுதைத்தனவே.

உரை.— வான்வீடிழந்த தீயபேயினங்கொண்ட வாங்காரத்தைவிடாமன் மாட்சியுமிழந்து செந்தீக்கொப்பளித் திடித்துப்பிளந்தமேகத்தினின்று விழுந்த விடிகளைப்போல நீதிபரனுகிய கடவுளின்வல்லமையா னன்மையொன்றில்லா தவியாத நரகத்தீயில் விழுந் தெக்காலத்து மங்கே புதைக்கப்பட்டன.

ஆதித்தாய்தகப்ப னுண்டவராற் சிருஷ்டிக்கப் பட்டுப்பசாசினாற்கெட்டுப்போனவகை.

(27-ம். படலம் 109, 110, 111, 112, 113, 114,115, 116, 117.)
விளம், விளம், மா, கூவிளம்.

உருமணிக்குன்றனு ளொருவனுணலாற்
றிருமணிக்கொடியனு டெரிவையாக்கினே
யிருமணிப்படலேயி னிருவர்சேர்த்தலர்
மருமணிச்சோலைகண் வைத்துவாழ்கென்றான்.

உரை.—ஆண்டவ னுலகம் யாவையும் படைத்த நாளி லொளிமணிமலையோடொத்த வொருவ னுணன்றித்திரும ணிக்கொடியோடொத்த வொரு பெண்ணையுமுண்டாக்கி யிருவரை யிருமணிகளை யொருமாலையாகக் கோர்த்தாற் போல வொருமனமாகச் சேர்த்தி வாசமணிமலர்பூத்த சிங் காரசோலையிடத்துவைத்து வாழ்வீராகவென்றான் கடவுள்.

காதன்மிக்கிமிழெலாங் கலந்தவாழ்க்கையுண்
டாதன்மிக்காண்டகைக் கிறையதாகவே
சாதன்மிக்குறுமெனத் தகைத்தவோர்கனி
நாதன்மிக்குரைத்தனு னனிவிலக்கினன்.

உரை.—ஆசையின்மேலு மச்சோலையிடத்தி னின்பங் கள்யாவுங்கலந்த செல்வங்களுண்டாகித் தம்மைப்படைத்த வாண்டவனுண்டென்றறிந்து வணங்கி யிடுங்குடியிறையாக வொருகற்பனையிட்டுப் பலமரத்தொருமரத்தின் கனிகளைத் தடுத் ததனைத்தின்றாற் சாவீரென்று மிகவுஞ் சொல்லியதை யுண்ணுதபடி விலக்கினனாதன்.

புண்டகாவிளிவுறுப் புதல்வரோடுநீர்
மண்டகாலத்தொடு வாழுவீர்மறுத்
துண்டகாலுவர்ப்புளைப் புலப்புமற்றநோய்
விண்டகாவகன்றுறி விம்முவீரென்றான்.

உரை.— மீளவுஞ் சொன்னபடிநடந்தீராகி னீங்களுமு ங்கள் மக்களாகிய மனிதரெல்லாரு நோயின்றிச் சாவின்றிப்

பூவுலகுரிமையின் மேலானசெல்வத்தோடென்றும் வாழுவீராகினு மென்கற்பனேயைமறுத் தக்கனியையுண்டீராகில்வெறுப்பினேயுந் துயரையுஞ் சாவினேயு மற்ற நோயோடடைந்து மலர்ந்தவிச் சோலையையகன்றுபோ யழாநிற்பீரொன்றான் கடவுள்.

மொய்த்ததோர்வானல முரிந்திழந்துளந்
தைத்ததோர்பழிவிடாச் சவமனுக்குலம்
வைத்ததோரளவில வாழுமோவெனப்
பைத்ததோராரவுருப் படவந்தாயதே.

உரை. வானவனுய்ப் படைப்புண்ட பசாசு தன்னுங்காரத்தால் வான்மேன்மொய்த்த நன்மையிழந்து முறிந்து நரகத்தில் விழுந்தமையான் மனதிற்றைத்திருந்த பழியை விடாம னீசமனுக்குல மளவொன்றின்றி யிங்ஙனம் வாழுமோவென்று மனிதரைக்கெடுக்கப் படம் விரித்தபாம்பினுருவாகவந் தங்கே தோன்றிற்று.

பேதையாய்ப்பிரிந்தபெண் பிணங்கண்டிக்கனி
கோதையாயுணுமையென் குணமிதேயென
வாதையாயிறத்தலாய் வரமிலேமென்றான்
றுதையாய்க்கடவுளென் றரிவைசாற்றினுள்.

உரை.—பேதையாகையிற் புருடனீங்கிப்பிரிந்து விலகின மரத்தினருகே நின்ற பெண்ணே வந்த பசாசு கண்டு கோதையாய் நீ யிக்கனியையுண்ணுதென்ன? இது மிகநல்லதென்றதற் கவளென்னேப்படைத்த பிதாவென்னுங்கடவுளிதைத்தின்றாற் றுயருஞ் சாவுமுண்டா யடைந்தவரங்களேயிழந்துபோவோமென்று விலக்கினுனென்றாள். (வந்தபே யிக்கனியென்றமையா லப்பெண் விலகினகனிமரத்தருகேநின்றாளென்றுகுறிப்பாம்).

கழீயினமணிநலாய் கலங்கல்தேன்றுளி
தழீயினவிக்கனி யருந்திற்சாவிலா

தெழீயினவுணர்வுறி யிறைவர்மாறுவீர்
குழீயினவாத்தெனக் கூளிகூறிற்றே.

உரை.— அதற்குவந்தபேய் ஒளிபெறக்கழுவப்பட்ட மணிவடிவுள்ளவளே கலங்கல்வேண்டாம், மதுத்துளியுட் கொண்ட விக்கனியுண்டாற் சாகாம லுயர்ந்த வுணர்வோடு திரண்டவரங்களையடைந்து தேவனைப்போலநிற்பீரென்றது.

கண்வழிபுக்கவாக் கழுமியக்கனி
பண்வழிமொழியினுள் பறித்துண்டாளது
தன்வழியிமிழலாற் சாவிலாதுமற்
றெண்வழியாடவற் குய்த்துண்மோவென்றாள்.

உரை.— வீணைவாய்க்குரனிகர் மொழியினு ளதனைக் கேட் டக்கனியைப்பார்த்தாள், பார்த்த கண்வழி மனதிற்பு குந்தவாசையான்மயங்கி யொருகனியைப்பறித்துண்டாள், உண்டகனி குளிர்ந்தினிமைசெய்தநொழியச் சாவுவரவில்லை யென்று மற்றொருகனியைப்பறித்துத் தன்னழகியபுருடற் குக் கொண்டுபோயுண்கவென்றாள்.

கனிமுகங்கண்டுழி வெருவிக்காங்லைதன்
பனிமுகங்கண்டுழிப் பரிவுற்றேங்கினான்
றனிமுகங்கண்டபேய் துறக்கின்மாதிறித்
தனிமுகங்காண்டியென் னுளத்திற்சாற்றிற்றே.

உரை.— அவனக்கனியைக்கண்ட வளவி லஞ்சாநின் றான், ஆயினுந் தன்றேவி குளிர்ந்த முகத்தைப் பார்த்தவள வின் மறுக்கமாட்டாமன் மனநொந்தேங்கினான். அவன் மனத்துள்ளகிலேசத்தைப்பசாசறிந்து நீயிக்கனியையுண்ணு மன் மறுத்தாயாகி லுன்றேவியிறந்து துணையொன்றின்றித் தனியேநிற்பாயென்று மனதிற்சொல்லிற்று.

மண்ணலம்பொறித்ததோர் வதனம்வெஃகியே
யுண்ணலங்கெடவொருங் குலகெலாங்கெடப்
பெண்ணலங்கொடியதோர் பெருநஞ்சாகிமேல்
விண்ணலங்கெடுங்கனி விழுங்கினானன்றே.

உரை.— அங்ஙன மன்றவன் மண்மேலழகு பெற வெழுதிய வொரு முகவடிவினைவிரும்பித் தன் மனவல்லமை

கெடவு மொருங்குட னுலகெலாங்கெடவு மொருபெண் ணழகே கொடியதோர் நஞ்சாகி வான்வீட்டு நன்மைகள்யா வையுங் கெடுத்தொழிக்கு மக்கனியைவிழுங்கினன்.

—.0.—

ஆதித் தகப்பன் பாவத்தால் வந்த கேடு.

(5-ம். படலம். 2, 3, 4, 5, 6, 8, 10, 11, 12, 13, 14.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

உலகுண்டாயகால் மனுக்குலத்தலையவனுண்ட
விலகுண்டாயகாய் விளைத்ததீதுயிரொலாஞ்சிதைப்ப
வலகுண்டாயிலா தடும்விடங்குடித்தவாய்வழியா
விலகுண்டாயின வெலாவுறுப்புலவெனவுலவாம்.

உரை.— உலகம் படைப்புண்ட நாளையில் மனுக்குலத்துத்தலைவனாகிய வாதித்தகப்பனுண்ட விலக்கப்பட்டகனியால் விளைந்த தின்மை யுயிர்களெல்லாங்கெடுக்க வாய்குடித்தவிஷ முறுப்புகளிலெங்கு முலாவினதுபோலப் படராநின்றது.

குடித்தநற்சினற் குருடுகண்பாயெனப்பாவம்
முடித்தநெஞ்சினல் முதிர்செயிர்க்குளத்திருண்மொய்ப்பப்
படித்தவிஞ்சையாற் பணிந்தமெய்யிறைவனைப்பழித்துப்
பிடித்தவஞ்சனற் பெருகியதெங்கணுமருளே.

உரை.— குடித்தநஞ்சினற் கண்மயங்கியிருண்டதுபோலப் பாவநஞ்சினலு மனத்திலிருளேமூடி முன்படித்தவேதநூலாலறிந்துவணங்கின மெய்யானகடவுளைவிட்டுவந்தவஞ்சனைகளினு லெங்கு மயக்கம்பெருகிப்படர்ந்தது.

பண்ணருஞ்சுடர்ப் பருதிபோய்ப்பாயிருணீக்க
வெண்ணருஞ்சுட ரேற்றுவரிணையெனமாக்க
ளொண்ணருஞ்சுட ரோரிறையவனெளித்தெவையும்
மண்ணருஞ்சுடர் மானுமென்றிறைஞ்சவுள்ளினரால்.

உரை.— அரியகதிருள்ள சூரியனஸ்தமித்துப்போய்ப் படர்ந்தவிருளைநீக்க வெண்ணப்படாத விளக்குகளையேற்று

வார்போல மனிதரும் பரஞ்சோதியாகிய வொன்றானமெய்க்கடவுளை மறந்தபின்னர்நல்லசுடரொன்று மற்றதெல்லாங் கடவுளாகப் பாவித்தார்.

மறமொழித்திலர் மறைமுறையொழித்தனரிறைவன்
றிறமொழித்தனர் செய்முறையொழித்தனர்சிறந்த
வறமொழித்தன ரறிவொழித்தனர்நலம்யாவும்
புறமொழித்தனர் புணருயிரொழித்தனர்சிதடர்.

உரை.— பாவத்தைவிடாமல் வேதமுறையு மாண்டவன்பலமுஞ் செய்யவேண்டியமுறைகளு நல்லறங்களுமுணர்ந்தவறிவுகளு மற்றநன்மைகளோ டுயிருமிழந்தார்பாவிகள்.

எஞ்சகப்பய வியற்றியவறங்களேயின்ன
விஞ்சகப்பகை வினைசெயும்பழம்பழிப்பேயர்
நஞ்சுகப்பகு வாயரவுருக்கொடந்நாளி
லஞ்சகப்புவி யனைத்துமேதோன்றியதாமால்.

உரை.— நன்மை பயக்கு நல்லறங்கள் குறையவும் பாவங்கள்மிஞ்சவும் பகைத்துவினைசெய்யும் பழம்பழிகொண்ட பசாசுகளெங்கு மந்நஞ்சுவிடவேணுமென்று பரும்பாம்புருவங்கொண் டந்நாளிலே யுலகமெல்லா மஞ்சக்காண்பித்தது.

நிழலினஞ்சுறும் வெய்யிலினஞ்சுறுநெடுநீர்க்
கழனிநஞ்சுறுங் கடிமலர்நஞ்சுறும்பொலிந்த
பொழிலினஞ்சுறுங் புணர்கனிநஞ்சுறுமடவா
ரொழிலினஞ்சுறுங் காண்டலாலின்னுயிரிறக்கும்.

உரை.— நிழலும் வெயிலும் வயலும் வாசமலருமுயர்ந்த சோலையு மதிலுள்ள கனிகளு மாதரழகு மிவையெல்லா நஞ்சாகி நல்லுயிர்கெடப் பாவத்துக்கேதுவாகிய காரணங்களாயின.

நஞ்செஞ்சாமையி னடுநெறிதவிர்தலோடின்ன
விஞ்செஞ்சாமையின்சிறுமைநோய்துயர்பிணிமிடைந்து
நெஞ்செஞ்சாமலு நெடியதோர்நடுக்குறுநிற்ப
மஞ்செஞ்சாமலு மருண்டிருண்டழிந்தனவுலகம்.

உரை—இந்த நஞ்சுகுறையாததினால் நீதிநெறியிற் றவிர்ந்துபோய்ப் பாவமே மிஞ்சிக்குறையாமற் சிறுமையுநோயுங்

துயரும்பிணிகளுநிறைந்து நெஞ்சோயாமற் பயந்து நடுங்க விருள் மாறாமல் மயங்கியழிந்ததே யுலகமெல்லாம்.

மீன்மறந்தன மேதினிவிளக்கலும்வெய்ய
வான்மறந்தன மாரியைவழங்கலுமதுரத்
தேன்மறந்தன செழுமலர்பெய்தலும்வேத
நூன்மறந்தன நுதலருந்தீமைசெய்தமையால்.

உரை.— முன்னேபோலச் சந்திரசூரியன் மீன்களும் பூமியைவிளக்காமலும் வானமழைபெய்யாமலு மலர்களினிய தேனைப்பொழியாமலுந் தந்தொழில் மறந்ததுபோல நின்றனவாம் வேதநன்னூலை மறந்தமனிதர் பாவஞ்செய்ததினால்.

அறமடிந்தன வடைந்தனதீயவையனைத்தும்
மறமிடைந்தன மறந்தனதருமமேவஞ்சத்
திறநிறைந்தன தீர்ந்தனதவங்களேவிரதம்
புறமுரிந்தன பொதிர்ந்தனபகைசெயும்புரையே.

உரை.— அறங்களொழிந்துபோய் வந்தனதீயவினையெல்லாம், பாவங்கள்நிறைந்து மறந்துபோயினதருமங்களே, வஞ்சனைபெலங்கொண்டு தவங்களில்லாதாயின, விரதங்கள் புறப்பட்டழிந்துநெருங்கின பகைசெய்யுங் குற்றங்கள்.

விண்கிழித்திழி வெள்ளநீர்சிறைசெயுமுழுநர்
மண்கிழித்துழ வழங்கியகொழுவினைநீட்டிப்
புண்கிழித்துநெய்ப் புனலொடுபோர்முகத்தஞ்சாக்
கண்கிழித்தொளி கான்றவேலாக்கினபகையே.

உரை.— மேகங்களைக்கிழித்துவிழு மழையாலோடும் வெள்ளநீரைமறித் துழுநர் மண்ணைக்கிழித் துழவைத்த கொழுதன்னைநீட்டிப் புண்ணாகவுடலைக்கிழித் திரத்தமோட வொளிவிடும் வேலாகச்செய்ததுபகை. (பாவத்தாற் பகை மிகுந்ததென்பதுகருத்து.)

அன்புமில்லன வெனதுனதென்பதிலார்வ
நன்புமில்லன வஞ்சனைகற்கலானன்றால்
பின்புமில்லன தீயவையினிதெனப்பெட்டற்
கின்புமில்லன விச்சையால்வறுமையுள்ளதுவே.

உரை.—அன்புமில்லாதேபோய் யெனதுமுனதுமென் றதினால் நட்புமில்லாதேபோய் வஞ்சனைகளைப் படித்ததினால் நன்னூல்களுமில்லாதேபோய்ப் பாவமேயின்பமாக விரும்பி னதினால் நல்லின்பமுமில்லாதேபோய்ப் பொருளாசையின் சினதினால் வறுமையேநிறைந்தது.

(27ம். படலம். 120, 121, 122, 124.)

மா, மா, காய், மா, மா, காய்.

மாறுவிடமுண்டன்றன்னார் வான்பேறிழந்தேவரமிழந்தே
தேனாலர்க்காவிழந்தேதாஞ் சிந்தைபணிப்பநாமுமழ
நானாநஞ்சுநல்குரவு நகவுநோயுங்கொடுங்கூற்றுங்
கானார்முள்ளுங்கொல்விலங்குங் கடிதிவ்வுலகிற்படர்ந்தனவே.

உரை.— ஆதித்தாய்தகப்பனாகியவவ்விருவ ரன்றுநிக ராத நஞ்சினையுண்டவளவில் வான்வீட்டையும் பேறிழந்து வரங்களையிழந்து மதுமலர்ச்சோலையிழந்து தா மனதினடுங் காநிற்ப நாமுமின்றழும்படிக்குப் பலவகைநஞ்சுகளுந் தரித் திரமு நிந்தையு நோய்களுங் கொடியசாவுங் காட்டினுள்ளமு ள்ளுங் கொல்லுமிருகங்களுமிவையெலா முன்னில்லனவாகி யன்று பூவுலகெங்கும் படர்ந்தன.

வாயேயுணாநஞ்சுறுப்பெல்லா மருவிவருத்தும்வண்ணமெனத்
தாயேதாதைகொண்டவினை தனையராநாங்கொண்டழுங்கத்
தீயேவியதீதொடுசனித்துத் தெளியாவுணர்வின்மனங்கலங்க
நோயேபாலுண்டிடர்கரத்தி னுடங்கவினையின்விளைவுற்றேம்.

உரை.— வாயுண்டநஞ்சு மற்றுறுப்பெல்லா முலாவி யெல்லாவற்றையும் வருத்துவதுபோல மனிதர்க்கெல்லா மாதித்தாய்தகப்பனாகிய வவ்விருவ ரன்றுகொண்ட தீவினை யவர்க்கு மக்களாகிய நாமெல்லாருங்கொண்டு வருந்தும்படி தீயபாவத்தோடு சென்மித் துணர்விற்றெளியாமன் மனதிற் கலங்கி நோய்களைப்பாலாகவுண்டு துன்பத்தின் கையிலகப்பட்டு ந்து விடாதவருத்தத்துடனே யத்தீவினையின்விளை வறுபவி யாநின்றேம்.

சொன்னகுரவர்காலமெனத் துதிநூலோர்முற்பிறப்பென்றார்
முன்னமவராலெமக்குற்ற முதியவினையூழ்வினையென்ற
ரின்னவினையல்லாதுதலை யெழுத்தும்வேறூழ்வினையுமில்லை
யன்னபிறப்பல்லாதிறந்தே யயர்ந்துபிறப்பாரில்லையன்றே.

உரை.— இவையெலா மிங்ஙனேயாகிச் சொன்னவாதித்தாய்தகப்பன் படைப்புண்டகாலமே மனுக் குலத்தின்முதற்பிறப்பாகையி லதனைப்பற்றிக் கற்றோர் முற்பிறப்பென்றார். மீளவு மவ்விருவ ரன்றுசெய்தபாவத்தா னமக்கெல்லாம் வந்தவினை பழையவினையாகையி லதனை யூழ்வினையென்றார். இங்ஙனமொழியவிவ்வினையன்றித் தலையெழுத்தும் வேறே யூழ்வினையுமில்லை, சொன்னவாதித்தாய்தகப்பன் முதற்பிறப் பன்றி யிறந்து பிறப்பாரில்லை.

கனியேயுண்டுவந்தவினை கண்ணிக்கற்றோரோதியநூ
னனியேயுணராப்பொய்கலந்தே நன்னீர்கடலுட்கலந்ததுபோற்
றனியேதளிர்ப்பத்தலைவிதியுந் தலையாப்பிறப்பும்புக்கனவே
வினியேவந்தவினைபரியு மியல்பொன்றிலையோவுண்டாமால்.

உரை.— அன்று ரன்று விலகினகனியையுண்டதனாற் பூவுலகில்வந்தவினையைப்பற்றிக் கற்றோர்சொல்லி யெழுதின நூலை நன்றாயுணராததனாற் பொய்யேகலந்து நன்னீர்கெடும்படி கடலுட்கலந்ததுபோல வறியாமையா லெமக்குத் துன்பம் வளரும்படி தலையெழுத்துந் தலையாத பிறப்பின்வகைகளுஞ் சிலருணர்த்தி யிப்பொய்வழங்கினதே, ஆகினு மினி யவ்வினைதீரும்படி வகையில்லையோ? உண்டு.

அழியாக்கன்னியிடத்திற் சுதனாகியசர்வேசுரன் மனுஷனாயவதரித்தவர்த்தமானம்.

(7-ம்.படலம். 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14,15, 16, 17, 18, 19, 21, 22, 25, 27, 28.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

குணிக்கருங்கருணையார்ந்த குணத்தையாறமைந்தநாதன்
றணிக்கருங்குணுங்கைவென்று தரணியைப்புரந்துகாக்கக்

கனிக்கரும்வளமைபூத்த கன்னியின்வயிற்றிருளீங்
கனிக்கருமுறையான்மைந்த னாகவுட்கருத்துற்றானே.

உரை.— கருதற்கரியகருணையுள்ள வாறிலக்கணங்களை யுடையநாதன் றணியாதோங்கின பசாசுகளைவென்றுபூவுல கத்தோரைப் புரந்துக்காக்க மதிக்கப்படாதவளமையுடைய கன்னியின்வயிற்றி லிங்கே தானரியமுறையோடு மகனாக நினைத்தான்.

மணமுடித்தேழாந்திங்கள் வளர்ந்துதேய்ந்தொழுகாமுன்னர்
கணமுடிக்கன்னியுள்ளங் கனிவியைந்தமையக்கஞ்ச
மணமடற்குவியுங்காலை வந்தபங்குனியையைநாட்
கணமெனக்கபிரியேலைக் கடவுளேவிட்டானன்றே.

உரை.—திருமணமாகி யேழுமாதமுடியுமுன்னர் மீன் முடிசூழ்ந்தகன்னி யுள்ளிணங்கிச்சம்மதிக்கவே தாமரைதன் வாசவிதழ்களைக்குவியு நேரமென்னுஞ் சாயங்காலமே பங் குனிமாத மிருபத்தைந்தாநாளி லவளிடத்திற் சீக்கிரமாய்க் கபிரியேலென்னும் வானவனை யாண்டவன்விட்டான்.

தூதெனவலியோனாய கபிரியேல்சுடரைச்சூட்டிக்
கோதெனவிருளைநீத்த கோதைகண்விரைவிற்சென்று
சீதெனமதியந்தாங்குஞ் சேவடிபணியவீழ்ந்து
போதெனவழிந்ததேனைப் பொருதுவெல்லுரையுற்றானே.

உரை.— தூதனாகிய வலியோனென்னுங் கபிரியேல் கதிரைவீசு முருவங்காட்டிப் பாவவிருளைநீக்கியகன்னியினி டத்து விரைவிற்சென்று குளிர்ந்த சந்திரன்றாங்கிய பாதத்தை வணங்க விழுந்து மலரினிழிந்ததே னுவமையைவென்ற சொற் கொண்டான்.

பொய்யகன்றெழுவதெய்வப் பூரணவோகையாளே
யையகன்றுவப்பினாத னடைந்துவாழ்நெஞ்சத்தாளே
வையகம்வைகும்வாய்ந்த மாதருளெண்ணிலாசி
தய்யகம்பொலியப்பூத்த சுந்தரிவாழியென்றான்.

உரை.— மெய்கொண்டுயரப் பூரணதேவவரங்களாற் பிரியசெல்வியே! ஐயமின்றிப் பரமநாதனையடைந்துவாழு

நெஞ்சுடையவளே! பூவுலகிற்பெருமையுள்ள மாதர்களுள் ளெண்ணப்படாத பாக்கியமடைந்து தூயமனத்திலுயர்ந்த வழகியே வாழியென்ருன்.

கனிக்களவுயர்ந்தகோடு வளையும்போற்கருணையார்ந்த
நனிக்களவெளிமைபூத்த நறுமையிற்பொருவாக்கன்னி
தனக்களவசன்றவாசி சாற்றியசொல்லையாய்ந்த
மனக்களவுளைந்துநாணி வரைந்தவோவியமேயொத்தாள்.

உரை. —உச்சியிற்காய்த்த கனிகளினளவாகக் கொம்புகள் வளைவதுபோலக்கொண்ட நன்மைக்களவாகத் தாழ்ச்சியுடையவரங்களாலொவ்வாத கன்னி தனக்களவில்லாதபுகழ்களைச்சொன்னமுறையை நினைத்ததளவாக நொந்து நாணிச்சித்திரம்போ லிமையாதிருந்தாள்.

கலங்கினவகத்துந்தெண்ணீர்க் கடலளறுகாவண்ணம்
மலங்கினவகத்துங்கன்னிமயக்குறு தானுற்றேங்கித்
திலங்கினவகத்துன்னேவல் துடர்நெறிதோற்றுவாயென்
றிலங்கினவகத்துள்ளுள்ளியிறைவனைவணக்கஞ்செய்தாள்.

உரை.— கலங்கினுலுந் தெளிந்தகடல் சேருகாததுபோலக் வக்கன்னியுள்ளசைந்தாலு மயக்கமின்றி யோங்கியென்னுண்டவனே தெளிவாகவுன்னேவலின்முறைமை காட்டுவாயென்று விளங்கியவுணர்வி லிதைநினைத்துக் கடவுளைதொழுதாள்.

பளிங்கடுத்தவற்றைக்காட்டும் பான்மையாலிவள்முகத்தி
லுளங்கடுத்தவற்றையோர்ந்த கபிரியேலுறுதிசொல்வான்
விளங்கடுத்திறைவற்கன்பு மீதுறவுவகைபூத்த
வளங்கடுத்துயர்ந்தமாதே மயக்குறவருந்துவானேன்.

உரை.— அடுத்தபொருளைக் கண்ணுடியிடத்திற் காண்பதுபோல விவள்மனத்தைக்கடுத்த வுணர்வெல்லா மிவள் முகத்திற் கண்டறிந்த கபிரியே லுறுதிகளைச்சொல்லுவானுன்னையடுத்து விளங்கியகடவுளுக்கன்புமிக்க பிரியமுடையவளாகி மாட்சியா லுயர்ந்த மாதே மனமயங்கவருந்துவானேன்.

மதிபழித்திலங்குசங்கின் வாய்ந்தசூல்பழித்தீங்குள்ள
விதிபழித்தரியவாற்றால் வேய்ந்ததோர்கருப்பமாகி
நிதிபழித்தொளிர்ந்ததோன்றல் நீபயந்தவற்கியேசு
துதிபழித்துயர்ந்தநாமஞ் சொற்றுவாய்கன்னிமாதே.

உரை.— மதியினும்விளங்கிய சங்குகொண்டநற்சூலை ப்பழித்துப் பூவுலகினுள்ளபொதுமுறை தவிர்ந்த வழியாற் கருப்பந்தாங்கிப் பொன்னொளியினுந் துலங்கிய வோர் பிள்ளையை நீயே பெற்றவற் கியேசுவென்னுந் துதியெல்லாங்கடந்த நாமமேயிடுவாய் கன்னிமாதே.

அளியமைந்துயிர்த்தசெம்ம லகந்தன்சேயென்னநேமி
யுளியமைந்தரசுதாவித் துயர்ந்தகோலோச்சிநாளும
களியமைந்தளித்தபாரிற் காவலென்றுள்வானென்ன
நளியமைந்தினியசொல்லை நவின்றடிவணங்கிட்டானே.

உரை.— அன்பின்வழியால் நீபெறும்பிள்ளை கடவுளின் மகனுமாகிப் பூவுலகினுந் தாவிதனுடையசெங்கோலடைந் தெப்பொழுது மினிதாயளித்த பூமிக்காவலாகவாளுவானென்று குளுந்தசொல்லைக்கொண்டவள் பாதத்தை வணங்கினுன்.

தொய்யலுற்றிறைவன்றனைத் தொழுதுவாழ்திருவல்லோனே
மய்யலற்றழிவிற்கன்னி மைந்தனைப்பெறுதலேதென்
றய்யமுற்றிவள்வினவ வரியமாதடியைப்போற்றி
வெய்யிலுற்றடைந்ததூதன் விடைமொழியுரைப்பான்மன்னோ.

உரை.— இனிதாய்க்கடவுள்பாதத்தை வணங்கிவாழுந் திருவல்லோனே குறையின்றியழியாத கன்னி பிள்ளையைப் பெறுவதேதென்று சந்தேகத்தோடிவள்கேட்க விவளடிபணிந்து கதிர்விசிவந்த தூதனுகிய கபிரியேல் மறுமொழி சொல்வான்.

காருலாமுலகுமாங்கு கதிருலாஞ்சுடராயெல்லாங்
காருலாமுலகும்யாவுங் காரணமொன்றுமின்றிச்
சீருலாம்வயத்தநாதன் செய்தலின்மகவையீன்றுஞ்
சீருலாங்கன்னியாதல் சேர்த்தலேயரிதென்பாயோ.

உரை.— மேகந்திரியுமுலகினையு மங்குடைய பலசுடர்களையுங் கடல் சூழுலகினையு மற்றெவையு மொருகாரணமுமின்றிச் செல்வவல்லவனாய்க் கடவுளுளவாக்கினபின் னதின்மேற் பிள்ளைபெற்றாலு மழகிய கன்னி யழியாதுகாத்தலே யரிதென்பாயோ.

மகற்பெறுவயதுமுற்றி மைமையாமெலிசபெற்குந்
தகற்பெறுகருப்பமாகித் தவன்றவெண்டிங்களாறுய்ப்
பகற்பெறுகன்னியாய்நீ பழுதிலாச்சிறுவனீன
லிகற்பெறுவினையென்றாலு மிறையவற்கெளியதன்றோ.

உரை.— புதல்வனைப்பெறுதற்கான வயதுங் கடந்து முற்றிமலடியாகிய வெலிசபெத்தையும் பெருமையுள்ளகருப்பங்கொண் டாறுமாதமாகி விளங்குங் கன்னியாகிய நீயு மழிவின்றிப் பிள்ளைபெறுதல் விரோதமென்று தோன்றினாலு மாண்டவற்கெளியதாம்.

ஆவதுங்கடந்தகாட்சிக் கருந்தவனீசயீய
னோவதுமின்றிக்கன்னி யொருமகவுயிர்ப்பாளென்னக்
கோவதுவிறைவன்சொன்ன கூற்றெனவுரைத்தல்பொய்யா
யாவதுமறிதியல்லால் யானினக்குரைப்பதென்னோ.

உரை.— வருங்காரியங்களையறிந்து வருங்காலங் கடந்த காட்சியுடைய வருந்தவனாகியவீசயீயனென்பவன் றுன்பமின்றிக் கன்னியொருத்தி மகனைப்பெறுவாளென்றுவானுலகநாதன் சொன்னவசனமாகவுரைத்தானே யது பொய்யாமலாகுமென் றறிவாயன்றி நானோ திரும்பி யுனக்குச்சொல்லவேணும்.

நேயமாம்பிரீத்துசாந்து நிழன்றதண்கவிகைக்கீழ்நீ
தாயுமாயொன்றாமூவர் தமிற்சுதன்றன்னையீன்றுந்
தூயமாகன்னிக்கேதந் தோன்றிலாச்சுடரினாங்கு
மாயமாய்க்காக்குவானென் றஞ்சலிசெய்திட்டானே.

உரை.— நேயமாகிய இஸ்பிரீத்துசாந் துனக்கு நிழல்செய் தவன்குளுந்த குடையின்கீழ் நீகருப்பங்கொண்டு தாயுமாகிப் பிதாசுதன் இஸ்பிரீத்துசாந்தென்னு மொரோகட

வளாயுள்ள மூன்ருட்களி னிரண்டாமாளாகிய சுதனை மக னுகப்பெற்ருலுந் தூயவுன்கன்னிமையழிவின்றிச் சூரியனிலு மிருதிவிளங்கக் காக்குவானென் றவளைவணங்கினுன் கபிரி யேல்.

தேற்றுனாயுரைத்ததூதன் செப்பியயாவுங்கேட்டு
வேற்றுரையுரைத்திலாளுள் விழைவுறவிறைவன்ருளைப்
போற்றுரையுரைத்துக்கேட்ட புதிவினையோர்ந்துசாவி
யேற்றுலையுடைத்தகன்னி யிரவெலாம்போக்கினுளே.

உரை.— தேறுதல் செய்ததூதன் சொன்னதெல்லாங் கேட்டு மறுமொழிதான்சொல்லாம லாசையோடாண்டவன் பாதத்தைவணங்கி யன்றுகேட்டபுதுமையை யாராய்ந்து பார்த்துப் புகழெல்லாங்கடந்த கன்னி யவ்விரவெல்லாந்தி யானத்திற் போக்கினுள்.

அருள்புறங்கண்டசெல்வத் தமலைமுன்னெளிமையுள்ளி
வெருளபுறங்கண்டுகூசி வெறுத்தலோடமைதறேற்ருள்
தெருள்புறங்கண்டமீனிற் திருமுகத்தொளிவில்வீச
விருள்புறங்கண்டபாரிற் கெரிவிளக்கொப்பநின்ருள்.

உரை.— தேவருள்மிகுந்துவந்த விச்செல்வத்தினருமை முன்பாகத் தன்னெளிமையெதிர்படவுணர்ந்து தாழ்ச்சியி னுல் வெருவிக்கூசி யதைவெறுக்கவு மிணங்கி யமையவுந்தே ருத கன்னி தெளிந்தமீனினுந் திருமுகத்திற்கதிர்களைவீச லாற் பாவங்கொண்டிருண்ட பூவுலகிற்கொரு விளக்குப் போல நின்ருள்.

இன்னவாயுசாவும்வேலை யிளம்பிடியன்னவோர்நற்
கன்னிவாய்மொழியைக்கேட்பக் கடவுளுங்கடவுடன்னைத்
துன்னிவாழமரர்யாருந் துகடவிர்ந்துலகமெல்லா
மன்னவாயுய்யுமென்ன வவாவொடுநிற்பாரன்ருே.

உரை.—இத்தன்மையாய்த் தியானிக்கும்போ திளம் பிடியொத்தவோர் கன்னியின்வாய்மொழியைக்கேட்கக் கட வுளு மற்றவானவரு மிவள்வாய்மொழியினு லுலகெல்லாம் வாழுமென்றறிந் தாசையோடு நின்ருர்.

நன்னிலாவுதயத்தெந்தை நயப்புறவியப்பவானோர்
மன்னியாமெவரும்வாழ்க வந்தவானவனைநோக்கிக்
கன்னிதாழ்சிரத்தைக்கோட்டிக் கடவுளாளென்னையிந்தோ
பன்னியாயினநின்வாய்ச்சொற்படியெனக்காகவென்றாள்.

உரை.— சூரியனுதயத்திலே யாண்டவனின்பங்கொள்ளவும் வானவரதிசயப்படவு நாமெல்லாரு நிலைபெற்றவாழ்வடையவும் வந்தகபிரியேலைநோக்கித் தன்சிரத்தைத்தாழக் குனிந்து கடவுளினடிமையானவென்னை யிதோநீசொன்னபடி யெனக்காகக்கடவதென்றாள் கன்னிமரியாயி.

என்றாளிகடுத்தவன்பா லிதயங்கூர்ந்துயிர்த்தசெந்நீர்
மின்றுளிமூன்றுஞ்சேர்ந்தோர் மெல்லுடலாயுள்ளாவி
சென்றுளிமனுவும்வாய்ந்த தெய்வமும்பொருந்தவீக்கி
யொன்றுளியிலறவன்லமைந்தோர்மனுமகனுமானான்.

உரை.—அக்கன்னி யிவற்றைச் சொன்னபோது நெஞ்சிற்கடுத்த வன்பின்மிகுதியினாலிருதயம்பொங்கிக் கொப்புளித்தவிரத்தத்துளி மூன்றுமொன்றாய்ச் சேர்ந்துமெல்லியதோருடலாகி யந்நேரமே படைத்ததோர் நல்லாத்துமமுமவ்வுடலினுட்புகவிட்டுச் சென்றபோது மனுத்துவமுந்தேவத்துவமுங் கூடப்பொருந்தக்கட்டி யவ்விருதுவ மொன்றினதினா லாண்டவனுடைய குமாரன் மனுமகனுமானான்.

யாழிசைபழிப்பவானோ ரினிதெனப்பாடவாங்கு
மாழலைபழிப்பத்தொய்ய லார்ந்ததாய்நயப்பவெய்யோன்
கேழொளிபழிப்பவன்ன மனையொளிகிளர்ப்பவானில்
வீழுறைபழிப்பவெங்கும் விழுநயன்பொழிந்ததன்றே.

உரை.— வீணைபழிப்ப வதனினு மினிதாய் வானோர்பாடவுந் தாழ்ந்தகடலினு மிகுந்தவின்பத்தின் முழுகினதாய் களிகூரவுஞ் சூரியன்கதிரினு மந்தமனையெல்லாம்விளங்கவுமேகத்தினின்றிழியுந்துளியினு நிறைந்த நன்மையாவுமெங்கும் பொழிந்தது.

சேயெனத்தன்கண்வந்த தேவனைவணக்கஞ்செய்து
தாயெனத்திறம்பாக்கன்னி தன்னுயிர்கிளர்ப்பத்தாறிற்

றூயெனத்துளித்தமாரித் தொகையின்மேல்வரங்கள்வாரும்
வாயெனக்கண்டவானோர் வாயடைத்தஞ்சாநின்றார்.

உரை.—தனக்குமகனாகவந்தகடவுளை வணங்கித் தாயான வழியாக்கன்னி தன்னுயிரினிதாய்நிறைய வளவின்றிப் பெய்த தூயமழையினு மிகுந்தவரங்களையடைந்தமுறைமை கண்டவானோ ரதிசயத்தினால் வாய்புதைத்தஞ்சிச் சூழநின் றாரென்க.

அஞ்சியவணக்கத்தோடு மஞ்சலிசெய்துதாயுந்
துஞ்சியவுயிர்களுய்யத் துடர்பொடீங்கெய்தியார்வம்
விஞ்சியசேயும்வாழ்த்தி விரும்பிவானுயர்வாழ்வீட்டை
யெஞ்சியவிழுப்பத்தோங்கி யினிதெனப்பாடாநின்றார்.

உரை.— வானவரஞ்சிவணங்கித் தாயையுங் கெட்டவெம்முயிர்கள்வாழத் தயையாலிங்கேயினுவாய்வந்து கருணைநிறைந்தமகனையும்வாழ்த்தி யாசைமிகுந் துயர்வான்வீட்டினு மரியவின்பங்கொண்டோங்கி யினிதாய்ப்பாடுவார்.

——:*:——

அவதரித்த நாதன் பிறந்த வகை.

(10-ம். படலம். 83. 84, 85. 88, 92, 94, 95, 97, 98, 99, 100, 104, 105, 108. 110, 113, 120, 121, 124, 125, 127, 128.)
விளம், விளம், மா, கூவிளம்.

உயரியவரைபகி ருறுப்புபோன்றெனப்
பெயரியகன்மிசை பெருங்கல்சேர்த்திய
துயரியரேன்றிடம் விலங்குதுன்னிட
மயரியவிடமொரு முழையஃதாமரோ.

உரை.— உயர்ந்தமலையிற் பிளந்தவுறுப்புபோலப் பேர்ந்த கல்லின்மிசை பெருங்கல்லையேற்றிப்பொருத்தித் துன்பத்தியல்பினை யுரிதாய்க்காட்டு மிடமென்னு மிருகங்களொதுங்கு மிடமென்னும் வருத்தம்பொருந்தின விடமென்னு மொருகுகை பெத்திலேமென்னு நகரண்டையிலிருந்தது.

வீசறைவளிமழை விளிப்பவாய்திறந்
தேசறைகிழவிதீ யெரிமுகத்தொடு
பாசறைபரிப்புநோய் பதிபயிற்றிய
வாசறையுருவெனு முழையஃதாமரோ.

உரை.— வீசியடிக்குங்காற்றையு மழையையு முள்ள ழைப்ப வாய்திறந்து தீப்பறியக்கோபம்பொங்கிக் கிழவிகளேசலைச்சொல்லும்போது காட்டின முகத்தைக்காட்டித் துன்பமு மச்சமு நோய்களுங் குடியாயிருக்கப் பதியையமர்த்தின குற்றத்துக் கோரறைச் சாயலாய் நின்ற குகையது.

கலங்கெழுந்திரையெறி கடலெனுநகர்
புலங்கெழுமிடைமனுப் புழங்கலாமையும்.
விலங்கெழுமிடமெனு வெறுத்தவம்முழை
நலங்கெழுமிறையவன் பிறப்பநாடினன்.

உரை.— கலங்கியெழுந்த திரைகளை யெறிக்குங்கடலோடொத்த வந்நகரிடத்தி லன்று கூடினமனிதர்நெருங்கிப் புழங்கவிடமில்லாயினு மிருகங்களொதுங்குமிடமென்றெல்லாரும்வெறுத்த வந்தக்குகைதன்னைச் சகலநன்மையுள்ள கடவுளே தான்பிறக்கத்தேடித் தெரிந்துகொண்டான்.

தணிவருஞ்சினத்தொடு தகைத்தகற்றினு
ரணிவருங்குணத்தினீர கமலனுடிய
பணிவருமிடிநலம் பயக்கின்றாெனுத்
துணிவருமன்பெழுந் தாசிசொற்றினர்.

உரை.— தணியாதகோபத்தோடு நகரிலிடங்கொடாமற் றம்மையகற்றினவரொல்லாரு மடைதற்கரிய முறையாலாண்டவனவதரித் திங்கே தேடவந்தவருந் தாரித்திரத்தின் செல்வத்தையடைத் தந்தாரொன்று சூசையு மரியுந் தெளிந்தவன்போ டவனைத்துதித்தார்.

மா, கூவிளம், மா, கூவிளம்.

பொதிர்தருங்களி பொழிந்துவாய்ந்தருள்
முதிர்தருங்கனுள் முழங்கினின்றிவண்

ணெதிர்தரும்பொரு வின்றியின்புறக்
கதிர்தருஞ்சுத னசையக்கண்டனள்.

உரை.— நிறைந்த மனக்களிப்பு முகத்திற் றோன்றப் பொழிந்து முதிர்ந்த தயைக்காட்டுங் கண்ணுடைய மரியென்பவள் முழந்தாளினின்று பூவுலகிலொவ்வாத வின்பத்தை நுகர்ந்து விளங்குந் தன்றிருக்குமாரன் றன்வயிற்றுள்ளசையக் கண்டாள்.

உலகமூன்றினு மூவமைநீக்கிய
விலலையமூன்றினு மிழிவில்கன்னியா
யலகில்மூன்றினு ணடுவமைந்தனை
நிலவுமூன்றினு நிறப்பவீன்றனள்.

உரை.— மூவுலகினு மொவ்வாதமுறையாற் பிள்ளையைப்பெறுமுன்னும் பெறும்போதும் பெற்றபின்னு முக்காலத்து மழியாத கன்னியாகிப் பிதாச்சுதன் இஸ்பிரீத்துசாந்தென்னு மளவில்லாதகத்தாவாகிய மூன்றாட்களி னிரண்டாமாளாகிய சுதனை முச்சுடரினும் விளங்கப்பெற்றாள் மரியென்பவள்.

வாய்ப்படாநுழை பளிங்கின்வாய்கதிர்
போய்ப்படாவொளி படரும்போன்றுதாய்
நோய்ப்படாதருங் கன்னிநூக்கிலா
தாய்ப்படாவயத் தமலன்றோன்றினன்.

உரை.— வாசலைத்திறவாமற் றூயபளிங்கிடத்தினுழைந்த கதிர் புறப்பட்டுப்போய்ப் படாத காந்தியை விரித்தது போலத் தன்றாய்நோகாமலு மவள்கன்னியழியாமலும் படாதவல்லமை கொண்டு கத்தாவே மகனாய்ப் பிறந்து தோன்றினான்.

தீபமுற்றுமே லுலவுசெஞ்சுடர்
சாபமுற்றுழி சாபந்தீர்த்தெமை
யாபதத்திறை யளிப்பத்தாய்மடித்
தாபதத்தெழீத் தனையிறோன்றினன்.

உரை— வானிலொளிர்ந்துலாவுஞ்சூரியன் தனுவிராசி

யினடக்கும்போ தவதரித்தகத்தா பாவத்தால்வந்தசாபத்தைத் தீர்த்துத் துன்பத்தினின்று நம்மையிரட்சிக்கத் தாய்வயிற்றினின்றுதித்துப் பூவுலகிற்றோன்றினன்.

தோன்றினனென நசையுடேண்டினாற்
போன்றிவாவுதேர் முடுக்கிப்போயொளி
கான்றிராசிவங் களிப்பமாலியெல்
லீன்றிராவன்று குறுகிற்றென்னவே.

உரை.— கடவுள்மகனாய்ப்பிறந்து தோன்றினனென்றவனைக்காண வாசையுளத்தைத்தூண்டினாற்போல வேறினபொற்றேரை முடுக்கிவந்து கதிரைவீசித் தாமரைகளிகூரச்சீக்கிரமாயன்று சூரியன்பகலைச்செய்ததினை லிராக்குறுகினதென்க.

கதிர்செய்தேரொழக் கடியகோனிசி
பொதிர்செய்காரிருட் புதைப்பப்புக்கல்போற்
பிதிர்செய்பேயெலாம் பெயர்ந்துதீயுற
வெதிர்செய்யாதியீங் கிலங்கினனரோ.

உரை.— கதிரைப்பொழிந்தபருதியின்றேரொழுந்தபோது கொடுங்கோனாகியவிரவுபோய் நிறைந்தவிருளினுட்புதைக்கப்படப் புகுவதுபோலப் பூவுலகினின்றோடிப் பெயர்ந்தபேயெல்லாந் தீநரகத்திற்போக வெதிர்த்துவந்த நாதன் விளங்கினான்.

பேயும்போயின வமரர்பிந்தினர்
தீயும்போயின வறங்கடேறின
நோயும்போயின நூற்கடேர்ந்தன
தோயுமோகையிற் றுளங்கவையமே.

உரை.— பேய்கள்போயின வானவர்தொடுத்து வந்தனர், தீயவைபோயின வறங்கள்தேறிவளர்ந்தன, நோய்துன்பங்களொழிந்துபோயின கல்விகள் தெளிவடைந்தன வின்பத்திற்றோய்ந்த வுலகெல்லாம் விளங்கவே.

வானுலாவனப் பெண்ணில்வானவர்
மீனுலாவடி யிறைஞ்சிமீதுபெய்

காறுலாமலர் கந்தமாரியாற்
றேனுலாமழை தினைத்தோர்பாலெலாம்.

உரை.— வான்வடிவுள்ளவென்னப்படாத வானோர் விளங்கின கடவுளின் பாதத்தைவணங்கி யதின்மேற்றாவின வாசமலர்மாரியினாற் றேன்மழையு நிறைந்ததோர்பக்கமெல்லாம்.

பண்ணினோசையும் பண்ணிற்பாவிசை
தண்ணினோசையுந் தாழ்ந்துவாழ்த்தினர்
விண்ணினோசையும் வழங்கவேட்டுளங்
கண்ணினோசையிற் களித்தோர்பாலெலாம்.

உரை.— வீணைதந்தவோசையும் வீணையினு மினிய பாப்பாடின குளுந்தவோசையும் வான்மேற்கிளம்பும்படி வணங்கிவாழ்த்தினரோசையுங்கூடி வழங்கலில் விரும்பி யுள்ளங்கொண்ட பிரியம்பொங்கிக் களித்த தோர்பக்கமெல்லாம்.

மெய்த்திறதெழுந் துதித்தவேந்தனைக்
கைத்திறத்தெழுந் திறைஞ்சுங்காதலான்
மொய்த்திறத்தெழுங் கடலின்மொய்த்தவார்ப்
பித்திறத்தெழுந் தெல்லையில்லையே.

உரை.— உடலையுடுத்துப் பிறந்த நாதனைக் கையெடுத்துவானவர் வணங்கு மாசையினால் மொய்கொண்டெழுந்த கடலைப்போற்சூழ முழக்கமெழுந்த தன்மையால் முடியாது நின்றது.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

பொதிர்கொள்பூமணம் போனமகவீன்றனள்
கதிர்கொள்சேயொடு கண்கள்கலந்தகா
லெதிர்கொள்வெஞ்சுடர் காண்முழுவிந்தெனு
முதிர்கொள்ளின்ப முகத்துவிளங்கினள்.

உரை.— தான்குறைபடாமல் பூமுகைவாசனைவிட்டது போலக் கன்னியழியாமற் றிருமகனைப்பெற்றமரியென்பவள் விளங்கினதன்பிள்ளையின் கண்களோடு தன்கண்ணுங்கலந்

துபார்த்தாள், பார்த்தபோதுசூரியனையெதிராக்கண்ட முழு மதிபோல விவளு முதிர்ந்த வின்பமுகத்தோடு விளங்கினின் ருள்.

காந்தணேரியசெங்கரத்தேந்தின
ளேந்தமார்பிலிறுகவுஞ்சேர்த்தனள்
வாய்ந்தபூம்பதரீவிவணங்கின
ளாய்ந்தநூற்கடந் தாருணர்வெய்தினுள்.

உரை.— தாயுங் கார்த்திகைப்பூநிகர்த்த தன்செங்கரத் தின்மேற் பிள்ளையையேந்தி யுயர்ந்தமார்போ டிறுகச் சேர்த்து நன்மலர்ப்பாதத்தைத் தடவிப்போற்றி யாராய்ந்தடைந்த கல்விகளைக்கடந்த ஞானமேயடைந்தாள்.

நகைசெய்தன்மையி னம்பெழீத்தாய்துகட்
பகைசெய்நெஞ்சமும் பற்றலுமொன்றுற
முகைசெய்மேனி தழுவிமுத்திட்டலுங்
குகைசெய்யின்பெழக் கோலமிட்டொத்ததே.

உரை.— குழந்தை நகையைக்காட்டின தன்மையாலாசைபொங்கித் தாயும்பாவத்தைப்பகைத்த தன்னெஞ்சமுமார்வமுமொன்ருகப் பூவரும்பின்சாயலாகிய திருமேனியைக்கட்டிக்கொண்டு முத்தமிட்டா ளதுவந்தக்குகையிலேயின்பமலிந்துபொங்க நற்கோலமிட்டதுபோலத் தோன்றினது.

தெருள்சுரந்ததிரைப்புவியார்ந்துணப்
பொருள்சுரந்துயிர்க்குண்டிபொழிந்தனன்
மருள்சுரந்தவடுக்கெடமைந்தனு
யருள்சுரந்தமுதாய்தரநுண்ணன்.

உரை— தெளிதிரை நீர்க்கடல்சூழ்ந்த பூமியெங்கும் பொருள்களைத்திரளாய்ச்சுரந்து பல்லுயிர்யாவு நிறையவுண்ணும்படி யவற்றிற்குரியவுணவுகளைப்பொழிந்து தருநாதன் ருனே மயக்கத்தால் வந்த பாவங்களைத் தீர்ப்பதற்கு மனிதனுகி யன்பினுற்சுரந்தமுலைப்பாலைத் தாய்தரவே நாதனுண்டான்.

தேமா, கூவிளம், தேமா, கூவிளம், தேமா, கூவிளம், கூவிளம்.

இந்துநேர்நுதல்மீன்கணேர்விழி யிண்டைநேர்முகநீர்மையாற்
கந்தநேர்களிர்தாதுநேருடல் காட்டு நாதனையம்புயச்
சந்தநேரியகன்னிநேர்கையி ருமநேரியமுத்தெனச்
சிந்துநேர்நயமுழ்குசீர்லமயி றேறநோக்கினன்சூசையே.

உரை.— பிறைநுதலும் விண்மீன்விழியுந் தாமரைமுகமும் பொருந்தி வாசமலருடலைக்காட்டின நாதனைக் கன்னித்தாயின் கைத்தாமரையின்மேல் விளங்கினமுத்தின் சாயலாக வின்பக்கடலின் முழுகி யுள்ளந்தேறக்கண்டான்சூசை.

வீழ்ந்துவீழ்ந்தகனெற்றிபாரிடை மேவலோடுறவீழ்ந்தனன்
ருழ்ந்துதாழ்ந்திருதாமரைக்கழருழ்தலார்தலிருழ்ந்தனன்
சூழ்ந்துசூழ்ந்துளவின்பருமழை தூவநீண்விழிவாழ்ந்தனன்
வாழ்ந்துவாழ்ந்துயர்வானுளோர்மனவாய்வியப்புறவோங்கினுன்.

உரை.— விழுந்துவிழுந்து தன்னெற்றி தரையில்பட விழுந்தான். தாழ்த்தெண்டனிட் டிருதாமரைப்பாதத்தைத் தொழுதமிகுதியா லாசைபெருகினின்ருன், கண்டவையாராய்ந் தாராய்ந் துள்ளங்கொண்டவின்பத்தைக் கண்வழியால் மழையாகக்கொப்புளித்து வாழ்ந்தான், வாழ்ந்ததன்மையைக்கண்டவானவரு மதிசயிப்ப வோங்கினுன் சூசை.

விட்புலத்துயரோகவாணையின் வேந்தர்வேந்தெனுந்தேவனை
யுட்புலத்துவணக்கமிக்குற வுறநெடுத்திடநாணினுன்
மட்புலத்திணையற்றமாதறைவாய்ந்தசொற்கொடுதேறினன்
கட்புலத்துருமாரியோடிரு கைத்தலங்களிலேந்தினுன்.

உரை.— வானுலகிற்பொதுவறத் தனியே யரசாக்கரசனுகவாளுங் கத்தாவாகிய பாலனைத் தன்மனதில் மிகவும் வணங்கினதினுல் வந்து தானவனையெடுக்கநாணினுனுகிலும் பூவுலகினிகரில்லாத மாமரி சொன்னமொழியினுற்றேறி யின்பத்தினுலழுது வணக்கத்தோ டிருகையி லேந்தினுன்.

கைத்தலத்திலெடுத்துமார்பொடு காதலோங்கவணைத்தலு
முத்தமிட்டலுநோக்கிநீட்டலு முற்றநீரினனைத்தலுஞ்

சித்தமுற்றலுநாண்மலர்க்கழல் சென்னியின்மிசைவைத்தலு
மித்திறத்திலுமுண்மகிழ்ந்துறு மின்பமெல்லையுமில்லையே.

உரை.— கையிலேதிவ்வியகுழந்தையையேந்தி மார்பிலேயாசையோடணைத்து முத்து முத்தமிட்டுக் கண்ணிலொற்றியழுதகண்ணீராற்கழுவிச் சித்தமோங்கி யவன்றிருமலர்ப் பாதத்தைச் சென்னியில்வைத்துச்சூடி யித்தன்மையாலுளத்திலடைந்தவின்ப முடியாதுவாழ்ந்தான்.

:0:

இடையராராதனை;
பிறந்தநாதனிடையரா லாராதிக்கப் படுகிறான்.

(11-ம். பட்லம். 1.'2, 4. 5, 6, 7, 8, 9, 10, 11, 12.)
மா, தேமா, தேமா, தேமா, தேமா, தேமா, கூவிளம்.

இன்னவாயிலின்னதன்மை யின்னயாவுமாகையிற்
பொன்னநாடுதன்னுமும்பர் பொன்னுருக்கொடாங்குபோய்
மின்னனேருமன்னையீன்ற வேதநாதனைத்தொழ
வுன்னலாதகோவரின்ப முண்ணவுற்றழைத்தனர்.

உரை.— முற்சொன்னகுகைக்குள்ளே யிதெல்லாமித்தன்மையாலாகையில் வானுலகில்வாழும் வானோரழகியரூபத்தை யெடுத்துக்கொண்டுபோய் மின்னலோடொத்த கன்னித்தாயீன்ற வேதநாதனை வணங்கவரச்சொல்லி நினையாதமுறையா லிடையரின்பத்தையுட்கொள்ளவங்கே வந்தழைத்தார்.

கொழுந்துறுங்குளிர்ந்தமுல்லை கொண்டகோவர்கூட்டமு
மெழுந்துறுங்குடத்தியாரு மேகியாயகாட்சியால்
விழுந்துறுங்களிப்புவிஞ்சி வேதநாதன்மேற்பதந்
தொழுந்தொறுந்தொழுந்தொறுந் துளங்குகின்றதோற்றமே.

உரை.— கொழுந்துவிட்டுக் குளிர்ந்த முல்லைநிலத்திலிருக்குமிடையர்கூட்டமு மிடைச்சிகளு மெழுந்துவந்து சம்

பவித்ததெல்லாங்கண்டு விழுந்துமிகுந்தசந்தோஷத்தோடே பிறந்தவேதநாதனது திருப்பாதத்தைவணங்கிய வொவ்வொருவ னெவ்வொருத்தி துளங்கினர்.

பஞ்சரங்கிலின்பரங்கு பான்மையாலடைவரத்
தஞ்சலங்குழித்துவர் தமிழ்ந்தமிழ்துளந்தனில்
விஞ்சவின்பநெஞ்சடங்கில் மேவலார்ந்ததம்முயி
ருஞ்சலாடிவாயின்வாயி லூற்றுரைத்தலுற்றனர்.

உரை.— பஞ்சேந்திரியங்களிற் பேரின்பத்தைநிறைய வநுபவித்தடைந்த தேவவரங்களாகிற கடலைக்குழித்து மகிழ்ந்துள்ளேயமிழ்ந்தி யமிழ்ந்தினமனத்திலே மிஞ்சினவின்பமே நெஞ்சிலேகொள்ளாமல் வாயிலேவந்து தேவபத்திநிறைந்த தம்முயிருடலினுள்ளே யுஞ்சலாடியிருக்கப்பேசத்துவக்கினர்.

எண்ணுளேயடங்கலின்றி யேந்தமாட்சிபூண்டிவான்
விண்ணுளேபொலிந்துவந்த விண்ணவர்க்குவேந்தனே
புண்ணுளேமருந்துநீவிப் போனவாட்டைமீட்கவோ
மண்ணுளேயெழுந்துவந்து மண்ணனென்றுதித்தனை.

உரை.— எண்ணப்படாத வுயர்ந்தமாட்சிமைகொண்டு வானுலகிலுயர்ந்துவாழும் விண்ணோர்க்கிராசாவே! பாவத்தால்வந்த புண்ணுக்கு மருந்து தடவி யிடையனை விட்டுப்போன வாடாகிற பாவிகளை மீட்டிரட்சிக்கவோ பூமியிலே வந்து மனிதனுய்ப்பிறந்தாய்.

ஒண்டலங்களண்டவும்ப ருந்தொழும்பராபரா
விண்டலங்கலந்திலங்கு வெண்களங்கனெப்பெனு
மண்டலங்களெங்கும்யாரும் வாழவீரவெண்குடை
கொண்டலங்கல்கொண்டதேறல் கொண்டவன்புகொற்றவா.

உரை.— அழகியவானுலகத்தோரும் வணங்கும் பராபரனே, ஆகாயத்திற்பிரிந்து விளங்கிய சந்திரனைப்போலப் பூவுலகிலெவரும்வாழக் தயையுள்ள வெண்குடையைக்கொண்டு தேனொழுகியமாலையாக வன்பினையணிந்தவரசனே.

மணிக்கலத்தகத்தமைத்த வானமிர்தமார்பினேய்
பிணிக்குலத்தகத்துதித்த பெற்றியாய்ந்துவாழ்த்திடப்

பணிக்குலத்தகத்தடங்கி லாற்பணித்தநின்பணி
யணிக்குலத்தகத்தணிந்த வன்புபேர்கிலாருமே.

உரை.— தேவவமிர்தத்தைக்கொண்ட மாணிக்கத்தாற் செய்தபாத்திரத்தைப்போலு மார்பினையுடையோய் நீ பிணிக்குலமாகிற மனுக்குலத்தில் மனிதனாய்ப்பிறந்த வதிசயத்தையாராய்ந்து ஸ்துதிப்பது சொல்லிலடங்காமையால் நீயிட்டகட்டளையை யாபரணமாக மார்பிலேயணிந்தபட்சமாயினு மெங்களைவிட்டுப் போகாது.

இரவிவேய்ந்தகஞ்சமீன்ற விலகுமுத்தமேய்த்துவெல்
புரவில்வேய்ந்தசேயையீன்ற பொருவிலன்னைவாழுதி
சுருதிவேய்ந்தமாட்சிபூண்ட துணைவனுயமாதவத்
துருவில்வேய்ந்தவேந்தவாழி யுறுதியென்றுவாழ்த்தினர்.

உரை.— சூரியனை யுண்டதாமரை மலர்ந்தீன்றமுத்துப்போலத்துன்பமின்றிப் பிள்ளையையீன்ற நிகாரததாயே வாழி, வேதந்தோன்றின மாட்சிமையணிந்த துணைவனாகி மாதவரூபமாகத்தோன்றிய விராசாவாகிற சூசையே நன்றாய்வாழியென் றிவரைவாழ்த்தினர்.

இடத்திடத்தடத்தியுற்ற விக்குடைத்தவின்புசொற்
குடத்தியர்க்கமைத்தபற்றல் கூர்ந்துதோன்றருண்மிசை
தடத்துணர்க்கமைத்ததேற றுங்குமாலைசாத்தலு
முடித்ததிங்களைத்தொடுத் துடுக்கடுற்றலொத்ததே.

உரை.— அங்கங்கேநெருங்கிவந்ததேனினு மினியசொல்லையுடையவிடைச்சிகள் தங்களாசைமிகுதியாய்த் திவ்விய குழந்தை திருவடிமேலே பெருமிதழ்மலர்ந்துதேனிறைந்த மாலைகளைச்சாத்தலே நிறைமதியை நட்சத்திரங்கள் சூழ்ந்ததுபோலத் தோன்றினது.

ஏதமின்றிமாலியீன்ற காந்தியென்றுதோன்றலைக்
கோதகன்றுயிர்த்தகோதை தாண்முனன்னகோவலர்
சீதவின்பமோடிரங்கு தேனமிழ்தமீகலும்
பாதமொன்றுசோமனீன்ற பானிலாவைமானுமே.

உரை.— குறைபடாமற் சூரியன்விட்ட தன்கதிரைப்

போலக் குறையில்லாமற் பிள்ளையையீன்ற மரியென்கிற தாய்பாதத்திலே யந்தவிடையரிரங்கின பசுதந்த குளிர்ந்தினிய பாலைவைத்ததே யவள்பாதத்திருக்குஞ் சந்திரன்விட்ட பார்கதிரைப்போலத்தோன்றினது.

பானிலத்தமைத்தவன்பு பழமனேருகண்செயத்
தேனிலத்திணைநோக்கு சிறுவனின்புகாட்டலால்
மேனிலத்தினரிணைத்த விரியுகாட்சியுற்றுளம்
வானிலத்தினர்ந்தவின்பு மலியவாழமாந்தினர்.

உரை.—அப்போதினியதயையைத் தாமரைக்கண்ணாற் காட்டித் திவ்வியகுழந்தை யிடையரைநோக்கி யின்பங் காட்டினதினால் விண்ணோர்க்கொத்த விரிந்தஞானகாட்சி யிவருமடைந்து மனதிலே வானுலகிலுள்ள பேரின்பத்தை நிறைந்து வாழ வநுபவித்தார்.

கன்னியாயதாயுமோங்கு காவலானுமன்புற
வின்னிருலினுங்கனிந்தவின்பவஞ்சொலோதலா
வன்னமேவுமீரவன்பு முன்னமுள்ளுருமையான்
மின்னமாரிதூவலொத்த விழிநாட்டமாரியே.

உரை.— கன்னித்தாய்மரியு முயர்ந்தகாவலனுகிற சூசையுந் தயையோடுதேனினு மினியசொல்லை யவர்களுக்குக் கூறினதினால் மனதிற்கொண்ட வன்புள்ளடங்காம லினிதாய்க்கண்வழியேபுறப்பட்டு மின்னிப்பெய்த மழையைப்போலும் விட்டகண்ணினீர் மாரி.

அவதரித்ததேவகுமாரனுக்கு யேசுவென்னுந் திருநாமமிடப்படுகின்றது.

(11-ம். படலம். 94, 97, 98, 99, 100, 102)
மா, கூவிளம், விளம், விளம், மா.

மின்னுமாமகன் மேனிகொண்டுதித்தவெண்பகலாய்ப்
பன்னுநாமறை பயில்வனாவிளித்தருமன்பின்

மன்னுமாமறை வகுத்தநன்முறைகளைத்தவிராத்
துன்னுமாணுடை தூய்திருநாமமிட்டனரே.

உரை.—ஆண்டவன் மகனுயுடலெடுத்துப் பிறந்தவெட்டாநாளிலே வேதத்தையுரைப்போரையழைத் துள்ளன்புமிக வவ்வேதங்கற்பித்த முறைகளிலொன்றுந் தப்பாமலரிய மாட்சிமைகொண்ட யேசுவென்னுந்திருநாமத்தைத் திவ்விய குழந்தைக்கிட்டார்.

முருடொடுந்திசை முழுவதும்பல்லியமுழங்க
வருடொடுந்திசை யந்தரமளவிலகளிப்ப
மருடொடுந்திசை வையகமினிதயர்வுயிர்ப்ப
விருடொடுந்திசை யிடியொடுநடுநடுங்கினவே.

உரை.— முருடுமுதல் பலவாச்சியங்க ளத்திருநாமத்தை யுரைத்தவளவி லெங்குமுழங்கவுந் தேவவருளினுனிறைந்ததிசையாகிய வானுலக மளவின்றிமகிழவும் பாவத்தால் மயக்கத்தையுடைய திசையாகிய பூவுலக மயக்கறத்தன்வருத்தந்தீரவு மிருள்மொய்த்ததிசையாகிய நரக மச்சத்தோடார்த்து நடுங்கினது.

பொய்யும்போவன போவனபொருந்தியபுரைக
ளையும்போவன வாகுலம்போவனவலகை
மொய்யும்போவன முதிர்ந்தநோய்போவனமற்றும்
மையும்போவன வகுத்தவித்திருப்பெயர்வயத்தால்.

உரை.— உரைத்தவித்திருநாமப் பெலத்தினுலே பொய்யும் பாவமு மனுமானமுந் துன்பமும் பசாசு பகைப் போரும் நோய்களு மற்றமாசுகளெல்லாமும் போயொழியும்.

நோயுமொக்குமே னுகர்ந்துயிர்தருமருந்தொக்கும்
பேயுமொக்குமேல் வெற்றியைப்பெறும்படையொக்குந்
தீயுமொக்குமேற் றீர்த்தருஞ்செல்கதியுய்க்குந்
தாயுமொக்குமே தருமனன்புய்க்குமிந்நாமம்.

உரை.— நோய்வந்தா லுயிரைத்தருமருந்தாமே, பசாசு நம்மைக்கெடுக்க வடுத்தா லதைவெல்லுதற்கொரு படையாமே, தீமையைக்கொண்டா லதைத்தீர்த்துச் செல்லவே

ண்டிய வீட்டுக்கதியைத் தருவதாமே, நம்மைப் பேணுங் காயதாமே, இதெல்லாமாகுந் தருமனுகிய கடவுளின் றயையைப்பெறுதற்குக் காரணமாகிய வித்திருநாமம்.

இன்னவின்புறு மினியவித்திருப்பெயர்தன்னைப்
பன்னவின்புறும் பன்னியவாயுமுள்வணங்கி
யுன்னவின்புறு முன்னியவுன்னமுமதனைத்
துன்னவின்புறுந் துன்னியதிசையெலாமன்றே.

உரை.—இவ்வண்ணமே யின்பத்தைப்பயக்கு மித்திருநாமத்தை யுச்சரித்தா லின்பங்கொள்ளுமுச்சரித்தவாயே, அதை யுள்ளேவணங்கி நினைத்தா லின்பங்கொள்ளு நினைத்த மனமே, அதையடுத்திருந்தா லின்பங்கொள்ளு மடுத்த திசையெல்லாம்.

வானமேலவர் வணங்கியவிப்பெயர்தன்னுற்
ருனமேதவந் தகையருள்பொறைபுகழ்வளர்ந்து
ஞானமேபயில் நன்றெலாமிகுத்துயிர்பிரித
லானவேலையி லனந்தவீடடையலாமாக்கள்.

உரை—. வானவரால் வணங்கப்பட்ட வித்திருநாமத்தினுலே தான முதலியனவளர்ந்து ஞானந்தரு நன்மையெல்லாமந்நாமமே தந்து மக்கட்குயிர்பிரிந்துபோங்காலத்தி லானந்தவீட்டுப்பேரின்பத்தை நுகர்வதற்குக்காரணமாம்.

முவ்வரசராராதனே.
திவ்விய பாலன் மூன்றரசரா லாராதிக்கப்படுகிறுன்.

(103, 104, 105, 106, 107, 109, 110, 111, 112, 113, 114, 115, 116.)

காய், காய், காய், காய், மா, தேமா.

வையத்தார்திருவிரும்பி மறுவுற்ருெென் றெளிமைவடிவம்பூண்டு [தன்
மெய்யைத்தானுலகுணர்த்த விருப்பமொடுமனுவாயவிகையேவேந்

பொய்யற்றார்வலிதன்மை பூதலத்திற்றோற்றுவிப்பப்புகழுற்றாய்ந்த
[வாம்.
வையற்றாறிவுடைமூ வரசரைத்தன்றொடொழுவானழைத்தல்சொல்

உரை—. பூவுலகத்தார் செல்வத்தினுசையினுற் பாவங் களைக்கொண்டாரொன்றதினுற் சுவாமிதா னெளியன்போல வந்து மெய்யையெவர்க்குமுணர்த்தும்படி மனிதனுகித் தான்விசையவேந்தனுகக்கொள்ளத் தன்வல்லமையிங்கே காட்டும்படி புகழப்பட்ட நடுக்கற்றவறிவினையுடைய மூன்றிராசாக்களைத் தன் பாதத்தைச் சேவிக்க வழைத்த செய்தியைச் சொல்ல லுற்றேன்.

விண்ணெழுந்தவெண்மதிய மிதித்தொளிருமெல்லடியாள்விரும் பியீன்ற
[தவண்ணங்
வொண்ணெழுந்ததிருமகற்கே யுரிகொடியாமெனமறையோருரைத்
கண்ணெழுந்தகவின்காட்டிக் கதிர்பொங்குநவமீனைக்கடவுடானே
மண்ணெழுந்தாளிலரு மறைநாப்போற்றோற்றுவித்துவழங்கல்செ
[ய்தான்.

உரை.— சந்திரனை மிதித்து விளங்கிய வடிவையுடைய மரியென்பவ ளினிதிற்பெற்ற திருமகனுக்குரிய கொடியாகுமென்று வேதத்திலெழுதப்பட்டதன்மைக்குத் தான்பூமியிலெழுந்தருளினவன்று தானே வேதத்திற்கொரு நாவைப் போலக் கண்கடந்த வழகினையுடைய கதிர்களைப்பரப்பிய வோர் புதுநட்சத்திரத்தையுண்டாக்கி யெங்கும் வழங்கும்படி செய்தான்.

நறுநானநறியபுகை நாறிநறுமராபியநன்னுட்டுவேந்தும் [ந்துஞ்
பெருமானமணிப்புனல்சேர் பேர்சியநாடாண்டருளைப்பிளிர்ந்தவே
செறுவாகத்தாசன்னர் திளைத்தார்க்குஞ்சபநாட்டிச்சிறந்தவேந்தர்
துறுவாமத்தொளிர்ந்தநவ சுற்கையொடுள்ளறிவெய்தித்தொய்யலு
[ற்றார்.

உரை.— நானமுதலிய வாசனைவீசும் பண்டங்களால் மணக்குநாடாகிய அராபியநாட்டுவேந்தனு மணிகளைக் கொழித்தபுனலையுடைய நாடாகிய பேர்சியநாட்டையாண்டு தயையில் விளங்கின வேந்தனும் அன்னங்கள் திரண்டார்

க்கும் வயலையுடையநாடாகிய சபநாட்டுவேந்தனு மிம்மூவ வரும் புதிதாய்விளங்கித்தோன்றின மீனேக்கண்ட தல்லா தாண்டவனைப்பொழு திவர்க்குத்தந்தவுணர்வினுலாயதெல்லா மறிந் துள்ளே மகிழ்ந்தார்.

தனத்தினத்துத்துணிவெய்தித் தாரகையைக்கொடிகொண்டதர
ணிவேந்தை [றேறி
மனத்தினத்துத்தொழுதடியை வணங்குவலென்றவனவனுமனத்திற்
யினத்தினத்துக்கடருனே யிணேந்துவரக்கோவேந்தையிறைஞ்சப்
போகிற் [ன்றே.
கனத்தினத்துத்தாழ்ந்தொளியைக் கான்றுடுவேயரியசுரங்காட்டும

உரை. — செல்வத்திற்கேற்பத் துணிவுங்கொண்டம்மூன்றரச ரொவ்வொருவன் றனியே மீனேக்கொடியாகக் கொண்ட வேந்தனேத் மன் மனதினுடனேவணங்கிப் பின்னேயுமவன்பாதத்திற் றெண்டனுக விழுவேனென்றுதேறியைந்துவகைத்தானேயு மினமினமாகப் புடையிற் சூழ்ந்துவரப் போகிறபோது மேகமண்டலத்திற் றூழ்ந்து விளங்குமப்புதுமீ னவர்க்கு வழிகாட்டினது.

மாறின்றியிரவுபகல் மல்கொளிகாலோருடுவேவழியைக்காட்ட
வேறின்றித்தடமொன்றைமேவியமூவரசரொான்றிவிழுப்பமோங்கிக்
காறின்றிக்களிப்புறத்தம் கருத்தெல்லாமுணர்ந்துணர்த்திக்கருணே
[யார்ந்த
வீறின்றிவளம்பூத்த விறையோனேயிறைஞ்சுவதற்கிணேந்துபோனுர்.

உரை.— அவனவன் சிலநாள் தனியேபோனபின்பு பகலுமிராவுமாய் மாருதுவிளங்கி வழியைக்காட்டியமீ னே ரேயொருமீனுகக்கொள்ள வவரும் வெவ்வேறேவழிபோகா மலொருவழியாகப்போனதினுலோரிடத்தே சேர்ந்து மகிழ்ச்சிமிக வவனவன் கருதினவுணர்வினேச்சொல்லவுங் கேட்பவுஞ்செய்து களிகூர்ந்து கருணேயுமாட்சிமையு மட்டில்லாதுடைய கடவுளேக்கண்டு தெண்டனிடக் கூடிப்போனுர்.

குழலெடுத்துமாகதர்தேன் படப்பாடிப்பல்லியங்கார்குர லினுர்ப்ப [க்கிச்
கிழலெடுத்துச்சுடரிமைக்கு முடிவேந்தர்நெட்டிடைபன்னெறிகணீ

சுழலெடுத்துமுகிற்றலையிர் கொடிநகரைக்கடந்தேகிச்சோகினங்க
[ன்றே.
ளழலெடுத்துச்செய்தறுய ராற்றிறையோனுறைந்தவிடமடைந்தார

உரை.— புகழ்வோர்சூழ்ந்து வீணைகளிசையோடொத்தினிதிற்பாடவும் பலவாச்சியங்கள் மேகத்திடி போல்முழங்கவும் விளங்கியபொன்முடியைச்சூழ்ந்த வம்மூவரசர் நெடும்வழிகடந்துபோய்ச் சுழன்று மேகங்களையறுக்கு முயர்ந்த கொடியையுடைய எருசலேமென்னு மாநகரையுங் கடந்து பசாசுகள் மனிதர்க்குச்செய்ததுயர்களையாற்றவந்த கடவுளிருந்தவிடத்தைச்சென்றடைந்தார்.

மந்திரமேற்றூயொளிகால் வாகையெனவங்கணுடுவதிந்துநிற்ப
வந்தரமேலவர்வணங்கு மரசர்பிரான்விலங்கினங்களடையுமன்ன
கந்தரமேதெரிந்ததெனக் கண்டுளத்தில்வியப்பினெடுகளித்தமூவ
[ஞ்சிப்புக்கார்.
ரெந்திரமேபொருக்கெனநின் றிழிந்தருத்தியெழூந்துவந்துள்ளிறை

உரை.— இராசமாளிகையின்மேல் விளங்கிய வொரு வாகைக்கொடிபோல வவ்விடத்தே வந்த மீ னின்றதினுல் வானுலகத்தோர்வணங்கு மரசர்க்கரசனுகியசுவாமி மிருகங்களொதுங்குமிடமாகிய வந்தக்குகையைத் தான்பிறக்கத் தெரிந்துகொண்டானென்று கண்டு மனதிலதிசயித்து மகிழ்ந்தமூவிராசாக்க ளுடனே தேரைவிட்டிறங்கி யாசையுள் மிக்கவணக்கத்தோ டுள்ளேபோனுர்.

அழிவின்றிக்கன்னித்தா யரிதிலவண்டிருமகவீன்றளித்தவாறு
மிழிவின்றியுலகளிப்ப விருதுவத்தையொன்றுபடவிசைத்தவாறும்
பழியின்றியுருக்கொடுபற் பலவும்பர்புடைபுடைதாட்பணிந்தவா
[றும்
விழியின்றியிறையீந்த மேதையினலறிந்துளத்துவியப்புற்றுரோ.

உரை.— அக்குகையினுட் புகுந்தவுடனே யாண்டவனிவர்க்குத்தத்த வுணர்வினலே யழிவின்றிக் கன்னிமுத்திரைகெடாத தாயா யங்கே யத்திருமகனையீன்றதன்மையுங் குறையின்றிப் பூவுலகத்தை யிரட்சித்தற்பொருட்டு தேவசுபாவமு மனுச்சுபாவமு மென்றிருசுபாவங்களை யொன்ருக

க்கட்டினதன்மையும் கல்லுருவங்கொண்டு பற்பலவானவர் சூழவிழுந்து பாதத்திற்றெண்டனிட்டிருந்த தன்மையுந் தெளிவாகக்கண்டறிந் ததிசயித்துநின்றார்.

மும்மலைவீழ்ந்தெனவீழ்ந்து முச்சுடர்போன்மும்முடிகள்முகிளந் [தாளில்
விம்மலைவில்லுறப்பெய்து மேவியநெஞ்சுருகிக்கண்விடுத்தநீராற்
பொம்மலையிற்பெருகின்பப் புணரியினுண்மூவரங்கண்பொலிகமூழ்கி
யிம்மலையிற்றொழத்தொழவிழ்ந் தெழுந்தெழுந்துகோவேந்தை [யிறைஞ்சிட்டாரே.

உரை.— மூன்றுமலைகள்விழுந்தாற்போல மூவரசர்விழுந்து சந்திரன் சூரிய னக்கினியென்னு முச்சுடரைப் போலத் தமது மூன்றுமுடிகளைக்கழற்றிக் குழந்தையினது வெள்ளாமலர்ப்பாதத்தில் விம்மிநிறைந்த வொளிபாயும்படி போட்டு மனதிலுருகிவிட்ட கண்ணீராற்பொங்கிய வலையெழப் பெருகியவின்பக்கடலைமூழ்கி யிவ்வண்ணமே தெண்டனாக விழுந்தெழுந்து விழுந்தெழுந் தரசர்க்கரசனாகிய திவ்விய குழந்தையை வணங்கினர்.

ஓராழியுருட்டலின்மூ வுலகாளுந்தனிமன்னற்குரியமாடை
நீராழிநிலங்காக்க மாள்வனெனுமதற்குரியநெய்கொள்மீறை
யாராழியறத்திறைவற் கருச்சனைசெய்வதற்குரியவரியதூபம்
பாராழியுடைமூவ ரிம்மூன்றும்பதமலர்முற்பணிந்துவைத்தார்.

உரை.— உலகங்களெல்லாவற்றையு மொருவனாயாளு மிராசாவிவனென்றதற்குப் பொன்னுங் கடல்சூழந்த வுலகத்தை யிரட்சிக்க விவன்சாகமனிதனனென்றதற்கு மடிந்தவுடல்களுக்குப் பூசுதற்குரிய நெய்யையுடைய வாசமீறையும் நிறைந்தவறத்தினாழியையுடைய கடவுளிவனென்றதற்குப் பூசையாகும்படியுதவிய தூபமு மிம்மூன்றினையு மம்மூன்றிராசாக்க ளவன்பாதத்துக்குக் காணிக்கையாகத் தொழுது வைத்தார்.

மண்களிப்பமனுவானாய் மனம்வருந்தவித்துயர்கொள்வடிவுற்றாயோ [யோ
விண்களிப்பவுவப்பானாய் வெயில்வடிவமறைந்தெஞ்சமிடிகொள்வா

கண்களிப்பவுருவானுய் கசடொழிப்பவுள்ளிரங்கிக்கலுழ்குவாயோ
[ருர்.
புண்களிப்பமருந்தானுய் புண்படமாள்வாய்கொலெனப்புலம்பிநின்

உரை.— சுவாமீ யிவ்வுலகெல்லா மகிழ்தற்பொருட்டு மனிதனுனயே, நீவருந்துதற்பொருட் டித்துன்பவேஷத்தை யெடுப்பாயோ? வானுலகமு மின்புறுதற்பொருட்டு நீயேய தற்குப் பேரின்பமாயிருக்கின்ருயே, விளங்கியவவ்வடிவத் தை மறைவதற்பொருட் டித்தாரித்திரத்தைக் கொள்வா யோ? எங்கள்கண் களிகூரற்பொருட் டரூபியாய்நின்ற நீ யுருவானுயே, உன்கண் வருந்தற்பொருட் டெங்கள் பாவ த்திரங்கியழுவாயோ? நாஞ்செய்த பாவத்தாற் கொண்டபுண் ணுேகாமலாற்றுதற்பொருட்டு நமக்கு மருந்தானுயே, நீ புண்பட்டு நோகுதற்பொருட்டுச் சாகவிருப்பாயோவென்று புலம்பி நொந்தழுது நின்ருர்.

மூவுலகும்பொதுவறவாள் முதிர்கருணேவேந்திவனாமுகமனுேக்
[கிப்
பூவுலகுங்களிகூரப் புகலாப்பூங்கரத்தாசிபுரிதலோடு
மேவுலகுமொன்றின்றி வெள்ளமெனவரங்களெலாமிடையத்தந்தே
தேவுலகுநிகர்நயத்திம் மூவருமெண்ணிலவாசிசெலுத்தினுரோ.

உரை.— உலகங்களெல்லா மொருவனுயாளு மளவிறந் தகருணேயுடையசுவாமி யங்கேகுழந்தையாயிருந்து வந்தமூ விராசாக்களே யினிதாய்நோக்கி யிவ்வுலகெல்லாங் களிகூர வாயினுற்பேசாமற் பூங்கையாலாசீர்வாதந் தந்தான், தந்தவ ளவிலே மட்டொன்றின்றி வெள்ளமாக வரங்களே நிறையச் சொரிந்தான், அவரும்வானுலகபேரின்பத்தை நுகர்ந்ததன் மைக் குளமகிழ்ந்தெண்ணப்படாத துதிகளேச் சொன்னுர்.

அருத்தியொடுமனத்தோங்கி யனிச்சையினெய்யடிசிரமேலணுகி
ச்சேர்த்திக் [போன்மாற்றி
கருத்தினெடுகண்ணிலொற்றிக் கண்ணுகுநீர்முத்தெனக்காற்கழற்
யிருத்தியொடுமூலேதழுவு மிளேயோர்போல்வாய்பொருத்தியிருமுத்
தேற்றி [ழ்ந்தார்.
வருத்தினெடுமனத்தின்ப மகிழ்வெல்லேயில்லேயெனவனாவில்வா

உரை.— இவர் கொண்டவன்பினளவிற்கு மனதிலே யோங்கி யனிச்சம்பூவினுநொய்யடிகளைத் தலையின்மேற்கொண்டாசையோடுகண்ணிலேயொற்றிக் கண்விட்டகண்ணீரை முத்தாகக்காலணியாய்ப்பூட்டி யினிதிற்றாய்முலை தழுவினகுழந்தைகளைப்போல வப்பாதத்தில் வாய்பொருத்திமுத்தமிட்டு மனதிலின்ப மகிழ்ச்சி மட்டில்லாததாய் வாழ்ந்தார்.

திவ்வியவிரட்சகருடைய சுகிர்த நடக்கை போதனையற்புதங்களாவன.

(35ம். படலம். 2, 3, 4, 5, 6. 7, 8, 9, 10, 11, 13, 14, 15, 16, 17, 18, 19.)

விளம், விளம், மா, கூவிளம்.

நனைவருஞ்சண்பக நறுநிழற்கினை
யனைவருங்குளிர்பட வருணிழற்றினோன்
புனைவருந்துணிவொடு புவிபுரந்திட
நினைவருந்தவம்வழா நெறிநின்றனரோ.

உரை.— திருக்குமாரன் பூத்தசண்பகச்சோலை நிழலோடொப்ப வருளினா லெவரையுங்குளிர்ப்பிக்க நிழலைச் செய்தவனாகி யரியதுணிவோ டுலகமிரட்சிக்க முந்தித் தானேயரியதவநெறி வழுவாதே நின்றானென்க.

கிடந்துதைந்தருமறை தெளித்தநூற்படி
நடந்துமுன்னறநெறி நல்கிப்பூமதுக்
கடந்துபின்னினியவை கனியவோதுவான்
கிடந்துமின்பிழம்புகக் கிளர்த்தகாட்சியான்.

உரை.— கிடந்தமின்னொளித்திரளை நிறையவெறிக்குங் காட்சியுடையதிருக்குமாரன் பிறழாமெய்யிற் சிறந்தவேதநூலின்படியே முன் றானடந்து நல்லறநெறியைக்காட்டிப்

பின்பு மலர்ந்த பூவாயொழுகு மதுவினுமினியசொற்கொண் டந்நெறியை யோதுவான்.

செய்வினையுமாவினை திரிபிலாச்செயிர்
கொய்வினையாகையிற் குணுங்கிங்குய்த்தபற்
பொய்வினையனைத்தையும் போக்கியாண்டையு
மெய்வினையுணர்த்துவான் மெய்யின்காணியான்.

உரை. — மெய்யின்காணியையுடைய திருக்குமாரனட ந்துசெய்யுந்தன்மையு மோதிச்சொல்லுந் தன்மையும் வேறுபடாமலொன்றித் தீவினையறுக்குந்தன்மை யாகையிற் பசாசு பூவுலகிற்கொண்டுவிட்டபொய்களை முழுதும் போக்கி யெங்குஞ் சத்தியத்தை யுணர்த்துவான்.

ஒப்பிலானொருவன்பா னென்றுணர்கிலாத்
துப்பிலாத்தேவரைத் தொழுதலந்தகற்
கப்பிலாழ்ந்தந்தகன் றுணையமைந்தெனத்
தப்பிலாவழுவிவர் தவிர்க்குமோவென்பான்.

உரை.— திருக்குமாரனுணர்த்துந்தன்மையாவது தன க்கோருவமையில்லாதா னொருவனுவதன்றிப் பலராக மாட் டாதென்று நன்றாயுணராமையாற் றேவதிறமில்லாதவரைத் தேவராகவெண்ணி வணங்குவ தெத்தன்மைத் தோவெனி லாழ்ந்தவாற்றுநீரிற் புகுந்த குருடன் குருடனுக்கொரு துணையாகநின்று விருவருக்கொருப்படக் கேடு தப்பாததன் மையாகுமென்பானென்க. (ஆகையா லவ்விரு குருடர் நீரி லமிழ்ந்திச்சாவதுபோலப் பொய்யானதேவரை யனுசரித் தவருமத்தேவரோ டெரிதீநரகிலமிழ்ந்திக் கெடுவாரென்றதா யிற்று.)

மின்னுரைத்திழைத்தபொற் கோயில்வேய்ந்தினுங்
கொன்னுரைத்தனவுருக் கொள்கைத்தெய்வமோ
பொன்னுரைத்தொளிப்படப் புனைந்தபாவைக
ளென்னுரைத்திடுவதோ ரியல்புண்டோவென்பான்.

உரை.— மீளவும் பொய்யானதேவர்களுக்குப் பொன் னிழைத்தாக்கின நகையான் மின்னுங்கோயில்கள் வைத்த

தாகத்தோன்றினும் விஞ்ஞயலங்கரித்த வுருவங்க ளுரிய தேவனொன்பவோ? பொன்னைப்பூசி யொளிபடவலங்கரித்த மரப்பாவைகள்பேசுமோ வென்பான். (ஆகையாற் புறக்கோலத்தை யெண்ணுவதாகாதென்றதாயிற்று.)

உலகிடத்தோரொன்பா னுரைத்தநூற்படி
விலகிடத்தகளெலாம் விலகியீரற
மிலகிடத்திடாறத் தியலுநற்பய
னலகிடத்தகுதியை யறிவர்யாரொன்பான்.

உரை.— சொன்னபடி யொன்றாகிய கடவு ளிப்பூவுலகிற்றிருவுளம்பற்றியருளின வேதநூற்படியே விலகவேண்டிய தீவினையாவையும்விலகி யில்லறந்துறவறமென்னு மிருவகையறங்கள் விளங்கினவிடத்திற் றுன்பங்களொழிந்து வினையும் பலனையளக்க வதின்றன்மையை யறிவாருண்டோவென்பான்.

மருள்வருநசைபிறர் பொருளில்வைத்திடா
தருள்வருமுகத்திறன் பொருளளித்தலே
பொருள்வரும்வழியெனப் புயலின்வான்கொடை
தெருளவருமறிவுளார் திருத்துவாரொன்பான்.

உரை.— மீளவு மறிவின்மயக்கத்தால் விளையுமாசையைப் பிறர்பொருளின்மேல்வையாம லருளான் மலர்ந்தமுகத்தோடு தன்கைப்பொருளை யிரப்போர்க்கீதலே தனக்குப் பொருள்விளையும் வழியாமென்று பெய்யுமழையோடொப்பத் திரளாய்க்கொடுப்பார் தெளிந்தவறிவினையுடையாரொன்பான்.

அறத்தினல்வருவதே யின்பமல்லதோர்
மறத்தினல்வசைவரு மன்றிவானெறி
புறத்தினமென்றுதான் புகன்றவேதநூற்
றிறத்தினுளத்திருள் சிதைப்பவோதுவான்.

உரை.— மீளவு நல்வினைப்பயத்தா லின்பம் வருவதேயொழியப் பாவத்தா லிகழ்ச்சி விளைவதுமன்றியே யவ்வழி மேற்கதிசேரும்வழிக்கப்புறத்து நிற்குமென்று தானேதிய

வேத நூலான் மனிதருட்கொண்ட விருளைநீக்கி விளக்குவா னென்க.

கள்வரும்பொருடகாக் கடந்தசொற்புகழ்
கொள்வருமனையவர் கொண்டவப்புக
ழெள்வருமிழிவதே யியன்றதாழ்ச்சியா
லொள்வரும்புகழென்பா னுலகிலோனொன்பான்.

உரை.— மீள்வுந் தன்னியல்பிற்குத் தகாமற்கடந்த புகழ்ச்சியைத் தனக்குத்தகுவதென்று நினைத் ததைக்கொள்பவர் பிறர்கைப்பொருளைத்திருடுங் கள்ளரோடொப்பார். அதுவுந்தவிர வந்தப்பொய்ப்புகழ்ச்சியா லிகழ்ச்சி விளைவதுசரியே, தாழ்ச்சியடக்கத்தினாலோவெனி லொளிபெறுங்கீர்த்தியாகுமென்பா னுலகிற்கெல்லாமொருகடவுளாகநின்றதிருக்குமாரன்.

இக்கெனப்பொருளொளி யின்பமூன்றுமே
புக்கெனப்புலாயெலாம் புவிபுகுந்தன
மிக்கெனத்துடைத்தவை வெல்லுவான்பொறை
சிக்கெனத்தாங்கியெஞ் செயினைத்தாங்கினன்.

உரை.— அங்ஙனம் பொருளாசை புகழாசை யின்பத்தினைசையென் றிம்மூன்று மினிமையோ டுலகிற் புகுந்த தன்மையாற் பாவமெல்லாமிகவும் புகுந்ததென்றவற்றையொழித்துவெல்லப் பிறர்க்குச்சொன்ன வுணர்ச்சிகளன்றியே தானே யாயுதமாகப் பொறுமையைத்தாங்கி நமது தீவினைகளையுந் தாங்கினன்.

தீய்வருமிகழ்ச்சியைச் சிந்தியாப்பிரான்
றுய்வருமருளினற் றரணியெங்கணும்
போய்வருந்துயரறப் புதுமையாக்கியுட்
காய்வருங்குளிர்ப்பவே கருணைகாட்டுவான்.

உரை.— அங்ஙனஞ் சுடுந்தீயாகத்தனக்குவந்த விகழ்ச்சியைப் பொறுமைமிகுதியாலெண்ணுதிருந்தகடவு ளன்புள்ளதாயின்றன்மையா லெங்குந்திரிந்து மனிதர்க்குவந்த துயர்களைத்தீர்ப்ப மட்டில்லாதவற்புதங்களைச்செய்து பகையா

சுடு நெஞ்சுடையர்முதலா யுள்ளே குளிரும்படிக்குக் கருணை தயாபத்தை யெங்குங் காட்டுவான்.

கண்டருங்காந்தருஞ் செல்லக்காறரு
முண்டருங்களிதரு முயிர்தருந்தகும்
பண்டருந்துயர்களைப் பலவைதீர்தரு
மண்டருந்தயைநலம் வழங்கத்தந்துளான்.

உரை.— அவன்செய்யுமற்புதங்களேதெனில், கண்ணி ல்லார்க்குக் கண்ணைத்தரவுங் கைவழங்காதார்க்குக் கைவழ ங்கச்செய்யவு முடங்கினகாற்குறைதீர்ப்பவு நொந்தார்க்கு மகிழ்ச்சிவிளைவிக்கவு மிறந்தார்க்குயிரைத்தரவு நெடுநாள்வந் ததுன்ப நோயெல்லாநீக்கவு மிக்கதயையையெங்குஞ்செய் வான்.

தந்தநன்றெவர்க்குமாய்த் தனக்கியாவரு
மந்தமொன்றிலாமலி யல்லலாக்கலும்
வந்ததன்றுயரொலா மனத்தெண்ணுப்பொறைக்
கந்தளந்தரித்தனன் கருணைவேலையான்.

உரை.— அங்ஙன மற்புதமாகத் தான்செய்த நன்மை யெவர்க்குமுண்டாகி யெல்லாருந்தனக்குத் தின்மையைச் செய்ய விளைந்த தன்றுன்பங்களையெண்ணுமற் பொறுமை யே வயிரக் கவசமாகத் தரித்துக்கொண்டான் கருணைக்கட லாகிய திருக்குமாரன்.

புரைசெயுந்தன்றுயர் பொறுத்துநொந்திலா
னுரைசெயுநெறியுரு வுயிரைத்தீநர
கிரைசெயும்பாவமென் றிரங்கிவிம்முவான்
கரைசெயுங்கடலினை கடந்தவன்பினன்.

உரை.— அங்ஙனம் பிறர்குற்றத்தினால் வருந்தன்றுயர் களைப்பொறுத்து மனதினோகாதவனாய்த் தான்சொல்லிக் கா ட்டின நன்னெறியொழுகாமல் வழுவினவுயிர்களையெரிதீ நர கத்துக் கிரையாகவிழச்செய்யும் பாவமேயென்று மனதிலி ரங்கியழுவான் கரையுள்ளகடலொவ்வா ததனைக்கடந்த வன் புடைய திருக்குமாரன்.

நக்குமோர்சிறுசுவை நச்சிநீங்கலாச்
சிக்குமோர்நிறைதுயர் சிந்திப்பாரிலாத்
தக்குமோரறிவில தரணிகெட்டதென்
றெக்குமோரிணையிலா னுளேந்திரங்குவான்.

உரை.— அங்ஙன மொத்த நிகரில்லாத நரதேவன் மனிதரெல்லாரும் நக்கத்தகுவதொழிய வுண்பதற்குப்போதாத சிறிதோ ரினிமைக்காசைப்பட்டு வந்தொழியாத துன்பங்களாறுதலின்றிமொய்ப்ப துணராமனிற்கு ஞாபகமின்றி யுலகெலாங்கெட்டதென்று மனதினுேந்திரங்குவான்.

தீதளித்தோச்சிய தீயகோன்மையாற்
கோதளித்துயிருணுங் குணுங்கைவெல்லவு
நீதளித்தெரிந்தநின் வெகுளிநீக்கவு
மேதளித்தியற்றுவே னென்பிதாவென்றான்.

உரை.— அங்ஙன நமக்கிரங்கினநாதன் றன் பிதாவை நோக்கிச்சொல்வான்: என்பிதாவே தீவினைவிளைவித்துக் கொடுங்கோன்மைசெலுத்திப் பாவவழியா லுயிர்களைக்கெடுக்கும்பசாசைவெல்லவு நீதியின்படியே யெழும்பி யெரியுமுன்சினத்தையமர்த்தவு நான்செய்யத்தகுவ தேதென்றான்.

முற்பழியொழித்துநின் முனிவையாற்றிடத்
தற்பழியிலாப்பலி தரணிமீதிலா
தற்பழிவிலாதவென் னுயிரளித்தியான்
றெற்பழிபிதாவிதோ திடைக்குவேனென்றான்.

உரை.— ஆதியில்வந்தவொழியாத பழியைத்தீர்த் துன் சினத்தையாற்றக் குற்றமில்லாத பலி பூவுலகிலில்லாமையாலற்பக்குற்றமாயினுமில்லாத வென்னுயிர் பலியாக நானே தந்து பழம் பழிப்பாவங்களைத்துடைத் துலகமிரட்சிப்பேனென்றான்.

—⟶.*.⟵—

அவதரித்தநாதன் பாடுபட்டிறந்து பிதாக்கள் சிறையைத்தீர்க்கப்போ யவர்களா லாராதிக்கப்படுகிறான்.

(35-ம். படலம். 20, 21, 22 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

என்றனன்கடனீர்வெள்ளத் தினைகடந்தரியவன்பா
னன்றெனப்பிதாவுமென்று னரதுவத்திறைமைசேர்த்தி
நின்றனநாய்கன்செந்நீர் நீத்தமாய்ச்சிந்தித்தானே
சென்றனவுலகின்மாசு தீர்த்தறக்கழுவனேர்ந்தான்.

உரை.— அங்ஙனங் கடலின்வெள்ளமொவ்வாத வன்புடையோன்சொன்ன னதற்குப்பிதாவுநல்லதென்றான். ஆதலான் மனுத்தத்துவத்தோடு தேவத்தத்துவத்தைச் சேர்த்தி நின்றநர தேவன் வெள்ளமாகத் தன்னிரத்தத்தைச் சிந்திப் பூவுலகுடைய மாசுகளைக்கழுவச் சம்மதித்தான்.

கலையினாலளக்லாற்றாக் கசடெலாமொருங்குதீர்ப்பக்
கொலையினாலுயிரைச்சிந்தாக் கூறுமோருரைசால்பேனும்
விலையினாலுயர்வான்வீட்டு விழுப்பமேயெவர்க்குங்காட்ட
வலையினாலுவமியாத வலக்கணுற்றிறத்தனேர்ந்தான்.

உரை.— கற்றோ ரளவறுக்கப்படாத மனிதர்பாவங்கள் யாவையு மொருங்குடன்றீர்ப்பக் கொலைத்தொழிலாலவதரித்தநாத னுயிர்பட்டிறவாமலு மவன்சொல்லு மொருசொல்லே போதுமென்றாலு நமக்குமோட்சபாக்கியத்தைக்கொள்ளத் தான்றந்த விலைமிகுதியா லதின்செல்வமு மெவ்வளவென்றுகாட்டப் பெருங்கடலொல்வாத துரிதங்களைக்கொண்டிறப்பச்சம்மதித்தான்.

இத்திறத்திறைவனேர்ந்த வியல்பிதென்றறிந்தபேய்கள்
மைத்திறத்துடன்றவஞ்ச மறப்பகையிவன்மேறியோர்
கைத்திறத்தியற்றலுள்ளிக் காய்தழல்தூண்டினாற்போ
லத்திறத்தினரையேவி யரும்பகைமுற்றிற்றன்றே.

உரை.— இங்ஙன மாண்டவன் றிருவுளமானுனென்ற றிந்தபேய்கள் முன்னிவன்மேலே வைத்த சினமும் வஞ்சமும் பகையுந் தீயோர்கையாற்செலுத்தவேணுமென்று வேகுமழலைத் தூண்டினாற்போலச் சிலபாவிகளையேவிப் பசாசினுலன்று கொடும்பகை முற்றியது.

கண்கிழித்தொழுகச்செந்தீக் கதத்தினரடித்தபாலால்
விண்கிழித்தொழுகுமாரி விதப்பெனவெந்தையாக்கை
புண்கிழித்தொழுகுஞ்செந்நீர் புரைவினைமலங்கடீர்ப்ப
மண்கிழித்தொழுகுவெள்ள மலிவொடாங்கொழுகிற்றன்றே.

உரை.— அங்ஙனம்பசாசினுலேவப்பட்டபாவிகள் தீப்பொறி கண்வழியாகப்புறப்படச் சினத்தைக்காட்டி யவதரித்தநாதனை யடித்தகொடுமையால் மேகத்தைக்கிழித்த மழைத்தாரையாக வவனுடலிற்றிறந்த புண்வழி யொழுகின விரத்த நம்முடைய தீவினைமலங்கள்யாவையுங்கழுவ மண்மேற்றிரண்டோடும் வெள்ளமாகவோடிற்று.

கடுமரத்திழிந்தநஞ்சுட் கடுத்தடும்வினையைக்காக்க
நெடுமரத்திழிந்ததேவ நிலைமருந்துரியதென்ன
வடுமரக்கனியான்மாக்கட் கமைந்ததொற்பழியையெந்தை
கொடுமரத்தறையுண்டெம்மைக் குணித்திறந்தொருங்குதீர்த்தான்.

உரை.— நச்சுமரத்தி லொழுகினநஞ்சினு லுள்ளேகடுத்துக்கொல்லும் வினைகளைக்காக்க மற்றொருநெடுமரத்தினின்றொழுகிய தேவமருந்துவேண்டுவதென்று விலகினமரத்தின் கனியையுண்டதனுல் மனிதர்க்குவந்த பழம்பழியை யாண்டவன்றானே மற்றொரு கொடியமரத்தி லறையுண்டிறந்து தீர்த்தான்.

மக்கடங்கடன்கடீர்ப்ப வயமிலாதொன்னநாதன்
றிக்கடங்கலுமுட்கூசத் திளைத்தவக்கடன்மேற்போட்டு
மிக்கடங்கிலவன்பாற்றன் மெய்யொடுமகனுயிங்கண்
புக்கடங்கிலநோயிவ்வாய் பொறுத்தெமையுள்ளிமாய்ந்தான்.

உரை—. அங்ஙனம் பாவவினையான் மனிதர்கொண்ட கடனைத்தீர்ப்ப வவர் வல்லவரல்லவென்று பரமநாதன்றா

னே யுலகெலாங்கூச வக்கடன்யாவையுந் தன்மேற்கொண்ட வனுகி யடங்காதவன்பின்மிகுதியா லுடலேயெடுத்து மனி தனுயிங்கே பிறந்து மட்டில்லாத துரிதங்களேப்பொறுத்து நம்மைப்பற்றி யிறந்தானென்க.

எஞ்சிறையொழித்துத்தான்றன் னின்னுயிர்தந்தியாக்கை
யஞ்சிறையொழித்துவாய்ந்த வாவியான்முந்தையோர்க
டஞ்சிறையொழித்துவீட்டின் வளர்தரவருளோர்ந்தாசை
விஞ்சிறையவன்றன்றூது விளம்பியநிலேயிற்போனுன்.

உரை.—அங்ஙன மாசையின்மேலுந் தயையையுடைய நாதன் பாவத்தால்வந்தசிறை நமக்கொழித்துத் தானே தன் னுயிர்தந்திறந் துடலென்னுமழகிய சிறையைவிட்டு வாய்ந் தவுயிரோடு பிதாக்கள்சிறையைத்தீர்த்து மோட்ச பாக்கிய த்தை யவர்க்குத்தந்தருளநினைத்து முன்றன்றூ தனுகியகூசை யந்தப்பிதாக்களுக் குரைத்தபடியே யங்கேபோனுன்.

விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.

பானலமொழித்தமரர்பாவிசைகள்பாட
தேனலமொழித்தபெருமின்பமுனர்செல்ல
மீனலமொழித்திரவியெஞ்சவொளிவிஞ்சக்
கானலமொழித்தவிறையோன்கடிதடைந்தான்.

உரை.— அங்ஙன மினியபாலினு மினியபாவிசைகளே வானேர்பாடாநின்று தேனினுமினியபேரின்ப முன்னே போக வான்மீன்மறையச் செஞ்சுடரொளியினுந் திரளொ ளிபரப்பிக் காற்று விசையினும் விரைந்து நரதேவனங்கே சென்றுன்.

இருட்பொதிரிராவுணவிளங்கிரவிபோன்றே
மருட்பொதிரவாவமர்மனத்தொளிவயங்கத்
தெருட்பொதிர்முகத்திருவாசியுரைசெய்தே
யருட்பொதிர்கதிக்குரியகாட்சியையளித்தான்.

உரை.— அங்கேசென்றநரதேவ னிராவிருளொழிப்பக் கதிரைவீசிய பருதியைப்போல மயக்குவிக்கு மாசையைக் கொண்ட மனந்தெளிய வொளியைப்பரப்பித் தெளிந்தமுக

த்தோ டாசிர்வாதமுந்தந்து தேவவருளானிறைந்த மோட்ச தரிசனத்தை யவர்களுக்குத் தந்தருளினன்.

விற்றிறமனத்திறருவிஞ்சைநலம்விஞ்ச
மற்றிறநலோனைமறைவற்றினிதுகாண
நற்றிறமியற்றியதவத்தரியநல்லோர்
சொற்றிறமகன்றநயமுண்டுதொழுகின்றார்.

உரை.— அங்ஙன மாண்டவன்றந்த காட்சியொளித்திறத்தான் மனதிலாய விஞ்சைபெருகிச் சர்வத்துக்கும்வல்ல நாதனை மறைவொன்றின்றி யினிதாய்க்கண்டவுடனே யவ்வருந்தவத்தோரெல்லாருஞ் சொல்லிலடங்காத பேரின்பத்தை நுகர்ந்து வணங்காநின்றார்.

காட்சியையடைந்துளிகளிப்புளமடங்கா
மாட்சியையடைந்தருவரத்திலவர்வாய்ந்த
சூட்சியையடைந்தடிதொறுந்தொறுமிறைஞ்ச
வாட்சியையடைந்தொளியடைந்தருளடைந்தார்.

உரை.— அங்ஙன மோட்சக்காட்சியை யடைந்தவளவின் மகிழ்ச்சியுள்ளடங்கா மனமாட்சியைப்பெற்று வரங்களுஞ்சூழ்ச்சியுமிகவே யாண்டவன்பாதத்தைக் கூட்டங்கூட்டமாய்வணங்கி யாண்மையு மொளியு மருளுமிகவுள்ளடைந்தார்.

பணிந்தனர்புகழ்ந்தனர்பதந்தனிலுயர்ந்தே
தணிந்தனர்தணிந்திலநலங்களிறயங்கத்
துணிந்தனர்துளங்கின துதைந்தனநயங்க
ளணிந்தனரருந்துதியவிழ்ந்தனரொருங்கே.

உரை.— அங்ஙன நாதனைப்பணிந்தார் புகழ்ந்தா ரவன்றிருப்பாதத்தி லுயர்ச்சிபெற்றுத் தணிந்தார் தணியாநன்மையிற்றெளிந்தார் விளங்கினர் நிறைந்தவின்பத்தைக் கொண்டா ரொருப்படவெல்லாரு மரிய தேவதுதிகளை வகுத்தார்.

யேசுநாதர் தந்திருக்காயங்களைக்காட்டிச் சொல்லுமுருக்கமானவாக்கியம்.

(35-ம். படலம். 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

வானகத்துவகைசெய்யும் வனப்புடைசிரத்தைநோக்கீர்
கானகக்கொடியநெஞ்சார் கண்டகமுடியைச்சேர்த்தி
மீனகத்தெளிர்துமின்னென் விழியகத்துருவத்தாக்கி
யூனகத்திரத்தம்பாய வுறுந்துயருனாப்பப்பாலோ.

உரை.— மோட்சத்திலும் பேரின்பத்தைவிளைவிக்கும முகுடைத்திருந்த வென்சிரத்தைப்பாருங்கள், பாலைநிலத்தி லுங் கொடியநெஞ்சுடையார் நெடுமுண்முடியைச்சேர்த்தி மீனினும்விளங்கிய வென்கண்வழியா யம்முள்ளுருவிப் புற ப்பட வம்முடியைச் சிரசின்மேல்வைத்தடித்துத் திரளாய்க் குருதிகள்பாய வந்தவருத்தஞ் சொல்லுந்தன்மையோவல்ல.

பகையரசொழித்தொன்றாய்நான் படைத்தளித்தழிப்பவல்ல
தகையரசாகிமாக்க டஞ்செருக்கொழிப்பவென்னை
நகையரசாக்கிநீசர் நகைத்துமுண்மகுடஞ்சூட்டி
மிகையரசாகியாய வெருவிடுமுருவங்காணீர்.

உரை.— எதிராளியின்றி யொருவனு யெல்லாவற்றை யும் படைக்கவுங் காக்கவு மழிக்கவும் வல்லதனிக்கோலரச னுகிய நானே மனிதராங்காரத்தைத்தீர்க்கச் சிலநீசரென் னைப்பரியாசவிராசாவாக்கி நகைப்பாக முண்முடியையெனக் குப்புனைந்து நானே துன்பவரசனுகிக் கண்டயாவருமஞ்சு ம்படி கொண்டவுருவத்தைப்பாருங்கள்.

கண்வழியுயிரைப்போக்கிக்கண்டவைவெஃகிவெஃகும்
விண்வழியொழித்ததீது விலகுவான்கொடியர்கையாற்
புண்வழிகுருதியோடப் பூவெனவாடிவான்மீ
னெண்வழிகடந்தவென்கண் ணெளியொழிந்திருளனோக்கீர்

உரை.— மனிதர்கண்வழியாக வுயிரைப்போக்கிக் கண் டயாவையும்விரும்பி விரும்பத் தகு மேற்கதியின் வழியை

யைவிட்டு வந்ததீவினைநீக்கக் கொடியநீசர்கையாற் பட்ட புண்வழியாகத் திரளாய்க்குருதியோட வான்மீனோர்பாடுகடந்த வென்கண் வாடினமலரைப்போல வொளியிழந்திருண்டதாகப்பாருங்கள்.

தேனுகுமுளையால்யார்க்குந் தெருளுகுமருந்துமான
மீனுகும்வானோரேத்தும வேதநூலுலகிற்றந்த
கானுகுங்கமலவாயே கடிதடிமிதிபட்டந்தோ
ஊனுகுமுதிரந்தோய்ந்த வுதட்டலர்வாடனோக்கீர்.

உரை.— மதுரவுரைகளா லெவர்க்குந் தெளிவினைப்பயக்கு மருந்தொப்பாக வொளிமீன்றிரியும் வானுலகத்தோர் வணங்கும் வேதநூலைப் பூவுலகிடத்துத்தந்த வாசனைபொழியுங்கமலவாயே கொடிதா யடியுமிதியும்பட்டுத் திறந்தபுண்வழியாக வடிந்தவிரத்தந்தோய்ந்த வுதட்டின் மலரோ வாடினதாகப் பாருங்கள்.

தூயிரக்கொழுத்தநீசர் தூணினோடெனைர்சேர்த்தோனை
யாயிரத்தொருநூற்றைம்மூன் றடியடித்திடமொன்றின்றி
வாயிரக்கமுமற்றாய வடுவடித்தென்புந்தோன்றப்
பாயிரத்தமுமாறோடப் பழியுருவுடலைநோக்கீர்.

உரை.— மீளவு மிரக்கமில்லாதநீசனென்னை யொருதூணோடேசேரக்கட்டி யையாயிரத்தொரு நூற்றுப்பதினைந்தடிகளையடித்து வாயா லையோவென்னு மிரக்கச்சொல்லில்லாமலுமடிக்க மற்றோரிடமில்லாமையாற் றிறந்தகாயங்களை மீளவுமடித்தடித் தெலும்புகளுந்தோன்ற விரத்தமுமாறாகக் கீழேபாய்ந்தோடப் பழியாகச்சுமந்த வுருவமாக நிற்குமென்னுடலைப்பாருங்கள்.

படியதோர்தனிக்கோலோச்சிப்பாரெலாந்தாங்கநானே
நெடியதோர்சிலுவைதாங்கிநீசருண்ணீசனென்னக்
கடியதோர்வஞ்சர்நிந்தை கான்றடித்துதைப்பவீழ்ந்து
கொடியதோர்தடத்துயர்ந்தகுன்றுமேலரிதிற்சென்றேன்.

உரை.— உலகினரசு பொதுவறத்தனியேகொண்டு பூ

வுலகெல்லாந்தாங்காதிற்கு நானே நெடியதோர்சிலுவை மர
த்தைத் தோண்மேற்றூங்கிக்கொண்டுபோய் நீசருக்குள்ளே
நீசனாக வென்னை நெட்டூரவஞ்சகர் நிந்தித்தடித்துக் காலா
லுதைப்ப நானேவிழுந்துவிழுந்து கொடியவழிகடந் துயர்
ந்தமலைமே லரிதாய்ச்சென்றேன்.

ஓரயில்குன்றின்கோட்டி லுலகெலாம்வெருவிக்கூசப்
பேரயிலாணிதன்னாற் பெருமரத்தறையுண்டென்செந்
நீரயில்புவிதன்றீது நீத்தருள்கிளர்த்துவாழக்
கூரயிலாணிக்காயங் கொண்டகால்கரங்கணோக்கீர்.

உரை.— அங்ஙனங் கூர்மையுள்ள மலையினுச்சிமேலு
லகெலாம் வெருவிக்கூசும்படிக்குக் கூர்ந்தபெரிதோ ராணி
களாற் பெரியசிலுவைமரத்தறையுண்டு சிந்தினவென்னிரத்
தத்தையுண்டபூமி தன்றீவினையெலாந்தீர்த்துத் தேவவருளா
னிறைந்து வாழுதற்காரணமாகக் கூர்ந்தவிருப்பாணிகள் திற
ந்த காயங்களையுடையகாலையுங் கையையும் பாருங்கள்.

ஆட்டியாலமைந்ததீமை யகற்றிமீதுயர்வீட்டாறு
காட்டியானுயிரைநீக்கிக் கடும்பகைநீங்காநெஞ்சா
லீட்டியால்விலாவைத்தாக்கி யடைக்கலமெவர்க்குஞ்செய்யப்
பேட்டியான்றிறந்தநெஞ்சிற் பெரியதோர்வாயினோக்கீர்.

உரை.— உலகுண்டாகிய நாளி லொருபெண் காரண
மாகவுலகிற்கெல்லாம்வந்த தின்மையையகற்றி மோட்சத்
தைச்சேரும் வழியைக்காட்டி நானென்னுயிரை யிங்ஙனே
தந்திறந்தபின்பு பகையைவிடாத கொடியநெஞ்சுடையவொ
ருவ னீட்டியா லென்னைவிலாவிற்குத்தி யெவர்க்கு மடைக்
க்கலஞ்செய்யவாசையா னனே யென்னெஞ்சிலேதிறந்த
பெரும் வாசலைப் பாருங்கள்.

பெய்ததோர்மாரியென்னப் பெருகியென்னிரத்தஞ்சிந்திக்
கொய்ததோர்கனியாற்கொண்ட குறைகடீர்த்துலகங்காக்கச்
செய்ததோர்வினையீதென்னாற்செய்வதுமினியாதுண்டோ
வெய்தவோர்பயனுமும்மா லெனக்குண்டோவென்றானுதன்.

உரை.—அங்ஙன மாரி பெய்ததன்மையா லென்னிரத்

தஞ்சிந்தி யாதியிலறுத்துண்டவோர்கனியால் வந்தகேடு களைத்தீர்த் துலகெலாங்காத்திரட்சிக்க நான்செய்த தன்மையிதுவே. இனியென்னுலின்னஞ் செய்வதேதுண்டோ? ஆயினு நானிவையெல்லாவற்றையுஞ்செய்தபின் னுங்களாலெனக்குவரத்தகும் பயனென்றுண்டோவென்று னரதேவன்.

சுவாமி யுயிர்த்தெழுந்தருளின மகிமை.

:*:

(35-ம் படலம். 68, 69, 70, 71, 74, 75, 77, 78, 80.)
மா, கூவிளம், விளம், விளம், மா.

வாளழுந்திய வருத்தமேகண்டுயிர்புகமூ
நாளழுந்திய நவைவடுநீத்தெழுந்திறைவன்
கோளழுந்திய கொள்கையின்விலாவினேடிருகை
தாளழுந்திய காயமைந்தொளிவிடத்தரித்தான்.

உரை.— தம்முடைய சீஷர்நெஞ்சிற் கொடும்வாளழுந்தினுற்போல வருந்தினதன்மையைத் திருக்குமாரன்கண்டு தன்றிருமேனியி லுயிர்புகவிட்டு மூன்றுநாளுடலிலழுந்திய வடுவெல்லாத்தையுமாற்றி யுயிரோடெழுந்தருளி விலாவிலுமிருகையிலுமிருகாலிலும் கொண்ட வைந்துகாயங்களோவெளிற் பதித்தவான்மீனெப்பக் கதிராவீச 'வவற்றைமாறுமற்றரித்துக்கொண்டான்.

விண்விளக்கிய வெஞ்சுடரொழுந்தெனவெழுந்து
மண்விளக்கிய மணியொளித்தொளியணிதயங்கக்
கண்விளக்கியகவின்மனம்விளக்கநின்றெந்தை
பண்விளக்கிய பனிமதுப்பணிமொழிபகர்ந்தான்.

உரை.— வான்மேனின் றெல்லாவற்றையும் விளக்கின சூரிய னத்தமித்தபின்பெழுந்தாற் போலத்திருக்குமாரனெழுந்து பூவுலகிடத்தொளிசெய்யு மணியொளியொளிப்ப மிக்

கொளியணிகளை விளங்கத்தரித்துக் கண்ணுக்கினிதாய்த் தோன்றினவழகு கண்டாருடைய மனத்தையும் விளக்க நின்று வீணைவாய்க்குரலினு மினியகுளுமதுமொழிகளைச் சொன்னான்.

தீய்முகத்துல கழிவுறுங்காலறஞ்சினந்த
பேய்முகத்தெனைப் பெயர்கிலார்க்கியல்பிதென்றறிய
நோய்முகத்திறந் தரியதூதுரைப்பநீறுதலி
வீய்முகத்திவண் விட்டமெய்யெடுத்தெழுகென்றான்.

உரை.— உயிரோடெழுந்த திருக்குமாரன் சூசையை நோக்கிக் கடையுகத்துலகெலாம்வெந்து முடியும்போது நல்லறம் பகைத்த பசாசுக்கிணங்காமலென்னை விடாதயாவரு மித்தன்மையுடலெடுத்தெழுந்திருப்பாரோ, அதற்கடைமானமாக நெடுநாட்பிணிகொண்டிறந்து நானேவினபடி யரியதூதுரைப்ப நீயிங்கேவிட்ட வுன்னுடலை யிப்பொழுதெடுத்தெழுகவென்றானென்க.

அலைபுறங்கொளீ யாதவனெழுந்தொளிமுகத்திற்
கலைபுறங்கொளீக் கவினிறைதிங்கள்சேர்ந்ததுபோ
லிலைபுறங்கொளீ யேடவிழ்கொடிநலோனெழுந்தெந்
நிலைபுறங்கொளீ நிமலனைத்தொழுதமுன்னின்றான்.

உரை.— அங்ஙனந் திருக்குமார னேவினதிறத்தாற் கடலைவிட்டெழுந்த செஞ்சுடரொளிமுகத்தருகே பலகலைகடந்து நிறைந்த திங்கள்வந்து நின்றாற்போலப் பச்சிலையோடிதழ்மலர்ந்த கொடியையேந்தியசூசையு முடலெடுத்தெழுந்து நமக்குரியதன்மையைக்கடந்து பரமநாதனை வணங்கி யருகே நின்றானென்க.

கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிளம், கூவிளம்,
தேமா, புளிமா, புளிமா.

மொடமொடவெனவினமுரசொலிமுழவொலி மோதியயாவுமுழங்கியதிர [யப்
நெடநெடவெனவுளகுழலிசைகலவிசை நீரியவோதைகலந்தகனி

படபடவெனமழையிடியொலிகடலொலி பாடெனநேரிலொழிந்து
மெலிய [மால்.
விடவிடவெனவெளியுலகலையுலகிடை வீரியவோசைதமயங்கியெழு

உரை.— மொடமொடவென்று பலவகைமுரசுமடிபட்டொலிபடு மற்றப்பறைகளு மதிர்ந்துமுழங்கவும் பலவகைக்குழல்களும் வீணைகளு மினியவோசைகளைக்கலந் தினிதொலிப்பவு மிடியொலி கடலொலி யதற்குநேராதொழிந்து மெலியும்படிக்கு வெளிவானுலகினுங் கடல்சூழுலகினுங் தேவ வாச்சியங்கள் முழக்க மயங்கியெழுந்தது.

விளையொளியுருவுறியணியணியமரர்கள் வீரியராகமிடைந்ததொ
ருபால் [ருபால்
திளையொளிமணியணியணிமுடிகொணர்வன சேடியராகமலிந்ததொ
கிளையொளிவடிவடிமலரிணைதலைமிசை கேழணியாகவணிந்ததொரு
பா [தொருபால்.
விணையொளியுருவொடுபுகழிசையொலியெழ வீரணியாகமகிழ்ந்த

உரை.— ஓரிடத் தொளிவிளைதற்காரணமாக வழகியவுருவைக்காட்டி வானவரணியணியாய்ப் படைவீரராகநிறைய நிற்கவு மோரிடத்தொளியைவீசிய மணியாபரணங்களையு மழகியமுடிகளையுங் கொண்டுவந்தவடிமைகளாகச் சிலரோ நிறையநிற்கவு மோரிடத்தொளியைக்கிளைத்த வழகியதிருக்குமாரன்பாதமலரைத் தலையணியாகச் சிலரோயணிந்துவணங்கிநிற்கவு மோரிடத்திளங்கதிர்பரப்பிய வுருவோடுநின்று தேவபுகழ்ச்சி யிசைகளைப்பாடிச் சிலரிரண்டணிகளாக மகிழாநிற்கவுஞ் செய்தார்கள்.

ஒருவருமுளபலவுலகுளவதிபதி யூழுளவூழினறைந்துபுகழ்வா
[வா
ரொருவருமினைவனினைவவனுடலுட ஞேர்மகனுகவியைந்ததறை
ரொருவருமடிபடமிதிபடவுயிர்பட வோவியகாதைவியந்துமொழி
வா [தொழுவார்.
ரொருவருமிரவியினொளிமிகவிவனெழு மோனாயினேகைநின்று

உரை.— சிலருண்டாகிய வுலகிற்கெல்லா மொருவனு

யாளாநிற்கு மரசர்க்கரசனுகிய திருக்குமாரனுடையநித்திய தேவகுணங்களைச் சொல்லிப்புகழ்வார், சில ரவனிரங்கின நினைவோடுடலைக்கொண்டு மனிதனுய்ப்பிறந்த செய்தியைப் புகழ்ந்துசொல்வார், சிலரவனடியு மிதியும்பட்டுத் தன்னு யிர்பட்டிறக்க வருந்தினசெய்தியை யதிசயப்பட்டுச்சொல் வார், சிலரிப்போ தவன்செஞ்சுடரொளியினும்விளங்கி யெ ழுந்தமகிழ்ச்சியைச்சொல்லி வணங்குவார்.

அனைவருமனுகுவர்நயமிகவுருகுவ ராசையிலாசிவழங்கிமெலியார்
சுனைவருமலரடிதொழுகுவரணைகுவர் சோபனமாடியனந்தமுடியார்
புனைவருமுணர்வொடுபுகழுவர்புகழிசை நேரிலவாடவருந்தியொழி
[யார்
நினைவருமழகுளமுகமுலகயிலுவர் பூகதர்பூசைபுணர்ந்துபிரியார்.

உரை.—ஒருப்படவந்தவானவர்யாவரு மணுகி மகிழ் ச்சிமிகுதியாலுருகி யாசையளவாகவாழ்த்தி மெலியாதிருக் கவுந் தாமரைப்பாதத்தை வணங்கியணைத்துச் சோபனங்க ளைப்பாடி முடியாதிருக்கவு நினைப்பதற்கரிய புகழ்ச்சியைச் சொல்லிச் சொன்னபுகழ்களு நேராமற் றாழ்ந்தன வென்று வருந்திநின்றாலு மப்புகழொழியாதிருக்கவும் பெறுதற்கரிய வழகிற்சிறந்த திருமுகமலரைக் கண்வாயால் நுகர்ந்து புகழ் ச்சியருச்சனைசெய்து பிரியாதிருக்கவுஞ்செய்தார்.

மெலிவனவுயிருணுமயர்வஞர்சிலுகிடர் பாசறையாவுமொழிந்து
[மறைய
நலிவனவுடலுணுமிடிபசிமடிபிணி யாகுலம்யாவுமகன்றுபெயர
மலிவனபகையொடுபழிமலிவெறியின மாறிலமாயைமடிந்துசிதை
யப் [யே.
பொலிவனபலநலமருகுவவொளியொடு பூதலமீதிலெழுந்தஇறை

உரை.—மெலிந்தவுயிரையுண்ணும் பலவகைத்துன்பங் கள் யாவு மொழியவு மழியுமுடலையுண்ணுந்தரித்திரம் பசி நோய் சாவுமகன்று பெயரவு மிக்கபகைபழிகொண்ட பே யின மாறுமற்செய்யுமாயை யொழிந்துகெடவு முயர்ந்த நன் மையெல்லாம்வந்துகிட்டவு மிப்பூவுலகிலாண்டவ னொளியு ருக்கொண் டெழுந்தருளினன்.

உயிர்த்தெழுந்தருளின நாதன் றன்றிருமாதாவுக்குக் காணப்படுகிறூர்.

—*0*—

(35-ம் படலம். 81, 82, 83, 84.)

விளம், மா, மா, காய்.

வானகமுதலெவ் வுலகும்வாழ்ந்துவப்ப
மீனகவுருவுற் றெழுந்தமெய்த்திறலோன்
றேனகமொழியா டன்னைச்சேர்த்துயிர்த்தா
டானகமற்றச் சவையோடாங்கெழுந்தான்.

உரை.— வானுலகாதி யுலகெலாமகிழ்ந்து வாழ்தற் காரணமாக வான்மீனினு மொளிவீசின வுருவோடெழுந்ததேவவல்லோனாகிய திருக்குமாரன் றேனினுமினிய சொல்லாளாகித் தன்னைச்செல்வத்தி லீன்றதாயாகிய மரியென்பவள் தானு மகிழும்படிக் கவளண்டைக்கு மற்றச் சவையோ டெழுந்தருளிப்போனான்.

ஒளிமுகத்திருமா சுடரோடொத்திருவர்
தெளிமுகத்திலங்க வெடுத்தசீருடலைக்
களிமுகத்தவளே கண்டாள்கண்டடிவீழ்ந்
தளிமுகத்திறைஞ்சி யயின்றநோயொழிந்தாள்.

உரை.— இருசுடரொப்பத் தன்றிருக்குமாரனுஞ் சூசையாகிய தன்றுணைவனு முடலெடுத்தெழுந் தொளிமுகத்திற் றோன்றினசெல்வத்தை மரியென்பவள்கண்டாள், கண்டவளவி லிருவரடிகளில்விழுந்து கொண்டவன்பு மிகவேவணங்கித் தான்முன் னுகர்ந்தநோயெல்லா மொழிந்தாள்.

உணங்கியமுல்லைக் குயிர்பெய்நீர்த்துளிபோ
லணங்கியவுள்ள மலரவக்காட்சி
யிணங்கியதன்மைத் திழிதேனிணரோற்றி
வணங்கியவின்பங் கடனீர்வளமாற்றூ.

உரை.— ஈரமின்றி யுணங்கிவாடிய முல்லைக்கொடிக்குயிராகப்பெய்த மழைத்துளிபோலத் துன்பத்தால்வாடினவ

வள் மனமலரும்படி யக்காட்சியடைந்தவளவி லிருவர் பாத த்தின் மதுமலரோற்றிவணங்கினபொழு தவளடைந்தவின்ப த்திற்குப் பெருங்கடலு நிகரல்ல.

மாயளவரிய மகனைக்கண்டயின்ற
நோயளவின்ப நுகரமற்றநலோர்
மீயளவுடுப்போல் விளங்கக்கண்டுவக்குந்
தாயளவிலவாழ் தகவிற்புகழறைந்தாள்.

உரை — சிலுவையிலறையுண்டிறக்கும்போது தன்னரி யதேவமகனைக்கண்டதனு லுட்கொண்ட துன்பத்தளவோ டிப்போ தின்பத்தையவளுட்கொள்ளும்பொருட்டால் மற்ற நல்லோருடலில்லாதாராயினுமேற்றிரியுமீன்களொப்பவிளங் குவதைக்கண்டு மகிழ்ந்ததாயே யளவொன்றின்றிவாழ்ந்த தன்மைத் தரும் புகழ் சொன்னாள்.

உயிர்த்த கர்த்தர்
மோக்ஷத்துக்கெழுந்தருளுகிறார்.

(36-ம் படலம். 1, 2, 3, 4. 5, 6, 7, 13, 14, 16. 17, 18, 19, 20, 21, 22.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்,

அன்பருந்தியவாண்டவனைமாய்தலாற்
றுன்பருந்தியயாவருந்தொய்யலிற்
பின்பருந்தியகாட்சியின்பெற்றியா
யின்பருந்தலிலெல்லையொன்றில்லையால்.

உரை.— அன்பின்மிகுதியா லாண்டவனிறந்தபோது துன்பத்தழுந்தியாவரும் பின்புமகிழ்ச்சியோடவனெழுந்து தந்த காட்சியா லடைந்தவின்பமட்டில்லாத தாயிற்று.

நீதானன்னெறி தந்தருணேமியா
ஞுதனின்னணநாற்பதுநாளிருந்
தாதவன் றிரிபந்தரமேற்செலக்
காதலுண்டுகருத்துமுண்டானரோ.

உரை.— அங்ஙன நீதிநன்னெறிகந்து தயையின்சக்கர த்தையுருட்டுநாத னிங்கேநாற்பதுநாளிருந்தபின்பு செஞ்சுடர்திரியு மண்டலங்கடந்து வான்மேலுலகிற்செல்ல வாசையுங் கருத்துங்கொண்டான்.

விதியெழுந்தமெய்வேதநன்ஞுதனுந்
துதியெழுந்தகைத்தாதையஞ்சூசையு
மதியெழுந்தபதத்தினள்வாழ்த்தினர்
நிதியெழுந்தவிண்ணேடுதுநாமென்ருர்.

உரை.— விதித்தமுறையிற் சிறந்த சத்தியவேதத்தைத் தந்தநாதனு மெங்கும்புகழப்பட்ட வவன்கைத்தாதையாகிய சூசைமாமுனியும் பிறைமேலெழுந்த பாதத்தாளாகியமரியென்பவளுக்கு வாழுவென்று பொன்னுலகாகிய மோட்சத்துக்கு நாங்களேபோவோமென்ருர்.

புண்குடைந்தவேல்போலுரைகேட்டுநான்
விண்குடைந்தவிடிப்படமின்னினீர்
கண்குடைந்தவில்காட்டிப்போதீரொனுப்
பண்குடைந்தசொலாள்பணிந்தேங்கினுள்.

உரை.— புண்ணைக்குடைந்த வேலோடொத்த செய்தியைக்கேட்டு மேகத்தைக்கிழித்துவிழு மிடிபட்டாற்போல நானேமயங்கிக்கிடப்ப நீங்களிருமின்களைப்போலக் கண்ணுக்கொளியைக்காட்டி மறைந்துபோகிறீரோவென்று வீணைவாய்க்குரலினு மினியசொல்லாளாகிய மரியென்பவளிருவரைவணங்கி வருத்தமாயேங்கினின்ருள்.

எல்லின்வேந்தகன்ருமிருளீர்த்தவி
ரல்லின்வேந்தெனநாமகன்ருகுலம்
புல்லின்யாவரும்போற்றுதிநீயெனுச்
சொல்லினுசிதந்தோர்வனாதன்னினுர்.

உரை.— அதற்கவர்கள் பகலின்வேந்தனுகிய சூரியன கன்றபோது மொய்த்தவிருளையறுத்துவிளங்கு மிராவின் வேந்தனுகிய திங்களைப்போல நாங்களகன்றதினுல் வருந்து யரத்தைத்தீர்த்து நீயெல்லாரையும் பேணுவாயாகவென் ருசீர்வாதந்தந்து பெரிதோர் மலையையண்டினுர்.

களியமூழ்ந்தியகாட்சியுளோர்களு
மொளியமூழ்ந்தியவும்பருமுன்புறத்
தெளியமூழ்ந்தியசீடரும்பின்வர
வெளியமூழ்ந்தியவெற்பினைத்துன்னினுர்.

உரை.— அங்ஙனம்பேரின்பமோட்சகாட்சியை யடைந்தவரு மொளியைவீசியவானவரு முன்னேபோகத் தெளிந்த சீடரும் பின்னேதுடர விருவருயர்ந்த மலையை யண்டினுர்.

விளைகிடந்தவெற்பேறிவிண்வேந்தனுங்
களைகிடந்தகடற்கடந்தின்புற
நிளைகிடந்தனராகுலநீத்தறச்
சுளைகிடந்தசொல்லாசிதந்தானரோ.

உரை.— அங்ஙனம் பூத்துவாசனைசெய்யு மலைமேலேறி வான்வேந்தனுகிய திருக்குமார னெழுங்கோடங்கே சூழநின்றசீடர் பிரிதலிற்கொண்ட துன்பநீக்கிக் கரையுடைக்கடலினும் பேரின்பத்தைக்கொள்ளும்படிக்குத் தேனினு மினிய சொற்கொண் டாசீர்வாதந்தந்தான்.

வெளிபொதிர்ந்தகணங்களுள்வேய்ந்தநல்
லொளிபொதிர்ந்தவிருசுடரொத்திவர்
களிபொதிர்ந்தகணங்களினுப்பனே
நளிபொதிர்ந்தயங்கொடுவேறினுர்.

உரை.— வானினிறைந்த மீன்களினடுவே யொளியை வீசித்தோன்றின விருசுடர்போலத் திருக்குமாரனுஞ் சூசைமாமுனியுங் களித்த முத்தியர் கூட்டத்தினடுவே மகிழ்ந்து மேலேறினுர்.

வான்வழங்குதளங்கள்வகுப்பெலா
மீன்வழங்கு முருக்கொடுவேய்ந்துறித்
தேன்வழங்குதெரியல்வழங்கிடக்
கோன்வழங்குவளங்கொடுவேறினார்.

உரை.— வான்றளங்களாகிய வானவரொன்பது வகுப்பு மொளிமீனுருவங் காட்டிவந்து மதுமலர் மாலைகளைச்சிந்தா நிற்க விவராசராகச் சிறந்து மேலேறினார்.

மிகைவிரிந்தவியப்பிமையாதிவண்
டொகைவிரிந்துநின்றார் துயர்தீர்ப்பவான்
முகைவிரிந்தமணிமுகில்மூடியவ்
வகைவிரிந்தவில்வாகனத்தேறினார்.

உரை.— அங்ஙன மவர்மேலேறிப்போகையிலிங்கேகூட்டமாய்நின்றவர் பிரிதலில் வருந்தி யவ்வற்புதத்தைக்காணலிலதிசயப்பட்டுக் கண்ணிமையாமற்பார்த்திருக்க வப்பார்வையால்விளையும் பிரிவின்றுயரைநீக்க வானமுகைத்தது போ லோர் மணிமேகநடுவே மறைக்கத்தோன்றி யொளியைவீசு மம்மேகவாகனத்தின் மேலவரேறினார்.

மா, மா, காய், மா, மா, காய்.

விண்டிக்கிரிந்தவுருமன்ன வீழ்ந்தவஞ்சப்பேய்வினையா
லுண்டிக்கொழுகுங்கனியொன்று லுளதீதடைத்தவான்வாயில்
மண்டிக்குமுறுமலைகடவழ் வையமளித்தவருட்பயத்தா
லெண்டிக்குறைமன்னுயிர்க்கெல்லாமெந்தையன்றேதிறந்திட்டான்.

உரை.— அங்ஙனம் வான்மேலேறினபின்பு மேகத்தினின்றுவிழு மிடிபோலவானுலகினின்று முன்விழுந்தபேய்களின் றந்திரவினையா லாதித்தகப்பனுண்ட வினியகனியால்வந்தபாவ மடைத்த மோட்சவாசலை யன்றுதிருக்குமாரன் மண்டிமுழங்குங் கடலலைதவழாநிற்கும் பூவுலகத்தைக்காத்திரட்சித்த தயையின்வல்லமையா லெண்டிக்கிலுள்ள மனிதர்க்கெல்லாந் திறந்தான்.

அடைத்தவாயிற்றிறந்தானை யணுகியணுகுமணங்கெல்லா
முடைத்தவண்ணத்துளத்தெஞ்சா வொத்தநெறிநின்றாரல்லாற்

படைத்ததிவறிப்படைத்தானைப் பகைப்பாரிங்கண்புகாரொன்றாத்
[கான்.
துடைத்தநோய்க்கோர்மருந்தன்னான் றடர்ந்தற்குழச்சூழ்வரப்புக்

உரை.— முன்னடைத்திருந்த மோட்சவாசலைத் திறந்தவனை யனுசரித்தண்டி யவனையண்டினதினால் வருந்துயரொல்லா முடைத்தாற்போல மெலியாததுணிவோடவற் கொத்த நெறியின்றொழுகுநல்லோ ரிந்த வாசலிற் புகுவாரொழிய படைக்கப்பட்டயாவையும் விரும்பி யவற்றைப்படைத்த நாதனைப்பகைத்த பாவிக ளிங்கேபுகாரொன்றுசொல்லி யெந்நோய் துடைத்த தேவமருந்தாந் திருக்குமாரன் மற்றநல்லோர் தொடர்ந்து சூழவரவுட் புகுந்தான்.

புக்கவனந்நரதேவன் பொலிவானவர்தந்நிலைகடந்தே
தொக்கநிந்தைநிலைகடந்த சுகத்திற்பிதாவீற்றிருந்தாளு
மிக்கசுடர்சூழாசனத்தில் வீழ்ந்தான்றொழுதாளுளந்தூண்டி
மக்கடம்மேலருத்தியெழீ வளையாவன்பாலுரைகொண்டான்.

உரை.— அங்ஙனம் புகுந்த நரதேவன் வானவர்நிற்கு நிலையெலாங்கடந்து முழுதுமெம்மாலுணரப்படாத பேரின்பத்திற் பிதாவீற்றிருந் தாளாநிற்குஞ்சுடரைமிக்கெறித்தபத்திராசனத்தருகேசென்று கொண்டமனுச்சுபாவத்தால்விழுந்தான், வணங்கினான், வளைவில்லாத வன்புடையனாகி மனிதர்மேல் வைத்த தயையினாசை யவனுளத்தைத்தூண்டினதினாலிவ்வுரைகொண்டான்.

மன்னாவின்பவினையாற்றா மக்கட்கிரங்கிமகனானே
னன்னார்வாழவுயிர்நொந்தேனயர்ந்தேனிந்தைபட்டிறந்தேன்
முன்னாட்பிதாநீபணித்ததெலா முடித்தேன்பகைப்பேய்வென்றேன்
வென் [தேன்.
றின்னார்கொணர்ந்தீங்காண்டுவப்ப விதோமீட்டின்றுன்னடிசேர்த்

உரை.— பிதாவை நோக்கித் திருக்குமாரனெங்ஙனஞ் சொன்னானென்னில், நிலையாதொழியு மின்பத்தைத்தேடி விளைந்ததீவினையாற்றமாட்டாத மனிதர்க்கிரங்கிநானே மனிதனானேன், அவர்களுயிர்வாழ நா னுயிர் நொந்தேன், துன்

பழுநிந்தையு மிகப்பட்டிறந்தேன், பிதாவே! நீ முன்கற்பித்தவெல்லாங் குறையொன்றின்றி முடித்தேன், நம்மையு மனிதர்குலத்தையும் பகைத்தபேய்களை வென்றேன், கொண்ட வெற்றியின்பயனாக விரோதயிவர்களை மீட்டுக்கொண்டுவந்தின்றிங்கேயாண்டுவாழ வுன்றிருப்பாதத்திற் சேர்த்தேனே யென்றான்.

நமனொன்றிரங்கியன்புமிக நான்மீட்டளித்தநரர்குலமே
நமனொன்றிரங்கியருணேர்காய் நூருப்பழிப்பேயக்குலத்தார்
தமனொன்றுள்வதினிநன்றோ தயைக்கென்னினத்திற்கிரங்கிப்பே
யமனொன்றவர்வென்றீங்கெம்மோ டாளவருள்செய்கெனத்தொழு
[தான்.

உரை.— நானேமனிதனானபின்பு மனிதனாயென்னினமென்று நானிரங்கி யன்பின்மிகுதியா லவர்களையிரட்சித்ததைப்பற்றி நீயும் பிதாவே! யவர்களை யுன்னைச்சேர்ந்தவராக வெண்ணி யிரக்கம்புரிந்துதயையோ டவர்களைப்பார்க்கத் திருவுளமாவாய், விடாதபழியைக்கொண்ட பசாசுகள் மனிதனைத் தமக்கடிமையென் றினியாளாநிற்பதுநலதோ? ஆகையால் நீ தயையோடென்னினத்திற்கிரங்கி யவர்களெல்லாரும் பாசாசுசெய்யுங் கொடும்போர்வென்று நம்மோடிங்கே வந்தாண்டிருக்கத் தயைசெய்வாயேயென்று பிதாவைவணங்கினான்.

களிகூர்ந்தார்வத்தருமகனைக் கனியத்தழுவிக்கண்கடந்த
வொளிகூர்ந்துயர்தன்னாசனத்தி னுகப்பிலருத்தியோடிருத்தி
யளிகூர்ந்தேதோவென்மகனே யமைவகேளென்றவன்கூறி
நளிகூர்ந்தாற்றுவருளேந்துநளினநெஞ்சாற்கரசிட்டான்.

உரை.— பிதாவோவெனில், களிகூர்ந்தவன்போ டரியதன்றிருமகனை யினிதாய்த்தழுவிக்காணப்படு மொளித்தன்மையைக்கடந்த வொளிமிக்குமிழ்ந்த வுயர்தன் பத்திராசனத்தின்மே லவனையாசையோடிருத்தி யன்புமிகுதலின்மகனே யாதொன்றுகக்கேளென்று பிதாசொல்ல வாற்றுதருளேந்த தயையேந்திய மதுரநெஞ்சுடைய திருக்குமாரனுக்குச் சர்வவுலகத்தி னரசுதந்தருளினார்.

சுவாமியுலகத்திற்குத் தீர்வையிடவருமுறை.

(11-ம் படலம். 40 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55.)

காய், காய், மா, தேமா, காய், காய், மா, தேமா.

தேமொழுந்தசெஞ்சுடரோனிருண்டுமாழ்கத் தெண்கதிர்கால்திங்கள்முகத்திரத்தஞ்சேப்பத் [துவீழ்சப்
தாமொழுந்தவம்பலரோலணியோநாறுந் தாரகைகளங்கண்விட்டிரிந்
போமொழுந்தகதத்துடன்றுதிரைகடாவப் புயல்பாய்ந்துபொங்கிய நீண்புணரியார்ப்பப் [கமென்றஞ்சாநிற்பார்.
பாமொழுந்தபருப்பதங்க ணடுங்கிப்பேரப் படர்நிலத்தோர்கடையு

உரை.— சூரியனிருளாய்மயங்கச் சந்திரன்முகமேயிரத்தமாகச்சிவப்ப மாலையிற்கோர்த்தமலரைப்போலவு மணிகளைப்போலவும்விளங்கிய நட்சத்திரங்கள் வானினின்றுசரிந்துவீழப் போர்பொருதாற்போலக் கோபத்தைக்காட்டி யலைகள்மேற்றாவி மேகமண்டலமட்டும் பாய்ந்து பொங்கினகடலேழுழங்கப் பூமியிலெழுந்தமலைகள் நடுநடுங்கிப் பெயரப் படர்ந்தபூவுலகத்திலுளொல்லாருங் கடையுகம் வந்ததென்று மிகுந்த வச்சத்தோடேநிற்பார்.

கடுகியனவிடிச்சூல்கொள்கருங்கார்மொய்ப்பக் கணகணெனக்கடுஞ்செந்தீமாரிதூவ [ளுந்தன்மைமூய்ப்ப
வடுகியெனப்பெய்தவழல்திரண்டாங்கோட மண்டிருண்டபுகையள்
மூடுகியனசாபமழைத்திறளின்விம்ம முகிற்கீறியிடியிடித்தவிடிகடாக்கக் [மாமூமன்றே.
ஒடுகிடெனப்பாருலகநடுங்கியாடக் கிளர்துயர்கொண்டுயிரனைத்து

உரை.— கொடியவிடிகளைச் சூலாகக்கொண்ட கரிய மேகங்கள் மேலேமொய்ப்பவுங் கணகணென்றெரிந்த செந்தீ மாரி பெய்யவும் ஆறுபோலப் பெய்த வக்கினிதிரண்டெங்குமோடவுங் கையாலள்ளிவாருதற்குக் காரணமாகிய தன்மையா லிருண்ட புகை மூடவும் விரைவில் விட்ட வம்புகள்

மழையாக மிகவுமேகங்களைக்கிழி யிடியிடித்தழுந்திவிழுமிடி கடிரளாய்த்தாக்கவுங் கிடுகிடென்றுலகெல்லா நடுங்கியாடவு ந்துன்பங்கள்மிகுத் துயிரொன்னப்பட்டதெல்லா மன்றே யொருமிக்கச்சாகும்.

வெம்பரமாசினத்தெரிந்தமண்ணோரெல்லாம் வெண்பலியாயினபி
ன்னர்வயத்திற்கெஞ்சா [யில்விளாந்துசென்றே
தும்பர்மாள்தனிக்கோலானேவுந்தன்மைத் தும்பர்பலர்விடுங்கணை
யம்பரகான்கோடியெழுங்கடலுங்காரு மதிர்த்தரவமெஞ்சிவிஞ்சக்
காளமூதி [பர்மக்களெல்லாம்
யெம்பரமாவிறைவனிடுந்தீர்வைகேட்ப வெழுமினெனவெழுந்திருப்

உரை.— மிகுந்தசினத்தோடு வெந்தெரிந்த மனிதரெல்லாருஞ்சாம்பலானபின்னர் குறையாதவல்லமையால் வானுலகிற்பொதுவறத்தனியேயாளுஞ் சுவாமி கட்டளையிட்டமாத்திரத்திலே பலவானோர் விட்டவம்பினும் விரைவாயிங்கே சென்று நாலுதிக்கிலுமோடிக் கடலுமேகங்களுஞ் செய்முழக்கத்திலுமிஞ்சியதொனியோடு காளங்களையூதி நமதுபரம கடவு ளிடப்போகிறதீர்வைகேட்க வெழுந்திருங்களென்பாரென்றவுடனே மனிதரெல்லாருமெழுந்திருப்பார்.

ஏவுகின்றவயத்துள்ளவுலகமூன்று மெழிற்படமுன்னொன்றுமிலா
துளவாக்கின்றோன் [மூதியென்னத்
மேவுகின்றதிருவுளமாய்ச்சொல்லலாற்று மிடறன்னுலடலையெனப்பு
தூவுகின்றவுடலெல்லாமொன்றாய்ச்சேர்த்தித் தொல்லுலகந்துடங்
கியநாடடங்கியிங்கண் [தெழுந்துகலந்துநிற்பார்.
டாவுகின்றமனுக்குலத்தோரொருவர்நீங்காத் தம்முடலைப்போர்த்

உரை.— முன்னுளி லொன்றுமில்லாம லேவினபெலத்தினலே யுலகமூன்றினையுமுண்டாக்கினசுவாமி தான்றிருவுளம்பற்றின சொல்லிலடங்காதவல்லமையினுற் சாம்பலுமாய் மண்ணுமாய்ச்சிதறினவுடல்க ளெல்லாத்தையும் பழையரூபமாயொன்றுபடச்சேர்த்தி யுலகந்துவக்கின நாள்துவக்கியந்நாள்மட்டும் பூமியிலிருந்த மனிதரெல்லாரு மொருவனுந்தப்பாமற் றமதுடலைப்போர்த்து யிரோடெழுந்து நிற்பார்.

குலமுறையுமினமுறையுமொன்றும்பாராக் குணத்தொகையால்
வேறுபடவினையைச்செய்த [னைத்தந்தாய்
நலமுறையும்பார்த்திருபால்பகுப்பவானோர் நம்பிதனையில்லாளைமக
பலமுறையுமுன்னைத்தம்பியோர்தூர் பற்றியபற்கிளைதம்முட்
பிரிந்துநிற்கும் [மோரிடத்திட்டுய்ப்பார்.
வலமுறையுங்கண்டலறித்தளர்ந்துநோக வானவரீண்டெவனையு

உரை.— அன்றுகுலமுமினமும்பாராமற் குணங்களின் முறைமையால்வேறுபட வவனவன் செய்தவினைகளின் முறையைமாத்திரம் பார்த்து நல்வினைதீவினையென் றிருவினைபற்றி வந்தவானவர் மனிதரெல்லாரையு மிருபிரிவாகப்பகுப்பாராதலின் பூமான்றன்றேவியையுந் தாய்தன்மகளையுந் தம்பிதன்னண்ணனையும் விட்டுப்பிரிய வொருதூரினின்றுவளர்ந்த பலகிளைகள் தம்முட்பிரிந்ததைக்கண்டமையாலழுதலறித் தயங்கிநொந்திருக்க வுடனே யவ்வானவரெல்லாரையு மோரிடத்திலே கொண்டு வைப்பார்.

இடியுண்டமுகிலொருபால்மின்னிவிம்ம விகன்முரசும்பற்பறையு
மொருபாலார்ப்பக் [மற்றமரரிருபாற்சூழத்
கொடியுண்டவான்றளங்களொருபான்முன்னக் கோக்கணம்போன்
றடியுண்டவொலிக்கொடுஞ்சூழ்வெருவுய்த்தொல்கிச் சுடர்தவழுந்
தாய்முகிலிற்பொலிந்துதோன்றி [றந்தநாதன்.
முடியுண்டவரசரசெனமேனிற்பான் முருகுமுகைமுகத்திங்கண்பி

உரை.— ஒருபக்கத்திடித்துமின்னி மேகங்கள்முழங்க வொருபக்கத்துப் போர்முரசும் பலபறைகளுமுழங்க வொருபக்கத்துக் கொடியேந்திய வானவர் தங்கள் முன்னேபோகவிருபக்கத்து மற்றவானவரரசர்கூட்டம்போலச் சூழ்ந்துவர வெங்கும்வெருவினைப்பறப்பி முழங்கி மின்னிச்சுடருமொருமேகத்தின்மே லெழுந்தருளித்தோன்றி முடியைச் சூழ்ந் தரசர்க்கரசனாய்நிற்பான் மணத்தபூவரும்பினோடொத்தமுகத்தோ டிங்கே குழந்தையாய்ப்பிறந்தயேசு நாதன்.

குன்றெழுந்தசெஞ்சுடர்போன் முகின்மேற்றோன்றுங்குணத்தொ
கையோன்வலத்திறைஞ்சியுயரவானோர் [டத்திலஞ்சி
சென்றெழுந்தநல்லோனாமுகமனோக்கித் தீயலகையினத்தினுடனி

னின்றெழுந்தயாழற்றமனத்தீயோரை நெடும்வெற்கண்ணூற்சுளி
த்துநோக்கிநோக்கும் [லார்க்குந்தோற்றுவிப்பான்.
நன்றெழுந்தவினைப்பயத்தால்விளக்கிட்டன்ன நவையெல்லாமெல்

உரை.— மலைமேலெழுந்தசூரியனைப்போல மேகத்தின் மேலிருந்துதோன்றிய சகல நன்மைகளைப்பொருந்தியுடையநாதன் றன்வலது பக்கத்திலே யுயர்ந்தவானவரோடுகூடவெழுந்திருக்கு நல்லவரை யினிதாய்நோக்கினபின்னர் நரகப்பசாசுகளோ டிடதுபக்கத்திலேகிழஞ்சிநடுங்கித் துன்பத்தால்வெந்தமனதோடு நிற்கும் பாவிகளை நெடியவேலெறிந்ததுபோல கண்பார்வைவிட்டுக் கோபமாய்ப்பார்த்துப் பார்த்ததன்மையால் விளக்கைக்கொளுத்திவிட்டதுபோல வவனவன்செய்தபாவமெல்லா மெல்லாருமறியக்காட்டுவார்.

முற்செய்கையனைத்துமவண்டோன்றித்தீமை முயன்றதுமுள்வி
விரும்பியதுமுரைத்தசொல்லும் [யிரவிற்செய்த
நற்செய்கைநன்ருய்ச்செய்யாமற்செய்த நவையுமொளித்திருட்டடி
தற்செய்கையாவுமன்றேநடுங்கிக்கூ சத்தரணியெலாமுற்றறியத்தவ
ம்பயக்கும் [ரேன்றுமன்றே.
மற்செய்கையுறுதியினுலிமிழிலிக்கால் மறையவவைதுடையாதாற்

உரை.— முன்செய்த கிரிகையெல்லா மங்கே வெளியாகி யவனவன்பாவத்தைச்செய்ததை மிச்சித்ததுஞ் சொன்னதீயசொல்லும் புண்ணியங்களை நன்ருய்செய்யாம லதிலே செய்தகுற்றங்களு மிருளைத்தேடியொளித்தகோரராத்திரியிலேமுடித்த பாவங்களு மெல்லாமு மன்று பாவிகள் நடுங்கிக்கூசி நிற்ப வுலகமெல்லாமுழுது மறிய வெளியாகுமிக்காலத்திலே தவத்தினுறுதியாலே யதை யினிதாய்மறைப்பதற்கு நன்ருய்த்துடையாதேபோனுன்.

மின்னிவீழுருமன்னசுளித்துநோக்கி வெருவுய்க்குமுகத்தார்த்து
விமலன்சொல்வான் [பாவிகாள்விண்
றுன்னிவீழ்புனலன்னநிலையாச்செல்வத் தொகுதிவிழைந்தறநீத்த
சென்னிவீழ்துளியாதிசூழ்ந்தயாவுந் திளைப்பத்தந்தனனுனையென்னை
நீக்கி [தொழுததென்னே.
வன்னிவீழ்ந்தெரிவஞ்சப்பேய்கடம்மை வரக்கடவுளென்றெண்ணித்

உரை.— மின்னினாற்போலக்கோபமாய்நோக்கி யிடியிடித்தாற்போலப்பயம்வருத்துவிக்கு முகத்தோடு கூப்பிட்டுச்சுவாமி திருவுளம்பற்றிச்சொல்வார்: பெய்தமழையாற்கூடிமலையினின்றுவிழு மருவியைப்போல நில்லாதசெல்வங்களை விரும்பிப் புண்ணியங்களைவெறுத்த பாவிகளேயாகாயத்தினின்றுவிழுந்த மழைத்துளிமுத லுங்களைச்சூழ்ந்த நன்மைகள்யாவையுந் தந்தவன் நானாகியென்னைவிட்டு நரகத்தில் விழ்ந்தெரியும் வஞ்சப்பசாசுகளை வரங்கொடுக்குந் தேவர்களாகவெண்ணி யதுகளை வணங்கினதேது.

நூல்வழியேவந்தமறைநீக்கிக்காம நுழைவழியாங்கதைபலவுஞ்
சுருதியென்றீர் [குலமிலரோயென்றீர்நீங்கா
கோல்வழியேகோட்டமிலவென்னைப்போற்றுங் குணத்தவரைக்
வேல்வழியேயிரத்தமுகவவரைக்கொன்றீர் விட்டிலிவரொன்றொடு
வாழ்ந்துவப்பத்தீமை [கிவேவீர்.
கால்வழியேவணங்கியதீவஞ்சத்தேவர் கணத்தொடுநீரூழித்தீமுழு

உரை.— நானேதியநூலின்படிவந்த சத்தியவேதத்தை விட்டுக் காமப்பாவங்கள் நுழைதற்கு வாசலாகிய பலகதைகளைவேதமென்றீர், இராசநீதித்தப்பாமலென்னை வணங்கினசனங்களைக் குலமில்லாதவரொன்றுநிந்தித்தீர், வேலின் வழியாலிரத்தம்விடாமலோட வவர்களைக்கொன்றீரோ, இப்போதிவரொன்றோடு மேல்வீட்டி லெஞ்ஞான்றும்வாழ்ந்திருப்பார், நீர் பாவவழியே வணங்கிய வஞ்சத்தையுடைய பொய்யானதேவர்களோடு நரகத்திலே யூழித்தீமுழுகி வேவீர்.

நன்னூதுநின்றழிநான்றெரிந்தநீரோ நன்மறைநூலுணர்ந்துண
ராதவரைப்போன்றீ [டீரிகழ்ந்தீர்பொய்த்தி
ருண்ணுதமீயாதும்பொருளீட்டிட்டீ ருளபிறர்கைப்பொருள்கொண்
டுண்ணுதுதாய்தந்தையிறைஞ்சிர்கேளீ ரெதிர்த்துடன்றுபகைத்தீர்
பொய்யாணையிட்டீர் [தீநரகிற்றாழ்வீர்.
கண்ணுதுபிறர்மனைபோய்க்காமத்தாழ்ந்தீர் கதிவழியெய்தாரொடு

உரை.— என்னையறியாதிருக்கையில் நானேதெரிந்துகொண்டநீரோவென்றால் சத்தியவேதத்தையறிந்து மறியா

தவர்களைப்போலநடந்தீர், நீருண்ணுமலும் பிறர்க்கியாமலு முலோபிகளாய்ப் பொருளைக்குவித்தீர், பிறர்கைப்பொருளை யுந்திருடிக்கொண்டீர், பிறர்க்கு நிந்தைசொன்னீர், பொய் சொன்னீர், தாய்தகப்பனென்றெண்ணுமல் வணங்காமற் கேளாமலிருந்தீர், சண்டையிட்டீர், பகையைவைத்தீர், பொய்யாணையிட்டீர், சற்றுமெண்ணுமற்பிறதாரத்தையிச்சி த்துக் காமத்திலமிழ்ந்தினீ ராகையாற் பரமகதியைச்சேரும் வழியறியாதவரோடு நீரதைபறிந்திருந்துந் தீநரகத்திற் ருழ விழுவீர்.

என்ருனுர்த்தசனியனுனென்றதன்மைத் தெவ்வுலகுமதிர்த்தஞ்ச
வார்ப்பாரன்ஞர் [காணுமருண்டோங்கெட்டோம்
குன்ருதாங்குளசெல்வமிழந்தோநொந்தோங் குலைகிற்போங்கனா
பின்ருதார்த்தெரிவேவோமந்தோவந்தோ பேறில்லார்குலமில்லா
ரவனாயென்றேரும் [மந்தோவென்பார்.
பொன்ருதார்வாழவவர்பொன்ருதந்தோ புகைச்செந்தீவேவோநா

உரை.— இடியோடொப்பவார்த் தையைச் சுவாமிசொ ன்னதினுலப்பாவிக ளுலகங்களெல்லா மதிர்த்தஞ்சு தற்குக்கா ரணமாகிய முழக்கத்தோ டார்த்துக்கூப்பிடுவார் வான்மேலு ள்ளகெடாதசெல்வங்களை யிழந்தோமே, நொந்தோமே, எப் போதுமஞ்சிக்குலைவோமே, மீட்பதற்குக் கனாயைக்காணு மல் மயங்கிக் கெட்டோமே, விடாம லார்த்தலறி நெருப்பி லேவேவோமே, ஐயோ வையோ! நல்லவர்களைப் பேறுங்கு லமுமில்லாதவனொன்று நிந்தித்தோம், இதோ சாகாமலவனொ ப்போதும்வாழவே நாமுமையோ சாகாமற்புகைந்தெரியுஞ் செந்தீயில் வேவோமையோ வென்பார்.

துடித்திடுவாருடல்பதைப்பார்மோதிவீழ்வார் சுழல்கிற்பார்புரள்
வார்நொந்தழுவார்சோர்வார் [விடத்தாந்தம்மை
கடித்திடுவார்தம்முடலைமுனிவாரார்ப்பார் கலுழ்கிற்பார்குருதிகடா
யடித்திடுவாருடற்கிழியூனுண்டாற்ரு ரயர்ந்தேங்கித்தயங்குகிற்பார்
துயரின்வெள்ளங் [பொன்ருவேவார்.
குடித்திடுவார்தீக்கடலைநீந்தார்நீந்தார் குன்ருதெஞ்ஞான்றுமெரி

உரை.— துடிப்பப் பதைப்ப மோதிவிழச் சுழலப்புரள நொந்தழச் சோர்வார், தாந் தமதுடலைக்கடிப்பச் சினந்தார்

த்துப்புலம்பி யிரத்தந்திரளாயோடத் தாந்தம்மை யடிப்பார், தமதுடலைக்கீறி யூன்களையுண்டுண்டும் பசியாற்ருர், அயர்ந் தேங்கித்தயங்கித் துன்பவெள்ளமுட் கொண்டு குடிப்பார், ஆகிலு மினிக்கரையேறத் தீக்கடலை நீந்தாமல் நீந்தாமலெப் பொழுதுங் குறையாத நெருப்பிலே சாகாமல் வேவார்.

வானகத்தேபேருவகைபயக்கும்பாலால் வடிவமுகத்திவனல்
லோர்தம்மைநோக்கிக் [யெஞ்ஞான்றும்
கானகத்தேதுயருண்டீர்நிலைதயுண்டீர் கசடற்றீரறம்பூண்டீரினி
மீனகத்தேமீன்களெனவொளிர்ந்தென்னேடோர் வீட்டிடைவீற்
றிருந்தாளவெந்தையாசி [ரெழுவார்நல்லோர்.
மானகத்தேபெற்ரேரோவம்மினென்ன வரக்கடலின்மூழ்குவப்பிற்

உரை.— வான்வீட்டிற் பேரின்பத்தை வருத்துவிக்குந் தன்மையாலழகியமுகத்தோ டிவன்ருனே நல்லவர்களைப்பா ர்த்துச்சொல்லுவான்: என்னைக்குறித்து வனத்திலேபோய்ச் சிலர்துயர்களைக்கொண்டீரோ, சிலர்பொறுமையோடுநிந்தை பட்டீரோ, எல்லாரும்பாவத்தைநீக்கிப் புண்ணியங்களைச்செ ய்தீரோ, இனியெப்பொழுதும் வான்மீன்கனினுள் மீன்களைப் போலவிளங்கி யென்னே டொருமோட்சவீட்டில் வீற்றிரு ந்துமகாராசராயாண்டிருப்ப வென்பிதாவினு லாசீர்வதிக்கப் பட்டவரோ வாருங்களென்று நல்லவொல்லாரு மடைந்தவரா ங்களின் கடலிலே யமிழ்ந்தியவுவகையோ டாண்டவனை வணங்குவார்.

மறநெஞ்சீர்போய்த்திருவென்முகத்தகன்றே மண்ணையுடனூழி
த்தீபோமினென்ன [செல்லுங்காலிற்
வறநெஞ்சாரொடுவானேர்புகழ்ந்துசூழ வாங்கிவன்ருன்வானினுயர்
புறநெஞ்சீர்த்தனதுயரோடிவற்றைக்கண்ட பொதிர்தீயோரயர்ந்
தேங்கிப்புலம்பிச்சீறத் [றித்தீநரகில்வீழ்வார்.
திறநெஞ்சீர்த்தெனப்புவியுட்பிளந்தவாயிற் றிரண்டுருண்டார்த்தல

உரை.— பாவநிறைந்த நெஞ்சினையுடையநீசரோ! என து திருமுகத்தினின்றகன்று பசாசுகளோடு நரகத்தூழித் தீ யிற்போங்களென்று வானவரும் புண்ணியாத்துமாக்களுந் துதித்துச்சூழ்ந்துவரத் திவ்வியநாத னங்கே வானின்மே லெழுந்தருளும்போதிப்பாலே நெஞ்சினையறுத்த துன்பத்

தோ டிதைக்கண்டபாவிக ளயர்ந்தேங்கிப் புலம்பிச்சிறப் பூமிதன்னெஞ்சினையறுத்தது போல வுட்பிளந்தவாய் வழி யாக வவரெல்லாருந் திரண்டுருண் டார்த்தலறித் தீநரகில் வீழ்வார்.

சுற்றத்தார்வேண்டுமென்றுமறையுட்கொள்ளாச் சுற்றத்தோடிங்
கந்தோவென்றும்வேவோஞ் [தெரிதீயாழ்ந்தோமந்தோ
செற்றத்தால்முந்தையர்தீவழியைநீங்காச் சிதைந்திவரோடடர்ந்
குற்றத்தாலுலகியற்கைபிறழாதண்ணிக்கொண்டபயனிதோவந்தோ
வந்தோவின்பப் [றுதென்றும்வேவார்.
பெற்றத்தாலிதோகெட்டோமந்தோவென்று பின்றாநச்சுயிர்பொன்

உரை.— உறமுறையானை வேணுமென்றதினு லல்லோ சத்தியவேதத்தைக்கேளா திருந்தோம், அவ்வினத்தோடை யோ விங்கேவிழுந் தெப்போதும்வேவோம், சலஞ்சாதித் தெங்கள்முன்னோர்பிடித்தவழி தீயதென்றறிந்தாலும் விட மாட்டாமற்கெட்டு நாமுமிவரோடுநெருங்கி நெருப்பிலே யமிழ்ந்தினுமையோ, உலகியற்கைதப்பாமற் பாவத்தோ டு லௌகிகத்தையண்டித் தேடிவந்தபலனிதோ? ஐயை யோ வின்பத்தினுசையா லிதோ கெட்டோமையோவென்று மாறாத நஞ்சினைக்குடித்த தம்முயிருஞ்சாகாமலெப்பொழு தும் வேவார்.

சாவினிச்சயம்.

(36-ம். படலம். 74, 75.)

தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

இன்றேயுள்ளோரன்றவர்மாள்வாரிதுவல்லாற்
பொன்றாருண்டோபூதலமெங்கும் புகழ்விஞ்சக்
குன்றாமின்னுங்காசொளிகொண்மா முடிகொண்டே
நின்றாருள்ளும்பொன்றுயிர்நீங்கா தெவனுண்டோ.

உரை.— இன்றுள்ளயாவருநாளையிறப்பத்தகுவரொழியப் பூவுலகெங்குமிறப்பத்தகாதவருண்டோ? மிகவும்புகழ்ப்பட்டுவிடாதொளியெறிக்கு மணிமுடி சூழ்ந்தவரசருள்ளுமுயிர்பட்டிறவாதொருவருமுண்டோ வென்றுனென்க.

ஒன்றாஞ்சும்வண்சிலையஞ்சா வுரிகன்னூற்
சொன்னார்சொல்லும்பாவுரையஞ்சா சுடர்மொய்ப்ப
மின்னார்மன்னர்கோலொளியஞ்சா விரியாப்பூ
வன்னார்சேடஞ்சாவிளிவென்று வறியார்யார்.

உரை.— கொடுஞ்சாவானது பகைவரஞ்சும் வீரவில்லுக்கஞ்சாது, உரியநற்கலை யனைத்தையுஞ் சொல்வோருரைத்தபாவுரைக்கஞ்சாது, மிக்கொளியெறித்துமின்னுமரசரோங்கியசெங்கோற் கஞ்சாது, முற்றும்விரியாப் பூவரும்பொத்தவிளையோரழகிற்கஞ்சாது, இவையெலா மறியாதவரிங்குண்டோ வென்றுனென்க.

பாவத்தால் வருங் கேடு.

—.*.*.—

(32-ம். படலம். 34.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

மழைக்குலம்பொழியுமாரி வழங்கிலாநாளிலுண்ணீ
ருழைக்குலங்கண்டுவீழு மொத்தெலாத்துகண்மேல்வீழப்
பிழைக்குலமாகமாக்கட் பேருயிர்வினைகொண்டெஞ்சித்
தழைக்குலம்வளிநாள்வீழுந் தன்மையேநரகில்வீழ்வார்.

உரை.— மழைமாரியில்லாத நாளின் மானினங்களோரேவிடத் துண்ணுந்தண்ணீரைக்கண்டா லதனைப்பற்றியோடுமாவலோடே மனிதரு மெல்லாப் பாவத்தின்மேலாசைவைத்து விழுகையிற் பாவிகளாகித் தமதுயிர்வினை கொண்டு கெட்டபின்பு காற்றுநாளிலே தழைகளுதிர்ந்து வீழுந்தன்மையா லனுதினந் தீநரகத்தில்விழுவதுள்ளதாமல்லோ.

நரகமோக்ஷ வுத்தரிப்பு ஸ்தலமென்னு மூவ்வழி.

(27-ம். படலம். 86, 87, 88, 89, 90, 91.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

வினைமுதிர்ந்துவிளிந்தனராவிபோய்
முனைமுதிர்ந்தவழன்முதிர்பூதியிற்
கனைமுதிர்ந்த பனிப்பொடெக்காலமும்
புனைமுதிர்ந்தசிறைபுதைந்தோவுமால்.

உரை.—முதிர்ந்தபெருந்தீவினையோடிறந்தவருயிர்போய் முதிர்சினத்தழன்ற தீநிறைநரகில்விழுந்து மிகவுமலறிய நடுக்கத்தோடெக்காலமு நீங்காதவிலங்கோடு தீச்சிறையிற் புதைபட்டோயாமல் வருந்துவதாம்.

செய்தநற்றவ வாட்கொடுதீவினை
கொய்தபின்னிறந் தாவிகுளிர்த்தருள்
பெய்தநெஞ்சு பெயர்கிலபேரின்ப
மெய்தவாண்டகை கண்டென்றும்வாழுமால்.

உரை.— செய்நற்றவமே வாளாகக்கொண்டு தீவினையாவையுமறுத்தபின்ன ரிறந்தவருயிரோவென்னின் மகிழ்ச்சியாயாற்குளிரும்படி யோயாமற்பொழிந்த வருளாகியமழையை நெஞ்சினுட்கொண்டு முகமுகமாய்க்கடவுளைத் தெரிசித்தெக்காலத்தும் பெயராத பேரின்பத்துடனே வாழாநிற்கும்.

இருவகைப்படு மிவ்வுயிர்விட்டிடை
வருவகைப்படு மற்றுயிர்தன்வினை
பொருவகைப்படு மொப்பனைத்தீயுல
கருவகைப்படு மல்லலில்வீயுமால்.

உரை.— சொன்ன முற்றுந் தீயோரு முற்றுநல்லோருமன்றி யவ்விருவகைநடுவேநிற்கு முயிரோவென்னி லரியதோர் முறையினுயிர்களை யொப்பரவாக்கி விளக்குந் தீயுளவோரிடத்துப்போ யங்கேவெந்துவருந்தித் தம் தீவினை

யொழியுமட்டுங் கிடக்கும் (ஒப்பனைத்தீயுலகெனினு முத்த ரிக்குமிடயெனினுமொக்கும்.)

கோதுகொண்ணிதி பொன்செயுங்கொல்லரோ
பூதுகொத்தழ லொப்பனைசெய்தெனத்
தீதுகொள்ளுயிர் தீதளவன்ன தீப்
போதுமட்டும் பொருந்தவருத்துமால்.

உரை. — கலப்புளபொன் றங்கமாகும்படி புடஞ்செய் து தட்டாருதி யுலையில்வளர்த்ததீயே யதனையொப்பரவாக்கு மாறுபோல வற்பத்தீவினையோடிறந்தவ ருயிருடைய தீதி னளவாகச்சொன்னநெருப்பே யொவ்வோ ருயிருக்குப்பொ ருந்தினநேரமு மட்டுந் தப்பாமலுயிர்களைவருத்தும். (ஆகை யா லவனவன் றன்வினைவேற்றுமைபற்றி யங்கேவேகுநேர மும் வேகுமகோரமும் வேறாம்.)

பொன்விளக்கிய போதிலக்கொல்லரோ
மின்விளக்கிய மென்னகைசெய்தென
வின்விளக்கிய வவ்வுயிரொம்பிரான்
மன்விளக்கிய மார்பணியாகுமால்.

உரை. — பொன்செயுங்கொல்லர் நெருப்பிற்பொன்னை விளக்கினபின் பதனைக்கொண்டரசர்மார் பிற்குரிய நுண்ணிய நகைகளைச்செய்வதுபோல வங்ஙனஞ் சொன்ன வொப்பனை த்தியாற் றீதுநீங்கிவிளக்கினவுயிர்களு மவ்விடம்விட்டு வா ன்கதியிற்சென்று மாறுவொளியோடு கடவுளணிந்த மணி நகைத்தன்மையா யெக்காலத்தும் வாழ்வன.

சொன்னமுற்கதி கள்கடைதோன்றிலா
லின்னபிற்கதி யீறுளதாயிறந்
தன்னதீயுறை யவ்வுயிர்க்கிங்குநம்
பன்னலாட்சியிற் பாசலறைகுனறுமால்.

உரை. — முன்சொன்னநரகமு மோட்சமுமென்னுமிர ண்டுகதிகளுக் கொருமுடிவில்லை, பின்சொன்னவொப்பனைத் தியுலகாகிய கதிக்கு முடிவுண்டாகி யிறந்தபின்னங்கே வெங்

துவருந்திக்கிடக்கு முயிர்களுக்குவேண்டிநாமிங் கேசெய்யுந் திவசமுதற் பலதருமங்களாலவ்வுயிர்களுக்கு வேதனையு நாளுங் குறைந்துபரமகதியை யடைவன.

நரக விளக்கம்.

(28-ம் படலம். 86- முதலச்சந்தமுழுதும்.)

விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

நோய்நிலைநிரயங்கொண்டபற்பீழை நுதலினுட்பனிப்பவேயூழித்
தீய்நிலையென்றுலுதவியவின்ன தீயெனவுணர்தலும்வேண்டா
வேய்நிலைவரையைநக்கினலத்தீ வெந்துகண்ணிமைக்குமுன்னுருகக்
காய்நிலைகொண்டொரநிலைநிலையிற் காய்கொழுந்தெழுந்தெரிதீயே.

உரை.— சகல நோய் நிலையாய்நிற்கு நரகத்துள்ள பல பிழைகளைநினைத்தமாத்திரத் துள்ளநடுங்கி யஞ்சாநிற்ப நரகமே யூழித்தீயினிலையதென்று லிப்பூவுலகின் மனிதர்க்குதவுந் தீயைப்போலவென் றுணர்தல்வேண்டாம், அத்தீ நரகினின்று மேற்கிளம்பிக் குளுமை மிகுதியான் மூங்கினிலையாய் நிற்கு முயர்ந்தமலையைத்தீயினொருகொழுந்து நக்கினாற் கண்ணிமைக்குமுன்னே யம்மலை வெந்துருகும்படி கொடிதாய் வேகுங் குணத்தையுடையதாகு நரகத்திற் கொழுந்துவிட் டெரியுஞ் செந்தீ.

ஆதிதன்னருளித்தழலைநல்லவர்க்கு மாதரவுதவியிற்படைத்து
நீதிதன்மலிந்தசினத்திறங்காட்டி நெறிதவிர்தீயவாத்தீக்கப் [கிற்
பூதிதன்னழலைப்படைத்தனனென்றுற் பொருவவிவ்விருதழலேக்
சோதிதன்முகத்துமின்மினிபோன்றச் சுடர்முகத்திச்சுடர்நிலையே.

உரை.— ஆண்டவ னிப்பூவுலகுள நெருப்பினைநல்லவர்க்குமுதவியாகத் தயைபுரிந்துண்டாக்கி நரகிலுள்ளநெருப் போவென்னி லளவிறந்த நீதியின் சினத்தையுந் திறத்தையுங்காட்டிப் பாவிகட்காக்கினையாக வத்தீயைப்படைத்தானெ

ன்றபொழுதே யிவ்விருவகைத் தீயொப்பநோக்கிற் சூரியன் முன்னே மின்மினிப்பூச்சிப்போல நரகத்தீ முன்னே யிவ்வுலகழலே தோன்றும்.

பொறிப்படப்புழுங்கிக்கொழுந்துவிட்டெரிந்து புகைந்திரளிரு
[ண்டெழுமண்டி
நெறிப்படச்சுடாச்சுடச்சுடச்செந்தீ நீறுமாகாதெலாம்வெந்து
குறிப்படப்புணர்ந்தசெயிராளவுடற்றிக் குடைந்துடல்கிழித்தவாய்
புக்குச் [ந்தெரிவார்.
செறிப்படத்திரண்டுவெளிப்படக்கண்வாய் செவிகண்மூக்கெரியுமிழ்

உரை.— அத்தன்மைத்தாகிய செந்தீப்பொறிகள் சிதறச்சினந்து கொழுந்துமேலெழவெரிந்து புகைதிரண்டிருண்டு மண்டி நீதியின்றன்மையாற் சுடாமற் சுடச்சுடச்சுட்ட பொருளு நீறாகாமல் வேகாநிற்பக் குறியறிந்து சுட்டாற்போல வவனவன்செய்த பாவத்தளவாக வத்தீயும்வெகுண்டு வேகக் குடைந்தவுடலிற் கிழித்தவழியிற்புகுந்து கூடித்திரண்டு வெளிப்படும்படி கண்ணும் வாயுஞ் செவிகளு மூக்குந் தீயைக்கொப்பளியாநிற்ப வென்றும் வேவார்.

படுப்பதற்கமைந்தபூவணைதீயே படும்பசிக்குணவுகடீயே
யுடுப்பதற்கணியுங்கலிங்கமுந்தீயே யுயிர்ப்புளியாவியுந்தீயே
கடுப்பதற்கெரிந்ததீப்புனலாட்டிக் கனற்கடனீங்கிலநீந்தி [வார்.
யடுப்பதற்கணையுங்காண்கிலமுழ்கி யலைந்தலைந்தெரிந்துளைந்தயர்

உரை.— அங்ஙனம் படுத்துக்கொள்ளும்படி பூமெத்தைதீயே, பசித்துண்பதற் குணவுதீயே, உடுத்தணிவதற் காபரணமுஞ் சீலையுந்தீயே, மூச்சினைவிட்டால் வருமாவிதீயே, குளிப்பதற்காறுகக் கடுத்தெரிந்ததீயே, அங்ஙனந் தீக்கடற் பிரியாம னீந்திநீந்திச்சேருங்கரையுங்காணமல் முழுகியலைந்தலைந்து வெந்தெரிந்து நொந்துளைந்து தாமென்றுமயர்வார்.

சூளையிலடுக்கித்தறுவியகல்லோ சுழன்றனபூட்டையிற்றிலமோ
[யோ
மூளையிற்புதைமுட்பிணங்கலோநாணி முறுக்கதோகதிரினுட்கழை

பாளையிற்றுவன்றமுகைகளோதம்மிற் பதைப்பவுண்ணெருங்கிய
தன்மை [வார்.
பூலையினெய்யங்குரம்பையர்பிறழாப் புதவெரிபுகைத்துவெங்தெரி

உரை.— பாவிகளத்தீயி லெங்ஙனம் கிடப்பரென்னிற் சூளையிலடுக்கப்பட்டு வேகுங்கல்லுக்களைப்போலவுஞ் சுழன் றுவருஞ் செக்கிலிட்ட வெள்ளுப்போலவுங் தம்முட்பின்ன ப்பட்டுச் சேற்றிற்கிடக்கு முள்ளுப்போலவும் விசைபட முறுக்கின வில்லினுணிபோலவு மாலைக்கதிரினுட்பட்டு நெ ருங்கினகரும்புபோலவுங் தென்னம்பாளையின் மிகவுநெருங் கிக் குவிந்தவரும்புகள் போலவு மிலவம்பஞ்சினு நொய்யவு டலோர் நரகில்விழுந்தவளவிற் றம்முண்ணெருங்கி யடுக்கப் பட்டுச் சற்றும் பிறழமாட்டாமற்றீயிற்புதைக்கப்பட் டென் றும் வெங்தெரிவார்.

தூய்வளர்மலர்ப்பூஞ்சேக்கையைப்பரப்பிச் சூழகினறும்புகை
தோய்த்து [கண்
மீய்வளர்செல்வோர்விளைத்ததஞ்செயிரின் வினையினரகுறியங்
டீய்வளர்சுள்ளைபுதைத்துளிகால்கை திருப்பவுநீட்டவுமாற்ரு
நோய்வளர்வண்ணநூல்வளருரையா லுதலினானியம்பிடறேற்றேன்

உரை.— அங்ஙனங் தூயமலர்ப்பூமெத்தையைப்பரப்பி வாசவகிற்புகைசூழத் தவழக்காட்டி யதின்மேலிங்கேகிடக் குஞ் செல்வமிக்கோர் செய்தபாவத்தா னரகில்விழுந்துகொ டுந்தீவளர்ந்த சூளையுட்புதைக்கப்பட்ட வளவிற் காலுங்கை யுங் திருப்பவு நீட்டவுமாட்டாம லவர்க்கு வளரும் பீழையி யின்றன்மை நூல்தருஞ் சொல்லிலடங்காமையானினைத்து நான்சொல்லுந்தன்மையல்ல.

மிடைந்துதாந்தம்முட்டுயர்செயவொருபான் மிடைந்தனகுணுக்கி
[னமொருபா
லடைந்துதாமுடற்றிச்சீறியபகையோ டாகுலக்கடல்கரையனைத்து
முடைந்துபாய்வெள்ளமுனிவொடுதீயோ ருடல்பதைத்துளைங்
ததிர்ந்தலற [வாய.
விடைந்துபாய்வெறிகள்படுத்தியபீடை விட்டொழியாதெரிந்துளை

உரை.— அங்ஙன நரகில்விழுந்தவர்கிடக்கு நெருக்கத் தாற் றுந்தம்மு ளொருமுகத் தரியதுன்பங்களைச் செய்யவு மொருமுகத் தலுமிமொய்த்த பசாசுகள் சினந்துசிறிப்பகை யைச்செய்யவுங் கரையெலாமுடைத்த துன்பக்கடலே பாய்ந்து திரண்டவெள்ளமொத்த சினத்தோடு பாவிகள் தம்முடல்பதைப்பத் தாமதிர்ந்தலறக் கொடிதாய்ச்சினந்து பாய்ந்த பசாசுகள் விளைவிக்குந்துன்பங்களை விடாமலுந் தாஞ்சாகாமலு மென்றும் வெந்து வருந்துவார்.

சொரிவனமழைபோலழல்விடவொருபால் தோலுரித்தெரிப்பன [வொருபா
லெரிவனவணைமேல்விரிப்பனவொருபா லீயகீராட்டுவதொருபால்
கரிவனவுடல்கடிப்பனவொருபால் கனற்றிரளூட்டுவதொருபால்
திரிவனவுருவால்வெருட்டுவதொருபால் தேறிலபகைத்தனபேயே.

உரை.— பசாசுகள் பாவிகளை யெங்ஙனம் வருத்துவ தென்னில், விடாது பெய்தமழையைப்போல வழலைப்பொழிவனவொருபால், ஒருபாற் றோலுரித்துடலை யெரிப்பன, ஒருபாற் றீயாலமன்ற மெத்தைமேற் பாவிகளைகிடத்துவன, ஒருபாலுருகினவீயத்தாற் குளிப்பாட்டுவன, ஒருபாற் றீயிற்கருகினவுடல்களைக் கண்டங்கண்டமாய றுப்பன, ஒருபாற் றிரண்டவழலைவாயிலூட்டுவன, ஒருபாற் றிரிந்துகாட்டின வெருவிடும் பலவுருவங்களைக்கொண்டு மனமிக நடுங்கச்செவன தேறாத பகையுள பசாசுகள்.

வாசநெய்யென்னவுருக்கியவீயம் வலித்துடலொருங்குடன்பூசிக்
கோசரநீறொன்றழற்புனலாட்டிக் கொந்தெரிச்சயமெய்ப்பைபோர்த் [துப்
பூசணமாகநச்சரவணிந்து பூந்தவிசுச்சிவாழ்கென்ன
வீசழல்விரிந்தமஞ்சமேலிருத்தி விரகனைவருத்துவதன்றே.

உரை.— மீளவும் வாசவெண்ணெயாகவுருக்கின வீயத்தை யுடம்பிலெங்கும்பூசி வாசமலர்நீராக வழலுண்முழுக்காட்டிச் சினந்ததீயாகக்காய்ந்த விருப்புச்சட்டையையிட்டுப் பூஷணமாக நஞ்சுபொழிந்த பாம்புகளைச்சூடியிப் பூமெத்தைமேல்வாழ்கவென்று நெருப்பினை விரிவாய் வீசின மஞ்சமேலிருத்திப் பசாசுகள் காமாதுரனை வருத்துவன.

சொறிபடரரியுமுரகமுமலமுஞ் சுடச்சுடவமிர்தெனவூட்டி
வெறிபடர்மலர்பூந்துகிற்கொடுலைபம்பூ மெல்லுடனீவுதுமென்னப்
பொறிபடர்கொழுந்திற்கனன்றகூனிரும்பாற் புண்படவுடலெலாங்கிறிக்கியே.
செறிபடர்விரகநோய்மருந்தென்னச் சினந்தணங்கியற்றுமாங்கடி

உரை—. அங்ஙனங் காமாதுரரை யழன்ற மஞ்சமேலிருத்தினபின்பு சொறித்தவளையு நச்சுப்பாம்புகளையு நாறின மலங்களையு மமிர்தமென்று சுடச்சுடவூட்டி வாசமலரோடொத்த விப்பூம்பட்டாற் பூவினு நொய்ய வுன்னுடலைத்தடவுவோமென்று பொறிகள்புறப்படக் கொழுந்துவிட்டெரிந்த விருப்புத்துறட்டிகளாலுட லெலாம்புண்ணாகக் கொடிதாக்கிறி மிகநீர்கொண்ட காமநோய்க்கேற்ற மருந்திதுவென்று நகைத்தகினத்தோடவரைமிகவும் வருத்தஞ்செய்வன பசாசுகள்.

அள்ளுமாறிருண்டபுகைதுறுஞ்சிறையூ டலகைகள்வருத்திய வண்ணமுள்ளுமாறகன்றுநூலினுறகன்றுங் குறைந்தவர்பொறுக்குமாறகன்று
தெள்ளுமாறகன்றீங்கவனவன்செய்த செயிரளவாகுலித்தங்கதே.
ணௌள்ளுமாறியற்றுந்தீவினைசெய்யு மிரும்பகையன்றுதோன்றுவ

உரை.— அங்ஙனங் கையாலள்ளத்தகும்படி புகையடர்ந்திருண்ட கொடுஞ்சிறையாகிய நரகிற் பாவிகளைப்பசாசுகளுபாதிக்குந்தன்மையே நா நினைக்குந்தன்மையுமல்லக் கற்றநூலிலடங்குந்தன்மையுமல்ல வங்கேகிடந்து வேகாநின்றவர் பொறுக்குந்தன்மையுமல்லவாகில் யிப்பூவுலகில் வாழ்ந்தநாளி லவனவன்றெளியாமற்செய்த பாவத் தளவாய் வருந்தப்பட்டு நரகிற்கிடந்தபோதல்லோ நிந்தைக்குக்காரணமாகிய தீவினை மனிதருயிர்க்குச்செய்யும் பெரும்பகை யங்கே தோன்றும்.

நரகத்திற் பஞ்சேந்திரியங்களுக் கூழியுள்ள கால முண்டாகும் வேதனை.

(28-ம் படலம். 97-முதலச்சந்தமுழுதும்.)
மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

மெய்முதற்பொறி யைந்தொடுமேவிய
பொய்முதற்புரை பூரியர்பூத்தென
வைமுதற்பொறி யின்வழியாங்கதிர்
மொய்முதற்புத வாகுலமொய்க்குமே.

உரை.— பாவிகள் தமதுடற்குவேண்டி யைம்பொறிக ள்காட்டின பொய்யைப்பற்றிப் பாவங்களைக்கட்டிக்கொண் டமையாற் பஞ்சேந்திரியங்கள்வழியே வதிர்ந்தபோர்க்கள மாகிய நரகில் மிகவுந் துன்பமொய்த்து விளையும்.

நாறும்பூம்புகை நாறுமகிற்புகை
யூறுநானமற் றூறியவாசமோ
டேறுகாமம்வளர்த்தவியற்கையாற்
பாறுபூதி படர்கடன்மூழ்குவார்.

உரை.— அங்ஙனம் வாசபூம்புகையு மகிற்புகையும் புழுகு நானமற்றப்பரிமளமூறின நெய்களுந் தீயகாமத்தை வளர்த்தனவென்று நரகினீண்டகன்ற துர்க்கந்தக்கடலின் மூழ்கு வார்பாவிகள்.

பூதிநாறு புகைத்திரளுசியூ
டேதியூதியு லகமுலாமல
மாதிநாறுமி யாவுமலைக்கொடு
மோதிமோதவு டயருமூழ்குவார்.

உரை.— அங்ஙனந் துர்க்கந்தநாறித் திரண்டபுகையை நாசியுள்ளூதி யூதினதுமன்றிப் பூவுலகிலுள்ள வெல்லா மல முதற்கொண்டு துர்க்கந்த நாறு மற்றவசுத்தங்களெல்லா நர கிலொருங்குடன்கூடி ஒருதுர்க்கந்தக்கடலாகி யலைகளைக்

கொண்டு சூழமோதாநிற்பப் பாவிக ளுள்ளே முழுகிக்கிடப்பார்.

கோதின்வாயுளங் கோடவின்பென்றடுத்
தீதின்வாய்வளர் தீயுரைகேட்டன
காதின்வாய்கடுங் கோல்கடுத்தேற்றிய
போதின்வாய்வழி பொங்கழலூற்றுமால்.

உரை.— மீளவும் பாவத்தைக்கொண்டு மனமேகோணும்படி யின்பத்தைக்காட்டிக்கொல்லுந் தீயவுரைகளையினிதாய்க்கேட்டகாதிலே கோபித்தபசாசுசுள் சுடுநெடுங்கோலையேற்றினவளவி னரகிற்கிடந்தபாவிகள் வாய்வழியாக வோயாதழலைக்கொப்பளிப்பார்.

மாழ்வரோதையு மெள்மலியார்ப்பொடு
சூழ்வரோதையுஞ் சுட்டெரியாழியை
யாழ்வரோதையு மங்கணிஞடொறுந்
தாழ்வரோதையுஞ் செய்துயர்சாற்றவோ.

உரை.— மீளவு மயங்கிப்புலம்புவாரோசையு நிந்தைசொல்லி முழங்கிச்சூழநிற்பாரோசையு மழன்ற தீக்கடலிலமிழ்ந்துவாரோசையு நாடோறுநரகிற் புதிதாய் விழுவாரோசையு மிவையெலா மகோரமாய்த்திரண்டுகூடிக் காதிற்குண்டாகிய துன்பஞ் சொல்லுந் தன்மையல்ல.

இனியவுண்டலு மின்னலுரைத்தலுங்
கனியவின்பொடு காசுமலிந்தவாய்
நனியழன்றுநஞ் சுண்டுபகைத்தபேய்
முனியவந்த துயர்முடியாதரோ.

உரை.— விலகினவின்பத்தை யுண்டதனுலும் தீயவைசொன்னதனுலுந் தமக்கின்பமென்று பாவிகள்குற்றங்களைச்செய்த வாய் மிகவுமழன்று நஞ்சினையுண்டுண்டு பகைத்தபசாசுகள் சினத்தோ டடைந்த துன்ப மெக்காலமு முடியாது.

கைத்தயாவையுங் காய்கடுவும்புழு
மொய்த்தவூத்தையு முற்றியபூதியுங்

ஊய்த்தவாயிரத் தஞ்சொரியத்துமித்
தய்த்ததீயுமிழ்ந் தோவியரற்றுவார்.

உரை.— அங்ஙனம் வாய்க்காக்கினையாகக் கசந்தயா வையு மமுன்ற நஞ்சினையும் புழுத்தவூத்தையையு நிறைந்ததுர்க்கந்தங்களையும் வாயாலுண்டு வுண்டவா யுதிரங்களைச்சொரிய வதையறுத் தறுத்தவாயிற் றீயிட்டமுக்கி யமுக்கினதீப் புறப்படப் பாவிகள் கொப்பளித்தென்றும்வருந்திப் புலம்பி யமுவார்.

காவிக்கண்வழி காமமுண்டானொன
வாவிக்கண்மலி வண்டுறழ்மொய்த்தபேய்த்
தாவிக்கண்கிழித் தூடுதழற்பொறி
தூவிக்கண்ணருங் கண்டியர்தோன்றுமே.

உரை.— கருங்குவளையொத்தகண்வழியாகப் பாவிகள் காமத்தை யுட்கொண்டானொன்று பூத்ததடாகத்திடத்துமொய்த்தவண்டுகளைப்போலப் பசாசுகளுந்திரண்டு கண்களைக்கிழித்துக் கிழித்த வழியி லழலின் பொறிகளைப்போக்கி மதிக்கப்படாத துன்பங்களைக் கண்ணாலடைவார்.

அஞ்சிவீம மழுங்குருக்காண்டலு
மெஞ்சிலாநிறை நீரிழிந்தோடலுந்
துஞ்சிலாவிழி தோயழலூவலும்
விஞ்சிநேரில வெய்துறிமாழ்குவார்.

உரை.— அங்ஙனங் கண்ணுக்காக்கினையாக வஞ்சும்படியோயாமல் வெருவிடுமுருவங்களைக்காணவும் விடா மலமுதநீர்திரண்டோடவுந் துயிலாமற்கிடப்பவு மழலிற்றோய்ந்தகண்ணழலைப்பொழியவு நிகரொன்றின்றிக் கண்ணால்மிகுந்த துயரை யடைந்த பாவிகள் மயங்காநிற்பார்.

நால்வகைப்பொறி நண்ணியைந்தாம்பொறி
பால்வகைப்புலா விஞ்சியபான்மையாற்
சால்வகைப்புத வெங்கணுஞ்சாற்றுவா
மேல்வகைத்துயர் மெய்த்துயராகுமால்.

உரை.— சொன்ன நாலுபொறிகளுங் கூடியைந்தாம் பொறியாகியவுடலுக் கின்பத்தைத்தேடிவருகையி லுடலின் வகையால்வரும்பாவங்கள் மிகுவனவென்று நரகிலெங்கு மிகுதியாய்த்திரண்டு சொல்லின்மேலுங் கொடியதுன்பங்களியாவு முடலுக்காக்கினையாவன.

ஈறுமொன்றில வின்னலைந்தீயரோ
மாறுமொன்றில மாழ்கியழுங்குளங்
தேறுமொன்றில தீக்கடன்மூழ்குவார்
காறுமொன்றில வேகவெக்காலுமே.

உரை.— இங்ஙனந்தீயோர் முடியாமலு மாறுமலு மொன்றிற்றேறுமலு மயங்கிவருந்தி யெக்காலமு மளவொன்றின்றி வெந்து வெந்து தீக்கடலினுள் முழுகி யமிழ்ந்துவார்.

உலைகொடீயி விரும்புறழ்வெந்துவெந்
தலைகொடீயி லமிழ்ந்தியமிழ்ந்தியே
கொலைகொடீயுகங் கோடிகள்கோடிபோய்ப்
புலைகொடீயவர் பூதியில்வேகுவார்.

உரை.— அங்ஙன நீசப்பாவிகள் தீவளருமுலையிற்போட்ட விரும்பினைப்போல வெந்து வெந்து திரைகொண்டலையுந் தீக்கடலி லமிழ்ந்தியமிழ்ந்திக் கொலையிற்கொடிய கோடாகோடி யுகங்கள்கடந்துபோயினு மின்னமு நரகில் வேவார்.

பாடியாடியின் பாதல்பகற்பல
நீடிலாகுல மாமென நீங்குவாய்
வாடிலாவளர் நோய்கள்மலிந்துகங்
கோடிகோடி பொறுப்பதுகொள்கையோ.

உரை. — பாடியுமாடியு மினியநாடகம் பலநாள்முடியாதாயி னதுதான்றுன்பமென்று பொறுக்கமாட்டாம னீங்கிப்போவாயே, குறையாமனரகில்வளர்ந்த சகலதுன்பங்களைக் கோடாகோடியுகங்கள் பொறுப்பது கூடுந்தன்மையோ.

இலைகளெண்ணி முகிற்றுளியெண்ணிநீ
ரலைகொணுண்மண லெண்ணியுமத்துணை

புலைகொள்பூழியி லாண்டுகள்போயினு
நிலைகொள்பீடைக ணீங்கிலவேகுவார்.

உரை.— மரத்திலைகளையு மழையின்றுளிகளையுங் கட லினுண்மணல்களையு மெண்ணி யவ்வளவாக நடுக்கம்விளை விக்கு நரகத்திடத் தத்தனைவருடம்போயினு முடியாமனிலை கொண்ட துன்பங்களை நீங்கமாட்டாத பாவிக ளென்றும் வேவார்.

நல்லதொன்றில வாகுலநல்கிய
தல்லதொன்றில வாவியமேற்கதிச்
செல்லதொன்றில தீவினைசெய்பகை
வெல்லதொன்றில யாண்டையும்வேகுவார்.

உரை. — நன்மையொன்றின்றித் துயரைச்செய்யுங்கார ணங்களல்லா தொன்றின்றி யாவலோடுவிரும்பினவான்வீட் டுக்கதியை யடையும்வழி யொன்றின்றித் தாங் கொண்ட தீவினை தமக்குச்செய்யும் பகையை வெல்ல வழியொன்றி ன்றி யென்றென்றைக்கும் வேவார்.

வேகவேக விளிவுறவேண்டுவார்
நோகநோகவும் பொன்றிலர்நோன்றில
ரோகவேக வருந்துயரொஞ்சிலா
வாகவாகுல மாற்றிலர்விம்முவார்.

உரை.— அங்ஙனம் பாவிகள்வேகவேக வேதனை முடி யும்படி சாகவேண்டுவா ராயினு மனமிகவருந்தி யென்று ஞ் சாகாமனு மொய்த்ததுயரைப் பொறுமனு நாள்போகப் போகத் துயர்கள் குறையாமற் றுமேநரகில்விழுந்த முதனு ட்போல வெந்நாளுந் தோன்று நிற்குந் துன்பங்களை யாற்று தழுது விம்முவார்.

நரகத்துப் புலம்பல்.

(28-ம் படலம். 113, 114, 115, 116, 117, 118, 119.)

மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

அந்தோவந்தோவீட்டையிழந்தீங் கழல்மூழ்க
வந்தோமந்தோபுன்னிமிழ்நக்கி வனைவின்றி
வெந்தோமந்தோமாறிலவேவோம் வினைமுற்றி
யெந்தோமந்தோவிப்பகையீட்டிற் றெனவார்ப்பார்.

உரை.— நரகில்விழுந்தவ ரெங்ஙனம் புலம்புவாரெனில் ஐயையோ வான்வீட்டு நன்மையிழந்து செந்தீயிலென்று முழுகாநிற்ப நரகில்வந்தோம், ஐயோ அற்ப வோரினிமை நக்கினதினு லிங்கேயளவொன்றின்றி வெந்தோம், இனிமாறுததுயரோடென்றும்வேவோம், ஐயோ நாஞ்செய்த தீவினைமுற்றி யெம்முயிர்க் கிப்பகைகூடித் திரண்டதல்லோ வென்று புலம்பி முழங்குவார்.

கெட்டோமந்தோமின்னெனவொல்கிக் கெடுநன்றி
யிட்டோமந்தோவீட்டதினிஃதே பயனந்தோ
பட்டோமந்தோபுன்னயநக்கிப் பரவீட்டை
விட்டோமந்தோவேகுதுமந்தோ வெனவேவார்.

உரை.— கெட்டோமே மின்னலைப்போலத் தோன்றி யொழியும் பொய்யானநன்மைகளை வாழ்ந்த பொழுதிற்றேடிக் குவித்தோம், அவற்றைக்குவித்தபயனிதே. ஐயோபட்டோமே, நக்கினபுன்னன்மையாற் பரமவீட்டுவாழ்வுகளைக் கைவிட்டோமே, ஐயோ வென்றுமிங்கே வேவோமென்று புலம்பி வேவார்.

கண்மேல்வைத்தமாசெனவாசை கவருள்ளம்
விண்மேல்வைத்தவான்றிருவெண்ணு வெருள்வீங்கி
மண்மேல்வைத்தவாழ்வினையீட்ட மலிகள்வாய்ப்
புண்மேல்வைத்ததீத்திரள்சேர்த்தோம் புதவென்பார்.

உரை.— கண்மேல்வைத்தமாசுபோல மயங்கும்படி யாசையை மனதிற்கொண்டமையால் வான்மேல்வைத்த செல்வங்களையெண்ணுமல் மயக்கமிஞ்சிப் பூவுலகிலுள்ள பொய்யானவாழ்வுகளைக் குவிப்பதற்குப் பிறர்கைப் பொருளைத்திருடிப் பட்டபுண்மே லழலைக்குவித்தாற்போல நரகிலெமக்கித் துயரெல்லாவற்றையுஞ் சேர்த்தினேமென்று வருந்துவார்.

ஆளுக்கொண்டேம்வெம்பகையாளு தடுகோபந்
தேளுக்கொண்டேம்வெங்கொலைசெய்தே பழிதீர்ந்தே
மீளுக்கொண்டேந்தீநரகந்தோ வெரிகின்றே
மாளுக்கொண்டேம்பேய்ப்பகையென்றே மருள்கிற்பார்.

உரை.— மீளவும் விடாதவெம்பகையைக்கொண்டு தேளுது கொல்லுங்கோபத்துடனே யெம்பகைவரைக்கொன்று பழியைத்தீர்த்தோமே, அதன்பயனுக முடியாத நரகடைந்தையோ விங்கேவெந்தெரிந்து தீராத பசாசுகள் பகைகொண்டோமேயென்று மயங்குவார்.

காதன்மிக்காக்கற்றவைகண்ணுக் கசடுள்ளத்
தாதன்மிக்காப்பற்றியகாமத் தமிழ்கின்றேம்
நாதன்மிக்காநீதிவளர்த்த நரகெய்திச்
சாதன்மிக்காவேகுதுமென்றே தளர்கிற்பார்.

உரை.— மீளவு மாசைமிகுதியாற் கற்றவுணர்வுகளையுமெண்ணுமல் மனதிற்பாவமிகும்படி பற்றியகாமத் தமிழ்ந்தினேமே, அதின்பயனுக வாண்டவனடத்தின மிகுந்த நீதியின்முறையால் வளருநரகில் விழுந்து சாகாத சாவெந்நாளுஞ் செத்தவரா யிங்கே வேவோமேயென்று தளர்ந்து மயங்குவார்.

மெய்யார்நன்னூல்வேதநகைத்து விழைவொத்த
மையார்புன்னூற்பற்கதையெண்ணி வடுமல்கப்
பொய்யார்மையார்தேவரோடந்தோ புதவெய்தி
மொய்யார்தீயின்மூழ்கினமென்றுண் மூரிகிற்பார்.

உரை.— மீளவு மெய்யான நூலையோதின வேதத்தை நாமேநகைத்து நமதாசைக்கொப்ப மயக்குவிக்கும்படி புல்ல

றிவாளர்கட்டின பலகதைகளை வேதமாயெண்ணிப் பாவமி கும்படிவணங்கின பொய்யுமயக்கமும் விளைவித்த தேவ ரோடு நாமு நரகில்விழுந்து விடாதுபொருதா மிற்குங்கொடு ந்தீயின் முழுகிக்கிடக்கின்றோமேயென்று முறிந்து வருந் துவார்.

ஆய்வாரொண்ணாநல்லறநிந்தித் தழிவுற்றார்
நோய்வார்நஞ்சுண்பார்பசியாற்றார் நுகர்வாற்றார்
காய்வாரார்ப்பார்வீழ்ந்தெரியாழ்வார் கனாகாணுத்
தோய்வார்நீந்தாரூழியும்வேவார் துகடீயார்.

உரை.— மெய்யை யாராய்ந்தவர் வாய்மொழிகளையெ ண்ணாது நல்லறத்தை நிந்தித் தழிந்தபாவிகளெக்காலமுநோ யைவிளைவிக்கு நஞ்சினையுண்பார், உண்டும் பசியையாற்றார், அதனையுண்பதும்விடார், மிக்கசினத்திற்காய்வார், முழங்கி யார்ப்பார், விழுந்துதீக்கடலில்முழுகுவார், கரையுங்காணு மனு நீந்தமாட்டாமனுந் தோய்ந்து தோய்ந்தென்று மவி யாத தீயோடெல்லாரும் வேகாநிற்பார்.

நரக வேதனைத் தியானத்தால் வரும் பலன்.

(28-ம். படலம். 121, 123, 124, 125.)

மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

நசையுற்றுற்றதீதறநொந்தே நடையொன்றே
வசையுற்றுற்றதீயுறியென்றும் வயாவொன்றே
தசையுற்றுற்றயாவருமிஃதே தவிராதென்
றிசையுற்றுற்றநூல்விதிசொன்னு ரிசைமேலோர்.

உரை.— ஆசையாற்கொண்ட பாவங்களைத்தீர்ப்பமன துநொந்து நல்லொழுக்கம் வேண்டும், இல்லாதாயி னிந்தை

பட்டுத்திரநாகமிழ்ந்தி யெக்காலத்தும் வருந்தல்வேண்டும், இவ்விரண்டிலொன்றே யுடலோடு தோன்றின மனிதர்க் கெல்லாந் தவிராதேயென்று பொய்யாத நூலாகச் சொன்னார் சொல்லுந்தன்மையின் மேலான வேதபாரகர்.

இன்பாற்கொண்டபாவமியற்று மியல்பிஃதேற்
றுன்பாற்கொண்டநோன்பிவிதென்பார் துகள்மல்கிப்
பின்பாற்கொண்டவாகுலமெண்ணுர் பிறழாதோ
ரன்பாற்கொண்டதீதினிதென்பா ரதுவென்பார்.

உரை.— இன்பமென்றுகொண்ட பாவத்தால் வரும் பயனரகமாயிற் றுன்பமுகத்தைக்காட்டின தவமினிதென்ன த்தகுமே, பாவங்கள்மிகுந்தபின்பு நரகில்வருந் துயர்களை யெண்ணுதவரல்லோ விடாதவாவலோடு தேடின தீவினை யின்பமென்பாரென்று வேத பாரகர் சொன்னார்.

பொன்னேரொள்பூஞ்சாயலைவெஃகல் புதவுய்த்தே
லன்னேருண்டோவோர்பகைகாத லலதென்பார்
மின்னேரொல்கிமாறியவின்ப வினைகாட்டிக்
கொன்னேமாளும்வாழ்வுயிருண்ணுங் கொலையென்பார்.

உரை.— பொன்னொப்பக் கதிரைச்செய்த பூமுகத்தின் சாயலை விரும்புத லெரிநரகத்திற்கு வழியாகி லாசையின்மே லுயிர்க்கொருபகையில்லை யென்பார், தோன்றியொழியுமின் னலைப்போல வின்பமுகத்தைக்காட்டி வீணுயழியுமிப்பூவுலகின் வாழ்வுக ளுயிரைக்கொல்லும் பகையே யென்பார்.

நரகங்கொண்டதீநிலையிஃதேல் நனியோர்ந்தால்
விரகங்கொண்டதீயையவிக்கும் வினையென்பார்
பிரதங்கொண்டதீயவர்வைகும் பெரிதாழல்
சுரதங்கொண்டாமுறும்வீட்டின் சுரமென்பார்.

உரை.— நரகத்தின்றன்மையிதாகி லதனை நன்குயாரா ய்ந்தகாலத்துக் காமமெனுந்தீயையவிக்குமே நரகத் தீயென் பார், தீயோர்கலங்கிக்கிடக்கு நரகமே கற்றகல்வி முறை யோடு நாம் வான்வீட்டிற்சேரும்படி வழியதாமென்பார்.

——*——

மனிதரறத்தினில்லாமை.

(⁔)

(23-ம். படவம். 30, 43.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

கார்கடந்துளி வாவியைக்காத்தபுள்
நீரகன்றுளி நிற்பதுகாண்பரோ
சீரடைந்துளி மானிடர்செய்யறஞ்
சூரடைந்துளி தோமொடுமோற்றுவார்.

உரை.— மாரிகாலத்து நிறைந்ததடாகத்திடத்துக் காத்திருந்த பறவை நீரெல்லாம் போய்வற்றினபின்பு அங்கே நில்லாமற்போவது போல மனிதருஞ் செல்வக்காலத்துச் செய்யுந்தருமங்களைத் துன்பக்காலம்வந்தவளவிலே விட்டுப் பாவமாக மாற்றுவார்.

விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.

நீரிறவழ்மொக்குளெனநேர்பொருதகான்முன்
றேரிறவழ்சித்தியெனவேறுதிளைசீற்றக்
காரிறவழ்மின்னலெனநேர்கருதினில்லாப்
பாரிறவழ்மன்னுயிர்கடம்பரிசிதன்றே.

உரை.— முன்சொன்னபடி மனிதர்குண மெத்தன்மைத்தோவெனில்: நீர்மேலாடுங் குமிழிபோலவு மெதிர்த்துவீசிப் பொருத காற்றின்முன்னர் தேரின்மேலாடு மிடக்கியம் போலவு மிடிகளைத்திரளாய்க்கொண்ட சினத்தோடு மேகத்திடத்துத்தோன்று மின்னல்போலவு மனிதருமொழுங்குபட வொன்றினை நினைத்த காலத்ததிலே நிலைகொள்ளாமற் றிரும்பியாடலே பூவுலகிலுடலோடு தவழுமுயிர்களாகக் கொள்ள வவர் குணமிது.

ஏழுதேவதிரவிய வநுமானங்களாற் றேவ குமாரன் றந்தருளும் வரங்கள்.

(32-ம். படலம். 43, 44, 45, 46.)

கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், மா, மா, புளிமாங்காய்.

வெண்ணிறத்தூசுகொள்மாசற வெண்மதிகதிருட்டோய்த்தவினை யென்னப் [ந்து
புண்ணிறத்தார்புரைபோக்கியுட்டேவருள் பொழிநீராடன்முதற்றி
தண்ணிறத்தெய்திலுமுட்சுடுமாலைசயிற் றவறிமீண்டேதளர்ந்துள ளத் [செய்தான்
தெண்ணிறத்தாசுகொள்ளாநிலையாண்மை செய்திருநெய்ப்பூசலிடச்

உரை.— நாதனிடு மேழுவரங்களாவன: தூயவெள்ளாடைகொண்டமாசுபோகச் சந்திரகதிர்களி லதைத் துவைத்தாற்போல மனிதரும்புண்பட்டதன்மையாற்செய்த பாவத்தோடு கொண்டமாசுகளைப் பிரயாசமின்றிப்போக்கி யவர்களுக்குத் தேவதிருவருளைத்தரும்படி ஞானஸ்நான முதல் வரமாகத்தந்தபின்ன ரின்பஞ்செய்து குளிர்ப்பித்தாற் போலவந்து மனத்தைச்சுடுந் தீயவாசையிலுட்பட்டு மீளவுந் தளர்ந்துதவறி ஞானஸ்நானத்தா லடைந்ததூய்மைக்கு மாசுகொள்ளாமல் மனமே யுறுதியாய் நிற்பவுறுதிப்பூசுத லிரண்டாம் வரமாகத்தந்தான்.

தாய்வினையன்பிணையாதெனப்பின்புறத்தயையின்மிக்கோர்முறை யுள்ளி [ஞன்
மீய்வினையின்பொடியாவரும்வாழ்ந்துணைவிரும்பித்தானே விருந்தா
னோய்வினைநஞ்சுறழ்தியவவையின்பெனநுகர்ந்து மீண்டேபுரைகொண்டாற் [தான்.
றீய்வினையப்பிணிதீர்க்குமருந்தெனச் சிறந்தோர்தேவமுறைசெய்

உரை.— மீளவுந் தாய்தன்பிள்ளைமேல்வைத்த வன்புமுதலாய் நிகராமற் பின்னேகிடக்க வதனைக்கடந்த தயையை நாதனேநினைத்து வான்வீட் டின்பத்தோ டெல்லாரு

மினிதாயுண்ணும்படிக்கு மூன்றும் வரமாகத் தானேயவர்க ளுக்கு நற்கருணையென்று தேவவிருந்தானான். இவையெலா மாகி யின்னம் வருத்து நஞ்சோடொத்த பாவங்க ளின்ப மென்று யாதாமொருவனுட் கொண்டாற் பாவவிமோசன மென்னு நாலாம் வரமாகப் பாவநோய்களைத் தீர்க்குந் தேவ மருந்தினைத் தந்தான்.

அஞ்சியகாற்பழிப்பேயமர்வென்றெழத் தூய்நெய்பூசத்திறன்றந்[து
விஞ்சியமாயிருணீக்குவிளக்கென விதிசெய்யத்தர்விளைவீந்தே
யஞ்சியகோதிலவாழவுமன்றலை யருள்செய்யாக்கையெனச்செய்தா
னெஞ்சியமாக்களுமித்திறத்தேழ்வர மெய்திக்குன்றத்தினைநிற்பார்.

உரை.— மீளவு மவனவனிறக்குங்காலத்துப் பழம்பழி ப்பேய்க ளவன்மேற்றொடுத்தபோரிற் செயங்கொள்ளும்படி க்குத் திறத்தைக்கொடுக்கு மற்றொருதேவ நெய்பூச வைந் தாம் வரமாகத்தந்து பூவுலகெங்குமொய்த்த பாவவிருளை நீக் குந் திருவிளக்காக வேதநன்னெறிகாட்டுதற்கு மெய்யான காரணகுருக்கள் விடாமலுண்டாகக் குருத்தத்துவ மாறும் வரமாகிக் கடைசியிற் சிற்றின்பவாழ்வுகளை நுகரும்போது முதலா யஞ்சத்தகும்பாவம் வாராதபடிக் கேழாம்வரமாகவு டலைவாழ்விக்கும் விவாகமே யுயிருக்குத் தேவவருளைப்பய க்குங்கட்டாகச்செய்தான். இத்தொகைப்பட்ட வேழுவரங் களைக்கொண்டு திறமில்லாத மனிதராயினும் வயிரமலையோ டொப்ப நன்னெறிவழுவாதுநிற்பார்.

காருருத்தன்னுடல்மாமலைக்கோட்டுயர் கருணைச்செந்நீர்மழைபெ[ய்யப்
பேரொருவெள்ளமுமோடலிவ்வரம் பிரிந்தவேழாறெனவோடித்
தேரொருநன்றியில்லாமையிறீவினை தீக்கும்பாலையெனவைகும்
பாரொருபூங்குளிர்சோலையென்றாக்கலும்பரிவற்றுய்வார்நரரன்றே.

உரை.— அங்ஙனந்தன்னுடலே யொருமேகமாகவுயர் ந்தவோர் மலையுச்சிமேற் கருணையாற்பொழிந்த தன்னிரத்த மழையைப்பெய்து பெரிதோர்கருணைவெள்ள மோடிக்கொ

ண்டுவருகையிற் சொன்னவேழுவரங்க ளேழாருகவதிலே பிரிந்து பரவித் தேர்ந்த நன்மையொன்றின்றிப் பாவத்தீப்ப ற்றியெரியும் பாலைதன்மையினின்ற பூவுலகங் குளிர்ச்சி பொ ருந்திப் பூத்தசோலைதன்மையாகச்செய்து மனிதரெல்லாருந் தந்துயர் நீங்கிவாழ்வார்.

யேசுநாதனைச் சேவிக்கிறவர்களுடைய பாக்கியம்.

(26-ம். படலம். 139, 140, 141, 142, 143.)

காய், காய், காய், காய். இடைமடக்கு.

அடல்வண்ணத்தருள்வெள்ள மார்ந்தொழுகமல்கியெழுங்
கடல்வண்ணத்தெவ்வுயிருந்தேற்றறருங்காவலனே
தேற்றறருங்காவலனைச் சேர்ந்தவிர்தன்கமலத்தா
ளேற்றறருஞ்சிந்தையவ ரீங்கிழிவுநண்ணுரே.

உரை.— வல்லமைக்களவாக வுள்ளவருளின் வெள்ள மோடிவந்து பெருகியெழுந்த கடலின்றன்மையினு லெவ்வு யிர்கள்யாவையுந் தேற்றுநிற்குங் காவலன் கடவுள்தானே. இங்ஙனந் தேறுதல்செய்யுங்காவலனையண்டி யவனது கம லபாதத்தை வணங்கியேத்துஞ் சிந்தையுள்ளயாவரு மிங்கே கேடொன்றடையார்.

வான்றோய்ந்தமகிழ்வுளனுய் மன்னுயிர்களுய்வதற்கே
யூன்றோய்ந்ததுயர்கொண்ட வும்பர்தொழுங்கோமானே
யும்பர்தொழுங்கோமானை யுள்ளிநெறியுட்பிறழா
திம்பர்தொழுஞ்சிந்தையவ ரீங்கிழிவுநண்ணுரே.

உரை.— வான்வீட்டுள்ள பேரின்பத்தை யுடையோ னுகி மனிதருயிர்கள்வாழும்படி தானெடுத்த வுடலின்றன் மையாற் றுயரைக்கொண்டவருந்தி வானவர் வணங்கு மரச

ளுகிய வவதரித்த நாதன்றனே, இவ்வாசனேக்கருதி நன்னெ றிவழுவாம லவனேவணங்கா நிற்குஞ் சிந்தையுள்ள யாவரு மிங்கே கேடொன்றடையார்.

பானேராவருட்கடலின் பதுமெனநான்வாழத்
தானேராவிடுக்கணுறித் தயையுணர்வின்மிக்கோனே
தயையுணர்வின்மிக்கோனேத் தவிர்நசையைத்தவிர்ந்துயர்ந்தோ
ரியையுணர்விற்பிறழாதாரீங்கிழிவுநண்ணூரோ.

உரை.—பாலினுமினிய வருளின்கடலுள்மலர்ந்த தா மரையொப்ப நானேவாழும்படி தானிகராததுன்பங்களேக் கொண்டு நினேத்ததயையின்மிக்கோ னவதரித்தநாதனே, இந் நாதனேயிழந்தகல்வதற்குக் காரணமாகிய வுலகிஞசையைவி ட்டு மாட்சியிற்பொலிந்து கொண்டவுணர் விற்பெயரா நிலே த்தயாவரு மிங்கே கேடொன்றடையார்.

விண்கனியவிண்ணுறைந்தோன் விளேத்தவருளுளந்தூண்ட
மண்கனியமனுவாகி மணிக்கலத்தேந்தமுதன்னேன்
மணிக்கலத்தேந்தமுதன்னேன் மதிக்குடைக்கிழொதுங்கினரன்
பணிக்கலத்தேந்தடிபெயரா ரீங்கிழிவுநண்ணூரோ.

உரை.— வானுலகத்தோர் கனிந்து மகிழும்படி தானவர்க்குப்பேரின்பமாகி வானத்தினின்றவனுய்த் தன்றயை தன்மனத்தைத்தூண்டினதனுற் பூவுலகத்தோருங் கனிந்து வாழப் பூவுலகிலிறங்கி மனிதனுகி மணிப்பாத்திரத்திலேந் திய வமுதுபோலப்பிறந்தநாதனே, இந்நாதனுடைய குளிர் ந்த குடைக்கிழொடுங்கினரா யழகியபாத்திரத்திற்றயையை யேந்திய வவன்பாதத்திற் பெயராதயாவரு மிங்கே கேடொன்றடையார்.

அவ்வுலகுமுவந்தேத்து மான்றகுணத்தொகையோனே
யிவ்வுலகுமேத்தாதா லீங்கிழிவுநண்ணூரோ
லீங்கிழிவுநண்ணூரோ யிக்கருணேக்கடலோனே
நீங்கிழிவுநண்ணுத நெறிநீங்காச்சிந்தையரோ.

உரை.— வானுலகுள்ளோர் விரும்பிவணங்கு மாட்சி

யிற் சிறந்த குணத்தொகையோனாகிய நாதனை யிப்பூவுல குள்ளோர் வணங்காராயினிங்கே கேடடையாரோவடைவார்தாமே, அடையாதவராரொன்னிற் கருணைகடலாகிய விந் நாதனைநீங்குதற்குக் காரணமாகிய பாவத்தையடையாதநன் னெறிவிடாத சிந்தையுள்ளயாவரும்.

நன்னெறியிற்றக்க நிலைமை.

(30-ம். படலம். 8.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

வரையெனத்துயரிற்போன்மின் வாருதிநாடியோடுந்
திரையெனவிறைவற்சேர்மின் றீயெனவகன்மின்றீய
நுரையெனவாழ்க்கைகாண்மின் னோயெனவுயிரைக்காமின்
கரையெனக்கதியைவெஃகின் கசடறநெறியிதன்றே.

உரை.— காற்றின்முகத் தசையாத மலையைப்போலத் துயர்முகத் துறுதியாய்நிலைபெறவுங் கடலைநோக்கி யெங்கு நில்லாதோடு மாறுபோல விவ்பூவுலகி லாசைவையாதாண் டவனைத்தேடிச்சேரவுஞ் சுடுஞ்செந்தீயைப்போலத் தீயவை யண்டா தகலவும் பயனின்றித்தோன்றியழியு நுரையைப் போல விவ்வாழ்வுகளையெண்ணிநோக்கவு முடற்கு நோய் வராதபடிக்கும் வந்தநோயைத் தீர்ப்பதற்குஞ் சலியாமற் காப்பதுபோலத் தீவினையண்டாமலு மண்டினவளவி னில்லா மலு முயிரைப்பேணிக்காக்கவு நீந்தும் யாவருங் கரையை நாடுவதுபோல வான்வீட்டுக்கதியை விரும்பவு மிதுவே வழுவா நன்னெறி.

காமத்தினால் வருங் கேடு.

(23-ம். படலம். 84, 85.—26-ம். படலம். 172, 173, 174, 175, 176, 177.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

சிலைவல்லார்களுஞ் சிறப்பெழுநெடும்புகழ்தினை நூற்
கலைவல்லார்களுங் கடிநிதித்திருக்கொடுபெருங்கோ
னிலைவல்லார்களு நிருவியமற்றவல்லாரு
முலைவல்லார்களின் முயலினுன்முரிவிலாருண்டோ.

உரை.— போர்முகத்தஞ்சாதவீரத்து வில்லின்வல்லவருஞ் சிறப்பிற்பொலிந்து நெடியபுகழையுள்ள நிறைந்த கல்வியின்வல்லவரு நிதிப்பெருஞ் செல்வத்துயர்ந்த கோலோச்சி யாண்ட பூமியில் வல்லவரும் பொலிந்த மற்றயாவருங் காமத்தமிழ்ந்தினகாலத் தவருட்கெடாதவருண்டோ வில்லை.

காரிழந்திழி துளியெனநாடொறுங்கனலிற்
பாரிழந்திழி பல்லுயிரியாவையும்பார்க்கி
னீரிழந்திழி நிறைதவிர்காமதரல்லாற்
சீரிரந்திழி செயிரினுறொண்ணுவதரிதே..

உரை.— மேகத்தினின்று பொழியுந் துளிகளைப்போல நாடோறுமட்டின்றிப் பூவுலகினின்று தீநரகில் விழும் பல மனிதருயிர்களைப்பார்க்குமிடத்தில் நிறைதவிர்ந்த காமத்தமிழ்ந்திய பாவிகளல்லாதே மற்றக்குற்றங்களால் விழு மனிதர் கொஞ்சமாகையி லெண்ணுவதரிதல்ல.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

கொல்லும்வேலினுங் கொன்னுயிர்மெய்யுணப்
புல்லும்வீயினும் புன்கண்புகுத்திமேற்
செல்லுங்கூற்றினு நஞ்சினுந்தீயதா
மொல்லுமாதரு ணர்ந்துடையாசையே.

உரை.— கொல்லும் வேலினு முயிரைக்கொன்றபின் னுடலையுண்ணும் புலியினுந் துன்பங்களை விளைவித் துயிரை

க்கொல்லவருஞ் சாவினுங் கொடிய நஞ்சினுங்கொடியதா மாதரின்மேல் வைத்த தீயவாசை.

கனிநுழைந்தமு தோடுணுங்காளமே
துனிநுழைந்து துகைத்துயிர் துய்த்தென
நனிநுழைந்த நசையினி துண்டபின்
வினிநுழைந்த விடுக்கண்வருத்துமே.

உரை.— இனிதாய் நுழைந்தபாலோ டுண்டநஞ்சு துன்பத்தோடு நுழைந்து வருத்தஞ்செய் துயிரையுண்டு கொல்வதுபோல மனதிற்கொண்ட காமத்தாசையு மின்பமென் றதனையுண்டபின்பு துயரைப் புகுத்தி மிகவும் வருத்தும்.

சிலையின்மேன்மையுஞ் சீர்த்தியுஞ்சீலநன்
னிலையின்மேன்மையும் வாழ்க்கையுநீதமுங்
கலையின்மேன்மையுங் காமநினைத்தகா
லுலையின்மேல்வழு தொத்தெரிந்திற்றவே.

உரை.— சிலைத்தொழிலிற் பொலிந்தவீரமும் பெயரிற் பொலிந்த கீர்த்தியு மொழுக்கத்துப் பொலிந்தவறத்தினிலைமையும் பொருளிற்பொலிந்த வாழ்க்கையு முறையிற் பொலிந்த நீதியுங் கல்வியிற்பொலிந்த புலமையு மிவையெலா மொருங்குடன் காமத்தின்மேலாசைவைத்தமாத்திரத் துலையின்மேல்வைதத வைக்கோலைப்போல வெரிந்தழிந் தொருப்படக் கெடுவன.

கண்ணவாவு கதிர்கடன்மூழ்குமுன்
பெண்ணவாவு கொணர்பிணிதன்மையிற்
புண்ணவாவு புலாலுணுங்குந்தமும்
விண்ணவாவு விண்ணேறமோர்தீமையே.

உரை.— இதின்முறையிற் பெண்ணின்மே லாசையை வைத்தா லன்றுதானே கண்விரும்பின வொளியைப்பரப்பின சூரியனத்தமித்துக் கடலில்மூழ்கு முன்னே யவ்வாசைகொண்டுவிடுந் துன்பத்தின் கொடுமையைப் பார்க்கிற் றுன் செய்தபுண்வழியாலிறங்கின வூத்தையுண்ணும் வேனு

மேகத்திழிந்தவிடியு மெத்துணைகொடியதாயினு மதற்கிவை தியனவல்ல.

அரிந்தபோது குழைந்தெனவாகுலம்
பிரிந்தபோது நசைபெறுமாமென்பார்
விரிந்தபோது குடைவினைவண்டெனப்
புரிந்தபோது நசையுயிர்போழுமே.

உரை.— கொம்பினின்றறுத்த மதுமலர் வாடினாற் போலத் தம்முட்பிரிந்தவளவி லாசையும் வருத்தஞ் செய்யு மென்பார், ஆயினும் பூவினிதாய்மலர்ந்த பருவத்து வண்டு கள்மொய்த் ததனைக்குடைந்து வினையைச்செய்வது போல வாசைபுரிந்தவளவிலே யது துயரைச்செய் துயிரைக்கொல் லும்.

தசைசெய்மெய்ப்பகை தாங்கியமாக்கடந்
நசைசெய்யப்பகை நாடினர்தாமென
விசைசெய்விற்பகை விற்றொழில்காக்கினும்
வசைசெய்யப்பகை மாற்றரிதாமரோ.

உரை.— ஊத்தையூறுமிவ்வுடலைப் பெரும்பகையாகக் கொண்டமனிதரோ யவருக்காசைசெய்யும் பகையைப் பகை யென்றெண்ணும லினிதென்றதனைத்தேடுவார், ஆகையால் விசையைக்கொள்ள வேற்றிய வில் லொருவற்குச்செய்யும் பகையை யவனும் வில்லாற்காத்துவெல்லலாம், ஆயினும் வசைபெற வாசைசெய்யும்பகையைமாற்றி வெல்லுவதரிது.

மாதர் பழக்கத்திலுள்ள கேடு.

(28-ம். படலம். 29, 30, 31, 32, 33.)

மா, மா, காய், மா, காய்.

கடலைக்கடையவமிர்தமொடு கடுவும்பிறந்ததெனப்
படலைக்கதையாயறிந்ததலாற் பயனுய்க்கண்டதிலே

மடலைக்குடையவூறியதேன் வடித்தசொல்லமிர்தத்
தடலைக்கொலைசெய்துயிருணுநஞ் சுரும்தெண்வாய்மொழியே.

உரை.— மீளவுங் கடலைக்கடைந்தவளவி லமிர்தமுநஞ் சுங் கூடப்பிறந்தனவென்று கோர்த்த கதையின்முறையாற் கேட்டதொழிய வதைப்பயனுகக்கண்டாரில்லை, ஆயினு மாதரின்வாய்மொழி யோவெனில் வண்டுகள்குடைந்த பூவிதழினின்றூறிய தேனினுமினிய சொல்லமிர்தமே கூட வுடலைக்கொன்றுயிரையுண்ணு நஞ்சினைப்பொழிவன.

குழலாற்பிறழாதுயிர்விசிப்பார் குரலானஞ்சுயிர்ப்பார்
கழலாற்சிலம்பமருட்டிடுவார் கண்ணுற்கணைதொடுப்பார்
நிழலாற்கலன்கொண்டிருள்மொய்ப்பார் நிறைதம்முறுப்பெல்லா
மழலாற்சுடச்சுட்டுயிருண்டுண்டாற்றுப்பசிகொள்வார்.

உரை.— அங்ஙனமங்கையர் தங்கூந்தலைப் பாசமாகக் கொண்டு பிறழாதபடி யுயிரைப்பிணிப்பார், இனிய சொல்லானஞ்சினைக் கொப்பளிப்பார், அணிந்தசிலம்புகளிடு மோசையால் மயக்குவிப்பார், பார்த்தகண்ணுலம்புகளையெய்வார், பூண்டவணிசெய்யொளியால் மனத்திலிருளைக்குவிப்பார், மற்றவுறுப்பெல்லாங் கொடுநெருப்பாகி யுயிர்களைச் சுட்டு விடாதுண் டுண்டாலு மாற்றுத பசியேகொள்வார்.

போதங்கையாருளரியபண் புழுங்கிச்செய்கொலையோ
வேதங்கொண்டாரொண்ணுவர்மற் றெண்ணும்பாங்கரிதே
கிதம்பாலாய்ச்சுரந்தெனதீக் கிளையோவேலோநச்
சோதங்கொல்லோவிருசெவியூ டேட்டியுயிர்கொல்வார்.

உரை.— பூங்கையா லன்னார்தடவி வாசித்தவீணைசெய்யுங்கொலையோவென்னி லதினுட்பட்டுவருந்தினு ரதனைமதிப்பாரொழிய மற்றவரொண்ணுவதரிதே, வீணைவாய்க்கீதமே சுரந்தபாலாகத்தோன்றிக் கிளைத்தசெந்திப்பொறியோ கொல்லுங்கூர்ந்தவேலோ நச்சுக்கடலோ வேதோ வதனை யிருசெவியிலூட்டி யுயிரைக்கொல்வார்.

என்னேமற்றதியாளுணைப்பே னெரிவிண்டிடித்தசனி
மின்னேதடாக்காளுளதேல்மின்பெண்ணைசைக்கிறுதல்

பின்னே துடராக்காலமிலைப் பெரும்புண்ணீரொழுக
வன்னேயறிவார்கரரல்லா லறியார்பொறிவென்றோர்.

உரை.—மற்றறியாவையு நானுரைப்பானேன், மின்னி யதற் கிடிதுடராதகால முண்டாயினு மின்னுகிய மாதரை விரும்பியதற் குடனே கேடு துடராதகாலமில்லை, இன்னங்கு ருதியொழுகும் பெரும்புண்பட்ட மனிதரவையெல்லா வற்றையுமறிவாரொழிய வைம்பொறிகளைவென்ற தவத்தோர றியார்.

சாதல்மிகவேகார்முகம்வெஞ் சரத்தின்மழைபனிப்ப
தாதல்மிகவேகணைக்கண்ணு ரணிப்பூஞ்சாயலின்மேற்
காதல்மிகவேகற்றபல கல்வியெவன்செய்யு
மோதல்மிகவேநூற்றுறைநீத் துணர்வோரஞ்சுவரால்.

உரை.— கொலைத்தொழில்மிகும்படி வளைத்தவில்லெய்த விடாமழையாகிய வம்பினுங்கொடிய வம்புகளையெய்யுங் கண் மாதரினழகிய சாயலைவிரும்பி யாசைமிகுங்காலத்துக்க ற்றகல்வியெல்லாஞ் செய்வதொன்றுண்டோ வில்லையே யோதிமிகுந்து நூற்றுறையெல்லாங்கடந்த வுணர்விேனார்முதலாய்த் தமக் கஞ்சுவார்.

காம நோ யொழிக்கும் வகை.

(28-ம். படலம். 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52; 4-ம். படலம். 21.)

விளம், விளம், மா, கூவிளம்.

கைவளர்மருத்துவ ரன்றிக்காய்ந்தநோய்
மெய்வளர்பிணியுள ரறிதல்வேண்டிலாப்
பொய்வளருயிர்கொணோய் பொருந்திக்கொண்டனர்
மைவளர்நோயறிந் தலதுமாறுமோ.

தே. மா. 8.

உரை.— உடலைப்பற்றிவருநோய்களை வைத்தியரொழிய நோயாளியறிதல்வேண்டிய தல்லவே, பொய்யானுயிரைப்பற்றிவருநோயோவெனி லவனவன்மனம்பொருந்திக்கொண்டதனு லந்நோயுள்ளவனு மதனையறிந்தா லொழியத் தீராது.

புனஞ்செயும்பங்கமே புனமொழித்தென
மனஞ்செயும்பங்கமு மனநொந்தாற்றலிற்
றினஞ்செயும்புகர்வினை தெரிகிலாரறத்
தினஞ்செயும்பயன்பட மீட்டலேலுமோ.

உரை.— நீராற் செய்த சேறு நீராலொழிவது போல மனத்தாற் செய்த பாவ மனநொந்தமையாற்றீரும், ஆகையா லனுதினஞ்செய்த பாவங்களை யறியாதா ரறத்தினுல் வரும் பயனையடையும்படி யப் பாவமொழியுமோவில்லை.

நகைவழிவிரகநோய் வளர்ந்துநல்கிய
புகைவழியுளத்திருள் பொதுளக்கொண்டநோய்த்
தொகைவழியுணர்வரி தெனினுஞ்சூழ்ந்தவவ்
வகைவழியறிதிநீ யறிந்துமாழ்கலேன்.

உரை.— உயிரைப்பற்றிவரும் பலநோய்களு மின்பத்தால்வருங் காமநோய் வளர்ந்துசெய்யும் புகையால் மனத்திருள்மண்டிவந்த நோயாகையி லவற்றை யறியவந்தாயினு நீயவற்றை நன்றாயுணர்ந்தாயே, உணர்ந்த பின்னு மயங்குவானேன்.

அள்ளியவிருளறு மலங்கல்நூலினேய்
தெள்ளியவிடத்திலுந் தெளிந்துநஞ்சுண
அள்ளியபேதைய ரொப்பச்சிந்தையி
லெள்ளியவினையுளத் திவறலாவதேன்.

உரை.— அடர்ந்தவிருளைநீக்கி விளங்கியகல்வியின் வல்லோய், இங்ஙன நீயுட்டெளிந்தவிடத்து மறிந்து நஞ்சினையுண்ணத்துணிந்த பேதையைப்போல வுணர்விகழ்ந்த தீவினை மனதில் விரும்புவானேன்.

நஞ்சமிழ்தென்றுநீ நக்கினுலமிழ்
தின்சமிழ்தாகுமோ வினைகொணல்லுயி
ரெஞ்சமிழ்ந்தியபுலா யினைந்துமாழ்கவு
நெஞ்சமிழ்ந்தியநசை நீக்கிலாவதேன்.

உரை.— அமிர்தமென்று நீ நஞ்சினை நக்கினுலு மந்நஞ் சினிய வமிர்தமாகுமோ வில்லையே, வினைகொண்டுன்னுயிர் பாவத்திலமிழ்ந்தி மயங்கிச்சோரவு நெஞ்சிற் கொண்டகாம த்தாசையை விடாததேன்.

காதலேபாசமாய்க் கால்கைவீக்குத
லாதலேபிரிவுனக் கரியதாமென்ருய்
காதலேபாசமாய்க் காதல்மிக்குளத்
தாதலேநாடொறு மிறுக்கலாவதேன்.

உரை.— ஆசையேயொருபாசமாகிக் காலையுங்கையை யுங் கட்டினதாகையா லதனைப்பிரிவ துனக்கரிதென்ருயா கினு மாசைபாசமென்னி னுடோறு மாசையை வளர்த்து நீ யப் பாசத்தை யிறுக்குவானேன்.

கொங்தெனவிரகநோய் கொழுந்துவிட்டெரிந்
தங்கிலவழலவிப் பரியதாமென்ருய்
கொங்தெனவெரிந்ததீத் தூண்டிக்கொண்டுநீ
யந்திலநசைக்கற லீட்டலாவதேன்.

உரை.— கோபித்தாற் போலக் காமநோய்கொழுந்து விட்டு முடியாதெரிந்த தழலாகி யதனையவிப்ப துனக்கரிதெ ன்ருய், ஆயினுஞ் சினந்தெரியுங்காமத்தீயை நீயே தூண்டிக் கொண்டு முடிவின்றி யதற்காசை யென்னும் விறகுகளைக் குவிப்பானேன்.

பாங்கெழுமெழினலம் பயத்தவின்பினு
லாங்கெழுநசைவெறுப் பரியதாமென்ருய்
பாங்கெழுங்காஞ்சிரப் பழன்விரும்பியுண்
டாங்கெழுமணங்குற வருந்தலாவதேன்.

உரை.— கண்டமுகத்தி னழகுசெய்யு மின்பத்தால்வள ருமாசையைவெறுப்ப துனக்கரிதென்ருய், ஆயினு மழகு

காட்டிய காஞ்சிரப்பழத்தை விரும்பியுண்டால் வருத்தம் வருமென்றறிந் ததனையுண்பானேன்.

நெடிதுநாளுற்றநோய் மருந்தினீர்மையாற்
கடிதுதீர்தாலருங் கருமமாமென்றாய்
நெடிதுகாளுற்றநோய் நீளமீண்டுயிர்
கடிதுமாய்த்தொழிதாங் கடுவுண்பாவதேன்.

உரை.— நெடுநாட் கொண்டநோ யுடனேமருந்தினாற் றீர்ப்பதரிதென்றாய், ஆயினு நெடுநாட்கொண்டநோய் நீளவு முயிர்கெட்டொழியவு மீளவு நீ நஞ்சினையுண்பானேன்.

கோட்பருமெழிலெனக் கோதையார்முக
மீட்பரும்விடமதை விழித்துய்யாதென்றாய்
கோட்பருமொழிலுயிர் குழையநாடொறு
மீட்பரும்விளிவுற விழித்தலாவதேன்.

உரை.— கெடாத வழகின் றன்மையாற் றோன்றியமா தரின்முகமே மீளாததோர் நஞ்சாகி யதனைக்கண்டவர் பிழையாதென்றாய், ஆயினுங் கெடாத வழகுள வுயிரோ குழைந்து நாடோறும் மீளாத சாவுசாகும்படி யம்முகத்தைப்பார்ப்பானேன்.

மால்வளர்விரகநோய் வழங்கும்போரதே
வேல்வளர்சமரினீ நோக்கல்வேண்டிலா
கோல்வளர்போர்வெலு மெதிர்த்தகோலிவண்
கால்வளரோட்டமே வெற்றிகொக்குமால்.

உரை.— இவையெலாமாசையின் மயக்கத்தால்வளருங் காமநோ யுயிர்க்குச்செய்யும்போரோ ஆயுதங்கொண்டு செய்யப்படும் போரின்றன்மையா னீநோக்கல்வேண்டாம். அம்போடுசெய்தபோரை யெதிர்த்தெய்த வம்புவெல்லுமாம். காமப்போரிலோவெனி லெதிராமற்காலோடோடி யொளித்தலே வெற்றியைத்தரும்.

பட்டிலாக்கடையிலாப் பாவையார்கட
மட்டிலாவுருப்பெலாம் வதைசெய்நஞ்சென்றாய்

இட்டிலாற்காண்கிலாற் கேட்கிலாலது
வெட்டிலாற்கொல்லுமோ வெயில்செய்பூணினோய்.

உரை.— காமப்போரினெளிப்ப தெங்ஙனம், வெற்றியைத் தருமெனிற் கெடாமலுமுடியாமலு மாதரினுறுப்பெலா மட்டின்றி யுயிரைக் கொல்லு நஞ்சாமென்றாய், ஆயினு மவர்களையண்டாமலுங் காணாமலுங் கேளாமலும் விரும்பாமலுமிருந்தாயாகி லந்நஞ் சுன்னுயிரைக்கொல்லுமோ விளங்கின மணிவடமணிந்தவனே.

வள்ளுறப்பகைத்துயிர் வருத்துமெய்யலா
லள்ளுறக்கொடுமைகொண் டடும்புறப்பகை
யுள்ளுறக்கண்முத லுள்ளவாயலைத்
தெள்ளுறத்திறப்பதே னெறிசெய்நூலினோய்.

உரை.— வலிதாய்ப்பகைத்து நல்லுயிரைவருத்து மிவ்வுடலன்றி நெருங்கிச்சூழ்ந்து கொடிதாய்க்கொல்லும் புறப்பகை யுள்ளேநுழையும்படி விளங்கின நூலினோய் நீ கண்முதலைம்பொறியாகிய வைந்துவாசலை நிந்தைபடத் திறப்பானேன்.

இருண்டிருங்கனத்திடை யெரிந்தமின்னென
மருண்டிருண்டுயிர்கெட மயல்செய்வாண்முக
முருண்டிருண்டெறிந்தவெண் டலையதோர்ந்துளத்
தெருண்டிருந்திமத்திடைக் காண்மின்றேறவே.

உரை.— மீளவுந்தேறும்படி யிருண்ட மேகத்திடத்து விளங்கித்தோன்றியொழியு மின்னலைப்போல விருண்டுயிர் மயங்கும்படி விளங்கின வழகியமுகமே சுடுகாட்டிலுருண்டுருள வெறிந்த வெண்டலைதா னென்றெண்ணி மனதிற்றெளிக.

பகைத்தகத்துகிர்த்துறை படலைமுத்தெனுந்
தகைத்தகப்பல்லிதழ் பதர்வில்தார்விழி
நகைத்தகம்பிறைநுத னளினவாயென
மிகைத்தகைத்துகடரும் விறைந்தபொற்பிதோ.

உரை.— அவ்வெண்டலையை நோக்கிப் பகைப்பட்ட

முகு பெறப் பவளத்துறையிற்கோர்த்த முத்துவடமொப்பச் செவ்வுதட்டுட்டோன்றின பல்லும் வளைத்தவில்லொப்பப் புருவமும் வான்மீனெப்ப விழிகளு மொளிப்பிறையொப்ப நுதலுந் தாமரையொப்ப வாயுமென்று சொல்லிவருந்தும் படி நீவிரும்பின வழ கவ்வெண்டலைதானே.

போதெனமலர்ந்தெழில் போதின்வாடியக்
கோதெனமெலிவன மூப்புக்கொண்டகா
லேதெனவுணர்கிலா இன்பம்வேண்டுவர்
தீதெனவிளைத்தபின் றீயதெய்துவார்.

உரை.— பூத்தமலரைப்போல மலர்ந்தமுகத்தழகம்மல ர்வாடிக் கோதாய்க்கிடந்ததன்மையால் மூப்புவந்தவளவிற் றானு மெலிந்துகிடக்குமென் றுணராம லின்பத்தைவிரும் பிப் பாவத்தை விளைவித்துத் துன்பத்தைக்கொள்வார்.

இன்றுளார்நாளையே யிறப்பான்றிமற்
றன்றுளார்விழைந்தவை யருகிற்போகிலா
நின்றுளாய்ச்செய்துகள் நெருங்கிப்பின்னுறச்
சென்றுளாய்வினைதுயர் செப்பலாங்கொலோ.

உரை.— இன்றுயிர்வாழ்வார் நாளையிறப்பார், இதுவு மன்றி முன்வாழ்ந்திருக்கையில் விரும்பினயாவு மவரிறக்குங் காலத்துக் கூடப்போகாமனின்று செய்த பாவமே கூடப்பி பின்றுடர்ந்ததனுல் விளையுந்துயர்கள் சொல்லுந் தன்மை யோ வல்ல.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

கார்முகத்து வளைத்தனகார்முகஞ்
சீர்முகத்துச் செயந்தருங்காமவெம்
போர்முகத்து வெல்வான்புலையாசையற்
றேர்முகத்தெதி ராதொளித்தானன்றே.

உரை—. வில்லெதிராக வளைத்தவில்லே நன்றாய்ச்செ யந்தருமாம், காமப்போரிலோவென்றாற் குற்றங்கொண்டு விடுமாசை கிளம்பாதபடிக் கழகு முகத் தெதிராகநில்லாம லொளித்தோடினவன் வெல்லுவானல்லவோ.

காமநோய்க் கவுஷிதமாகிய நரக நினைப்பு.

(28-ம். படலம். 54, 55, 56, 57, 60, 143, 144, 145, 148.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

கைக்குமோர்மருந்துபாலர் கனியவுண்டுயிருமுண்ண
விக்குமொர்விளிம்பினீவி யிட்டெனவியம்பலென்னே
வொக்குமோர்பழம்புண்ணுற்ற வுடன்றழல்வேண்டுமென்ன
வைக்குமோரளவில்விஞ்சை மறைநலோர்வகுத்தார்மீண்டே.

உரை.— கசப்புள மருந்தினைப் பாலகரினிதாயுண்டு கூடவுயிரு முண்ணும்படி மருந்து வைத்த பாத்திரத் தொரு விளிம்பிற் சருக்கரையுந்தடவிக் கொடுப்பதுபோல மன நோகாதபடி யின்பங்காட்டிப் பேசுவதென்ன? நெடுநாட் கொண்ட புண்ணுறும் பொருட்டு நெருப்பேவேண்டுமென் றுணர்ந் தளவிறந்த விஞ்சை வேத நல்லோர் மீளவுஞ்சொன்னார்.

புண்முழுதிறைஞ்சுங்கோட்டுப் புழுங்கியகளிற்றேறன்னாய்
விண்முழுதிறைஞ்சும்வேதம் விலக்கியதீமைநீங்கி
யுண்முழுதிருளற்றூக்கத் தொழுகவேதுணிந்தாலல்லான்
மண்முழுதிவர்தீதொவ்வா மலிதுயர்நிலையஞ்சேர்வாய்.

உரை.— கழுகுமுதற் பல பறவை தமக்குவிருந்திடுமென்று வணங்கினகொம்புள சினந்தமதயானையி னேறுபோல நின்றவனே வானுலகிடத்து வணங்கப்பட்ட மெய்வேதம் விலக்கின தீவினையாவையும்விட்டு மயக்கமின்றி முழுமன வூக்கத்து நன்னெறியொழுகத் துணிந்தாலொழியப் பூவுலகுள்ளதீதெலா நிகராததுன்பமுள்ள நரகத்திற்சேருவாய்.

தொல்லையிம்மருளினாழ்த்த துகள்விடத்துணிதலொன்றே
வொல்லையிந்நசைநீங்காதே லூழலில்வேதலொன்றே
வெல்லையிவ்விரண்டிலொன்றே யியாவருந்தவிராதென்ன
வல்லையிவ்வுணர்விற்றேர்தி மாற்றலர்வணங்குநாலோய்.

உ ரை.— பகைவர்வணங்கும் கல்வியுடையோனேநெடு நாட்கொண்டமயக்கத்துப் பழுத்த பாவங்களை விடுவதொன்றாயினு முடனே யித்தீயவாசையைவிடாயாகி லெக்காலத் துந் தீநரகத்தில் வேகுவதொன்றாயினு மிவ்விரண்டி லொன்றே யெவர்க்குந் தவிராதென்றெண்ணி யுறுதிபெற விவ் வுணர்விற்றெளிக.

மீய்முகத் துடையிற்றென்றும் விசும்புசூழ்வரையிற்றூங்கித்
தூய்முகத்தலைகளோட்டித் துள்ளிவீழருவிபோல
வேய்முகத்தினிமைகாட்டி விரைவிலோடிளமைநம்பேல்
காய்முகத்ததிர்கால்வீசக் காய்முதல்வீழுமன்றே.

உரை.— மீளவுமாகாயத்துடுத்த நல்லாடையாகத்தோன்றி மேகங்கள்சூழ்ந்த மலையிற்றூங்கித் தூயதிரைகளைச்சுருட்டித் துள்ளிவிழு நீரருவிபோல வழகியமுகத்தி னினிமை காட்டிச் சீக்கிரத்தோடியொழியு மிளமைநம்பவேண்டாம். அதிர்ந்து கோபித்த காற்றின் முகத்துக் காய்களுமுதிர்வன வல்லவோ.

இனியவேகேண்மினிந்நா ளெய்தியவுணர்விற்றாழ்ந்து
முனியவேமள்ளற்புக்கு முதிர்ந்தநோயுணர்ந்துகூசிற்
கனியவேபொன்றுங்காலக் கனலுறுதவப்பீரொன்னப்
பனியவேயலர்ச்செவ்வாயார் பணித்தனருணர்ச்சிமாதோ.

உரை.— நன்றாய்க்கேளுங்கள் நீரிக்காலத்துணர்வி னாகிற்றாழ்ந்து சினந்துவேகு மத்தீயினுட்புகுந்து முதிர்ந்த வன்னோய்களை யிப்பொழுதுணர்ந்து கூசியஞ்சினாலல்லோ விறக்குங்காலத் தந்நரகிற்புகாம லினிதாய் மகிழா நிற்பீரொன்று குளிர்மதுமலர்ச் செவ்வாயார் நல்லோர்புத்திமதி யுணரச்சொல்லுவார்.

விளம், கூவிளங்காய்.

ஐவழி யாசுதரும்
பொய்வழி போக்கியற
மெய்வழி மேவிநா
ருய்வழி யொன்றுளதே.

உரை.— பாவம்வினைய வைம்பொறி காட்டிய பொய்யான வழியைவிட்டு மெய்வழியாகிய வறத்தைவிரும்பி யெம்முயிர் பிழைக்கும் வழியா நரகமே.

காதல லாதுகடுஞ்
சாதலி லாதுதகு
மோத லொளித்துநர
காதலும் வித்தநவே.

உரை.— ஆசையேயன்றி யுயிரைக்கொல்லும் பகையுமில்லை, ஆசையே கற்றநூலை மறக்கச்செய்து நரக வேதனை விளைவதற்கு வித்ததாகுமே.

இறந்தனர் வேகுமெரி
பிறந்தன ரோர்த்துபெறிற்
றுறந்தனர் துஞ்சுளிவான்
சிறந்தனர் சீர்த்துவப்பார்.

உரை.— பாவிகளிறந்தபின் பெக்காலமும் வேகாநிற்கு நரகத்தீயைப் பிறந்து வாழ்பவர் நினைத்தா லவருமிறக்கும் பொழுதி லதிலேவிழாமனீங்கிச் செல்வத்திற் சிறந்து வான்மே லென்று மகிழ்வார்.

செல்வரு ருஞ்செயிரும்
வல்வரு மாண்பறமு
மெல்வரு மொத்தெவனுஞ்
சொல்வரு தோற்றமதே.

உரை.— செல்வத்துயர்ந்தோர் மயங்கிக்கொண்ட பாவமுந் திறத்துயர்ந் தடைந்தவறமுஞ் சூரியன்கிராணமுமொளியும் போலவாகி யெங்குந்தோன்றி யெவராலுஞ் சொல்லத் தகுவன.

மனந்திரும்பின காமாதுரனது மனஸ்தாபப் புலம்பல்.

(28-ம். படலம். 133, 134, 135, 136, 137, 138, 139, 140.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

சுழல்தரப்புகைகளுறுந் தூய்மலர்த்தவிசிறேம்பூ
நிழல்தரத்தொடலைக்கூந்த னீர்மையார்தோண்மேற்றுஞ்சி
யழல்தரக்கனன்றமஞ்சத் தழன்றழன் றூழிகாலம்
புழல்தரப்புண்பட்டங்கம் பொடிபடவினிதோநெஞ்சே.

உரை.— வாமன்றெளிந்தினித் தன்னைநோக்கிச்சொல்வான்: அகிற்புகைமுதற் பலபூம்புகைகளைச் சூழக்காட்டிவாசமதுமலர்மெத்தையிற் கிடந்து விளங்கின மணமலர்மாலை சூழ்ந்த கூந்தலாரது கையின்மே லிக்காலத் துறங்கின தன்மையா லிறந்தபின்ன ரெரிந்த செந்தீமஞ்சமேற் கிடந்து வெந்தழன் றூழிகாலத் துடலெலாம் பொடியாகத்துளைத்து நெடும்புண்படுவ தினிதோவென்னெஞ்சே.

உலைவைத்தபொறிச்செந்தீயோடுடன்றவேலுருவிப்பாய
மலைவைத்தவருவிக்கண்ணீர்மலிந்தழுதினியதென்றோ
சிலைவைத்தபகழிச்சாயற் றிருநுதல்விழியைவெஃகி
விலைவைத்தமகளிர்வஞ்ச வினைக்கொடுமருண்டாய்நெஞ்சே.

உரை.— ஊதுமுலையிற் பொறிகளைவிட்டெரியுஞ் செந்தியுஞ் சினந்தழன்ற கொடியவேலு மிருகண்ணுருவி விடாமற்பாய்ந்து மலையினின்றொழுகுமாறுபோல வவியாத கண்ணீரா நரகிலென்று மழாநிற்ப தினிதென்றோ வில்லிற்றொடுத்த வம்புகளொப்ப வழகியநுதற்கீழ் வைத்தகண்களைவிரும்பி விலைமாதர் வஞ்சத்தோடு மயங்கினை யென்னெஞ்சே.

தீய்த்திரடளிர்த்தநோயாற் றீயவர்புலம்புமோதை
பேய்த்திரடளிர்த்தவோதை பிளந்தகாதணலின்பென்றோ
வீய்த்திரடளிர்த்ததேன்போல் விளம்பியசொல்லென்றெண்ணிப்
போய்த்திரடளிர்த்தபொய்யிற்போழ்ந்தவாய்விழைந்தாய்நெஞ்சே

உரை.— நரகிற்றிரண்ட செந்தீ விளைவித்த துயர்களைப் பொறுக்கமாட்டா தங்கேதீயோரோயாமற் புலம்பி முழங்குமோசையும் பசாசுகள்திரண்டு சினத்தோட தட்டிக்குமுறுமோசையு மதிர்ந்தமிகுதியாற் பிளந்தகாதுகளோயா தவற்றைக்கேட்ப தின்பமென்றோ மலர்வாய் திரண்டொழுகுந் தேனைப்போல வினியசொல்லென்றெண்ணி நிறைந்த பொய்யா லுயிரைக் கொல்லும்வாய்மொழி விரும்பினையென்னெஞ்சே.

அலைவிரவூழல்வைகி யரவினஞ்சயிர்க்கெஞ்ஞான்றுங்
கொலைவிரவூழிச்செந்தீக் குளித்தலேயினியதென்றோ
வலைவிரவணியிற்பின்னி மலர்தவழ்கூந்தல்வெஃகிப்
புலைவிரவுணர்ந்தகாமப் புணரியிற்குளித்தாய்நெஞ்சே.

உரை.— கடலோடொத்த தீநரகத்தென்றுங் கிடந்து பாம்புகளுமிழ்ந்த நஞ்சினையுண்டுண் டெக்காலத்துங் கொல்லாது கொல்லு மூழித்தீயிற் குளிப்ப தின்பமென்றோ நல்லுயிரகப்படும்படி யாபரணங்களைக்கொண்டு வலையின்றன்மையாற் பின்னப்பட்டு மதுமலர்சூழ்ந்த கூந்தலைவிரும்பித்தளர்ந்த வுணர்வோடு நினைத்த காமக்கடலில மிழ்ந்திக் குளித்தா யென்னெஞ்சே.

கோடிழந்தழியும்பைம்பூங் கொள்கைவாடெழிலைப்பேணி
யேடிழந்தொழுகுந்தேன்போ லியைந்தபுல்லின்பநக்க
வீடிழந்தூழிச்செந்தீ வீழநல்லறங்கள்செய்யும்
பீடிழந்தொழுகுவாரிற் பேதையரில்லைநெஞ்சே.

உரை.—பூத்தகொம்பிற் பிரிந்த மதுமலரழிவதுபோல நில்லாதழியு மழகினைப்பேணிச் சிறியதோர்பூவிதழ்மேலே தூங்கிவிழு மோர்தேன்றுளியொத்த சிற்றின்பத்தை நக்கி வான்வீட்டுவாழ்வுகளிழந்து முடியாத செந்தீநரகில் விழும்படிக் கறத்தினல் வரு மாட்சிமையின்றி நடக்கும் பாவிகளைப்போல யிப்பூவுலகிற் பேதையரில்லை யென்னெஞ்சே.

கால்வழிகாயும்பூவுங் கடியுமென்றிளமைநம்பா
மால்வழிதளிர்த்தகாம வழிவளர்நியாயந்தந்த

நூல்வழியொழுகல்வில்லா நுகர்ந்தநஞ்சமிழ்ந்தேயுய்தி
ஒல்வழிசனித்தபாவத் தொடர்பினோடுழ்த்தநெஞ்சே.

உரை.— பெருங்காற்றின்முகத்து முதிராதகாயு மல ராதபூவுமுதிருமென்றறிக் துள்ளவிளமையை நம்பாமல் மய க்குவிக்கும் காமத்தால்வளரு நரகவேதனை யொருநூலாகக் கொண்டதைநினைத்து நன்னெறியொழுக்கம்விடாம லிந்நா ள்வரைக்கு மின்பமென்று நீயுண்டநஞ்சினைக்கக்கிப் பிழை ப்பாயாகச் சென்மத்திற் கொண்டபாவத்தைத் தொடர்ந்து வந்த பலதீவினைகளோ டழியாநிற்கு மென்னெஞ்சே.

வள்ளியவுருவந்தீமுன் வல்லியேயுருகும்வண்ணத்
துள்ளியவருமையாவு மூழன்முற்களைந்துநீங்கி
யெள்ளியவுள்ளங்கொண்மா கிசைத்தநூற்பளிங்கிற்கண்டு
தெள்ளியதவநீராட்டிச் செயிரறத்தெளிதிநெஞ்சே.

உரை.— மெழுகினாற்செய்தபாவை தீமுகத்துருகி யழி வதுபோல நான்முன்றரும வழியி னினைத்தவருமையெல்லா ங் கெட்டநரகத்தீமுகத்துக்களைந்து நீங்கினதாகி நிந்தை பட முன்மனதிற்கொண்ட பாவமாகிய மாசுகளை மாமுனி கள்சொன்ன நூலாகிய தூயகண்ணாடியிற்கண்டபின்பு நற் றவமாகிய தெளிந்த நீரிற்குளித்துப் பாவமலங்களொழிந்து தெளிவாயாக வென்னெஞ்சே.

தொல்வினையினியவென்று துகளுறத்தோன்றுங்காலு
நல்வினையரியவென்று நலங்கெடத்தோன்றுங்காலுங்
கொல்வினைநிலையச்செந்தீக் குளிப்பகல்லுணர்விற்றூழ்ந்து
வல்வினையூக்கம்பூண்டு மருளலென்னெஞ்சேயென்றும்.

உரை.— முன்னர் விரும்பின தீவினை யின்பமென்றி னிப் பாவம்வினையும்படியே தோன்றுங்காலத்துஞ் செய்யத் துணிந்த நல்வினையரிதாய்த் துன்பமென் றினியொழுக்கங் கெடும்படி தோன்றுங்காலத்துங் கொல்லாதுயினைக் கொ ல்லு நரகத்தீயிற் குளிப்ப வுணர்வினோ டங்கே தாழ்ந்து தள ராததுணிவோடு மனவூக்கத்தைக்கொண்டு மயங்காயென் னெஞ்சே.

பாவத்தில் மறுபடிவிழாதபடிக்கு வேண்டிய வடக்க வொடுக்க வெச்சரிக்கை.

(28-ம். படலம், 150, 151, 152, 153, 154, 155, 156.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

ஐம்பொறிப்பகைகண்டஞ்சி யடக்கலினுமைபோல்வாய்
வெம்பொறிப்புதவையோர்ந்துவிளைபகைசிறிதென்றெண்ணேல்
பைம்பொறிப்பாந்தடங்கூர் பல்படமதநீர்க்குன்றிற்
செம்பொறிப்புகைக்கண்யானை சிதைந்துயிர்மாளுமன்றே.

உரை.—ஐம்பொறி யுயிர்க்குச்செய்யும் பகையைக்கண்டவற்றையடக்கினதன்மையி லாமையைப்போலவாகி யவியாத செந்தீநரகத்தை யாராய்ந்ததன்மைத் தப்பொறியால் வரும் பகைசிறிதென்றெண்ணல்வேண்டாம். பொறிகள் படர்ந்த படநாகத்தின் கூர்ந்த சிறியதோர்பல்லுப்பட்ட வளவின் மதமாகியபுனலிழிந்தோடு மலையொத்துயர்ந்து வெஞ்சினத்தெரிந்த கண்ணுடையயானைமுதலாய்க்கெட்டுச் சாகுமல்லோ.

பிரிந்ததென்றொழித்தபாவம் பெறுமிடத்தணுகேல்நல்லோ
யரிந்ததென்றுறங்குமாசை யமைதியால்விழித்துக்கொல்லு
மெரிந்தநின்காமத்தீயை யிற்றறவவித்ததென்னேல்
கரிந்ததென்றிருந்தபல்காற் கால்முகத்தெரியுந்தீயே.

உரை.— மீளவும் நல்லோனே யுன்னைப் பிரிந்துவிட்டொழித்ததென்று வெறுத்த பாவந்திரும்பி விளைவதற்குரிய விடத்துப்போகாதே, வேரோடறுக்கப் பட்டதென்று தோன்றி யருது மனதிலுறங்குமாசை தனக்கேற்றசமயம் வந்தவளவில் விழித்தெழுந் துயிராக்கொல்லுமே, இதுவுமன்றி யுன்மனத்தெரியாநின்ற காமத்தீயை முழுது மவித்தாயென்றுநம்பாதே, அவிந்தாற்போலக் கருகிக்கிடந்ததீயுங் காற்றின்முகத்துப் பலமுறை கிளம்பியெரியுமல்லோ.

அசும்பிடையொளித்தசெந்தீ யறலெனவெடுத்தார்பூதர்
தசும்பிடையெடுத்தநீரைச் சயிலைதமேறெளித்துவாரி
விசும்பிடைநீங்கிவெய்யோன் வெங்கதிர்படத்தீப்பற்றிப்
பசும்பிடிசூழவாட்டிப் படர்நெருப்பாயிற்றன்றே.

உரை.— மீளவும் வேதாகமத் தெழுதப்பட்ட படியே யூதர்முன்னுளிற் பாழுங்கிணற்றிடத்தி லொளித்துவைத்த நெருப்பு நெடுங்காலம்போய்க் குழம்புநீராகி வைத்தவர்மக்கள்போயெடுத்தார், குடத்திற்கொண்டுவந்த வந்நீரைக்குவித்தவிறகின்மே லூற்றினபின்பு தன்னைமறைத்த மேகத்தைவிட்டுவந்த சூரியன்கதி ரதின்மேற்பட்டவுடனே தீப்பற்றிக்கொண்டு சூழப் பச்சிலைவெந்துவாடும்படி மிகவுநெருப்புப் படர்ந்தது.

தண்ணுறுங்குணங்கொண்டாலுந் தழலுதன்குணத்தைக்காட்டி
விண்ணுறுங்கதிரொன்றுண்கால் வெங்கனலெரிந்ததேபோற்
கண்ணுறுங்கனலங்காமங் கண்டவோர்கவின்முற்காய்ந்து
புண்ணுறுங்கசடுளாகப் புழுங்கிவெந்தெரியுமன்றே.

உரை.— சொன்னபடியே குளுமை பொருந்திய நீர் போலத் தோன்றினுஞ் சொன்னதீ வேகுந்தன்குணத்தை விடாமற்காட்டி வானினின்றுபட்ட வொரு கதிருட்கொண்டவுடனே பெருநெருப்பாகி யெரிந்ததுபோலக் கண்வழியாக மனதிலெரிந்த காமத்தீயுமவிந்த தென்றுதோன்றினுங் கண்டவழகியவோர்முகத்துமுன்னே காய்ந்து பாவத்தால் மனம்புண்படும்படி சினத்தோடெரிந்து வேகுமே.

குலம்புரிகொடியபேய்கள் கொலைத்தொழிற்கருவிசூழ்ந்து
சலம்புரிவலையைவைக்கத் தனைப்படிற்பிரிதலாற்று
வலம்புரிதவத்திணுமவ் வலையுருவிலகல்வேண்டுங்
கலம்புரிபைம்பூமூழ்கிக் கதிர்த்தபொற்குன்றின்மார்போய்.

உரை.— மீளவு முயிரைப்பகைத்துத் திரண்டகொடிய பேய்க ளுயிரைக்கொல்வதற்குரிய பலவெத்தனங்களைச் சூழப்பரப்பி நடுவேதீவினைக்குக் காரணமாகிய வலையைவைத்தமையா லதினுள்ளகப்பட்டாற் பிரிதலரிதாமாகையாற்றிறத்

தவத்தின் றுணையைக்கொண்ட காமவ்வலையுட்படாமல் வில கியொழுகல்வேண்டும் மணிவடத்தணிந்த பூமாலையின்முழு காநின்று மதுமலர்பூத்து விளங்கினபொன் மலையொத்த மார்பனே.

முற்படவுரைத்தவிஞ்சை மொழிகுதுந்தளிர்ப்பமீண்டே
விற்படவெதிர்த்துச்செய்போர் வினையிதுநோக்கல்வேண்டா
மற்படவெற்றிவேண்டின் மருள்படாதொடுங்கல்வேண்டுங்
கற்படவாவிசால்பு காணெனத்தெளிகவேலோய்.

உரை.— முன்சொன்னவுறுதியை மிளவுமிங்கேசொல்வேன்: பகைவரையெதிர்த்து வளைத்தவில்லாற் செய்யப்படும்போர்போலக் காமப்போரையெண்ணவேண்டாம், இப்போரிற்றிறங்கொண்டு வெற்றியைவேண்டுமாகின் மயங்காதபடி யெதிராதோடி யொடுக்கமேவேண்டும், கற்புக்கொல்வதற் கோராவியேபட்டாற் போதுங்காணென்று மனதிற்றெளியக்கடவா யென்றான்.

கச்சொன்றிட்டுணர்வோடுக்கங் கட்டிமெய்ச்சகட்டையோட்டி
நச்சொன்றிட்டேதச்சேற்றுண் ணல்லுயிரச்சிற்றுய்மற்
றச்சொன்றிட்டோர்தமேற்று தழும்பலர்கண்டீர்நல்லோர்
மெச்சொன்றிட்டச்சிறுமுன் வீடுறவூர்மின்பாகீர்.

உரை.— உடலெனும்வண்டியை நடத்தும்பாகரோ யொருகட்டாக ஞானமு மனவூக்கமு மேயொன்றுபூட்டி யுடலின் வண்டியையோட்டிவருகையி லதின்சரக்காக வாசையொன்றையேற்றிப் பாவமென்னுஞ்சேற்றி லமிழ்ந்தி நல்லுயிரொன்னு மச்சுமுறிந்தபின்பு வேறோரச்சாக வேறுயிரைக்கொண்டு நடக்கக்கூடாமையால் வீணாயென்றென்றைக்கு நரகிலழுதிருப்பர் பலரோகண்டீர். ஆகையானீங்கள் நல்லோர்வாழ்த்தின சரக்காகிய வறங்களைமாத்திர மேற்றிக்கொண் டுயிராகியவச்சுமுறியுமுன்னே சாவதானமாய்ப் பரமகதிவீட்டிற்குச் சேரும்படி நடப்பீராக.

பாவத்துக்குத் துன்பமே பரிகாரம்.

(33-ம். படலம். 7, 8, 9, 10.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

தீய்வருந்துகள்கள்வெஃகித் தீயவோவருந்தலாற்றோ
மாய்வரும்புலைதீதல்லால் வழுவுமொன்றுண்டோபாரின்
மீய்வருந்துன்பமின்பம் வீற்றுவீற்றாகக்கொள்ளா
ராய்வருந்திரியாத்தேவ வன்புணர்ந்தோரன்றோ.

உரை.— மனிதரென்னப்பட்ட நாமெல்லாருந் தீயபாவங்களைவிரும்பித் தேடினபின்பு வருந்திய வருத்தத்தைப் பொறுக்கலாற்றாதிருப்பவோ? ஒழிதற்கரியபாவமே தீதாமொழிய மற்றொருகேடிங்குண்டோ மீளவுமாண்டவன்றிருவுளமாக நமக்கு மேனின்றுவரும் பலதுன்பமின்பமு மொன்றென்று கைக்கொள்வாரொழியத் துன்பமிதுவின்பமதுவென்று வேற்றுமையாகக்கொள்ளாராராய்வதற் கரிய முறையாற் றிரிபொன்றின்றிநிற்குந் தேவநட்பின் றன்மையையுணர்ந்தவரொல்லோருமல்லவோ.

பொய்க்குமோரின்பமாந்திப் புலையெனுநஞ்சுட்கொண்டாற்
கைக்குமோர்மருந்துண்ணாதோ கடுத்தநோயொழியுங்கொல்லோ
தைக்குமோரம்பிற்பீடை தலைகெடமிகுங்கால்வான்மேன்
மொய்க்குமோரின்பமுள்ளி முற்றெலாமவியுநெஞ்சே.

உரை.— பொய்யின்பத்தையுண்டு பாவமாகியநஞ்சுட்கொண்டபின்னர் கசக்குமருந்தினையுண்ணாமலந்நஞ்சினால் வந்து கடுத்த நோயொழியுமோ மீளவுந் தைத்தவம்புபோல் வந்தவருத்த முயிரின் மாட்சி கெடும்படி மிகுந்தகாலத்துப் பொறுமையால் வானுலகின்மொய்த்துவரும் பேரின்பத்தையுணர்ந்துநினைக்கவே முழுதத்துன்பமெல்லா மவிந்தாறுமென்னெஞ்சே.

முக்குடைநிழலில்யாவு முற்றுமாளிறைவன்பாரிற்
புக்குடைப்புரைகடீர்த்துப் பொன்றவேயுதித்தபின்ன
ரிக்குடையின்பமல்லா லெமக்கிடர்தகாதென்பாரோ
மிக்குடைச்செல்வவல்லோன் விரும்பியநன்றிதன்றே.

உரை.— முக்குடைநிழலாகிய வளவிலாஞானத்தாலுந் திறந்தாலுந்தயையாலு மனைத்தையும் பொதுவறத்தனியே யாளாநிற்கு மிறைவன்றானே யிப்பூவுலகில் மகனாய்ப்பிறந்து நமக்குள தீவினைதீர்த்து வருந்தி யிறப்ப வந்தருளினபின்னரினிய தேனொழுகு மின்பமொழியத் துன்பநமக்குத்தகாதென்பாருண்டோ? மிக்கசெல்வனாகிய கடவுளிங்கே வந்து விரும்பித்தேடின நன்மையே துன்பந்தானல்லாதே வேறல்ல.

போர்முகத்தஞ்சாவீரப் புழைக்கையோபுணரிமோத
நீர்முகத்தசையாக்குன்றே நெடும்பிணிமுகத்தெஞ்சாதான்
கார்முகத்தலர்ந்தமுல்லைக் காவெனத்திரண்டபன்னோய்
சேர்முகத்தலர்ந்ததேவ திருவுளந்துதித்தல்விள்ளான்.

உரை.—ஆதலால் வெம்போர்முகத்தி லஞ்சாத வீரயானையைப்போலவோ, கடற்றிரைபொங்கிமோது முகத்திலசையாத வயிரமலையைப்போலவோ, நெடுநாள்வந்து நீங்காத பிணிமுகத்து நெஞ்சிற்றளராத பொறுமையுள்ளோனிடிக்கு மேகத்தின்முகத்தில் மலரு முல்லைக்காவு போலத் திரண்டுசேர்ந்த பலநோய்முகத்திற் றானுமனமலர்ந் திதுவே திருவுளமென் றதையோயாமற் றுதியா நிற்பான்.

துன்பநலம்.

—.*.—

(4-ம் படலம். 32.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பொன்னொளிகாட்டுஞ்செந்தீ புகையகில்மணத்தைக்கா ட்டும்
மின்னொளிமணியைக்காட்டும் வினைசெயும்படைக்கல்மாட்சி

தன்னொளிகாட்டுந் துன்பத் தகுதியிற்குன்றாவூக்கம்
மன்னொளிகாட்டுநல்லோய் மறையிடிவென்பார்சான்றோர்.

உரை.— நெருப்பினாற் செம்பொன் னொளிவுபெறு மே, வெந்துபுகைந்தா லகிலங்கட்டை வாசனை பெறுமே, சாணைக்கல்லினுரைத்தல்செய்தால் மணிக ளொளிபெறுமே, அந்தன்மையாற் றுன்பம்வந்தபோது குறையாததயிரியத் தா லறத்தின் மாட்சிமை தோன்றுமே, நிலைபெற்றவொளி யைவீசு மழகுடையோ யிது வேத விதியாக வெண்ணு வாயென்பாரறிஞர்.

பாவமொன்றே தீது.

(27-ம். படலம். 63.)

காய், காய், மா, தேமா.

அறமொன்றேபயனல்லோ யஞர்தீதல்ல
மறமொன்றேவினைகாணாய் வழங்குமன்பின்
றிறமொன்றேநயம்பீடை சேர்த்தியீவான்
புறமொன்றேயொவாக்கருணைப் பொலிந்தநாதன்.

உரை.— நற்குணமுள்ளவனே யிவ்வுலகி னல்லறமொ ன்றே நன்மையாம், துன்பமும் பொல்லாங்கல்ல, பாவமொ ன்றே கொடியவினையாம், புறத்தொப்பில்லாத கருணையின் மிக்கோ னுண்டவனேயன்பின் றிறத்தா னமக்கின்பத்தை யுந் துன்பத்தையுஞ் சேர்த்துத் தருவான்.

தின்மை செய்பவனுக்கே தீதாம்.

(29-ம். படலம். 99, 100, 101, 102, 103, 106, 107.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

உயிரொன்றேயுடை யீரெனவுயிருணுங்கூற்றுஞ்
செயிரொன்றேமுழு தொருவுமின்வித்தியசெயிரோ
டயரொன்றேவினைத் தடுமெனச்சூழ்ந்துளிதுகடன்
பெயரொன்றேபெற லஞ்சுவர்பெருந்தகைகீரார்.

உரை.— உங்களுக்குயிரொன்று மாத்திர முண்டென் றறிந் தவ்வுயிரைக்கொல்லுங் கூற்றனுகிய பாவமொன்றினைப் பகைத்துவிடுவீராக, விதைத்தபாவமே தீராததுன்பம்விளை வித் துயிரைக்கொல்லுமென் றுணர்ந்தமையாற் பெருமையு டையோர் பாவத்தின் பெயரையும் பெறுதற்கஞ்சுவார்.

அண்டமீவரை நெற்றியிற்பனியிலையறமே
மண்டவாழ்பவர் மருளவோர்கேடிலையன்று
ருண்ட.நஞ்சுமவ் வுயிர்க்கமுதாகிமற்றமிர்தங்
கொண்டதீயவர்க் கஃதுயிர்கொலுவிடமாமால்.

உரை.— மேகமண்டலங் கடந்துயர்ந்த மலையினுச்சி மேற்பனியில்லை, அத்தன்மைத் தறத்தாலுயர்ந்துவாழ்பவர்க் கொருகேடில்லை, அவர்நஞ்சுண்டாலுந் தமக்கமுதாம் தீயோ ருக்கோவெனி லமுதுங்கொல்லு நஞ்சாம்.

பொன்றும்யாவுமே புரைசெயும்பகையொன்றேபொன்றுச்
சென்றுசென்றடி சென்றதன்னிழலெனநீங்கா
தின்றுதீமையை யிவன்பிறர்க்கெண்ணியதன்மைத்
தன்றுதீமையே யவன்றனக்கமைவதுகாண்பான்.

உரை.— பூவுலகுள்ளயாவு மிறந்துபடுவன, பாவத்தால் வரும் பகைமாத்திரமொழியாது தன்னிழல் தன்னடியை விடாததுபோல வென்றுந்தன்னைநீங்கா வின்று ,தான் பிற ர்க்குத்தீமையை நினைத்தா னுளைத் தனக்குத் தீமை வருவ தைக் காண்பான்.

தீயகாஞ்சிர நட்டபின்றீங்கனிகொயவோ
தீயவித்தினர் தீயவைவிளைவதுகாண்பார்
தீயசெய்தனர் தீயவரொன்பவர்மருளாத்
தீயபட்டனர் தேவரொத்தாரெனப்படுவார்.

உரை.— எட்டிமரத்தை வளர்த்ததிலே யினியகனிகளை யறுத்துண்பாருண்டோ? தீமையைவிதைத்தயாவருந் தீமையே தமக்கு விளைவதுகாண்பார். மீளவுந் தீயவைபிறர்க்குச் செய்தவர் தீயோரென்னப்படுவரொழிய மனதிற்றளராமற் றீயவைப்பட்டவர் தேவரோடொத்தா ரென்னப் படுவார்.

அடுஞ்செந்தீயினு மட்டகின்மணமினிதன்றே
சுடுஞ்செந்தீயினுஞ் சுட்டொளிர்நிதியினிதன்றே
கொடுஞ்செந்தீயெனக் கொதித்தின்னுவாக்கலினினிதாம்
படுஞ்செந்தீயெனப் பாசறைபடுவதேயென்போம்.

உரை.— அகிலங்கட்டையைக்கொல்லுந் தீயினுங்கொல்லப்பட்ட வகிலின் மணமினிதல்லோ? பொன்னைச்சுட்ட தீயினுஞ் சுடப்படும் பொன்னொளி யினிதல்லோ? ஆகையாற் றீயோடொத்த சினத்துடன் பிறர்க்குத் துயரை வருத்தலினுந் தீயோடொத்த துயரைப்படுவதே யினிதாம்.

நிலத்தின்றன்மையா னீர்திரிந்தனையபற்றுளந்தன்
புலத்தின்றன்மையாற் புறத்தவைதோன்றலாலன்பி
னலத்தின்றன்மையாற் றீயவுநல்லவாம்பகைகொள்
சலத்தின்றன்மையா னல்லவுந்தீயவாஞ்சகத்தே.

உரை.— பெய்தநீர் சேர்ந்த நிலத்தின்றன்மையாற் றிரிந்ததுபோல மனமுங் கொண்டபற்றுதலின் றன்மையாற் புறத்துக் கண்டயாவுந் தனக்குத் தோன்று மென்றமையாலொருவன்மேலன்புண்டாகி லவன்செய்த தீயவு நல்லவாகத்தோன்றும் பகையுண்டாகி லவன்செய்த நல்லவுந்தீயவாகத்தோன்றும், பூவுலகெங்கும்.

கட்புறத்தெழில் காட்டியகாஞ்சிரமினிதோ
முட்புறத்திலுண் முதிர்சுவைச்சுளைப்பலாவினிதோ

விட்புறத்தெரி மின்னொளிவிரும்பிலனுகி
யுட்புறத்துநல் லவையுமல்லவையுமென்றுணர்வாய்.

உரை. — புறத்தழகுகாட்டிய காஞ்சிரங்கனியினிதோ? புறத்து முள்ளுளதா யுள்ளே யினிய சுளையுள பலாக்கனியி தோ? ஆகையால் மேகத்தில் விளங்கியொழியு மின்னலை விரும்பாம லெப்பொருளினு முட்கொண்டதன்மையை யா ராய்ந்து நல்லது மாகாததுமென் றறியக்கடவாய்.

தின்மைக்கு நன்மை செய்தலே மாட்சி.

(10-ம். படலம். 89.)

விளம், விளம், மா, கூவிளம்.

அருப்பயனஞ்சினை யாக்கும்பாம்பெனு
விருப்பவர்நயன்செயப் பகைக்குமேலலார்
நெருப்படத்துமிப்பனை நிழற்றுங்காவெனுப்
பெருப்பகைசெய்வனைப் பேணுமாட்சியார்.

உரை. — இனியபாலையு நஞ்சாக்கும் பாம்புபோல வன் புடையோர் நன்மையைச்செய்ய வவனை நீசர் பகைப்பரோ, நெருப்பிற்சுடத் தன்னைவெட்டினவர்க்கும் நிழல் செய்யுஞ் சோலைபோலப் பெரும்பகை செய்தவனையு மாட்சிமையுடை யோர்பேணுவாரென்க.

தர்மத்துக்குரிய முறை.

(27-ம். படலம். 29. முதல்- அச்சந்தமுழுதும்.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

பொய்த்தபல்வழிக் கானிடைப்போதல்போன்
மொய்த்தநீருல கின்முரியாதறம்

வைத்தநல்வழிவாய்ப்பரிதாய்க்கொடை
யுய்த்தான்முறை முற்படவோதுவாம்.

உரை. — பல பொய்வழியுள்ளகாட்டில் வழிதப்பாமற் போவதரிதென்றது போலக் கடல்சூழ்ந்தபூவுலகிற்றப்பாத வறத்தின்வழி வாய்ப்ப தரிதே, ஆகையாற் கொடையால்வரும் பயனைச் சொல்லு முன்னே தவறாதபடி கொடைதானஞ் செய்வதற்குரிய முறைகளைச் சொல்லிக்காட்டுவோம்.

வெருடருங்குரல் வெஞ்சினவேறுமிழ்
திருடரும்புயல் பெய்தலிலேற்றுவார்
மருடரும்புகர் மல்கினுமாறிலாப்
பொருடருங்கையைப் போற்றுவர்யாருமே.

உரை.— எவருமஞ்சும்படி மேகங்கள் கொடிதாய்முழங்கி யுயிரைக்கொல்லுங் கொடிய விடிகளைக் கொப்புளித்திருளைக்கொண்டதாயினும் பெய்ததினாலவற்றை யெவருந்துதிப்பார், அத்தன்மைத்தொருவன் மயங்கிய மனதிற் பாவங்களைக்கொண்டானாயினு மெவர்க்கு மாறாமற் கொடுப்போனாகிலவனையெல்லாரும் புகழ்வாரென்க.

நஞ்சுநல்லமு தென்றதைநக்கினு
மெஞ்சுநஞ்சமுதாங் கொலியாவரு
மஞ்சுநேர்கொடை வாழ்த்தலிற்றன்புரா
விஞ்சுவெவ்வினை யிற்றறவீயுமோ.

உரை.— பாவிகள் நிறையக்கொடுத்ததினா லங்ஙனமெவரும்புகழ்ந்தாலு மாவதுண்டோ? நஞ்சினை யமிர்தமென்று நக்கினாலுந் தன்குணம்போ யந்நஞ்சு நல்லமுதாமோ வில்லையே, அத்தன்மைத்துப் பொழியு மேகத்தொத்த கொடையினா லெல்லாராலும் புகழப்பட்ட பாவி யதனான்மிக்க தன்றீவினையொழிந்து நல்லவனாவானோ வில்லை. (ஆகையால் அப்புகழ் பயனிலதென்பதாயிற்று.)

விஞ்சுமீகையில் வீண்புகழ்கோடலே
யெஞ்சுவாணிகர் புற்றொழிலென்றலா

னெஞ்சுமாசுற மேற்புகழ்நீவுதற்
கஞ்சுவார்கொடை யாற்பயன்வேண்டுவார்.

உரை.— மீளவுந் தன்கைப்பொருளைத் திரளாய்க்கொடுத்துப் பயனிலாபுகழைக்கொள்வதே யறிவில்லாத செட்டிகள்செய்யும் புற்றொழிலாமே, அதுவுமன்றி மேற்பூசின வப்புகழினாற் றன்னெஞ்சிலுள்ள மாசுகள் தனக்குத்தோன்றாது மிகும்படிக் கப்புகழுதவுமென்றதனாற் கொடையினாற்பயனை யடையவாசையுள்ளோர் பிறர்புகழுக்கஞ்சுவார். (ஆகையாலப்புகழ் கேடுளதென்றதாயிற்று.)

கொடைவரும்பயன் கொண்டுகவர்ந்திடு
மிடைவரும்புக ழென்றுயர்நீர்மையா
ருடைவரும்பொருள் கள்வர்க்கொளித்தென
மிடைவருங்கொடை வேய்ந்திலவீவரோ.

உரை.— அங்ஙனங் கொடையினால்வரு மெய்யானபயனைத்தான்கைக்கொண்டு திருடுங் கள்ளனாற்சூழ்ந்துநின்றவர் சொல்லும் புகழென்றுணர்ந்து மேன்மையிற் பொலிந்தோருடைய திரவியங்களைக் கள்ளர்க் கொளித்தாற்போலச் செய்யும் மிக்க கொடைபுறத்துத் தோன்றாதொளித்தேயீவார்.

வீழ்ந்தவர்க்குத வியிலமேன்மையில்
வாழ்ந்தவர்க்கிடு வார்வயல்பாய்கிலா
வாழ்ந்தநீர்க்கட லண்டி நலங்கெடத்
தாழ்ந்தநீர்ப்புனற் றன்மையினாயினார்.

உரை.— மீளவுந் தந்நிலையினின் றழிந்துவிழுந்த வறியோர்க் குதவியொன்றினையுஞ் செய்யாமல் மேன்மையிற் பொலிந்தவர்க்குமாத்திர மிடுபவரானொனில், தாழ்ந்த நிலையிலோடியதனால் வயலிற்பாயாமற் றன்னீர்நலமே கெடும்படி முழுவதுங்கடலிற்பாயும் நதியைப்போலத்தாழ்ந்த வுணர்வினோரவரோயென்க. (இங்ஙனே, வறியார்க்கொன்றீவதே யீகை.)

வளர்ந்தபூங்கதிர் மாழ்கியநெற்குயி
ருளர்ந்தவான்புய லூட்டியநீரொனத்

தளர்ந்தவாழ்க்கையைத் தாங்கியில்லோர்க்கிடுங்
கிளர்ந்தவான்கொடை கேழ்த்தெழுமீகையே.

உரை.— நற்கொடையாதோவென்னில், வளர்ந்து கதி ரைவிட்டுப்பூத்து நீரின்றி வாடாநிற்குஞ் செந்நெற்குயிராக வான்மேகம்பெய்தூட்டிய மழைநீர்போலத் தளர்ந்த வறிய ருயிர்வாழும்படி யவனைத்தாங்கி யவர்க்கிடு நிறைந்த கொடையே மாட்சியிற் சிறந்த கொடையாம்.

ஒருகைம்மாறுண ராக்கொடைவான்மிசை
வருகைம்மாறுமுன் வையகத்தாண்டகை
தருகைம்மாறியல் சாற்றிடக்கேண்மினி
ரிருகைம்மாறில வேழ்கொடைபோற்றியே.

உரை.— அங்ஙன நற்கொடைக்குரிய முறைகளைச் சொன்னபின்பு மனிதராற் கைம்மாறுவருமென் றொரு குறிப் பின்றிச் செய்த தானம் வான்வீட்டிற் பெரும்பயன டையு முன்னிப்பூவுலகினு மாண்டவனதற்குத்தந்த பயனை நாஞ்சொல்ல நீங்களிருகைம்மாறுக் கொடையைச்செய்யம னதிற்பேணிக்கேட்பீராக.

தர்மத்தி னலம்.

(4-ம். படலம், 49, 50.)

தேமா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

புன்மைப்பட்டார்கொண்டவைவெஃகிப் பொருள்கொண்ட
தன்மைப்பட்டார்யாவையுமுண்ணூர் தரல்செய்யா
ரின்மைப்பட்டான்தர்மனுழைத்தே யினிதுண்பா
னன்மைப்பட்டார்க்கேற்குனருய்வா னனியீவான்.

உரை.— நீசர் தாங்கொண்ட பொருளின்மே லாசை வைத்துப் பொருள்கொண்டதன்மையி னதைத் தாமுமுண்

னார், பிறர்க்குமீயார், வெறுமையுள்ள தர்மிஷ்டனேவென் றூற் றூனுழைத்துண்பதுமன்றித் தந்த நன்மையினானிறைந் திரப்போரி னிதா யுண்டு வாழவுங் கொடுப்பான்.

வேய்ந்தார்ந்தொன்றும் வான்பொருள்விஞ்ச விழைவோடொன்
றீய்ந்தாலொன்றேகோடிபயக்கு மெனிலன்பால்
வாய்ந்தானென்றுந்தன்வறுமைக்கே மலிவீக
லாய்ந்தாலொன்றும் வான்புகழ்கூற லரிதன்றோ.

உரை.— மலியவடைந்த பொருளில்மிஞ்சினதை யாசையோ டிரப்போர்க்களித்தா லொன்று கோடியாகுமென்றால் அன்பின்பெருமையுடையோன் தான்வறுமைகொண்டிருக்கவு நிறையக்கொடுக்குந் தன்மை யாராய்ந்து பார்த்தா லதற்குரிய துதிகளை யுரைப்பதரிது.

தாழ்ச்சியி னொழுக்கம்.

(9-ம். படலம். 17, 18, 19, 20.)

மா, மா, மா, மா, மா, மா.

வீழ்வாரியினூற்குழிநீர்வீயா துறைநின்றென்னுச்
சூழ்வாரில்லாற்றுடர்நீதறியா தாள்வாரல்லால்
வாழ்வாரில்லையென்பார்மாணு மண்ணோர்மனத்திற்
றாழ்வாருயர்வாரொனநற்றக்கார் தண்மைவிழைவார்.

உரை.— வெள்ளமோடலிற் றண்ணீரொல்லாம் பள்ளத்தினின்றிருக்குமென் றுணர்வாரில்லாமலுஞ் செல்வத்தினால் வருந்தின்மை யுணராமலும் நீசமனிதராள்பவரையன்றி வாழ்வாரில்லையென்பாரோ, மனத்தாழ்ச்சி யுடையோருயரப் படுவாரொன்று மெய்யான பெருமை கொண்ட நல்லோர் தணிமையே விரும்புவார்.

காயாமரமேயல்லாற்காய்த்த கிளைகள்நிமிரவா
நீயார்செல்வத்தல்லாற்றெருளோர் செருக்கெய்துவரோ
பாயாநெகிழ்பணியாதனவில் பணித்தசரமே
வியாதுயரும்வளிநேர்வெருளா வளையுந்தருவே.

உரை.— காயாதமரத்தின்கொம்பு, நிமிருமல்லாதே காய்த்த கொம்புகள் நிமிராததுபோலச் செல்வங் கொண்ட நீசரல்லாதே தெளிந்தநூலோ ராங்காரங் கொள்வாரோ? வளையாதவில்லுதொடுத்த வம்புநெகிழ்ந்து குறியிற்படாது, காற்றுமுன்னெதிராமல் வளையுமரமுங் கெடாமலுயரும்.

சாலோர்பொருளானிறைபொற்கலமே தருமோர்தொனியோ
நூலோரியக்கம்பேசார்நண்மா னுழைகின்றறங்கொள்
மேலோருகப்பேமேவார்மேவார் தொடர்தன்னிழலைப்
போலோரிடத்துந்தேடாப்பொழுதே தொடரும்புகழே.

உரை.— யாதொருபொருளைக்கொண்டு நிறைந்த பொற்கலஞ் சப்திக்குமோ? அத்தன்மை நூலோர்பெருமை சிலாக்கியம் பேசா ரரியமாட்சிமை செய்த வறங்களைக்கொண்ட பெரியோருயர்ச்சிவிரும்பார்; தன்னிழற்கு முதுகுகாட்டிப் போனவனை யந்நிழல்தொடரும்போல வோரோரிடத்தும் புகழைத்தேடாதவனைப் புகழேதொடரும்.

ஈதேமறைநூலென்னுவறைதற் கிறையோன்வந்தப்
போதேயெளிமைபுணரக்கண்டத் தணிவிற்பொலிவோர்
கோதேகொணராள்வினையைக்குனியாக் குனிதாழ்வினையே
ஈதேயெனவந்நெறிநின்றெழுகற் கிசலாநிற்பார்.

உரை.— இது வேதமாக விதித்ததற்குக் கடவுளவதரித்துவந்ததினு லவனுமெளிமைகொண்டானென்று கண்டதினுற் றாழ்ச்சியினு லுயர்ந்த பெருமையுடைய புண்ணியவாளர் குற்றங்கொண்டுவிடு மாள்வினைகருதாமற் றாழ்வினைதானேயென்று தாழ்ச்சியோடொழுகத் தம்முள் ளிசலிக்கொண்டிருப்பார்.

யாவர்க்கு முத்தம மாதிரிகையாக அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் விளங்கின சுகிர்த வொழுக்கம்.

(6-ம். படலம். 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 72.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

துறவினுலுடல் துறந்தனவுயிரெனத்தோன்றி
நறவினுனைா நறுந்துணர்வின்ளலர்போலில்
லறவினுவுட னனைவருமோம்பியவன்பின்
னுறவினுலக குயிரெலாமுடலெனக்கொண்டார்.

உரை.— இவர்கொண்ட துறவினு லுடலில்லாத வுயிர் போலத் தோன்றி மதுப்பொழிந்த வாசவிதழ் மலர்ந்த பூப் போல வில்லறத்தின் வினுவினு லெல்லாரையும் பேணின வன்பி னுறவினு லுலகிலுள்ள வுயிரெல்லாந் தமக்குடலாகக் கொண்டார்.

தாழுபான்மையோ தகவுடைபான்மையோவென்னுச்
சூழும்யாரையுஞ் சூழ்ந்தசூழ்வருநயஞ்செய்வார்
கீழுமேலுமென்றுணர்கிலா துறுப்பெலாங்கிளர்ப்ப
வாழுமேயுயிர் மலிந்துடலுலவியபோன்றே.

உரை.— இவர் தாழ்ந்தவரொன்று மவர்மேலோரொன்றும் பாராமற் சூழ்ந்தயாவரையும்விசாரித்து நினைப்பதற்கரிய நன்மைசெய்வார். கீழுறுப்பென்று மேலுறுப்பென்றும் பாராம லுறுப்பெல்லா நிறையவாழு முயிருடலிடத் துலாவின தன்மை.

துய்யந்தாயுரித் துடர்பினர்சுடப்புகன்றவர்க்கும்
மய்யந்தாவிய மனத்தெழுமன்பினன்றியற்றல்
நொய்யந்தாதுகள் நோகவுட்குடைந்திமிரளிக்குஞ்
செய்யந்தாமரை தினைப்பகல் விருந்திடும்போன்றே.

உரை.— நற்றுயொத்த வன்புடையார் தம்மைச்சுடச் சொல்லுவார்க்கும் நீதியுள்ளமனத்தி லெழுந்தவன்பினுன ன்மைசெய்வார், நொய்யிதழ்களைநோகத் தன்னைக் குடைந்த வண்டுகளுக்குச் செந்தாமரையொழுகுந்தேனல் நல்விருந்து செய்வதுபோல.

வாய்ந்தமாண்பினர் வருந்தலுஞ்செய்குவர்க்குள்ளந்
தோய்ந்தவார்வுறத் துறுவியநலநிறையளித்தல்
காய்ந்தவாலையின் கரும்பினைமுறுக்குதற்களவி
லீய்ந்தபாகினி திரிந்தெலாநிறைந்தனபோன்றே.

உரை.— உயர்ந்த பெருமையோர் தமக்கு வருத்தஞ் செய்வோர்க்குத் தாங்கொண்டவன்பினுல் நிறைந்த நன்மை கொடுப்பார். வெகுமாலையிடத்திற் கரும்பினைமுறுக்கின வளவாகத் தந்தபா கோடியிடமெல்லாநிறைந்ததுபோல.

வருந்திஞர்முகத் தெழுதியவருத்தமேகண்டால்
விருந்திஞர்முகத் தழைத்தவர்க்கூட்டியமிடைதேன்
திருந்திஞர்முகத் துரைத்தசொல்லினமதுச்செவியா
லருந்திஞர்முகத் தெழுநயக்கடலிஞழ்ந்தகல்வார்.

உரை.— வருந்திஞர்முகத்தி லெழுதப்பட்ட துன்பங்களைக்கண்ட விவர் விருந்திஞர் முகத்தோ டவரையினிதாயழைத்துத் தேனையவர்கூட்டிஞற்போ லுரைத்தசொல்லின்பத்தைச் செவியாலுண்டயாவரு முகத்திற்கிளம்புமின்பபக்கடலின் முழுகியகலுவார்.

கூர்ந்தநன்மையைக் கூறியபயனிஞலெவருஞ்
சேர்ந்ததன்மையிற் செயிரறவோங்கிவேருவா
ரார்ந்தபொன்வரை யடுத்துறைகாகமுங்கருமை
பேர்ந்தபொன்வரை பேரொழில்பிளிர்ந்தனபோன்றே.

உரை.— இவர் நன்மையாய் நன்னூல்களைச்சொன்ன பயனிஞ லெல்லாரும் வந்த தன்மை மாற்றிக் குற்றங்களைத் தீர்ந்தோங்கிவேருவார், பொன்மலையிலிருக்குங் காக்கையுங் கருமைவிட்டுப் பொன்னிறமா யொளிர்ந்தது போல.

போயதாதைய ரீட்டியபொருளெலாம்பொறையென்
ருயவாயின வனைத்தையுமாலயத்தொருபால்
நேயமாருயிர் நேரியவிரவலர்க்கொருபால்
தூயவாரியர் விளைத்தருந்துடர்பொடுதொகுத்தார்.

உரை.— போனதந்தைமார் குவித்து வைத்த பொரு ளெல்லாம் பாரமென் ருராய்ந் துள்ளதெல்லாம் பகுந்துதே வாலயத்திற் கொருபங்கு மன்புள்ளவுயிராகப்பேணின விர ப்போர்க் கொருபங்குந் தூயமாட்சியுடையோர் தாமத மின்றி யரிய வன்பினுற் றொகுத்தார்.

துன்புதுன்றிய பொருளெனவனைத்தையுந்தொகுத்த
பின்புதுன்றிய பேரரிதன்புளந்தூண்டி
யென்புதந்தினு மினிதெனவீகவுமுழைத்தே
யன்புதந்துண வளித்துணவாமமழைபோன்ருர்.

உரை.— துன்பஞ்செய்யும் பொருளென்றெல்லாத்தை யுங் கொடுத்தபின்பு தாங் கொண்டவன்பு தம்முள்ளத்தை த்தூண்டி யதினு லெலும்புந்தந்தா லினிதென்றதுபோலப் பிறர்க்களிப்பத் தாமுழைத்துப் பூவுலகிலுள்ள வுயிர்கெல்லா முணவாக்கியபின் ருனுமுணவாகு மழைபோலிருந்தார்.

சிறுமையார்துயர் சிதைத்திரந்தாயினுமளித்த
வறுமையார்பலர் வறுமைதீர்திருவினராகி
யுறுமையார்முகி லுறையிரந்துயிர்க்கெலாமுகுத்த
நறுமையார்ஙளிர் நறுமலர்வாவியேபோன்ருர்.

உரை.— சிறுமையுடையோர் கொண்ட துன்பங்களைத் தீர்த்துத் தாமிரந்தும் பிறர்க்குக்கொடுத்து வந்த வறுமை யோர் பலர்வறுமைதீர்த்த செல்வமுடையோராகி யிருண் டமேகத்துளிகளை யிரந்தபின்ன ருயிர்க்கெல்லாங் கொடுக் கும் வாசமலர்நிறைந்த குளம்போ லிருந்தார்.

தாயொத்தார்வொடு தரித்திரர்க்கனைத்துமேயாகித்
தீயொத்தாகுலந் தீர்த்துளங்குளிரவண்முகிலாய்ப்
பேயொத்தாலதைப் பெயர்க்கணியொத்தனர்பெயரா
நோயொத்தாயகா லுகர்ந்துயிர்தருமருந்தொத்தார்.

உரை.— தாய்போலவன்புகொண்டு தரித்திரர்க்குத்தா மெல்லாமாகித் தீப்போலவந்த துன்பங்களைநீக்கிப் பிறருள் ளங் குளிர்பட வகன்ற மேகமுமாகி யுயிர்களைக்கெடுக்கப் பே யண்டினு லதை வென்றகற்றப் பேரணிபோலிருந்து தீராத நோ யொருவனடைந்தபோ துயிர் தரு மருந்து போலிருந் தார்.

பொய்யெனப்படர் புழைப்படக்குடைந்தபுண்ணுடலை
மெய்யெனத்தயை வேர்விடுநெஞ்சினர்நோக்கி
மையெனத்தமுள் ளிரங்கியதன்மையோடப்புண்
ணெய்யெனக்கதி ருதித்திருளெனமறைந்ததுவே.

உரை.— பொய்போலப்படர்ந்து குடைந்த புண்ணு டையவுடலை மெய்போல வேரிட்டழுந்திய வன்புடைய நெ ஞ்சினர் கண்டு விரைந்து தம்முள்ளிரங்கிய தன்மையால் யப்புன் சூரியனுதிப்ப விருள்மறைந்ததுபோல மறைந்தது.

காவியுண்டருட் கண்ணினர்முகமனேக்கலினுங்
காவியுண்டசா வலதக்கடி துமிழ்ந்ததேயமல
னேவியுந்தவிர்த் தேகியவியோனசென்றவனைத்
தாவியுண்டபின் றந்தன திமிங்கிலம்போன்றே.

உரை.— மீளவுந் தயையுள்ள கருங்குவளைக் கண்ணு டையார் பிரியமாய்ப்பார்த்ததினு லங்குயிரையுண்ட சாவுட னே யதனைக்கக்கிச் செத்தவனுயிரோடெழுந்திருந்தானுண் டவ னேவிக்கொண்டிருந்தானு மதைமீறிப்போன வியோ னசென்றவனைப்பாய்ந்துண்ட திமிங்கிலமீ னவனையுமிழ்ந்த துபோல.

ஓதமுற்றரு ளுரையினுலெவருமுட்காமக்
கோதமுற்றழல் குளிரக்குவர்காம்பிடித்துத்
தீதமுற்றழல் கிளைத்தபோதிலோத்தெனுமவனைச்
சோதமத்தினின் றமரோதரத்தினர்போன்றே.

உரை.— இவர் சொல்லுமினியவுரைகளினு லெவரு முட்காமங்கொளுத்தின வழலையவித் துட்குளிர்படவே பா வத்தாற் பற்றிய வழலெரியும் போது கைப்பற்றியிழுத்து

லோத்தென்றவனைச் சோதும நகரினின் றப்பால் வானவர் தூரத்தினதுபோலும்.

ஆலமுற்றிய வசல்புவிநயன்படவருளின்
கோலமுற்றிய குணத்திவர்கெழுவியகருணை
நீலமுற்றிய நெடும்வரையெங்கணுங்குளிரச்
சீலமுற்றிய சினைமுகில்பொழிந்தனபோன்றே.

உரை.— நஞ்சுகொண்ட பூமியெல்லா நன்மைப்படத் தயையின் வடிவுள்ள குணத்தையுடையோர் நிறைந்துசெய்த கருணையே கரியநீண்டமலையெல்லாங்குளிரச் சீலமேசூலாக்கொண்டமேகந் துளிபொழிந்தது போலும்.

அர்ச். தேவமாதாவுக்கும் அர்ச். சூசையப்பருக்குமுண்டான சுகிர்த சல்லாபம்.

(6-ம். படலம். 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56.)

மா, மா, காய், மா, மா, காய்.

பொருள்கொண்டெவையுமாக்கினனப் பொருளிற்குன்றாப்புகுந்துளனுய்
மருள்கொண்டவைகொள்மாறுமிலா வயிரக்குன்றினிலைகொண்டோ
னருள்கொண்டவர்க்கல்லாலுண்டோ வாவல்கொண்டவுயிர்க்குநிலை
சுருள்கொண்டலைநீர்சூழ்ந்தபுவி சூழ்ந்தாலென்றான்பூந்துசத்தான்.

உரை.— பொருள்கள் யாவையுஞ் செய்து தான்குறையாமற் பொருள்களினுட்புகுந் துளனுகி யவைமயங்கிமாறிய போதுகூடமாறுமல் வயிரமலையினு நிலைகொண்டபராபரன் செய்யுந் தயையடைந்தவர்க்கல்லாதே யாசைகொண்டவுயிர்க்கு நிலையுண்டோ கடல்சூழ்ந்த பூமியெல்லாம் பார்த்தாலுமென்றான் பூங்கொடியோன் சூசை.

தேர்மேற்றியங்கும்பதாகையதோ சிகரிசிந்துஞ்தந்தலையோ
நீர்மேற்படருஞ்சைவலமோ நீர்மேலாடுகுமிளிகளோ [ரே
தார்மேற்பனியோ நுண்மணன்மேற் றடத்திலெவரைந்தவுணர்வென்
பார்மேற்கடவுணிலையில்லாப் பான்மையென்ருள்மீன்முடியாள்.

உரை.— தேரின்மேலாடிய பெருங்கொடியோ, மலையி னிழிந்த வருவியி வலைகளோ, நீரின்மேற்படர்ந்த பாசியோ, நீரின்மேலாடியகுமிளிகளோ, பூமாலைமேல்விழுந்த பனித்து ளியோ, வழியிடத்தில் நுண்மணலின்மேலெழுதிய நினை வோ விவையெல்லாமொக்கு மிவ்வுலகிற் கடவுளினிலைய டையாதவயொன்ருள் மீன்முடியாள் மரியென்பவள்.

நிலைகொண்டேனுமந்நிலையால் நிலைக்கும்பயனென்றுயிர்க்குண்
டோ [கொண்
வலைகொண்டவியாமொய்க்கடல்போன் றயர்ந்துமயங்குமனநிலை
டுலைகொண்டெரித்தாற்போலநசை யுய்க்குந்துயரற்றுள்குளிரக்
கலைகொண்டவருமீங்கேதோ கண்டாரென்றுன்பொறிசெறித்தான்.

உரை.— அவையெல்லாநிலைகொண்டாலு மத்தாலுயி ர்க்கு நிலைக்கும்பயனுண்டோ வெப்பொழுது மொய் கொ ண்டலையுங்கடற்போ லசைந்துமயங்குமனமே நிலை கொ ண்டு தீயுலையிலெரித்தாலென்ன வாசைவருத்துவிக்குந் துன் பநீக்கி யுள்ளங்குளிரவே கற்ருேரு மிங்கேயொரு நன்மை யாகிலுங் கண்டாரோவென்றுன் பொறிகளையடக்கின தவ த்தோன்.

கனவிற்பிடித்ததனமென்றே கனநின்றெல்கிப்பாய்ந்தமின்னே
சினவித்தினைதிமுன்வையோ தினைப்பவுவரிற்பெய்யுறைையோ
நினைவிற்கூமனுணர்துதோ நிசிநாடகர்கொள்கோலமதோ
வெனவித்திசைகொள்வாழ்வனைத்து மென்ருள்பிறைதேய்த்தொளி
[ர்பதத்தாள்.

உரை.— கனுவிற்கைக்கொண்ட திரவியமோ, மேகத் தினின்றசைந்துபாய்ந்த மின்னே, சினந்ததீ முன்வைத்த வைக்கோலோ, நிறையக்கடலிடத்திற் பெய்தமழையோ வூமைநினைத்ததுதோ, இராவில் நாடகரொடுத்தவேடமோ, விவையெல்லாமொக்கு மிவ்வுலகின் வாழ்வெல்லா மென்

ருள் பிறையைத்தேய்த் தொளிகொண்ட பாதத்தையுடையாள்.

நிந்தைபொருளும்வாழ்வடைமுன் வினைவைத்தூண்டுமாசைசுடுஞ்
சிந்தைபொருளுமென்றடைந்தாற் சிந்தைவருத்தவெறுப்பெய்து
மெந்தைபொருளுந்தாய்வினையா லிரங்கிப்புரிந்தவருளொன்றே
நந்தைபொருளுநசைநிறைய நயக்குமென்றான்மறைவடிவான்.

உரை.— நிந்தைகொண்ட விவ்வாழ்வடையு முன்னர் வினைவினைத்தூண்டிய வாசையே சுடும், நெஞ்சுநிறைந்துவாழுமென் றதையடைந்தால் நெஞ்சுவருந்தவதின்மேல் வெறுப்பாகுமே யென்பிதாவிரங்கி யொருநற்றாய்போலச் செய்யுந் தயையொன்றே பூரணமா யாசைநிரப்பி யின்பங் கொடுக்குமென்றான் வேதவடிவுடையான்.

கனியோகழையோகழைகான்ற கனிந்தபாகோகோற்றேனோ
நனியோகையினுற்கூட்டியதோர் நறவோவுயிர்செய்மருந்தோவான்
றனிலோவழங்குமமுதென்றாற் றகுமோவெந்தையருட்கிவையே
யினியோருவமையீங்குண்டோ வென்றாள்வழுவாமறைமொழியாள்.

உரை.— கனியோ, கரும்போ, கரும்பினிழிந்தபாகோ, நற்றேனோ, பிரியமாய்க்கூட்டிய வின்பமோ, உயிர்தருமருந்தோ, வானத்தில் வழங்கிய வமிர்தமோ விவையெல்லாங் கூடி யென்பிதாசெய் தயைக்கொவ்வாம லிங்கேவேறுவமையதற்குண்டோ வென்றாள் வழுவா வேதமொழியுடையாள்.

தேவவருளல்லாலிங்கண் டேடற்குரிதோர்பயனுண்டோ
மேவநயஞ்செய்மற்றெவையும் விரும்புகின்றநசைதானே
யோவவினைசெய்ததினூங்கு மொன்றுருண்டோவுயிர்க்கெல்லாம்
பாவமலிதற்கென்றுரைத்தான் பகைப்பேய்நடுக்கும்பரிசன்னான்.

உரை.— தேவதயையல்லா திங்கே தேடற்குரிய தொன்றுண்டோ? நயங்காட்டிய மற்றதெல்லாம் விரும்பியவாசைதானே துன்பஞ்செய்து பாவமாக வுதவினதினு லதின் மேலுயிர்க்குப் பகையுண்டோவென்றான் பகைத்த பசாசு நடுங்கச்செய்யு நற்குணத்தோன்.

நக்கிக்கொல்லுநச்சரவோ நயஞ்செய்துயிருண்கொடுங்கோலோ
பக்கிக்கிட்டதோரிரையோ பயனுட்கலந்தநஞ்சதுவோ
புக்கிற்றெருக்கயாவுமறப் பொறித்தீயொளியென்றெரிப்பதுவோ
விக்கிச்சிக்குநசையென்று ளெரிவானயக்கும்பரிசன்னாள்.

உரை.— நக்கியுயிரைக்கொல்லும் விடபாம்போ, நயங் காட்டிக்குடிகெடுக்குங் கொடுங்கோலரசனோ, பறவைபிடிக்க முற்போட்டவிரையோ, பாலோடுகலந்தநஞ்சோ, புகுந்தெல்லாத்தையு மிற்றழிக்கும்படி செந்தீயைநல்லொளியென்றெரிக்குந் தன்மையோ விவையெல்லாமொக்கு மின்பத்தை விரும்பு மாசையேயென்றாள் வானுலகிற்கின்பஞ் செய்யு நற்குணத்தாள்.

பவமேபழித்துப்பூவனத்திற் படர்ந்தவலங்கற்றுயிர்காத்துத்
துவமேநயனைப்பயத்துய்க்குந் துணையேதென்னின்மன்றுயிர்க்கின்
கவமேதுயர்செய்நானெனதென் றுயவிருபற்றினிதறுக்குந் [ன்.
தவமேயுயிர்க்கோர்துணையென்றான் றவத்தின்பவ்வக்கரைக்கண்டா

உரை.— பாவத்தை நீக்கிப் பூமியிற்படர்ந்த துன்பங்களற்றுயிரைக்காத்து நன்மை பயத்தின்பங்கொண்டு வருந் துணையேதென்று னுயிர்க்கெல்லா மிங்கேவினைய்த் துயர் செய்யுநானென்னு மெனதென்னு மிருபற்றுதலை யினிதாயறுத்த தவமே யுயிர்க்கு நற்றுணையாமென்றான் றவக்கடலின் கரையைக் கண்டான்.

பொதிருமுட்டாடாமரையோ பொதிர்முட்புறவுட்சுவைக்கனி [யோ
வதிருமொலியால்வெருவுய்த்தே யவனியுவப்பப்பெய்முகிலோ
வெதிருமொன்னார்க்கோங்கரனோ வெவருமஞ்சுமுருக்காட்டிக்
கதிருமின்பார்தவமென்றாள் கருணைப்பவ்வக்கரையில்லாள்.

உரை.— முள்ளுடையதாளுள்ளதாமரையோ, புறத்து முள்ளு முள்ளே யினியசுளையுங் கொண்ட பலாக்கனியோ, இடியோடுமுழங்கி வெருவச்செய்து பூமியெல்லாமின்பங் கொள்ள மழைபெய்யுமேகமோ, எதிர்த்த பகைவர்க்கு வைத்தவரனோ விவையெல்லாமொக்கு மெவருமஞ்ச வுருவங்

காட்டி நிறைந்தவின்பம் பயக்குந் தவமேயென்றாள் கனாகா ணுக்கருணைக் கடலொத்தாள்.

மொய்யுந்துறவேயெந்தையடி முறைகொண்டடையவழியென் றாற் [ன்பார்
பொய்யுமிருளும்பொதிர்ந்ததெலாம் போக்குந்துறவோகுறையெ
கொய்யும்புனாதீரிறைவனருள் கொடுக்குந்துறவேயின்பலேயே
மெய்யுமுயிருநீயென்றான் விளங்கீரறக்கண்ணடியினான்.

உரை.— மொய்கொண்ட துறவுதானே யென்பிதாபா தத்தையடையவழியதென்று விருளும் பொய்யுங் கொண்ட தெல்லாம் போக்குந் துறவினைக் குறையென்பாரோ பாவத் தைத்தீர்ந்த கடவுள்தயையைக் கொடுக்குந்துறவே நீயே யின்பக்கடல் மெய்யுநீயே யுயிருநீயேயென்றான் விளங்கிய விரறத்தின் கண்ணடியொத்தான்.

தாயுநீயேதந்தையுநீ தாவுநசைகாட்டியநீயே
தீயுநசைதீர்நசைநீயே செல்வநீயேயுயிரினிதிற்
றோயுமலைநீயாகியுனைத் துறவாதணுகல்செய்துறவோ
காயுவினையென்பாரொன்றாள் கதிப்பால்காட்டுங்கஞ்சனத்தாள்.

உரை.— என்னாண்டவனே நீயே யெனக்குத்தாயுந் தந் தையு நீயே யென்னாசை குறித்த குறியே தீயவாசையெல் லாந் தீருமாசை நீயே செல்வநீயே யென்னுயிரினிதாய் முழுகுங்கடல்நீயே யிவையெல்லாமாகியவுன்னை யகலாமல ணுகியடையும்படி செய்துறவினைக்காய்ந்த கொடியவினை யென்பாரோவென்றாள் பரமகதித்தன்மையைக் காட்டுங் கண்ணடியொத்தாள்.

அறத்திற் குறுதியான புத்திமதி.

(29-ம். படலம். 122. 123.)

விளம், விளம், மா, கூவிளம்.

நாடலேயருந்தவ நலத்தைக்கண்டுநீ
நீடலேபுகழ்வது நீர்மையோவினி
நாடலேமுடவற்கு மினியதாமன்றோ
கோடலேகுணமெனக் குறிப்பிற்றேறுவாய்.

உரை.— தேடற்கரிய தவத்தின்மாட்சியைக்கண்டு நீ யதை நெடிதாய்ப்புகழ்வது கருமமோ? அசையமாட்டாத முடவனு நன்றாயாடினதைக்கண்டு புகழ்வானல்லோ? ஆகையா லறத்தின்மாட்சியுட்கொண்டு தானேநடப்பது குண மென் றுணர்விற்றேறக்கடவாய்.

மின்னிழலெனமிளிர்ந் தொழிவெறுக்கைசெய்
கொன்னிழல்வெறுத்தறங் கொண்டுநின்றியேல்
நின்னிழலெனநினை யிறைவனீங்கிலா
தின்னிழலியற்றிநீ யினிதில்வாழ்வையே.

உரை.— மின்னொளிபோலத்தோன்றி யொழியுஞ் செல்வத்தின்வடிவு வீணென் றதனைவெறுத்து நல்லறங்கைக் கொண்டு நின்றாயாகி லுன்னிழலுன்னை நீங்காததுபோல ஆண்டவனு முன்னைக்கைவிடாமற் செய்யுநிழற்கீ ழினிதாய் வாழா நிற்பாய்.

உலக வாழ்வுகளி னிழிவு.

(5-ம். படலம். 137, 138.)

கருவிளம், தேமா, கூவிளங்காய், கருவிளம், தேமா, கூவிளங்காய்

கனத்திலிழிந்துசாயவனா கரத்தில்விழுந்துபோவரும்
வனத்தில்வளர்ந்துபோகவயல் வயத்தில்மெலிந்துபாயவலை
யினத்திலிரிந்துபேருமில விளிப்படவந்தவாரியென
தனத்திலிருந்தவாழ்வினிமை தவிர்க்கனிறைந்தஞானமதே.

உரை.— மேகத்தினின்றுவிழ மலையின்கையிலேவிழுந் ததினின்று பேரும்போ தரிய கானகத்தில் வளர்ந்தப்பால் போய் வயலிடத்தில் மெலிந்தோடிக் கடலிலேசென்றுபேரு மில்லாம லிழிவுகொண்ட வெள்ளத்தின்குணமே, அத்தன் மைத்தாயபொருளினல் வாழ்வுகளாகையி லதைவிரும்பா ம லிருப்பதே ஞானமாம்.

அறத்துணையன்றியாயதுணை யதற்றமறிந்தருமையென
திறத்துணைநம்புவீரர்பிறர் திறத்தில்மெலிந்துமாள்வரொன
மறத்துணைதந்ததீதுதரு மடத்திழிவென்றுதேவவரு
ளுறத்துணைதந்தபாதமது வுயிர்க்கொரநந்தவீடெனவே.

உரை.— அறத்தின்றுணையன்றி மற்றத்துணைசமயம றிந் துதவாதே, தம் வல்லமை நம்பின வீரர் மிஞ்சியவல்ல மையுடையார்கையினுற்சாவார், பாவத்தினல் வருந்தின்மை யறியாமையு மிகழ்ச்சியுந்தருமே, தேவகிருபையினுலடைந் த கடவுளின் பாதத்துணையோ வென்னி லதுவுயிர்க்கநந்த வீடாம்.

செல்வநில்லாமை, துறவின்பம்.

(26ம்-ம் படலம். 99, 110, 111, 113, 114.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

நீரொழுங்குமிளிபோலு நெடியதேர்நேமிபோலுங்
காரொழுமின்னற்போலுங் கடலெழுந்திரைகட்போலும்
பாரொழுஞ்செல்வத்தில்லைப் பதியுமோர்நிலையுமென்றார்
சீரொழுஞானத்திற்குந் திரைதிரண்டலைவதுண்டோ.

உரை.— நீர்மேலாடுங்குமிளியைப்போலவுநெடுந்தேருருளையைப்போலவு மேகத்தின் மின்னலைப் போலவுங்கடலின் றிரைகளைப்போலவும் பூவுலகுள்ள செல்வத்துரிய பதியுநிலையுமில்லையென்றார்பெரியோர், ஆயினுமருளிற் பொலிந்த ஞானச்செல்வத்திற்கு மித்தன்மைத்து நில்லா தலைச்சலுண்டோ.

காய்முதிர்கனியினாழ்த்துக் கனிந்துவீழிம்மெய்வாட்டி
வேய்முதிர்வனத்தினோன்பின் வித்தினால்விளைமெய்ஞ்ஞான
மாய்முதிருவப்பிலுள்ளத் தாண்டகையொருவனாள
நோய்முதிருலகநீக்க லுதல்வருமினிமைதானே.

உரை.— காய்முதிர்ந்து பழமாகிப் பதமழியக் கனிந்துவிழுவதுபோல விழுமிவ்வுடலை முன்னேவாட்டி மூங்கில் படர்ந்த வனத்திருந்து செய்ததவமாகியவினையினால் விளையுமெய்ஞ்ஞானமாகித் தன்மனதிலாண்டவனொருவனின்ப மாயாளுநம்படி துன்பநிறைந்த பூவுலகினைவிடுவது நினைவிலடங்காத வின்பந்தானே.

ஊக்கவேர்பூட்டிநோன்பா லுடற்செறுவுழுதுநன்றி
வீக்கமேல்விரதச்செந்நெல் வித்திநல்லொழுக்கநீரைப்
போக்கநீடிறைத்துத்தன்னைம்பொறியெனும்வேலிகாக்கி
லாக்கமாய்ப்பெரும்விட்டின்ப மண்டமேல்விளைக்குந்தானே.

உரை.— அங்ஙன மனவூக்கத்தை யேராகப்பூட்டித் தவத்தைக்கொண் டுடலாகிய வயலையுழுது நன்மைசேர்ந்த

நல்லவிரதமாகிய செந்நெல்லை விளைத்து நல்லொழுக்கமாகிய நீரைநெடுநாளிறைத்துத் தனதைம்பொறிகளாகிய வேலியைநன்றாய்க்காத்தா லிலாபமாக வான்மேல்வீட்டுப் பேரின்பம் விளைவது நிச்சயந்தானே.

தன்முகம்படிகமின்றித் தாணியிற்காண்பானில்லைப்
பன்முகங்காட்டுமின்பம் பற்றலிற்றிரிதந்நெஞ்சர்
தன்முகந்தம்மிற்றாமே தகளறவெவருங்காணார்
வின்முகங்காட்டுநூலோர் வெயிற்பளிங்கின்றியன்றே.

உரை.— கண்ணாடியின்றித் தம்முகத்தையிங்கே காண்பாரில்லை, அத்தன்மை யொளிமுகத்துரைத்த கற்றோர்மொழியைக் கண்ணாடியாகக்கொண்டாலொழியப் பலமுகங்களைக்காட்டிய பலவகை யின்பங்களைப் பற்றின தன்மைத்துப் பலமுகமாய்த்திரிந்து வேறாகுந்தந்நெஞ்சுள்ள முகத்தைத்தாமே தம்மிடத்துக் குறையின்றி யெவருங்காணார்.

மொய்யொடுகடுத்தகோப முதிரறநீதியென்ன
மெய்யொடுவிளைந்தகாமம் விழுமனக்கேண்மையென்ன
மையொடுவளர்பொன்னாசை வழித்துணையாசையென்னப்
பொய்யொடுபொங்கும்பற்றல் புரைபுகுத்தரியவாறே.

உரை.— தன்னெஞ்சினைத் தானறிவதரிதாகையின் மனதிற்பகையோடு பொங்கினகோபமே யறத்தினீதியாகத்தோன்றவு மிவ்வுடலாசையால் விளைந்ததீயகாமமே நன்மனத்துரியவன்பின் சிநேகமாகத்தோன்றவு மயக்குவிக்கும் பொருளினாசையே தான்பூவுலகிற் றிரியுநாள்மட்டும் வேண்டிய வழித்துணைதேடு மாசையாகத்தோன்றவு மங்ஙனம் பொய்யின்வழியே பொங்காநிற்கும் பற்பலபற்றுதல் பாவத்தைக்க்கொண்டுவிடும் வழி யறிவதற்கரிது.

பொய்யறங்களிலுள்ள கேடு.

(23-ம். படலம். 99, 100, 101.)

விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

நிறைதவிர் தீயகயவருநரகி னிலைதவிர்ந்தின்பவீடுடலின்
சிறைதவிர்காலையெய்தலும்விழைவார் செல்கதியெளிதெனக்காட்டி
முறைதவிரறங்கணம்புளிதாமே மூழ்கியதுகளினுழ்ந்தஞ்சா
மறைதவிரறத்தால்வீடுறவுள்ளி மாய்ந்தெரிநரகிடைவீழ்வார்.

உரை.— பொய்யறங்காட்டல் பாவம்புகும்வழியெங்ஙனமாமெனில், நீதி நிறைதவிர்ந்தொழுகும் பாவிகள்முதலாய் நரகத்தில் விழாமலின்பவான் வீட்டை யிறக்கும் பொழுதடைதலே விரும்புவாராகையிற் செல்கதியடைதலெளிதென்று பொய்வழியைக்காட்டினன் முறைதவிர்ந்தபொய்யான வறங்களை நம்பிப் பாவஞ்செய்தாலுங் கரையேறுவோமென்றெண்ணித் தாமே பாவத்தமிழ்ந்தி யஞ்சாமல்வேதவிதிதவிர்ந்த வறத்தின்பயத்தாற் றப்பாமல் வான்வீட்டைச்சேருவோமென்றெண்ணிச் செத்து நரகிலென்றென்றைக்கும் வேகும்படி விழுவார்.

நீர்விளைசிறந்தபற்றுறைமூழ்க னீர்த்துளியிறைத்துயர்வாரல்
பேர்விளையோதல்பெருமணிதரித்தல் பெருஞ்சடைநீடுறவளர்த்தல்
சூர்விளையழலேகொன்றநீறணிதல் துஞ்சினுர்க்கெள்ளுமுதிறைத்த
லேர்விளைகதிசேர்வழியெனிற்பாவ மியன்றுறுந்தடமதாமன்றே.

உரை.— பல விசேட நீர்த்துறையாடவுங் காலமேயுயர நீரையிறைக்கவும் பலபெயர்களையோதவும் பலவகைப் பெருமணிகளைத் தரிக்கவும் பெருஞ்சடைநீளவளர்க்கவுஞ் சுட்ட சாம்பலைப்பூசவுஞ் செத்தவர்க் கெள்ளும் பாலுமிறைக்கவுமித்தொகைப்பட்ட வற்றைச் செய்தமாத்திரத்திற் கோடி பாவஞ்செய்திருந்தாலுந் தப்பாமல் வான்மேற்கதியைச் சேரலாமென் றெண்ணினகாலத்துச் சகலபாவந் துடர்ந்துவரும் வழியாமல்லோ.

இவ்வழியெளிதிற்புனாயெலாந்தீரு மென்றுளிபுனாயின்மேற்சா
யந்த [வேண்டு
செல்வழியொழிந்தமன்னுயிர்கெடவோர் செயிர்வழிகாட்டவோ
மொய்வழியருவிமுன்னுளவிழிவின் முடுகிவந்தோடவுநாமோ
வவ்வழிகாட்டல்வேண்டுமென்றுரைத்தா ரறிவளருந்தவத்துயர்ந்
[தோர்.

உரை.— சொன்ன பொய்யான வறத்தின்வழியாற் செய்த வெண்ணப்படாத பாவமெல்லா மெளிதாய்த்தீருமென்று நிச்சயமாய் நினைத்தபின்பு பாவத்தின்மேற் சாய்ந்த குணத்தோடு செவ்வழியை விட்டொழுகுமனிதரொல்லாருங்கெடும்படி பாவத்தின் வழியைக் காட்டவேணுமோ வில்லையே, அதெங்ஙனமென்னி லோடிவரும் புனல் தனக்கு முன்னுள்ளபள்ளத்திலேவிழ்ந்து முடுகியோடும்படி நாம்வழியை யதற்குக்காட்டவேணுமோ வில்லையென்றார் கூர்ந்தவறிவினைத்த தவத்தினுயர்ந்த வறிஞர்.

அஞ்ஞானத் தவமுறைக் கண்டனம்.

(20-ம். படலம். 122, 123, 124, 125, 126, 127, 128.)

விளம், விளம், மா, கூவிளம்.

கோன்செயுந்துணையுயிர் கொல்லுங்கூற்றமாங்
கான்செயும்வனஞ்சுடு மமிழ்துங்காளமாம்
வான்செயுமருளிலான் மனத்ததுள்ளதே
லூன்செயுங்கோட்டிடை யுய்வதாகுமே.

உரை.— வானுலகாண்டவன் றன்றயை யுதவியில்லாதாயிற் பூவுலகரசராதரவுதவாம லதுதானுயிரைக்கொல்லுங் கூற்றனுமே, வாசமதுமலர்ச் சோலையுங் குளிராமற் சுடுமே, நல்லமிர்தந் தானு நஞ்சாமே, ஆண்டவ னருளுண்டாயி

னையுமிழு மதயானைக்கொம்புக ணுனியிற்பட்டும் பிழைத் துத் தப்பும்படி வழியுண்டாம்.

வீடுறவேண்டிலீர் விதித்தநூலலாற்
காடுறவொளிக்குதல் கயங்குளிக்குதல்
நீடுறவிழுசடை நீட்டல்மற்றவை
யீடுறப்பயனிலா வெளிறிதாமன்றே.

உரை.— மீளவும் பரமகதிவீட்டைச் சேருதற்காசை யுண்டாயி னீசொன்னவிதிநூலன்றிக் காட்டில்வந்தொளித் தலு நாண்முறைபலமுறை பலநீர்குளித்தலும் பெருஞ்சடை நீண்டு தூங்கவளர்த்தலு மித்தன்மைத்துள்ள மற்றவையு மாட்சிமைபெறும்படி பயனில்லா தறியாத் தனமது.

சடைவளருருக்கொடு தவிர்கினீர்குளித்
தடைவளர்வனத்திடை யகன்றிலாத்திரிந்
திடைவளர்கனிகளோ டிளங்கிழங்குணு
முடைவளர்காடிகள் முனிவரொன்பவோ.

உரை.— நீள்சடைவளர்ந்த வுருவனவாய்த் தப்பாது நீரைக்குளிர்த்தனவாய்த் தழைத்தகாட்டிலகலாது திரிந்தன வா யிடையிலுள்ள கனிகளையு மிளங்கிழங்கு களையுமுண்டன வா யூத்தை நிறைந்த காடிகளு மதனுன் முனிவரொன்ப வோ? (அறத்தினுல் வரு மனமாட்சிமை யில்லாதாற் சடைமு தல் மற்றதியாவும் பயனில்லனவெனக் காட்டலே கருத்து.)

சுரத்திடைத்தழலொடுதுறும்புருக்களு
மரத்திடைத்தூங்கிநற் கனியுண்வாவலு
முரத்திடைத்தறவரோ வுளத்தின்மாண்பலாற்
பரத்திடைக்கிளர்வினை பரிதலாகுமோ.

உரை.— மீளவுஞ் சுடும்வனத்திடத்து நெருப்போடு நின்று திரியும்புருக்களு முயர்ந்தமரத்திடை தலைதாழத்தூ ங்கிக் கனிகளையுண்ணும் வவ்வால்களும் வல்லமைபொருந் திய துறவோரெனவோ? மனத்திற் கறத்தினுல்வரு மாட்சி மையின்றி முன்கொண்ட பாவவினைக ளொழிந்து கெடுமோ வில்லை.

செம்பொறிச்சினத்தபோர்ச் செறுநர்க்கஞ்சலாற்
பைம்பொறியெயிலின்வாய் படியப்பூட்டியுள்
வெம்பொறியெழத்தமை வெட்டிவீழ்த்தெனு
வைம்பொறியடக்கியுள் ளவாக்கொண்டாலரோ.

உரை.— மீளவுமொருவன் றன் பஞ்சேந்திரியங்களை யடக்கி மனதிலாசைவைத்திருந்தால் மிக்கசினத்தோடு போர்செய்யவந்த பகைவர்க்கஞ்சிப் பொறித்தமதிலின் கோட்டைவாசலெல்லா நன்றாய்ப் பூட்டினபின்பு தாமேயுள்ளிருந்து பொறியெழக் கோபித்துத் தம்மை வெட்டிக்கொண்டாற்போலத் தின்மையாமல்லவோ.

கோலமேவீணடா குளித்தல்வீணடா
சூலமேவீணடா துறவுவீணடா
காலமேமந்திரங் கதைத்தல்வீணடா
சீலமேகெடநசை செகுத்திலாலரோ.

உரை.— முன்னுரைத்தவை மெய்யாகையி லறத்தின் சீலங்கெடும்படி மனத்திலெழுந்தவாசையை யறுத்துவிடாதிருந்த காலத்துக் கொக்கிறகணிந்து மக்குமணிவடந் தரித்தும் பீலிப்பிச்சமேந்தியு நீறுபூசியுஞ் சடையை வளர்த்து மற்றப்பலமுறையோடு பலகோலங்களெல்லாம் வீணே, பல துறைநீரைக் குளித்தலும் வீணே, சூலமேந்தலும் வீணே, எல்லாவற்றையுந் துறத்தலும் வீணே காலமேயெழுந்து பல மந்திரங்களையோதலும் வீணே.

புரைவளர்பகைநமைப் புழுங்கிப்போரொழ
விரைவளர்வனத்திலும் வினைசெய்துட்சுடுங்
கரைவளர்கடற்கணுங் கலக்கமில்லதால்
நிரைவளருளத்தருள் நிறைந்தகாலரோ.

உரை.— பாவத்தால் வளர்ந்த பகையேமுற்றி நம்மைக் கோபித் கரும்போர்செய்யுங்காலத் தலர்முகத் துமிழும் வாசபூவனத் தொதுங்கியிருந்தாலு முளத்தைச்சுடுமே, நல்லொழுக்கத்துயர்ந்தமனதிற் றேவதயையி னருள் நிறைந்திருந்தகாலத்தோவெனி லிருங்கரைசூழ்ந்த பெருங் கடலிடத்துங் கலங்காம னிலைகொண் டிருக்கலா மல்லவோ?

அஞ்ஞானத் தவக்கோல வியர்த்தம்.

(27-ம். படலம். 131.)

விளங்காய், கூவிளம், கூவிளங்காய், கூவிளம்.

உற்றகோலம்வீணடா வொண்டவங்கள்வீணடா
கற்றநூலும்வீணடா கையுதாரம்வீணடா
பெற்றபேரும்வீணடா பேரறங்கள்வீணடா
மற்றயாவும்வீணடா மண்ணைபோற்றலாலடா.

உரை.—தேவனொன்று பசாசுகளை வணங்கா நின்று லணிந்தகோலமுஞ் செய்ததவங்களும் படித்தநூலு மீந்த கொடையும் பெற்றகீர்த்தியு நடத்தினவறங்களு மற்றதெல் லாமும் பயனொன்றின்றி வீணும்.

பொய்த் தேவருண்டான வகை.

(23-ம். படலம். 25, 26, 27; 39, 40; 57, 58, 59, 60, 61, 62, 63, 64.)

தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

கைக்கண்டேவற்செய்பவர்தாதை கடிதுற்ற
மைக்கண்டுள்ளத்தேறுமெனத்தாம் வழிபாடாய்ப்
பொய்க்கண்டேனும்பூவொடுவாசப் புகைசாத்தி
யைக்கொண்டோர்நற்றெய்வதமென்று ரறிவற்றார்.

உரை.— இறந்தமகற் குருச்சமைத்தபின்பு கை யூதிய த்தைப்பற்றித் தகப்பனுக்கேவல் செய்திருந்தவர் தகப்பன் வருந்திக்கொண்ட மயக்கத்தைக்கண்டு அவன்மனமகிழ்ந்து தேறும்படி யவர் தேவபூசையாக மதுமலர்ப்பூவும் வாசம் பொழிபூம்புகையு மவ்வுருமுன்னே காட்டிப் பொய்யிதெ ன்று தம்மனமறிந்து மதிகெட்டவரா யழகியவோர் தெய்வ மிவனென்று சொல்லத்துடங்கினர்.

செல்லுந்தன்மைத்தாயவைகேட்டுத் திருவல்லோன்
வெல்லுந்தன்மைத்தையனையேத்த விரிபார்மேற்
சொல்லுந்தன்மைத்தர்ச்சனைவிஞ்சத் துகளாக்க
மொல்லுந்தன்மைத்தோரிறையோனை யொழிகின்றார்.

உரை.— அங்ஙன மிவைநடந்து வருகையின் மகனுக்குத் தகப்பன் செய்தவற்றைக் கேட்டுச் செல்வமிக்கோனொருவ னதிலுஞ் சிறப்புபெறத் தானிறந்ததன்றகப்பனுக்குநடத்தி யவனை வணங்காநிற்பச் சொன்ன தன்மையானுள் வட்டத்திலே விரிந்தபூவுலகிற் பலவிடங்களிலே பலவர்க்காராதனை மிகவுநடக்கையிற் பாவம்விளையுந்தன்மைத்து மனிதர் துணையிலா மிக்காருமின்றி யொப்பாருமின்றி யொன்றாய் நிற்கு மெய்க்கடவுளைமறந்தார்.

எய்யாமாக்கட்டீயுறத்தாமே யெளிதிவ்வாய்
மெய்யாநாதன்றன்னைமறுத்தே வினையுய்க்கும்
பொய்யாவஞ்சத்துய்த்தனபொய்யம் பலதேவர்
கொய்யாவண்ணத்தெங்கணுமேத்துங் குழுகண்டோம்.

உரை.— அங்ஙன மறிவில்லாத மனிதர் தீநரகில்விழும்படி நானேயிவ்வழியோ டெளிதாய் மெய்யானகடவுளுக்குமாத்திரஞ் செய்யவேண்டிய வாராதனை மறுத்துத் தப்பாமற் றீவினைவிளைவிக்கும் வஞ்சத்தினாற் கொண்டுவிட்ட பல பொய்யானதேவர்களை விடாமலிப்பொழுதெங்குங் கூட்டங் கூட்டமாய் வணங்கக் காண்கிறோம்.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

நாகநாதனைநம்பலினாகவா
யாகமாறுமென்றாகமம்போன்றுநற்
பாகமாய்விடம் மூடியபற்கதை
யாகமாநிலத் தர்ச்சனைநாட்டினார்.

உரை.— பாம்புக்கு நாகநாதனென்னும் பெயரை நாட்டினபின்ன ரந்நாகநாதனை நம்பினாற் கடித்தபாம்பினஞ்சுமாறுமென்றுசொல்லிச் சருக்கரைமேலேபூசி நஞ்சினை மூடின தன்மையால் வேதநூலாகமம்போலப் பலகதைகளையுங்

கொண்டுவிட்டுப் பூவுலகெங்கும் நாக நாதற் காராதனையை மனிதர் நாட்டினர்.

ஆண்டங்காயிரத் தைம்பத்திரண்டுபோய்
மாண்டகோனெசைக்கியன்மனம்பொருப்
பூண்டபாந்தனைப்பூழியையாக்கிறு
மீண்டவ்வர்ச்சனைபற்பலர்விட்டிலார்.

உரை.— மீளவு மாண்டவ னேவலினன் மோயிசனோர் பாம்புருவத்தை யுண்டாக்கினபின்ன ராயிரத்தைம்பத் திரண்டுவருடம்போய் யூதர்நாட்டை யாண்டிருந்த மாட்சியிற் பொலிந்த வெசைக்கியனென்பவ னவரப்பாம்பினை வணங்கினதைக்கண்டு மனம்பொருமற் கோபித்து மிக்கலங்கரித்த வப்பாம்பினுருவத்தை யழித்துத் தூளாக்கினன், ஆயினு மின்ன மன்றுதொட்டுவந்த நாகநாதனாகிய பாம்பின் வணக்கத்தைப் பலரும் விடாமற் சிலதேசங்களில் வணங்குகின்றார்.

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

ஏற்றியதேவரெண்ணி லெண்ணுவர்கலங்குவாரும்
போற்றியதேவரொப்பப் புரிகுவர்புகர்கொள்வாரு
மாற்றியதேவர்காதை யறைகுவர்வெள்குவாருஞ்
சாற்றியதேவர்பூண்ட தகவுளோர்தமைக்கொல்வாரும்.

உரை.— மனிதர்வணங்கச் செய்த தேவரை யெண்ண வேண்டி னெண்ணிக்கையுளடங்காமையிற் கணக்கரெல்லாருங் கலங்கவும் வணங்கிய தேவரொப்ப நடந்தவரெல்லாரும் பாவிகளாகவு மத்தேவர்செய்தவற்றைச் சொல்ல வேண்டின் சொல்லுவரெல்லாருநாணவு மீளவு மவர்வணங்கியதேவர்க்குள்ள குணத்தின்றன்மைத் தவருக்குள்ளே நடப்பாரைக் கண்டா லவரைக்கொல்லவுஞ் செய்வார் (ஆகையான் மனிதரிடத்துப் பொறுக்கப்படாத குற்றங்களையுடைய வரைத் தேவராக வணங்கச் செய்த மோசத்தைக் காட்டுவது கருத்து.)

புனைநிலாவணியில்லானைப் போக்கலாலரற்றிமாழ்கல்
மனைவியாலடிபட்டோடல் மனைவியைத்தலையிற்றாங்க

லனையள்கால்பினிற்றுச்செங்கீ ரணியென நுதலிற்பூச
லினையெலாப்பூசித்தேவர்க் கியலுமோர்விளையாட்டென்றார்.

உரை.— மீளவு மழகிய தன்மனையாளைப் போக்கிய தனு லழுது விம்மி மயங்கலுந் தன்மனைவி கையா லடிபட் டோடலு மவளைத்தன்றலைமேலே சுமத்தலு மவளது சூதகச்செந்நீரை யணியாக நெற்றியிற்பூசலு மிவையெலாம் பல ஞாயங்களைச்சொல்லி மறையப்பூசித் தேவர்கேற்ற விளையாட்டுகளென்றார்.

பொதுமுறைமகளிர்நாடல் புறமனைவிழைதல்தண்ண
மதுமுறைமலருட்புக்கு மதுசகன்கணைவெப்பாற்றல்
விதுமுறைகுனிவிற்கஞ்சி வென்றரவொளித்துநாண
விதுமுறைமறையினாட்டி யிறையவர்க்கிலீலையென்றார்.

உரை.— மீளவும் விலைமாதரைத் தேடிச்சேரலும் புறதாரங்களைவிரும்புதலு மன்மதன் தன்மேலிட்டவம்புகளா லுள்ளெழுந்த காமவெப்பினையாற்றும்படி குளுமது மலருட் புகுதலும் பகைவர் தன்மேற் பிறையைப்போலவளைத்த வில்லின் முகத்தஞ்சி முதுகுதந்தொளித்து நாணலுமிவையெலாம் வேதமாக நாட்டித் தேவர்க்கேற்ற விலீலையென்றார்.

குய்யமேவிழியாய்த்தாங்கல் குய்யத்துளொளித்தல்கோசம்
வையவேயூழ்த்துவீழ்தல் மருவியகுறியிரண்டுங்
கையமேயாகப்பூணல் காட்டரும்பலவுநாட்டி
யையமேயின்றித்தேவர்க் கானதோர்முறைமையென்றார்.

உரை.— மீளவுங் கண்ணுகவுடலெலாங் குய்யமாய்த் தோன்றலு மொருவன்வைது திட்டியதனாற் கோசமழிந்து வீழ்தலு மிருகுறிகள் புணர்ச்சியிற்றிரண்டு சேர்த்தித் தேவணியாக வணிதலு மித்தன்மையிலுங் காட்டற்கரிய பலவற்றையு நாட்டி யவையெலா மையமொன்றின்றித் தேவர்க்குரிய முறைமையென்றார்.

ஓ ஈமஞ்சேர்மாலையாக விழிபடக்கழுதைசேர்ந்தோன்
காமஞ்சேர்சங்கத்தொன்றிக் கடந்தவாயிரமாண்டுள்ளோ

ளமஞ்சேர்மனையாறொண்ணி ராயிரமிமிழிற்கொண்டோன்
சேமஞ்சேர்வலியிலோங்குஞ் சிறப்பெழுந்தேவனென்றார்.

அன்னையேமனைவியாக வமைந்தவன்றேவனென்றார்
பின்னையேசுதையைப்புல்லப் பெட்டவன்றேவனென்றார்
தன்னையேயழித்துக்காமந் தணித்தவன்றேவனென்று
மென்னையேயறைவேனென்ற யாவுமேவழங்கச்செய்தார்.

இவ்விரண்டுமொருதொடர்.

உரை.— மீளவுஞ் சுடுகாட்டில்விழுந்த மாலைபோல விசு ம்ச்சிபடும்படி கழுதையோடுசேர்ந்தவனு மொருகாமச் சங் கத்தி லாயிரம்வருடங் கிடந்தவனும் பதினாறாயிரம் பெண் டாட்டிகளைக் கொண்டவனும் வல்லமையிற் பொலிந்த தே வனென்றார். மீளவுந் தன்றாயை மனைவியாகவைத்திருந்தவ னுந் தன்னிளமகளோடு புணரும்படிவிரும்பியவனைத் தொட ர்ந்தவனுங் காமம்பொறுக்கமாட்டாமற் றன்னைத்தா னழி த்தவனுந் தேவனென்றார். மீளவுஞ் சொன்ன தெல்லா மென் சொல்வேன் சொன்னயாவும் வழங்கவுஞ் செய்தார்.

உடல்வினையீனமாக்க வுணர்வுநாணுங்காதை
மிடல்வினைகளிப்பிற்செய்தோர் விண்ணின்வாழ்தேவரென்னக்
கடல்வினையரவத்தன்னார் களிவிழாவணிகொண்டாட
வடல்வினைவஞ்சத்தங்க ளருமுறைநாட்டினாரே.

உரை.— அங்ஙனங் கொண்டவுடலின லீனத்தையு டையமனிதர் நினைப்பதற்குமுதலாய் நாணும்படியருவருப் புள்ள வபத்தங்களைக் கொழுப்பின் களிப்போடு செய்தவரை வான்வாழ்தேவரென்றெண்ணி யம்மனிதர்தாமே கடலொலி யொத்த வாரவாரத் தக்கதைபற்றித் திருவிழாவுகளைக் கொ ட்டாடும்படி வல்லமையுள்ளவஞ்சத்தா லெங்கு முறைமை நாட்டினர்.

சேண்முகம்புதைத்தகோயிற் நீட்டியதேவர்காதை
வாண்முகம்புதைத்தநீண்கண் மடந்தையர்கண்டகாலை
நாண்முகம்புதைத்தபின்றை நாணமற்றதைச்செய்தோரைப்
பூண்முகம்புதைத்தமையற் பொலிவொடுவணங்கச்செய்தார்.

உரை.— மீளவும் வான்முகத்திற் புதைத்த கோயில்களிடத்துச் சித்திரமாக வெழுதப்பட்ட வத்தேவருடைய கதைகளை வாளுட்புதைத்த நீண்ட கண்ணையுடைய குலத்து மாதர்கள் கண்டால் வெட்கிப்போய்க் கையா ணுணின தம் முகத்தைப்புதைத்து மூடினபின்பு தாங்காண்பதற்கு நாணுங்காரியங்களைவெட்கமின்றிச் செய்தவனைத் தேவனென் றெண்ணி யவற்றின்மேற்போட்ட வாபரணங்கள் செய்யு மயக்கமிகுதியாற் கையெடுத் தவனை வணங்கச்செய்தார்.

பல தேவாராதனைக் குருட்டாட்டம்.

(27-ம். படலம். 167, 168, 169, 170, 171, 172, 173, 174.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

விண்செய்வெஞ்சுடர் விலகவெண்ணிலசுடர்த்தீப
மண்செய்மாக்களே வளர்த்தெனக்காப்பியக்கவிகள்
பண்செய்பாவகப் படாதுயரிறைமையையுணரா
வெண்செய்யீறிலா விறைவனைவிகற்பித்தாரன்றோ.

உரை.— வானிற்றிரியு மொரு சூரிய னத்தமித்தொளித்த போது மண்மேல்மனித ரெண்ணப்படாத தீபங்களைவளர்த்ததுபோலக் கவிஞருந் தம்மினிய பாவினுள் ளகப்படாமற் றேவதத்துவத்தை யுணராததனாலல்லோ வெண்ணப்படாத பலதேவருண்டென்று வேறுபட விரித்துச் சொன்னார்.

நதிதள்ளிக்கரை நாடிலாதலையினோடுநல்போன்
மதிதள்ளிப்பலர் வாரியோடிழிவுறவொழுகிக்
கதிதள்ளிக்கெடுங் கடவுளரிறைஞ்சினமின்னே
பொதிதள்ளிக்குணப் பொருவிலானுணர்ந்தனமென்பார்.

உரை.— வெள்ளத்திலகப்பட்டவ னாற்று நீரைத்தள்

ளிக் கரையை நோக்கிப் போகாமல் வெள்ளத்தோடு கெடும்படி போவதுபோல இந்நாள்வரைக்கு மாராயாமற் பலர்வெள்ளத்தோ டிழிவாகும்படி நடந்து வான்கதியடையாமற் கெடுக்கும் பலதேவரை வணங்காநின்றோமே, இன்று பொதுமுறையென்றுபாராமற் றள்ளித் தனக் குவமை யில்லாவொரு மெய்க்கடவுளை யறிந்தோமென்பார்.

இற்றைநாளள விராவிருளிரு தலகு இத்த
வற்றைநாளள வாரணமெங்கணும்பொழிந்த
கற்றைநாமுநம் முந்தையர்காண்கிலாதென்னோ
மற்றைநாதனீ ரிதோவெனவநேகர்நொந்துரைப்பார்.

உரை.— இந்நாள்வரைக்கு நமக்கிராவிருள் நீங்கி விடியாததுபோல வுலகம் படைப்புண்ட நாள்முதற் கொண்டுளவாகிய விம்மெய்வேதம்பரம்பி யெங்கும்பரப்பின ஞானக்கதிர்களை நாமும் நம்முடைய பிதாக்களுமிந்நாள்மட்டுங் காணாதிருந்த தென்னோ? மீளவு மிது வாண்டவன்செய்யுமுறையோவென் றநேகர் மிகவும் வருந்திச் சொல்வார்.

நனைவரும்பல நளினம்விள்ளாக்கதிர்க்குறையோ
புனைவருங்குண முழுதுளான்பொருவிலான்பொலிந்த
நினைவருந்திற நிமலனென் றறைதிரோயறைந்துஞ்
சினைவரும்பலர் சேர்த்தினீரெனவிடைபகர்வார்.

உரை.— அதற்கு மறுமொழியாக: அரும்பாய்நின்ற தாமரை யுதயத்து மலராமை சூரியன் குறையோ? அணிவதற்கரிய நற்குணங்கள்யாவையு முடையோனென்று நிகரிலானென்று முணர்வின்மேலுமுயர்ந்த கடவுளின்றன்மையென்று நீங்களே சொல்லிக் கொண்டிருந்தீர், அவ்வியல்புடையோ னொருவனென்று கண்டுபிடியாமற் சூரியன் முகத்து மலராதவரும்புபோலநின்று பின்னர் நீங்களே முதல்வர்க்குக்கிளையாகப் பலதேவருண்டென்று சேர்த்தினீரென் றறிஞர் சொல்லுவார்கள்.

வினைசெய்பாவமுள்விளைத்தகள்ளிருட்புகைமொய்ப்பப்
புனைசெய்யாசையிற் பொறிதளர்ந்தறிவெலாமயங்கச்

சுனைசெய்பாசியிற் றெருநிலையிலமனந்தளம்ப
முனைசெய்பேயுதி முழுவதுமருட்டினதம்மா.

உரை.— சொன்னதையறிந்து கடவுளொருவனேயெ ன்று காணுதிருந்ததேனெனில், செய்தபாவ முள்ளேவிளை வித்த விருண்டபுகையேமண்டி யாசையென்னும் விலங்கிற் பிணித்த வைந்து பொறிகள்தளர்ந் தவற்றோ டறிவுங்கலங் கிக் குளத்துப்பாசியைப்போல நிலையொன் றின்றி மனமுந் தளம்பாநிற்பப் பசாசும் பகைசெய்ய வந்து முழுது மயக்கு வித்தது.

வெறியிற்சூழ்ந்தபல் விழைவதேகொடிதெனத்தாழ்ந்த
தறியிற்சூழ்ந்துழி தடமுணரொடுங்கெனநசைதாழ்
பொறியிற்சூழ்ந்துளம் பொங்கியதுயருறிக்கற்ற
நெறியிற்சூழ்ந்தநன் னிலையுறும்பாலரிதன்றே.

உரை.— பகைத்தபசாசுகளின் மனத்தைச்சூழ்ந்த பற் பலவாசைகள் கொடியனவாகித் தாழநாட்டின தறியிற்கட் டப்பட்டவாமை யதனைச்சுற்றிவருகையிற் பயனென்றின்றி முன்வாழ்ந்திருந்த குளிர்ம்பூம்பொய்கையை நினைப்பதுபோ ல வாசையாற்றாழ நாட்டப்பட்ட வைம்பொறியோடு பிணி த்தமனமு மவற்றைப்பிரியாமற் சுற்றிவருகையில் வருந்திக் கொண்டதுயரின்மிகுதியாற் கற்ற நூலா லோரோரிடத்து நல்லவை நினைக்கினு மந்நினைவிலே நிலை கொண்டவற்றை யடைவதரிதே.

சுனையகீகமே துளிமதுவுணுதெனமுன்னோர்
நனையதாமரை நவிழ்ந்தவாய்நல்கியதீந்தே
னனையவோதிய வரும்பொருள்கைகொடாப்பொய்யே
புனையவாயின புரைவளர்வெளிறிதாமன்னோ.

உரை.— அங்ஙனங் குளத்துக்தவளைகள் மலர்வாய் துளித்த மதுவினையுண்ணுததுபோல வரும்பாய் நின்றதாம ரைவாய்மலர்ந் தினிதாய்த்தந்த தேனையொப்ப முன்னோரோ தின வரியபொருள்களைக்கைக் கொள்ளா தவற்றுட்பலபொ

ய்க ஏலங்காரமென்று கலந்ததனுற் பூவுலகெங்கும் பாவம் விளைவதற்குக் காரணமாக விவ்வறியாமை மூடிற்று.

காதன்மிக்குரி நலமுநன்மறையுமிங்குணர்வ
தாதன்மிக்குற வவாவிருளுளம்புகாவேண்டுங்
காதன்மிக்குழி கற்றவுங்கைகொடாவென்ன
வோதன்மிக்குழியுணர்வுமிக்கநேகருந்தெளிவார்.

உரை.— உரியதேவதத்துவ மின்னதென்று நல்மெய் வேத மின்னதென்று மிப்பூவுலகி லுணரும்படி யாசையாகிய விருள் மனத்துள்ளே புகாமைவேண்டும். அதேதெனில் ஆசைமிகுந்த காலத்துப் படித்தநூலு முதவாதென்று மாமுனிவர்சொன்னவுணர்ச்சி மிகுதியா லநேகர் மிகவு முணர்விற் றெளிவார்.

மறு பிறப்பு மறுத்தல்.

(27-ம். படலம். 83, 92; 93, 94, 95, 96, 98, 99, 100, 101.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

பிறப்பதும்பிறந்தாரொவரும்பின
யிறப்பதும்பொதுவன்றியிறந்தபின்
புறப்படும்புரம்புக்குமுனுயவை
மறப்பதுந்தவிர்ந்தார்வகுத்தாரொன்றான்.

உரை.— பிறத்தலும் பிறந்தயாவரு மிறத்தலு மெவர்க்கும் பொதுவாமொழிய வொருவனிறந்தபின் ரவனுயிர் மறுவுடலுட்புகுந்து முற்பிறப்பிற் றனக்காயவை மறவாம லிந்நாள்வரைக்குஞ் சொன்னவ னொருவனுண்டோ வில்லையேயென்றான்குசை. (ஆகையால் முற்பிறப்புண்டென்பதற்குக் காரணமில்லையென்றாயிற்று.)

அரியவேதவெட்டெட்டு மெண்ணாகமத்
தூரியவிவ்வழியொன்றலதில்லையாற்
பிரியமாண்டுயிர்பின்புபிறத்தலே
கரியகங்குல்கனவெனவோதினன்.

உரை.— வேதத்துள்ள வெழுபத்திரண் டாகமத்துள்ளே யிறந்தவ ருயிரொல்லாஞ் சொன்னமூன்றுவழியி லொன்றே யடையுமொழிய வேறுவழியில்லை, ஆகையாலிறந் துடலைப் பிரிந்தவுயிர் மறுவுடலிற்புகுந்து பிறக்குமென்பதுதூங்கினு ரிரவிற்கண்ட கனு வென்றுலொக்கு மென்று சூசை சொன்னன்.

காய், காய், காய், காய், மா, தேமா.

கூறியவிந்நிலையுளதேற்குன்றுடலு முடல்வனப்புங்குறையும்வா
மாறியவிந்நிலயுலகில்வழங்கியகானீதியிதோ வழுவோகூறாய் [ழ்வு
தேறியவிந்நிலைமிக்கோயென்றுசிவாசிவன்கேட்பத் தெளிந்தவார்
வத் [ன்மீண்டே.
தூறியவின்னிலைமதுச்சொற் பூங்கொடியோனுரிமறைநூலுரைத்தா

உரை.— சொன்னதைக்கேட்டுச் சிவாசிவன் மறுமொழிசொன்னன்; நீயுரைத்ததன்மை நல்லதாயினு மத்தன்மையுளதெனிற் சிலருடற்குறையோடு சிலர்குறையில்லா வழகியவடிவோடு பிறப்பதுஞ் சிலர் குறைபாட்டோடு வருந்தவுஞ் சிலர் செல்வத்தோடுவாழவும் பூவுலகிடத்துமாறுது நடக்கு முறையாகையின் முற்பிறப்பிற் செய்தவினையால் வாராதாயினது நீதியோகேடோ விந்நூலிற் றேறியவுணர்வினேய் நீயேசொல்லென் றவன்கேட்பத் தெளிந்தவன்பின்வாயூறிய வின்பமதுச்சொல்லுடைய பூங்கொடி யோன்சூசை மீளவும் வேதநூலுரைத்தான்.

ஆதியிலாவீறுமிலாவிணையின்றியென்றுமுளோ னமலனென்றே
பேதியிலாவானவருமெம்முயிரும்படைப்புண்ட பின்னீதில்லா
வோதியிலாமற்றுயிர்கள்முதலீறுள் ளனவெனவுரிநூலீதாய்
நீதியிலாநவையுறமுன்முதற்படைப்பெம் முயிர்கொண்டநிலைமை
[யென்னே.

உரை.— நிகராமுறையோடு துடக்கமு முடிவுமின்றி

யெக் காலங்களினு முள்ளோன் கடவுளொன்றேயென்றும் வேற்றுமையின்றி வானவரு மெம்முயிரும் படைப்புண்டு தொடக்கமுண்டாயினு மெக்காலத்து முடிவில்லையென்று மேலறிவில்லாத மற்றுயிர்கள்யாவிற்குந் தொடக்கமுமுடிவுமுண்டென்றும் வேதத்துரியநூலாகி நீதிதப்பிவரும் பாவங்களைச்செய்யுமுன்னே முந்திப் படைப்புண்டபோது மனிதருயிர்கள் முதலுடலிற் புகுந்திருந்த தன்மை யென்னே.

பார்முகத்தமுதலுடல்புக்கெம்முயிர்கடோன்றியகாற்பரிவற்றெ
[ல்லாச்
சீர்முகத்தவாழரசர்யாவருங்கொல் பன்முகத்தச்சென்றொன்னிற்
பேர்முகத்தவயத்திறையொனீதியதோ நீதியதேற்பிறழாநீதி [ன்.
யோர்முகத்தமுன்வினைகளின்றியின்று மிவ்விகிர்தமுளதாமென்று

உரை.— அங்ஙனம் படைப்புண்டமனிதருயிர்கள் முதலுடலிற்புகுந்து பூவுலகில் முந்தித்தோன்றின பொழுதே மனிதரெல்லாரு மெல்லாச் செல்வங்களை யுடையவராகித் துன்பமின்றி யிராசாக்களாகி வாழாநின்றாரோ வில்லையே, அங்ஙனம் நானுவிதமாய்வந்து தோன்றினராகி லது வளவிறந்ததிறத்துநாதனீதியோ வதுவேநீதியென்று மிக்காலத்தும் பூவுலகின் மனிதரிடத்துத்தோன்றிய வேற்றுமை முற்பிறப்பின் வினையின்றிப் பிறழாத நீதியாமென்றான் சூசை.

முற்பிறப்பின்விடங்கமுறத் தலைவிதிகாரணமென்றான்முன்பானீதி
[னச்
தற்பிறப்பினன்புயர்ந்தோன்வேறுபட விதியெழுதாந்தயவேதென்
சொற்பிறப்பினடங்காதான் திருவுளமேயெனவன்னுன்சூசைமீண்டே
[ன்றான்.
பிற்பிறப்பின்வீற்றியற்றுந்திருவுளமுந்தானென்றாற் பிழையோவெ

உரை.— அதற்குச் சிவாசிவன் எம்முதற்பிறப்பிற்றோன்றிய வேற்றுமைக் கவனவற் காண்டவன் றலையிலெழுதிய விதியின் வேற்றுமை காரணமாயிற்றென்றான், அதற்குச் சூசை நீதியின்றன்மையா லன்புடைய கடவு ளொருவனீசனுகவு மொருவனரசனுகவும் வேறுபட வவனவற்குத் தலை

விதியெழுதினது தயையோவென்றான், மறுத்துச் சிவாசி வன் சொல்லிலடங்காத கடவுளின் றிருவுளமே அத்தலைவிதி வேற்றுமைக்குக் காரணமென்றான். மீளவுஞ் சூசை அத் திருவுளமுந்தானே யிக்காலத்துத் தோன்றிய வேற்றுமைக் குக் காரணமென்று விதுகுறையென்பவோவென்றான்.

தெருட்செல்வமிக்கிறையோன்முட்டிலத்தும் பெய்முகிற்போற் சிந்திப்பெய்த [ருவாமாட்சி
பொருட்செல்வம்வறிதென்னப் பூரியர்க்குஞ்சால்பிறைப்பான்பொ
யருட்செல்வநசைக்களவாயாவருங்கைக் சொண்டோங்கவயமேதந் [தான்
மருட்செல்வமற்றெவையமாகியது வறப்பயனோ மதியின்மிக்கோய்.

உரை.— பூவுலகிற்செல்வரும் வறியருங்கலந்துநிற்பது கண்டல்லோ வந்தமயக்கமிது விதைத்தீர்ப்பக்கேள், மிக்க தெளிந்த ஞானத்துயர்ந்தகடவுள் முள்ளுளகாட்டிடத்தும் பெய்தமழையைப் போலத் தானுஞ்சிந்தியெறிந்த பொரு ளின்செல்வம் வீண்செல்வமென்று பாவிகளிடத்துந்திராளா ளா யிறைப்பான், நிகராதமாட்சியிற் சிறந்தவருளின் செல்வ மோவெ னிலவனவன்றன்னுசைக்களவாக வதைக்கைக்கொ ண்டுயரும்படி யெவர்க்கும் வல்லமையைத் தந்தான், ஆகை யின் மற்றதெல்லா மயக்குவிக்குஞ் செல்வமாகக் கொள்ள மதியின்மிக்கவனுகிய நீ யவைமுன்செய்த வறத்தின்பயனுக வருமென்று சொல்வாயோ.

சலத்தெல்லாமோர்நிலையோ தருக்கெல்லாமோர்கனியோதரணி யெங்கு [பல்லாய்க்
நிலத்தெல்லாமோர்விளைவோ நமக்கெல்லாமோர்முகமோநிலையும்
குலத்தெல்லாம்பொதுநின்று குன்றுச்சீரறமொன்றேகுறையொன் றின்றிப் [கார்.
புலத்தெல்லாமாகுமெனிற்புறவிகிர்த மொன்றெண்ணுர்புலமைமிக்

உரை.— பெய்தமழைநீரெல்லா மொருவகைநிலத்துச் சேருவதோ? மரத்திற்கெல்லா மொருவகைக்கனியோ? நில த்திற்கெல்லா மொருவகை விளைவோ? நமக்கெலாமொரு வகைமுகமோ? இவற்றோடு மற்றதெல்லா மழகினைப்பற்றி

வேறுபடத் தோன்றினதுபோல மனிதருந் தம்முள்வேறு படுநிலையுடையராகி யெல்லாநிலைக்கு மெல்லாக்குலத்திற்கு மெலியாதசெல்வமாக நல்லறமொன்றேபொது வாய்நிற்கும், இதுகுறையின்றி யெங்கு மெவர்க்கு மாகுமென்றமையால் மற்ற விகற்பமெல்லாஞ் சற்று மெண்ணா ருணர்வின் மிக்கார்.

காறுபடுந்திறத்திவன்மைப்பொருளவற்கே யிவற்கவன்மைக்கரும [ம்வேண்டி
வேறுபடுமனுக்குலமேயொருப்படுத்துமிருமையா மிடிவாழ்வன்றிக்
கூறுபடுந்திறத்தன்றும்வாழ்ந்தறவோரழத்தீயோர் குவவிற்காண்கி
லீறுபடுநாளில்வருமிருவினைவியாப்பயன்பின் பில்லையென்பார்.

உரை.— மீளவுமொருகண்ட சிராயிராமல் வறியருஞ் செல்வருங் கலந்திருப்பது உலகிற்கு நன்மையாம், அதே னென்னி லளவிட்டாற்போலச் செல்வன்மைப்பொருள்வறி யற்குவேண்டியிருக்கையி லிவன்செய்யுந் தொழில் செல்வ ற்கு வேண்டியதே, ஆகையால் நன்றாய்ப்பார்க்கில் வறுமை யுஞ் செல்வமும் வேறுபடாநிற்கு மனுக்குலத்தை யொருப் படத்தழுவாநிற்கு மிருமையாமே, ஆகிலுமறவோரெல்லாஞ் செல்வருந் தீயோரெல்லாம் வறியருமாகாமலே னென்னிற் கூறிட்டுப் பிரித்தாற் போல வுலகி லெப்பொழுதும் நல்லோர் வாழவுந் தீயோரழவு மனிதர்கண்டா லிதுவே பயனொழிய விறந்தபின்பு தீவினைக்கு நல்வினைக்கும் வரும் முடியாதவிரு வகைப் பயனில்லையென்பார்.

திறந்தகாவாழ்விதுவாய்த் திறம்பாவான்வாழ்வதெனத்தெளிய [நாமே
பிறந்தகாலுயர்குலமுஞ்சீர்த்திறமுந்தெரிந்திங்கண் பிறப்பாரின்றி
யிறந்தகாலுயர்வான்மேலிணையாவாழ்வுற்றாளு மியல்பொன்றன்றோ
மறந்தகா நல்வினைநாஞ் செய்யளவொத்தன்றெவர்க்குவழங்குமென் [றான்.

உரை.— சொன்னதன்மைத் திவ்வாழ்வுகள் திறமில்ல னவாகி வான்மேல் வரும் வாழ்வுகள் மாத்திரங் குறையாத நன்மையென்று நாந்தெளியும்படி யிப்பூவுலகிற் பிறக்கும்

போ துயர்ந்த குலமு நிறைந்த செல்வமுந் தமக்குத் தெரிந்து கொண்டு பிறப்பாரில்லாம லிறக்கும்போ தவனவன் வானு லகிலுள்ள நிகராத வாழ்வுகளைத் தான்வேண்டுமளவு மடைந் தங்கே யாளாகிற்குந்தன்மைமாத்திரம் பாவத்தை நீக்கி நல் வினைசெய்தவளவாக வெவர்க்கு மாகுமென்றுன்கூசை.

தலைவிதி யில்லை யென்கிற நியாயம்.

(27-ம். படலம். 107.)

விளம், விளம், மா, கூவிளம்.

தீட்டியவிதியலாற் செயப்படாச்செயுங்
கோட்டியவினைவிதிக் கோட்டமாமலால்
வாட்டியமனஞ்செயும் வடிவதோவிவ்வா
றீட்டியவறமற மிரண்டிலாமரோ.

உரை.— எழுதியதலைவிதியுண்டானு லதனைமறுத்துச் செய்யக்கூடா தொருவன் செய்யுங் கோணிய வினையென் னும் பாவமது தலைவிதியின் வளைவுங்குற்றமுமாமொழிய மெ லிந்த வவன்மனதின் குற்றமல்லவே, இங்ஙனே யறவினை செய்தாலுமது விதியறமொழிய மனத்தறமல்ல வாகையா லறமும் பாவமு மனிதர்க்கில்லை யென்னப்படுமே.

கனவுகளின் காரணங்கள்.

(௦)

(29-ம். படலம். 11, 12, 13, 14, 15.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

படம்புனைந்தெழுதினுற்போற் பகலிடையிருகண்ணேடைந்
திடம்புனைந்துணர்ந்தயாவு மெழுதியநினைவிரேன்றிக்

கடம்புனைந்திரிகைம்மாவுங் காகமுங்கண்டதொன்றிச்
சடம்புனைகனவில்யானை தலைகமேற்பறக்கக்காண்பார்.

உரை.— சித்திரப்படத்தை யெழுதினாற்போலப் பகலிலே கண் முதலைம்பொறிவழியா லுணர்ந்தயாவு நினைவிடத் தெழுதப்பட்டபின் பிராவிருளோடு வளர் கன வந்நினைவுகள் மயங்கக்கூட்டிப் பொய்யைத் தோற்றுவித்துப் பகலின் மதயானையும் பறக்குங்காக்கையுங் கண்டபின்பு கனவில் யானை யாகாயத்திற் பறப்பது காண்பார் சிலரோ (ஆகையாற் கண்டநினைவு கன முதற்காரணம்.)

தெருள்புறங்கொண்டவத்தஞ் சேர்ந்தடுத்தவற்றைக்காட்டு
மருள்புறங்கொள்கனவு மனங்கடுத்தவற்றைக்காட்டி
யருள்புறங்கொண்டதாயே யகன்றதன்மகவைக்காண்பாள்
வெருள்புறங்கண்டபேதை வினைப்படையெதிர்ப்பக்காண்பாள்.

உரை.— சொன்ன காரணமன்றித் தெளிந்த கண்ணாடி தன்னையடுத்தபொருளைக் காட்டுவதுபோல மயக்குவிக்குங் கனவு முளத்தைக்கடுத்த பொருளைக்காட்டியதனா லன்புடைய தா யகன்ற தன்மகனைக் கனவிற் காண்பாள், வெருவாநின்றபேதை தன்பயத்திற்குரிதாய்க் கனவிலெதிர்த்த படைகளைக்காண்பான். (ஆகையால் மனப்பற்றுத லிரண்டாங்காரணம்.)

காய்ந்தவோர்சுரமெய்நொந்தார் கடிமலர்ச்சுனைகள்காண்பார்
வேய்ந்தவோர்பழியைக்கொண்டார் வினைப்பகைமுரியக்காண்பார்
தேய்ந்தவோர்மிடியின்மிக்கார் திருநலமருவக்காண்பார்
வாய்ந்தவோர்பற்றல்பாலால் வருங்கனவுருவமாதோ.

உரை.— அங்ஙனஞ் சொன்ன விரண்டாங் காரணத்தாற் காய்ந்த சுரத்து மெய்வாதையாய்க்கிடந்தவர் தாகமிகுதியாற் கனவின்மதுமலர்பூத்த தடாகங்களைக்காண்பார், பிறர் மேற்பழியை மனதில்வைத்தவர் கனவி லப்பகைவர் கெட்டு முறியக்காண்பார், வறுமையால் மெலிந்தவர் கனவிற்றமக்குச் செல்வங்கள் வருவதைக்காண்பார், அங்ஙன மனதிலுள்ள பற்றுதலின் றன்மையாற் கனவிலு முருவந்தோன்றும்.

இருட்படப்புகைமொய்த்தென்ன வெஞ்சியவறிவுகுன்று
மருட்படப்புகைந்துமண்டி மலிந்தபித்தேறுங்காலைத்
தெருட்படத்தெளிந்ததேபோற் சீரிலகனவுகாட்டி
வெருட்படப்பதைத்துள்ளஞ்சி வினைகொள்வார்பித்தரன்றே.

உரை.— மீளவு மிருளாகும்படி புகைமொய்த்ததுபோல வறிவுமெலிந்து மயங்கும்படி புகைந்து பித்துமிஞ்சியேறினாற் றெளிவாக வொழுங்கில்லாத கனவைக்காட்டியதனால் வெருவிப் பதைத்து வினை கொண்டஞ்சா நிற்பார் பித்தர். (ஆகையால் பித்து மூன்றாங்காரணம்.)

விஞ்சியகாலைப்பித்து வினையினாற்பித்தர்செம்மை
யெஞ்சியநினைவுற்றாயா திழிவுறப்பிதற்றுஞ்சொல்லுந்
துஞ்சியகாலைமெய்போற் றோன்றியகனவுமொன்றா
யஞ்சியவுளத்திஃதெண்ணி லறிவிதோவென்றான்சூசை.

உரை.— சொன்னபித்து மிகவுமிஞ்சினால் விழித்தகாலத்து மொழுங்கில்லாதநினைவுகளைக்கொண் டொன்று மாராயாமற் பித்தரிகழப்படுஞ் சொல்லைப்பிதற்றுவார், அச்சொல்லுந் தூங்குகிறபோது மெய்போலத் தோன்றின கனவுமொக்கும், ஆகையால் மனதிலஞ்சும்படி பித்தர்பிதற்றினதை யெண்ணினாற்போலக் கண்ட கனவையு மெண்ணுவதறிவோவில்லை.

பேய் செய்யுந் தந்திர மாயை.

(24-ம். படலம். 48, 49, 50, 51, 52, 53, 54, 55.)

விளம், விளம், மா, கூவிளம்.

விண்ணின்மேல்வைத்தநன் றிழந்தவெம்பழி
மண்ணின்மேல்வைத்தமன் னுயிரின்வைத்தபேய்
கண்ணின்மேல்வைத்தமா சென்னக்காட்டிய
வெண்ணின்மேல்வைத்தவுட் கியற்றுமாயமே.

உரை.— வானுலகுள்ள நன்மைகளை யிழந்தமையாலு ட்கொண்ட பழியைப்பூவுலகுள்ள மனிதர்மேலேவைத்தபசாசுகள் கண்ணின் மேல் வைத்த மாசுபோல மனிதரைக் கெடுக்க வெண்ணப்படாதவகையா லவர்க்குப் பயம் வருத்துவித்துக் காட்டின பாவத்தொழிலிதே.

மாற்றரும்வஞ்சக மாயவித்தையா
லாற்றரும்வெருவிட னகங்கலங்கவே
போற்றரும்பழிவெறி புரைபுகுத்தலாற்
றேற்றருமழிவுறிச் சிதையும்பாரெலாம்.

உரை.— அங்ஙன மாற்றப்படாத வஞ்சக மாயவித்தைகளா லாற்றாதவெருவோ டுள்ளங் கலங்கும்படி காத்துவிலகுதற்கரிய பழியையுள்ள பசாசுகள் பாவங்களைவிளைவித்துத் தேறாதவழியோடு பூவுலகெல்லாங் கெட்டது.

இத்திறத்தாலன்றே யிருள்விரும்பிய
மைத்திறத்தடல்கொளு மண்ணகங்குலிற்
பொய்த்திறத்துருத்ததீக் கனவைப்பூத்தவர்
மெய்த்திறததுணர்வற விளைக்குந்தீமையே.

உரை.— இங்ஙனமல்லோ விருளை விரும்பி மயக்கத்தால் வல்லமை கொள்ளும்பேய்க ளிராவிலே பொய்யைக்காட்டித்தோற்றுவித்த கனவைக்கண்டவர் மெய்யிற் றெளியாமலறிவு கெட்டுப் பாவங்கள் விளைவன.

ஆசைசெய்சேயர்கொன் றலக்கண்செய்குவேன்
மாசைசெய்நலமற மிடிவருக்குவேன்
பூசைசெய்தெனைவணங் கிலாதபோதெனு
வோசைசெய்யுவரிபோ லுரைக்கும்பேய்களே.

உரை.— அங்ஙனம் வெருவிக்குங் கனவைக் காட்டி விரும்பின வுன்மக்களைக் கொன்று வருத்தம் விளைவிப்பேனென்றுஞ் செல்வங்களை மாற்றித் தாரித்திரத்தை வருத்துவிப்பேனென்றும் பூசைகொண்டென்னை வணங்காயாகிலென்று விளையினைக்குங் கடலொலிபோலப் பசாசுகளுங் கனவிலே சொல்லி மனிதரைமயக்குவிப்பன.

ஒலித்தலாலெவன்செயு முவரிபேயினங்
கலித்தலாலெவன்செயுங் கடவுள்சார்ந்தகாற்
சலித்தலாலெவன்செயும் பிணித்ததன்மையின்
வலித்தநாய்கடிக்குமோ மருவிலாமையே.

உரை.— உலகெலா மிழுங்கவேணு மென்றதுபோல வெப்பொழுது மிகவுமுழங்கா நின்றதனு னெடுங்கடல்தன் கரையின்மேற் பொங்கிச் செய்வதுண்டோ வில்லையே, அங்ஙன மாண்டவன் பாதத்தைச் சேர்ந்த காலத்து வெருவிடும்படி கூப்பிட்டாலும் பசாசுகளாலாவதொன்று மில்லை, மீளவுங் கட்டப்பட்ட நாய்குலைத்தாலு மதொழிய வென்ன செய்யும், கிட்டாதகாலத்துக் கடிக்குமோவில்லையே அங்ஙனம் பசாசுகள்.

பிணிப்பருங்குணத்தொடு பிணிபெயர்த்தறக்
குணிப்பருநலந்தருங் கொள்கைபேசுமால்
தணிப்பருந்தந்துயர் துடைக்கலாற்றிலாத்
தணிப்பருநரகழற் றழலத்தாழ்ந்தபேய்.

உரை.— மீளவு முடியாத தந் துன்பங்களைமாற்றித் துடைக்கமாட்டாமற் றணியாச்செந்தீநரகி லெக்காலத்தும் வேகும்படி விழுந்துகிடக்கின்ற பேய்களே மனிதர் கொண்ட தீராத வியாதிகளைத்தீர்க்கவு நினையாத நன்மைகளைத் தரவுஞ் செய்வோமென்று சொல்வன.

சுட்டிடைநரகுழி புதைத்தசோகுவா
ளட்டிடைதளர்ந்தனர்க் குறுதிநல்கலே
நெட்டிடைநெறிகளி லுதவிநேடினர்க்
கட்டிடைகரவர்வந் தமைதல்போலுமே.

உரை.— மீளவுந் தம்மை வணங்கினவர்க்குப் பரம கதி வாழ்க்கையைத் தருவோமென்று பேய்கள் சொல்லி மனிதரை யேய்ப்பன வாகையாற் றீயெரி நரகிற் புதைக்கப்பட்ட பசாசுகள் வான்கதிசேரும் வழியிற்றளர்ந்தவர்க்குத் தாமுதவிசெய்வ தெங்ஙனமென்னில், நெடும்வழித் துணையைத்

தேடினவர்க்குக் கொன்றுபறிக்குங்கள்ளர் துணையாகவமைந்த தன்மை போலவாகும்.

வெம்பியவஞ்சனை விளங்கிலாமையாற்
பம்பியபுலைபுனைந் தேய்த்தபாருளோர்
நம்பியவெறியொடு நரகில்வீழ்வதொன்
றம்பியவருளினு னழுதிரங்குவான்.

உரை.— அங்ஙனஞ் சினங்கொண்டு பசாசுகள் செய்யும் வஞ்சனை யுணராததன்மையா லேய்க்கப்பட்ட மனிதர் விடாமற்பாவங்களைக்கொண்டு தாம் நம்பினபேய்களோடுநரகத்திலே விழும்படி விழுவாரல்லோவென்று முன்சொன்னபடி பேய்கள் போர்செய்து வருகையிற் றயைமிகுந்த வெவனு மழுதிரங்காநிற்பான்.

வேத நிந்தனைக் காக்கினை.

(25-ம். படலம். 60, 61, 62, 63, 64, 65.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

தேறியதவத்தினிண்டு சிறந்தமோயிசனைநிந்தை
கூறியவபிரோன்றாத்தான் கோரனென்றவனையீண்டே
றிேயபுவிவிழுங்கிக் கேடுறவவனைச்சார்ந்தோ
ருறியவழலின்வெள்ளத் தொருங்கையம்பதவர்வெந்தார்.

உரை.— நெடுநாட்டேறின தவத்திற் சிறந்த மோயீசனென்பவனை யபிரோனுந் தாத்தானுங் கோரனு மென்னுமிம்மூவர் நிந்தித்ததனு லுடனே பிளந்த பூமி யவனைவிழுங்கினதன்றி யவரோடுசேர்ந்த விருநூற்றைம்பதுபேரும் பிளந்த பூமி வாயா லூறியெழுந்த செந்தீவெள்ளத்தமிழ்ந்தி வெந்துபோனர்.

பின்வியற்பொருவாவன்னான் பெருந்தகையிகழ்ந்துபேசு
மன்னியத்தவனோரோ ஒாயிரத்தேழுநூறும்
வன்னியத்தடத்திலும்பி வயச்சினத்திறைவனீதி
யுன்னியற்குள்ளங்கூச வொருங்குவெந்தடலையானார்.

உரை.— மீளவு நிகராவியல்பிற்சிறந்த வம்மோயிசனுடைய பெருமையையிகழ்ந்துபேசின வறிவின்மையா லங்கேதானே வல்லமைக்கொத்த சினத்தைக்காட்டிய வாண்டவனுடைய நீதியையுணர்ந்தமாத்திரத்தி னுள்ளங்கூசும்படியுடனேசெந்தீத் திரண்டெழுந்து பதினாலாயிரத்தெழுநூறுபேரும் வெந்துசாம்பலானார்.

தொகையிலாத்தகவிற்காட்சிச் சுடரொலிசேயென்பானைச்
சிகையிலாத்தலையவென்று சிறுவரொண்ணைந்திரண்டிர்
தகையிலாச்சொன்னபாலாற் சடத்திருகாடிபாய்ந்து
நகையிலாற்றியவோர்சொல்லா னடுங்கியார்த்தொருங்குமாய்ந்தார்.

உரை.— மீளவுந் தொகுக்கப்படாத மாட்சியிற்சிறந்துவரும்பொருட்களைக் காட்டுங்காட்சியின் சுடராகநின்ற தீர்க்கதரிசியாகிய எலிசேயு என்பவனை மயிரில்லாத்தலையனென்று சங்கைக்கேடாக நாற்பத்திரண்டு சிறுபிள்ளைகள் சொன்னமாத்திரத்திற் கொடியவிருகாடிகள் புறப்பட் டவர்மேற்பாய்ந்து நகைத்துச் சொன்ன வொரு சொற்காரணமாக வொருப்பட நடுங்கி யலறிச் செத்தார்.

ஈறடியில்லான்குன்றத் தெழுதியமறைக்கற்பேழை
தேறடியடிகளேந்திச் செல்லமற்றெவருமெண்ணைந்
நூறடியகலாத னுவன்றுதான்செய்தவேவ
லாறடியார்க்குந்தாரோ யாரணத்தறிதியன்றோ.

உரை.— மீளவு முடிவுமாதியுமில்லா நித்தியகடவுள் சீனயிமாமலைமேற் றந்தருளின வேதமெழுதப்பட்ட விருகல்லுள்ளடைத்தபேழையை நன்னெறிவழுவா வடியிற்றேறிய குருக்களேந்தி வழியேபோகையில் மற்றவர்யாவருமண்டாமல் நாலாயிரமடியள வகன்றுநிற்ப வாண்டவன்றானேசெய்தகட்டளையை வேதத்திலே யறிந்திருக்கிறாய் வண்டுகள் முழங்கு மதுமலர்மாலையை யணிந்தவனே.

செம்பதின்பிறப்பைபந்தோடுஞ் சிறப்பணிவனையப்பேழை
தம்பதிவரக்கைகூப்பாத் தருக்கொடுநோக்கக்கான்முற்
கொம்பதினிலைகள்போலக்குழைந்த பெற்சமித்தாரங்கண்
ணம்பதிணுயிரத்தெழமைந்தபத்தொருங்குவீழ்ந்தார்.

உரை.— மீளவுஞ் செம்புமுதற் பஞ்சலோகத்தாற் சிறப்பி லலங்கரித்த முன்சொன்ன மறைப்பேழை யொருநாள் பெற்சமித்தார் நாட்டிடத்து வருகையி லவர்கைகூப்பி வணங்கா தாங்கரத்தோ டதைப்பாராநின்று றென்றதனு லங்கே தானே பெருங்காற்றின்முகத்துக் கொம்பிற் குழையு மிலைகளைப்போல வெல்லாருங் குழையாநிற்க வவருள் ளைம்பதினு யிரத் தெழுபதுபேரும் விழுந்து செத்தார்.

அள்ளியவலையர்காப்ப ணரசனுமிறைஞ்சிச்செல்லத்
தெள்ளியமறையின்பேழை தேர்மிசைவரலிற்சாய்ந்து
விள்ளியவலங்கலோசன் விழுமெனக்கையாற்றீண்ட
வுள்ளியவுலகமஞ்ச வுருமுபட்டன்னமாண்டான்.

உரை.— மீளவுமொருநாள் திரண்டு வரும் படைவீரரினடுவே தாவிதனுகிய வரசன் வணக்கத்தோடு கூடவந்து செல்லத்தெளிந்தவேதமெழுதப்பட்டவிருகல்லுடையப்பேழைதானே தேரின்மேலெழுந்தருளச் செய்யும்போ தப்பேழைசாய்ந்து விழுமென்று மலர்ந்த மாலையையணிந்த வோசனென்பான் றனக்கு விலகினதென்றஞ்சாம லதைத் தாங்கும்படி கையாற்றீண்டினுன், தீண்டினவுடனே யிதை நினைத்தவளவி லுலகெலாமஞ்சும்படி யிடிபட்டாற் போல வங்கே விழுந்து செத்தான்.

சினக்கரன் படையு மவனுஞ் சங்காரமான வகை.

(29-ம். படலம். 64, 65; 66, 68, 72, 74, 75, 79.

விளம், விளம், மா, கூவிளம்.

வேற்கடல்பரிக்கடல் வேழந்தேரொடு
நாற்கடலொருப்பட நடுங்காற்றிசை
நீர்க்கடலெதிர்த்தென நினைப்பினெய்தின
னூற்கடல்வேர்துறை நகரைநோக்கினன்.

உரை.— வேலேந்திய காலாள் பரி கரி தேரொன்னு நாற்கடற்றனைக ளொருப்படச்சேர்த்து நாற்றிசைநடுங்கும்படி கருங்கடலெதிர்த்தாற்போல நினைத்தமாத்திரத் தங்கே சென்றசினக்கர னூற்கடலாய் நின்ற யூதராசனிருந்த எருசலேமென்னுமா நகரைக்கண்டான்.

கார்விளையிடி மொழிக் கதத்தில்யூதர்தஞ்
சீர்விளைமறைநலஞ் செகுத்துவந்துதன்
னீர்விளைமரையடி பணிதனேர்கிலாற்
போர்விளைசுடுமொழித் தூதுபோக்கினன்.

உரை.— அந்நகர்கண்டவளவில் மேகத்திடி யோடொத்த மொழியோடு சினந்தசினக்கரனொரு தூதனுப்பி யூதர் தமதுவேதத்தைவிட்டுத் தன்றமனைப்பாதத்தை வணங்கிக் கீழ்ப்படிய வுடன்படாராகிற் போர்முகத் தழிப்பா னென்னுஞ் சுடுமொழிசொல்ல விட்டான்.

காய், காய், காய், காய்.

கோனலமுங்குலநலமுங் குலத்துரியதொற்சுருதி
நூனலமுமவர்தொழுத நுனித்தவொருநாயகன்றன்
வானலமுமொன்றெண்ணு வளவறுந்தன்கடற்றனை
வேனலமொன்றூன்றியசொல் வெடித்தான்றூதுனைகொண்டான்.

உரை.— தூதுசொல்லப்போனவன் யூதர்க்கரசன்சமுக

த்திற்சென்றவளவி லவன்பெருமையு மவர்குலத்துயர்ச்சியு மக்குலத்துரிய வேத நன்மையு மவரால் வணங்கப்பட்ட கடவுளின் மாட்சியு மென்றிவையாவையு மெண்ணுமற் பேசித் தன்னளவிறந்தகடலோடொத்த தானையின்றிறத்தை யூன்றின கொடியசொற்களை வெடித்தான்.

உன்னல்லாலிவ்வுரைசெய் துய்வாராருன்னரச
னென்னல்லாலென்னிறைவ னிகன்றனபின்னென்னிறைவன்
றன்னல்லால்விடையிங்கட் சாற்றுவரார்சடுதிப்போய்
வின்னல்லாயிம்மொழியை விளம்பென்றுன்மறைக்கோமான்.

உரை.— அதற்குயூதர்க்கரசன் நீ தூதாகக்கொள்ளத் தப்பி யுன்னையல்லா தெம் வேதத்தையு மெங்கடவுளையு நிந்தித்துரைத்தபின் பெவர் தப்பிப்பிழைப்பார்? உன்னிராசாவு மென்னையல்லா தெங் நாதனைப்பகைத்தபின்ன ரவற்கு மறுமொழி யெங்நாதனேசொல்வான், இவனையல்லாதே சொல்வாருமில்லை, இதுவே மறுமொழியாக வுடனே போ யுன்னரசற்குச்சொல்வாய் வில்லின்வல்லோ யென்று னவ்வேதத்தரசன்.

சீர்மீதாடியசெருக்கிற் றெளியாக்கோனிவைகேட்டுப்
போர்மீதாடியசேனைப் பொலிவெண்ணுமறுத்தானே
கார்மீதாடியகொடிநீண் மாடநகர்காடாக்கிப்
பார்மீதாடியவெருவே படுநாளையெனத்துயின்றுன்.

உரை.— கொண்ட செல்வத்தினு மிக்காங்காரத்தாற் றெளியாதகோனுகிய சினக்கரன் றன் றூதுரைத்தயாவையுங்கேட்டுப் பேரொல்லாவற்றையும் வென்ற வென் சேனையின் மாசிட்டையையெண்ணுமல் மாற்றரச னென்சொல்லை மறுத்தானே? மேகத்தின் மேலாடாநிற்குங் கொடியின் மாளிகையுள்ள வந்நகர் நாளைக்காடாகவழித்துப் பூவுலகெங்கும் வெருவு படரும்படி செய்வேனென்று துயிலைக் கொண்டான்.

கோறுனுறெளிவளவின் னீதிவலோன்பகைத்திரவிற்
பாரறுனுங்கிரதமுகள் பரிகரிவாள்வில்வேலென்

ஞாறுநூங்கடருனே யற்றறக்கண்ணிமையாமுன்
னோறுநாறுறம்மூர்நா றுடையையாயிரர்மாய்ந்தார்.

உரை.— நிகரில்லாத ஞானத்தளவோடு நீதிவல்லோனாகியகடவுள் சினக்கரனைப்பகைத்தமையா லவ்விராவிடத்துப் பூமியைக்கீறு முயர்ந்ததேரும் பாய்ந்தகுதிரையு மதத்தயானையும் வீசியவாளும் வளைத்தவில்லுங் கூர்ந்தவேலுமென்றிவ்வாறுவகைத்தானைகள் முழுவதுமறும்படி நிமையோடு நிமை படுமுன்னே நூற்றெண்பத்தையாயிரம் பேருமிறந்துபட்டார்.

பானிறைவன்செக்கர்வான் பந்தற்கீழ்விளக்கேந்த
வீனிறைவனறுதானை யிற்றழிந்தநிலைகண்டான்
வானிறைவன்றிறங்கண்டான் வாழ்க்கையறநகைகண்டான்
முனிறைவனலனென்னத் தளர்ந்தஞ்சியோடினனால்.

உரை.— இவையெலா மிரவிலாகி விடியற்காலத்துச் சிவந்தவானமாகிய பந்தலின்கீழே சூரியன்றோன்றித் தன் கதிராகிய வொளிவிளக் கேந்தா நின்றவளவி லீனங் கொண்டசினக்கரன் றன்னுறுதானைக ளழிந்த தன்மையைக் கண்டான், உயர்வான்கடவுளின் றிறத்தைக்கண்டான், வாழ்விழந்தன்று தனக்குவந்தவிகழ்ச்சியைக்கண்டான், ஆண்டவற்கெதிராய்த் தானிராசாவல்லவென்று தளர்ந்தவுணர்வோடஞ்சியோடினான்.

நெடிதழுங்கிப்பெருங்களவ னீதிதிறத்திறந்தென்னக்
கொடிதழுங்கியெஞ்சவன்றக் கொலைகாணவிளியாக்கோன்
கடிதழுங்கியோடவெதிர் கடுகிநகையுய்த்தாயென்
றிடிதழுங்கிவீழ்ந்தனைய விருமைந்தர்காத்திறந்தான்.

உரை.— நீதிமுறையோடு பெருங்கள்ளன் நெடுநாள் வருத்தப்பட்டு வெட்டுண்டாற்போலக் கொடிதாய் வருந்தி மெலிந்துளத் துளையத் தன்படையழிந்த கொலையைக் காணும்படி யவ்விரவிற்கூடச் சாகாத சினக்கா னஞ்சி வினாவோடோடினவளவி லவனிருமக்க ளெதிர்வந்தெமக்கு நிந்தையை விளைவித்தாயென்று கோபித்து முழங்கின விடிமேல்விழுந்தாற்போல வவர்கையால் வெட்டுண்டுபட்டான்.

மூன்று யூதருக்கும் நபூக்கனுக்கும் எலியோதுரனுக்கும் நடந்தவதிசய வர்த்தமானம்.

(29-ம். படலம். 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

கொன்வளர்தருக்கிற்பொங்குங் குணத்தவன்பினர்தன்சாயற்
பொன்வளருருவமாக்கிப் பூண்வளர்சிறப்பின்மண்ணிப்
பின்வளரிழிவெண்ணுத பேதமைத்திறத்ததொன்றை
மன்வளர்தேவனுக வணங்கவென்றேவினுனே.

உரை.— வினையவளர்ந்த வாங்கார முட்பொங்கினபின்பு நபூக்கனென்னுமரசன் றன்சாயலாகப் பொன்னுலோருருவத்தையுண்டாக்கி மணிகளாலலங்கரித்து வருங்கேடெண்ணுத பேதமையால் வேறேதெய்வத்தை வணங்கா தவ்வுருவமொன்றினைத் தெய்வமாக வெவரும் வணங்கக்கட்டளையிட்டான்.

சீர்தங்கும்வயத்தொன்றுமெந் தேவனையன்றிமற்ற
வேர்தங்குமுருவத்தேவ ரிறைஞ்சிலேமென்னமூவர்
கார்தங்குமிடியிற்காய்ந்தோன் கடுகியவ்வியூதர்தம்மைப்
பீர்தங்குமுருத்தீச்சூளை பெய்மினீண்டென்றுன்மாதோ.

உரை.— அங்ஙன மவ னேவினவளவி லங்கேயிருந்தமூன்றுயூதர் திறத்தின் செல்வத்தொன்றுய் நிற்கு மெங்கள் கடவுளையன்றி யழகுபெறச்செய்த வுருவுளதேவரை வணங்கோமென்றூர், அதற்கு நபூக்கன் மேகத்திடிபோற் கோபித் திம்மூன்றுயூதரை வெருவிடுந்தன்மைத் தெரித்த சூளையிலுடனே போடுங்களென்றுன்.

வம்மியபுகையிற்சூளை வாயங்காந்தெரிந்தசெந்தீத்
தம்மியவ்வேவல்செய்தோர் தொகுவுயிர்நக்கிக்கோறிப்
பொம்மியவுவப்பின்மூவர் புணர்ந்தகட்டன்றிவேகாப்
பம்மியபைம்பூஞ்சோலைப் பதியெனவங்கண்வாழ்ந்தார்.

உரை.— அரசனிட்டவேவலைச்செய் தம்மூவரைக்கட்டிச் சேவகர் சூளையிற்போட்டவளவி லச்சூளைவாய்திறந்து மிழ்ந்தபுகையோடுபுறப்படவிட்ட செந்தீக் கொழுந்துக ளச்சேவகருயிரை நக்கிக்கொன்றபின் னுள்ளே கிடந்த யூதர் மிகவுமகிழாநிற்ப வவர் சுட்டெரித்த தொழியத் தா மெரியாமற் படர்ந்த மதுமலர்ச்சோலையிற் கிடந்தாற் போல வங்கே வாழா நின்றார்.

அங்கிலேகேட்டமன்ன னதிசயித்தனுகிநோக்க
வெங்கிலேச்சூளைநால்வர் மெலிவறவுவப்பக்கண்டே
யிங்கிலேவியப்பிற்பொங்கி யீண்டிவண்வம்மினென்னப்
பைங்கிலேமலரின்மூவர் பனிமுகத்தெய்திநின்றார்.

உரை.— இச்செய்தியைக் கேட்டரச னதிசயித்தணுகிப் பார்த்தவளவி லெரிந்த சூளையி னால்வர் மெலிவொன்றின்றி மகிழக்கண்டான், நால்வரைக்கண்டதனு லதிகமா யதிசயித்துடனே யிங்கேவாருங்களென் றவரை யழைத்தான், அவருங் குளிர்ந்த தமது மலர்முகத்து மூவராகவந்து நின்றார்.

நால்வருங்கண்டேன்மற்றோர் நவியனெங்கென்னவன்னோர்
மேல்வருந்திறத்தெங்தேவன் விட்டவிண்ணவன்றுனென்றார்
போல்வருமின்றியூதர் போற்றியகடவுள்மாண்பு
நூல்வருமறையின்சால்பு நோக்கினன்மருளுநீக்கான்.

உரை.— மூவர்நிற்பக் கண்டவரசன் சூளையி னால்வரைக்கண்டேனே, அழகிற் பொலிந்த மற்றொருவனெங்கேயென்றான். அதற்கவர் திறத்திலுயர்ந்த வெம்பிரான் நமக்காதரவாக வரவிட்டவானோ னவனேயென்றார். அங்ஙனம் யூதர் வணங்கிய நிகரில்லாத கடவுளின் மாட்சியும் வழுவாநூலி லுயர்ந்த வவர்வேதத்தின் பெருமையுந் தோன்றக் கண்ட நபூக்க னுங்காரத்தாற் கொண்ட மயக்கத்தை விடாதிருந்தான்.

தன்றிறத்தூக்கித்தேவன் றானெனவுணர்ந்தபாலாற்
பின்றிறத்தெவருமஞ்சப் பெருஞ்சினத்தன்னதேவன்

மன்றிறத்துயிரோமாறு மாவுருக்கொளீத்தன்னுண்டு
கொன்றிறத்தெஞ்சிக்காவிற் குனிந்துபுன்மேய்ந்துநின்றான்.

உரை.— அங்ஙனம் விடாதவாங்காரத்தாற் றன்னெல்லைக்குமே லுயர்ச்சி நினைத்த நபூக்கன் றன்னைத் தேவனென் றுணர்ந்த பாவத்தாற் பிற்காலத் தெவருமஞ்சுந் தன்மைத் தன்னகடவுளவன்மேல் வைத்த கோபமிகுதியா லவன் சாகாமற் பழைய தன்னுயிரிருக்க வுடலினுருவமாறி மிருகவடிவாய்த் தோன்றி யெவருமஞ்சித்தூரத்த வரசிழந்து நகருமிழந்து வினைய்வருந்திக் காட்டிற்றிரிந்து குனிந்தவுருவோடங்கே புல்லைமேய்ந்து நின்றான்.

ஏழ்வரும்வருடத்திவ்வா றிழிபடவிலங்கின்சாயற்
போழ்வருநெஞ்சினேகப் புணரறிவெஞ்சான்றன்னைத்
தாழ்வருமுளத்தந்நாதற் றாழ்ந்தபினுரித்தன்மெய்யுங்
கேழ்வருமுடியும்பெற்றுக் கெழும்விளக்கெவர்க்குமானான்.

உரை.— அங்ஙன மேழுவருடம் நிந்தைப்பட்டு மிருகச்சாயலாகத்திரிந்து மனிதர்க்குரிய வறிவு குறையாமனின்ற நபூக்கன் றுயராற் பிளந்தநெஞ்சில் வருந்தின பின்பு நல்லுணர்வடைந்து தன்னைத் தாழ்த்தி யூதர்வணங்கிய நாதனைத் தானும் வணங்கினான், வணங்கினதன்மையாற் பழைய தன் வடிவையு மிராசாங்கத்தையு மடைந்தவனா யன்னகடவுளின் மாட்சியை யுலகெலாமறியும்படி தான் பெருவிளக்கானான்.

மீட்டன்னாரிறைஞ்சுங்கோயின் மிக்கருந்திருவுண்டென்னக்
கேட்டந்நாட்டரசனேவ வெல்லியோதுரன்போய்க்கேழ்த்த
நாட்டன்னார்வெருவிளைய நண்ணியெண்ணிலகொல்வேங்கைக்
கூட்டன்னாரபயர்சூழக் கோயிலைவிரவிற்புக்கான்.

உரை.— மீளவும் யூதராண்டவனை வணங்குங் கோயிலிடத்துத் திரவியமிகுதியா யுண்டென்றுகேட்ட வந்நாட்டரசனதின்மேலாசைவைத் தெல்லியோதுரனென்பவனை யனுப்பினான். அவனும்போ யந்நாட்டி லெல்லாரும் வெருவிவருந்தும்படி கொல்லும் வேங்கையின் கூட்டம் போல வெண்ணப்படாத கொடியசேவகர் சூழவரச்சென்று கோயிலுட் புகுந்தான்.

புக்கனவளவில்வானிற் பொற்பரத்தொருவனேறு
மிக்கனசினக்கொக்கன்னுன் வியன்றமார்புதைத்துவீழ்த்தத்
தொக்கனவெவருமோடச் சூழிருவானேர்தோன்றி
நக்கனகதத்தன்ஞனை நண்ணிமத்திகையாற்பெய்தார்.

உரை.— அங்ஙன மவனக்கோயிற் புகுந்தவளவி லாகாயத்திலொருவன் பொற்கவசமணிந்து வெண்குதிரை மேற்றேன்றி யக்குதிரை மிகுந்த சினத்தோடு தெல்லியோதுரனை மார்பிலுதைக்க விவனுந் தரையில் விழுந்தான், கூடவந்த சேகவரெல்லாரு மொருங்குடனேடிப் போனர், மீளவு மிருவானவ ரிருபுடையிற்றேன்றிக் கையிலேந்திய குதிரைச்சம்மட்டியால் தெல்லியோதுரனை நகைப்பச்சினந்து மிகவு மடித்தார்.

ஈறுயிராகநிற்ப வினைந்திருங்குரவன்வேண்டி
வீறுயிராகத்தேற்றி விண்ணவரிருவரிவ்வாய்த்
தேறுயிரிறைவன்வாழ்த்தத் திசையெலாமுணர்த்தியென்ன
ஆறுயிருய்ந்துவாழ்நா ளுள்ளளவேத்தினனே.

உரை.— அங்ஙன மவன் சாகநிற்ப வக்கோயிற் பெரிய குரு வவன்மேலிரங்கி யாண்டவனை வேண்டினதினல் மேற்சொன்ன விருவானவரவனைத்தேற்றி யிவன் வேண்டுதலினற் றிரும்பினவுன்னுயி ராண்டவனை வாழ்த்தி நடந்தயாவையு மெங்குஞ் சொல்வாயாக வென்றார், அவனுமுயிர் பிழைத்தெழுந்து சாந்தனையும் யூதர்வணங்கும் நாதனை மிகப் புகழ்ந் தேத்தா நின்றான்.

இரண்டாம் பிரிவு.

திருப்பாடல்கள்

ஆகமனகாலத்திற்குந் துன்பகாலத்திற்கும் அஞ்ஞானிகள் மனந்திரும்பும்படி மன்றுடுவதற்கு முரிய பாடல்.

(5-ம். படலம். 17, 18, 19, 20, 21.)

மா, மா, காய், மா, மா, காய்.

ஒன்றுயாளுமரசேயென் னுயிர்க்கோர்நிலேயேதயைக்கடலே [மை
குன்றுவொளியேயருட்பரனே குணுங்கிங்கோச்சுங்கொடுங்கோன்
பின்றுவினேசெய்வதுநன்ருே பிறந்தப்பகையைத்தீர்த்தளிப்பச்
சென்றுலாகாதோவிரக்கஞ் செய்யக்குணித்தநாளெவனே.

உரை.— தனியே யுலகங்களெல்லா மாளு மிராசாவே யென்னுயிர்நிலேயே தயைநிறைந்தகடலே குறையாத வொளியே யருளினுயகனே பசாசுகளிவ்வுலகங் கொடுமை யாக வாண்டு முடியாத பகையும் வினையுஞ்செய்வது நல்லதோ? நீமனிதனுய்ப்பிறந்து பேய்ப்பகை தீர்த்தளிக்கவந்தா லாகாதோ? நீயெங்களுக்கிரக்கஞ் செய்யக் குறித்த நாளெப் போது.

மறையைப்பழித்தபொய்மதங்கள் மருட்டும்வினையாலொண்டவ
முறையைப்பழித்தசிற்றின்ப மூழ்குநசையாலென்றுமிதோ [த்தின்
வுறையைப்பழித்தவெண்ணிலமன் னுயிர்களெரிதீநரகெய்தத்
தறையைப்பழித்தபேயினங்கள் தவிராதீங்காள்வதுநன்ருே.

உரை.— வேதத்தைப் பழித்த பொய்யான மதங்கள் மயக்குவித்ததினுல் நற்றவத்தின் முறைகளைப்பழித்த சிற்றின் பத்தில் முழுகின வாசையினு லெப்பொழுது மிதோ மழைத் துளிபோல வெண்ணப்படாதவுயிர்கள் தீ நரகத்தில் விழுங்

தமிழ்ந்தப் பூவுலகங்கெடுத்த பசாசுகள் விடாமலாள் வதுநல் லதோ?

முன்னாளினிதினியுரைத்த முறையாற்பகைத்தவெறித்தலையை
யின்னாள்மனுவாயவதரித்தீங் கெய்திமிதிக்கிலாகாதோ
பன்னாளுலகங்கொண்டபழிப் பகையையெண்ணுவதுநன்றோ
வன்னாளெம்மேற்காட்டியபே ரன்பின்றெண்ணிலாகாதோ.

உரை.— முன்னே நீசொன்ன முறையோடு பகைத்த பேய்த்தலையைமிதிக்க விப்போது மனிதனா யவதரித்து நீ யெழுந்தருளி வந்தாலாகாதோ? பல நாளும்நாங்கள் செய்த பகை யாகிய பாவத்தை நீ மனதிலே குறையாக வெண்ணு வது நல்லதோ? அவதரித்துவருவேனென்ற நாளிலே யெங் கள் மேலிருந்த பெருந்தயை யிப்பொழுதும் பார்த்தாலாகா தோ.

தந்தைநோகவுணர்வின்றித் தவறுநின்றபிள்ளைகடஞ்
சிந்தைநோகப்பணிந்தடுத்தாற் சினந்ததாதையகற்றுவனோ
நிந்தையாகப்பிழைத்தெனினு நினக்கோர்பிள்ளையாயவெமக்
கெந்தையாகநீயென்று மிரங்காமுனிவதாங்கொல்லோ.

உரை.— தகப்பனுக்கு மனநோக வறியாமற் பிழைசெ ய்த மக்கள் தாமு நொந்து வணங்கித் தந்தை பாதத்தில் விழு ந்தா லவரைக் கோபித் தவன் தள்ளுவானோ? உன்னை நிந் தித்து நாங்கள் குற்றஞ் செய்திருந்தாலு முனக்கு நாங்களே பிள்ளைகளு மெங்களுக்கு நீ தகப்பனுமாகக் கொள்ள நீ யிர க்கம் புரியாம லெப்பொழுதுங் கோபங்காட்டுவா யோ?

பொறியைத்தவிர்த்தமாதவத்தோர் புலம்பற்கிரங்கிற்குறையென்
வறியைத்தவிர்த்தகுழவிகளு மழுதற்கினைந்தாற்றீதெனவோ [னோ
நெறியைத்தவிர்த்தவஞ்சமிக நேமிசிதைத்தாள்கொடுங்கோன்மை
வெறியைத்தவிர்த்தவயங்கொடுநீ வினைதீர்த்துதிப்பத்தடையென்
[னோ.

உரை.— தம்பொறிகளை யடக்கின மாதவத்தோர் புலம் பின வோசை கேட்டிரங்கினாற் குறையோ? வினைவழியாக் குழந்தைக ளழுமோசைக்கிரங்கினா லாகாதோ? நன்னெறி

களைக்கெடுக்கும் வஞ்சனை கொண்டாளுங் கொடிய பசாசுகளைத் தள்ளி யுன்வல்லமைகொண் டெங்கள் வினைகளைத் தீர்க்கவருதற் குனக்குத்தடையேதோ?

அவதரித்த திவ்வியநாதன் நமதுள்ளத்தில்வா மன்றுடிதற்கும் ஆகமன காலத்திற்கு முரியபாடல்.

(6-ம். படலம். 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42.)

விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

அறக்கடனீயேயருட்கடனீயே யருங்கருணாகரனீயே
திறக்கடனீயேதிருக்கடனீயே திருந்துளமொளிபடஞான
நிறக்கடனீயேநிகர்கடந்துலகி னிலையுநீயுயிருநீநிலைநான்
பெறக்கடனீயேதாயுநீயெனக்குப் பிதாவுநீயனைத்துநீயன்றோ.

உரை.— அறத்தின் கடலுநீ யருளின் கடலுநீ கருணாகரனுநீ திறத்தின் கடலுநீ செல்வத்தின் கடலுநீயுளந்தெளிய ஞானத்தின் கடலுநீ நிகரின்றியுலகினிலையு முயிருநீ நானிலைகொள்ளுங் கடலுநீ யெனக்குத்தாயும் பிதாவுமற்றனைத்துநீ.

கார்த்திரள்மறையாக்கடலினுண்மூழ்காக் கடையிலாதொளிர்பரஞ்சுடரோ
சீர்த்திரள்சுருட்டிமாறலையின்றி நிலைபெறுஞ்செல்வநற்கடலே
போர்த்திரள்பொருதக் கதுவிடாவரணே பூவனந்தாங்கியபொறையே
ரூர்த்திரள்பயக்குநோய்த்திரள் துடைத்துத் துகட்டுடைத்துயிர்தருமமுதே.

உரை.— மேகத்தினல் மறையாமலுங் கடலினுளியாமலு மோயாது விளங்கும் பரஞ்சோதியே! சுருண்டு மாறுமலைகளின்றி நிலைகொண்ட செல்வத்தின் கடலே! போர்முகத்தில் விரியாதவரணே! பூவுலகத்தைத்தாங்கு முயர்மலை

யே! துன்பந்தருநோய்களையுங் குற்றங்களையுந் தீர்த் துயி ராத்தரு மமுதே.

விண்கிழித்தோங்கிமின்பயில்கொடிஞ்சி வேய்ந்துயர்தேர்த்திரள் காப்போ [போ
கண்கிழித்தொளிபாய்வாட்டிரள்காப்போ கால்தவிர்பரித்திரள்காப்
மண்கிழித்தொழுகும்புனலெனச்சீறி மதம்பொழிகரித்திரள்காப் [போ
புண்கிழித்தடலார்காப்பதோநீயே புரந்துசெய்காப்பதுகாப்பே.

உரை.— மேகத்தைக்கிழித் துயரப்பட்ட வொளிவிடுஞ் சிகரமுள்ளதேரின்றிர ளுயிரைக்காக்குமோ? கண்கூச வொளிர்ந்தவாள்முத லாயுதத்திரள் காக்குமோ? காற்றிற்கு முந்துங் குதிரைத்திரள் காக்குமோ? பூமியைக்கிழித் தோடு மாறுபோலச்சீறி மதம்பொழியும் யானைத்திரள் காக்குமோ? புண்படுத்தி வல்லமையுடைய படைவீரர்காக்குமோ? நீயே புரந்துசெய்யுங் காவலே யினிதாய்க் காக்கும்.

வஞ்சினருளம்போலளக்கரிதாழ்ந்த வாருணத்திடைவழிகீண்டி
யஞ்சினர்நனையாக்கடக்கலேதந்தா யாறுநின்றதர்விடத்தந்தாய்
துஞ்சினர்சுகத்திலினிதமூவினையோர் சிகிக்கிடைகுளிர்ந்துறத்தந் தா [டோ.
யெஞ்சினருன்னைநம்பியதன்மைத் தியற்றவொன்றுனக்கரிதுண்

உரை.— வஞ்சினர்மனம்போ லளக்கப்படாத வாழங்கொண்ட கடலிடத்தில் வழியாக்கி யஞ்சினயூதர் நனையாமலதைகடக்கத்தந்தாய், சோர்தானென்னு நதிநின்றன்னார்க்கு வழி செய்யத்தந்தாய், நபூக்கன் சூளையிற்போட்ட மூன்றுவாலரும் நித்திரைகொள்பவர்போல வினிதாய் நெருப்பிடத்திற் குளிர்ந்திருக்கத் தந்தாய், குறைகொண்டயாவரு முன்னை நம்பினதன்மைக் கவரைக்காக்க வுனக்கரியதொன்றுண்டோ.

தலையெழும்வரையோடுயர்ந்தமற்றெவையுந் தகர்ப்பவானேறுமிழ் முகிலே [போ
முலையெழும்பயனேருமிழ்ந்தநீர்குழிவின் முடிகிவந்தினிதுறைவத

லலையெழுங்கடல்சூழ்புடவியிற்செருக்குற் றசடனைத்தாழ்த்திய லகையாற் [ய்.
கலையெழும்பயனுற்றாழ்குவனொடுத்துக் களிபடக்கருணையேசெய்வா

உரை.— உச்சிநிறுவினமலைகளு முயர்ந்த மற்றெவையு ந் தகர்க்க விடிகளைவிடுமேகந்தானே முலைப்பாலொப்பப்பொ ழிந்த துளிநீர் பள்ளத்தில்வந்து நிற்பது போல நீயு மலையெ ழுந்த கடல்சூழ்ந்த வுலகினுங்காரிகளைத் தாழ்த்தின கையா லுணர்வடைந்த வளவாகத் தாழ்ச்சியுடையானை யெடுத்துத் தூக்கிக் களிபடக்கிருபையைச் செய்வாய்.

வான்முகத்தெழூந்தீங்குவனையேநோக்கி மாலிதன்செழுங்கதிர்க் [கோலாற்
கான்முகத்தரிதோரோவியமென்னக் கடிமலரொழுதியவண்ண
னான்முகத்தடங்காதன்பிலென்றணிமை நோக்கிமுட்கான்பொரு வென்றுள் [வோ.
தேன்முகத்தவிழ்ந்தபூம்பொழிலொப்பத் திருத்தியநினதருட்களை

உரை.— வானத்தினின்று தாழ்வினிதாய் நோக்கின சூரியன் றன்கதிர்க்கோலாற் காட்டிடத்திற் சித்திரங்களைப் போல மலர்களையெழுதின தன்மையுணரப்படாதவன் பிணை லென்றணிமைநோக்கி முள்ளானிறைந்த கானகம் போலிரு ந்த வென்மனமேதேன் பொழிந்து மலர்ந்தபூந்தோட்ட நிக ராகத்திருத்தி யெனக்குச் செய்ததயை யளவுள்ளதோ?

காய்ந்தபோதழன்முன்வையெனவுன்முன் காய்ந்தெரியாதுண் [டோகருணை
யீய்ந்தபோதருத்திபின்னுறவளிப்பா யிருடவிர்காட்சியாலனைத்து
மாய்ந்தபோதிருளுமுள்ளமுங்கடந்தே யறிதிலாதேதுண்டோமனு [வாய்
வேய்ந்தபோதன்றேயென்னுயிரின்ப வேலையின்மூழ்குபசெய்வாய்.

உரை.— நீ சினந்தா லழலின்முன் வைக்கோலென்ன வெந்தழியாத துண்டோ? தயையுஞ்செய்தா லாசைக்குமே ற்கொடுப்பாய், இருளாதகாட்சியோ டெல்லாத்தையு மாரா ய்ந்தால் மறைவெல்லா முள்ளங்களெல்லாங் கடந்தறியாத

தொன்றில்லை, நீயவதரித்து மனிதனுய்த் தோன்றின நாளி லென்னுயி ரின்பக்கடலில் முழுகச் செய்வாய்.

வளிச்சிறையாகப்பொங்கலைகீண்டி மரக்கலம்போயினவழியு
மொளிச்சிறையாகவிண்டிசைகீண்டி யோதிமம்பறந்தனவழியு
மளிச்சிறையாகநினைவுசெல்வழியு மாய்ந்தவையடைகிறுமார்வக்
களிச்சிறையாகநீவரும்வழியே கண்டதையடைவதுபாலோ.

உரை.— காற்றிறகாகக் கொண்டு பொங்கிய கடலைக் கீண்டிக் கப்பல் போயினவழியுந் தன்னழ கிறகைக் கொண்டு விசும்பினைக்கீண்டி யன்னம் போயின வழியு மாசையிற காகக் கொண்டு நினைவுபோயின வழியு மடையப்படாதே யவற்றை யாராய்ந்தடைந்தாலு நீயுன் றயையிறகாகக் கொண்டு மனிதனுயவதரித் தெழுந்தருளி வரும் வழியைக் கண் டடையக்கூடுமோ?

உணங்கியமரத்திற்குயிர்வரும்பெய்தவுறையெனவருதியேயுலகிற்
கிணங்கியவிருளைச்சீய்க்கவெங்கதிர்கொள் ளிரவிபோல்வருதியேயெ
[ஞ்சா
தணங்கியற்றியவெம்பழம்பழிக்கூளிக் கரியெனவருதியேயுன்னை
வணங்கியநல்லோர்க்கருள்புரிந்தன்னை வருமெனவருதியேயன்றோ.

உரை.— உணர்ந்தமரத்திற் குயிராகப் பெய்த மழை போலவருவாயே, பூவுலகங்கொண்ட விருளை நீக்கிச் செங் கதிர்பரப்புஞ் சூரியனைப் போல வருவாயே, ஓயாத துன்பஞ் செய்யும் பழம் பழிகொண்ட பசாசுக்கோர் சிங்கம் போல வருவாயே, உன்னை வணங்கிய நல்லவர்க்குத் தயை செய்ய வொரு தாய்போல வருவாயே.

அவதரித்த நாதனை வாழ்த்தும் பாடல்.

(இதனைச் சுவாமி மனுஷாவதாரஞ்செய்த திருநாளிலே விசேஷமாய்ப் பாடத்தகும்.)

(7-ம் படலம். 31, 32, 33, 34, 35, 37, 38, 39, 40, 41, 42.)

மா, தேமா, மா, தேமா, மா, தேமா, விளம்.

நாளிதேயுவப்பஞால நசையமிழ்ந்திராவறக்
கோளிதேகடித்ததீது கொணர்குணுங்கினேயற
வாளிதேபிழைத்தநீச மனுமலிந்தகேடறப்
பீளிதேவியப்பவீடு பெறுவுகின்றவண்டரோ.

உரை.— பூவுலகங்களிகூர நாளிதுவே, மனதிற்காசை கொண்டுவிடு மிருளற்றொழியச்சுடரிதுவே, பொல்லாங்கெல்லாங் கொண்டுவிடும் பசாசுகள் செய்நோய் வேரோடறுக்கவாளிதுவே, பிழையுற்ற நீசமனுக்குல நிறைந்தடைந்தகேடற்றகலச் சூலிதுதானே, வான் வீடடைந்தவானே றொல்லாரு மதிசயிப்ப.

பெறுவுகின்றநாமவாகை பெருகுகின்றவேலினு
றுறுவுகின்றஞாலம்யாவு முளையவந்தபீடைக
ளிறுவுகின்றகாலமாக விளவனின்றநாதனைத்
துறுவுகின்றநூலினோடு துதிசெய்கின்றியாவரோ.

உரை.— தன்னுமெவெற்றிவேலுடையா னிறங்கியடைந்தபூமி முன்னர்நோகக்கொண்டபீடைகளை யறுத்தழிக்குங் காலமாகக் குழந்தையா யவதரித்த நாதனைக்கற்ற நூலின் முறைகொண் டெவர் நிகராகத்துதிப்பார்.

துதிசெய்கின்றியாருமுண்ட துகடுடைத்தநன்றியால்
விதிசெய்கின்றவேதநின்று மிலைதுடைத்தஞானமாய்க்
கதிசெய்கின்றவீறகன்ற கனிவுகுக்குவான்மிசை
பதிசெய்கின்றுவாழவொன்று பரிசிலக்கமாகுமோ.

உரை.— ஆகிலுங் கூடியவளவி லவனைத்துதிப்பவ ரெல்லாருந் தாங் கொண்ட பாவத்தைத் துடைத்த நன்மையினால் விதித்த வேதத்தின் முறையாற் றுன்பந்தீர்ந்த ஞானங் கொண்டு பரமகதியிலுள்ள முடியாத வின்பத்தை யடைந்து வான்மேல் குடிகளாய் வாழும்படிக்கு நாதனெடுத்த முறை விளக்கலரிதே.

இலக்கமாகநேமிமீதி லினிதெழும்பதங்கனீ
யுலக்கமாகவீதிதீத ரொழுகலின்றியுண்டதோம்
விலக்கமாகநாதனுகி மெலியமைந்தனென்றுளாய்க்
கலக்கமாகநேமிதேயு கடியகங்கலங்கவே.

உரை.— ஞானவிளக்கமாகப் பூமியிலெழுந்த சூரியனீயே தீயோர்கெட நன்னெறியில்வழுவிச் செய்த பாவத்தை விலக்கி நீக்க வானுலக நாதனுய்ச் சிறியதோர் மனுமகனுய் மயக்குவித்துப் பூவுலகினைக் கெடுக்கும் பசாசுகளுட் கலங்கி மயங்க.

அகங்கலங்கமுனையுடன்றி யழிவுகுங்குணுங்கினம்
நகங்கலங்கவுருமிழிந்த நடையில்மண்டெரிந்ததீச்
சகங்கலங்கவெருவடைந்து சடிதியின்றிழிந்ததா
முகங்கலங்கவுறுமரந்தை முடியமண்டலங்களே.

உரை.— உள்ளங் கலங்கப் போர் செய்தழிவு பயக்கும் பசாசுகளெல்லா மலைகளதிர விழுந்த விடிகள்போல நிறைந்தெரி தீயுலகமாகிய நரகமுங் கலங்க வின்றே வெருவியோர் கணத்திற் கீழேவிழுந்தனவா முகமுங்கலங்க மனிதர் கொண்டதுன்பமெல்லா மெங்குமுடியவே.

ஈறிலாமலேகிமூட ரீங்குநேடுசீரொலாஞ்
சேறிலாதசெறுவில்விட்ட சிதடர்செந்நெல்வித்ததே
மாறிலாதுநீடுவாழ்வு வானநாதனீகுவான்
பேறிலாதமனுவொடொத்த பிணியருந்தவுற்றுளான்.

உரை.— முடிவின்றி நீசரிங்கே தேடிய செல்வங்களெல்லாஞ் சேறில்லாதவயலிடத்திற் பேதையோர் விதைத்த

செந்நெல்விளையதாமே, வானுலக நாதனே யென்றால் மாறாமல் முடியாதவாழ்வுகளை மனிதர்க்களிப்பத் தானே நீசமனிதர்க்கொத்த பிணிகளை யநுபவிக்க மனிதனாய் வந்தான்.

உற்றமீனும்வானும்வான முற்றயாருமோயுமீ
றற்றவாஉசயோடுகூ சதிர்ப்பில்வாழ்த்துநாதனைக்
குற்றமாறிவாழுகோதை குக்கிகுழவாயசூல்
சொற்றவாயசீரதோ தொடுத்தபாவின்மாலையால்.

உரை.— மீன்களும் வானமும் வானத்தில் வழங்குகிற சகலருமோயாமலு முடியாமலும் பயந்துகூசி யாசையோடு வாழ்த்தின பரமநாதனைக் குற்ற மொன்றின்றி வாழுங் கன்னி தன்றிருவயிற்றிலடக்க வின்றேயாகியகருப்ப முறைமை மாலையாகத் தொடுத்த பாவினாற் சொல்லத்தக்கதோவில்லை.

தொடுத்தபாவைநிகரநீதி துடருநூலின்முறையினா
லடுத்தமூவுலகமியாவு மரியமூன்றுவிரலினாற்
றடுத்தவீரவெதிரிலாது தகவிருக்குபரமனை
யுடுத்தசூலிலரிதிருங்கு முவமியாதோர்விறலியே.

உரை.— சிதையாது வரும் பாடல்போலத் துடரு நீதி முறைதவறும லுலகமூன்றினையு மூன்று விரலாற்றாங்கித் தனக்குத்தடை செய்யவல்ல பகையொன்றில்லாதபரம நாதனைக் கொண்ட கருப்பத்தி லரிதாய்த்தாங்கினின்றாளொப்பில்லாததோர் பெண்ணே.

விறலியாலுயிர்த்தபாலன் விறலினாலுயர்ந்தரா
மறலினாலமைத்ததிது மரபினாலழிந்தறத்
திறலினால்மிதித்தகூளி சிரமெலாநெரிந்தடும்
மிறலினாலுகுத்தபாவம் விலகுவாள்விளங்குவான்.

உரை.— இத்திருப் பெண்தரும்பாலனே வீரங்கொண்டாதியிற் பாம்பினுருவங் கொண்ட பசாசின் பகையினால் வந்த தின்மை நன்றாயொழிந்தறத் தன்வல்லமை கொண்டப் பசாசுகள் தலையெல்லாநெரிய மிதித்துக் கொல்லுந் தன்மையினால் வந்த பாவங்களைவிலகி விளங்குவான்.

வான்விளங்கமண்விளங்க வந்தநாதன்வாழியே
மீன்விளங்கலேய்த்தமுத்து வேய்ந்தசிப்பிவாழியே
கான்விளங்கவுயிரளிக்கு கனியிராயன்வாழியே
தேன்விளங்குமலைகவிளாது தேறுகன்னிவாழியே.

உரை.— வானுமண்ணும் விளங்கவந்தநாதனே வாழி, மீன்களினு மொளிவிடுமுத்து சூலாகக்கொண்ட சிப்பியொத்தவளேவாழி, வாசம் பொழிந்துயிரைத்தருங் கனியொத்தவிராயனேவாழி, தேனுமிழ்ந்து மலராதவரும்பொத்த கன்னியே வாழி.

வாழிமைந்தருய்யமைந்த ஞயநாதன்வாழியே
வாழிநன்மையீகவின்மை மலிதயாபன்வாழியே
வாழிவாழுவானின்வாழ்வு மண்ணின்வாழ்வுவாழியே
வாழிகருணையாழிவாழி மதுரவாழிவாழியே.

உரை.— மனிதர்வாழ மனிதனுகிய நாதனேவாழி, பிறர்க்குச்செல்வந்தரத் தான்றரித்திரங்கொண்ட தாயாபரனே வாழி, வாழும் வானுலகிற்கும் மண்ணுலகிற்கும் வாழ்வானவனேவாழி, கருணைக்கடலேவாழி, மதுரக்கடலேவாழி.

அவதரித்த நாதனைத் துதித்த பாடல்.

(9-ம். படலம். 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82.
11-ம்.படலம். 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69.)

விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

காரொழுங்ககனத்தூர்ந்த கதிர்பலவுதித்தல்தந்தே
யேரொழுமணியும்பூவு மினியதீங்கனியுமற்றச்
சீரொழும்பொறித்தமாமை திரளைத்தனவெவையுந்தந்த
பேரொழுங்கருணையானே பின்னையுந்தன்னைத்தந்தான்.

உரை.— மேகங்கள் திரியுந் திசையின்மேலெழுந்த வானத்திலூர்ந்த சந்திரசூரிய நட்சத்திரங்களுதித்து விளங்கத்

தந்து வடிவழகுள்ள மணிகளையு மலர்களையு மினிய கனி களையு மெழுதப்பட்ட வழகினுற் சிறந்தமற்றதெல்லாத்தையு நமக்குத்தந்ததின்பின் னிக்காலத்திற் பெருங்கருணையுடைய நாத னவதரித்துத் தன்னையுந் தந்தான்.

நூனெறிவழங்காவண்ண நுதலியகருணைச்சால்பிற்
கூனெறிநரதேவாகித் தோன்றியபின்னரொக்கை
பானெறிபெருகுமின்பப் பரவைநாமூழ்கல்தந்து
வானெறிவழங்குந்தன்மை மண்ணிடைவழங்கான்கொல்லோ.

உரை.— கற்ருேர் நினையாத முறையை நினைத்த கருணை யின் மிகுதியா லெங்கத்தாவே யவதரித்த நரதேவனுய் வந்த பின்பு பாலினுற் பெருகின வின்பக்கடலி னுமினிதாய் மூழ்க வானத்தில் வழங்கினதன்மை பூவுலகிலும் வழங்கச்செய்யா னே.

கோலநற்படலைபைம்பூக் கூருகிர்விசித்தமாலை
சாலநற்கதிர்ப்பொன்பற்றுந் தடமணிப்படலைமற்ற
நீலநற்கடல்சூழ்பாரி னிகரறவலியவார்த்தி
ஞாலநற்றகவிலோங்க நாயகன்மனிதனுனன்.

உரை.— வடிவுள கோர்வையாக விறுகக்கட்டின பூமா லையும் விளங்கின பொன்னுற் கட்டின பெருமணிவடமுங் கருங்கடல் சூழ்ந்த பூவுலகிலுள்ள மற்றதெல்லாமு நிகராம லிருவுவத்தைவலியாக வொன்ருய்க்கட்டி மண்ணுலகு பெ ருமை யடைந்தோங்கக் கத்தாதானே மனிதனுன்.

பூட்டியபுணர்ச்சிப்பாலாற் புணரிருதுவங்கள்வேருய்க்
கூட்டியவொருவனுய குணத்தவன்மனுவுமென்பா
னீட்டியநலங்கள்குன்ரு விறைவனுமென்பானிவ்வாய்
சூட்டியகருணைநன்னூற் றுறைவலோறடையும்பாலோ.

உரை.— தெய்வத்துவமு மனுத்துவமு மென்றிரண் டையு மொன்ருய்க் கூட்டின புணர்ச்சி முறையினு லவ்விரு துவங்களிரண்டாய் நிற்பக் கூடினவிருபேராகாம லொருவ னேயாகி யதினு லவன்ருனே மனிதனென்றுந் தேவ நற்கு ணங்கள் குறையாததேவனென்றுஞ் சொல்லப்படு வானித்த

ன்மையா லாண்டவன் காட்டின கிருபையை நிறைந்த கல்வியினல்லோரு மடைந்துவிரித்துக்காட்டத் தகவரோ.

நஞ்சமிர்திரண்டுஞ்சேர்த்து நஞ்சுநல்லமிர்தமாமோ
விஞ்சவிர்பொன்னிற்சீருள் விசித்திருபசும்பொன்னுமோ
நெஞ்சவிர்கருணைபூண்ட நிமலன்றன்குணமுங்குன்று
வெஞ்சழிமனுவின்றன்மை யிறைமையோடுயர்த்தினனே.

உரை.— நஞ்சுமமிர்தமுமென் றிரண்டையுங் கலந்தாலமிர்தத்தின்குணங் குன்றுமொழிய நஞ்சுதா னமிர்தமாகாதே. விளங்கின பொன்னோடு செம்பினைக் கலந்தாற் பொன் மாற்றுக்குறையு மொழியச் செம்புதங்கமாகாதே, ஒளியணியாகக் கருணையைப்பூண்ட கடவுளோவென்றாற் றெய்வத்துவமு மனுத்துவமுமென்றிரண்டையுங் கூட்டிச் சேர்த்ததன்மையினாற் றேவத்துவமுங் குறைபடாமல் நீசமனுத்துவத்தைத் தூக்கித் தெய்வத்தொத்ததாக வுயர்த்தினன்.

கீழ்வரோசேர்ந்தமேலோர் கீழ்மையேமாறித்தாமுந்
தாழ்வரோயன்றித்தாழ்ந்தார் தகவுறவலியராரோ
வாழ்வரோயிறைவற்கொத்த வளமையுமுணர்வும்பண்புஞ்
சூழ்வரோபரமனற்றா டொழுதருகுவப்பிற்சேர்ந்தார்.

உரை.— இவ்வுலகில் நீசரைச் சேர்ந்த பெரியோர் தம் பெருமைகெட்டுத் தாமுநீசராவாரொழிய வந்நீசரைப்பெருமைபெறச் செய்ய வல்லவருண்டோ? கத்தாவினற்பாதத்தை வணங்கி யவனைச் சேர்ந்த மனிதரோவென்றாற் றங்குறைகள் தீர்ந் துளத்தில்வாழ்ந்து கத்தாவுக் கொத்த பெருமையுமறிவுங் குணமுமுதலிய நன்மைகளையடைந் தணியாகச்சூழ்ந்து கொள்வார்.

புருவளர்கதிர்கள்கோலாற் பொறித்ததோர்படத்தின்சாயல்
மருவளர்மலரும்வாமம் வளரினமணியும்பொன்னு
முருவளர்பருதிதோற்றி யுடைத்தொழிலெஞ்சாதன்
திருவளர்தயையின்சார்பு சிறொலாம்பயக்குமன்றே.

உரை.— பரப்பினகதிர்களின்கோலா லொருபடத்தை யெழுதினாற்போல வாசமலரையு மொளி மணிகளையுஞ் செம்

பொன்னையுந் தோற்றுவித்து வடிவுள சூரியன் செய்யுந் தொழிலைமறைக்க நன்மையோடு வளருங் கத்தாதயையின் சார்பு நமக்குச் செல்வங்கள் யெல்லாத்தையும் பயக்கும்.

மெய்வினையிடமைந்தின்றி விளங்கியகடவுளாகிப்
பொய்வினைபொறிகளட்டுப் புனைவினைநசையுமட்டுத்
துய்வினையுளத்திற்பொங்குந் துடர்பிறகாசலுக்கி
யைவினையுணர்வோரல்லா லனந்தனற்பாதஞ்சேரார்.

உரை.— சத்த பரிசரூப ரசகந்தமென் றந்தினையும்பொருந்தின வுடலில்லாது கடவுளரூபியாதலாற்பொய்யைக்காட்டின செவிமுதற் பஞ்சேந்திரியங்களை யடக்கிக் கொன்று பாவத்தைப்பயக்கு மாசையும் வெறுத்தொழித் தமையா லழுக்கறத் தூயமனதிலே பொங்கின தேவநட்பினை யிறகாகக் கொண்டு தந்நிலையின் மேலுயர்ந்து தெளிந்த ஞானமுடையோரொழியக் கடவுள் பாதத்தை யொருவருஞ்சேரார்.

செருவழிபொறிகளைந்துஞ் செருத்துத்தன்னிலையினுக்க
லருவழியென்றுதானே யங்கண்வானிறங்கிப்பாரிற்
கருவழிவந்தநாதன் கலைமுதிர்சுருதிகாட்ட
வுருவழிதோன்றிமாக்க ளுறவுறமகனுனே.

உரை.— போராடி யைம்பொறிகளையும் வென்றடக்கித் தன்னிலையின்மேலுயர்ந்து கடவுள் பாதத்தை யடைதற்கரிய வழியிதென்று கடவுள் தானே யழகியவானுலகத் தினின்றிறங்கிப் பூவுலகிற் கருப்பத்தின் வழியாக வவதரித்துக் கல்வி முதிர்ந்த வேதத்தை மனிதர்க்குக்காட்ட வரூபியானவ னுருவோடு தோன்றி மனிதருறவினைத் தேடித்தானே மனிதனுனன்.

கோனெறிகடந்தஞானங் கூறியெம்முயிர்கள்வாழ
வானெறிகடந்தபுண்போல் வருந்தவிற்கினிதோவன்பாற்
பானெறிகடந்தோயெம்மாற்பயனுனக்கிங்கொன்றுண்டோ
சேனெறிகடந்தநம்மைத் தேடிவந்தனைவாயன்றோ.

உரை.— மீன்களினுந் தெளிந்த ஞானங்களை யுணர்த்தி யென்னுண்டவனே யெங்களுயிர்கள் வாழ நீவானைக் கொ

ண்டு கிழித்தபுண்போல மனதில் வருந்துவ துனக்கினிதோ? பாவலராடையப்படாத வன்பினை யுடையோனே யெங்களா லுனக்குப்பய னென்றுண்டாமோ வாகுமென்றாற் போல வானினின்றிறங்கி யெங்களையிங்கே தேடிவந்து வருந்துவா யே.

மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.

மறமேவினர் கைவசமாகுபவிங்
குறமேவியகாதலுளாயினையோ
திறமேவியசீவனியேயமுதே
யறமேயருளே கருணாகரனே.

உரை.— பாவிகளுக்குக் கைவசமாக விவ்வுலகில்வரவா சை கொண்டாயோ? உயிரைத்தருமருந்தே யமுதே யறமே யருளே கருணாகரனே.

சிந்தாகுலவேலையுடைத்தசெயிர்
தந்தாகுலவாசைதகைத்தகணை
யுந்தாகுலநீயுலகோர்மகனாய்
வந்தாகுல மாகடல்மூழ்குவதோ.

உரை.— சிந்தாகுலக்கடலையுடைத் துலகெல்லாம் வெள்ளமாக மூடுதற்குக்காரணமாகிய பாவங்களை வருத்துவிக்கும் பொல்லாதவாசையை மறித்துத்தடுக்க வதற்கோர் கணையைப்போட நீயேயிங்கே மனிதனாய்வந்து துன்பக்கடலிலே மூழ்கிய மிழ்ந்துவாயோ.

தேன்றோய்நயநாமுனவாஞ்செயிர்தீர்
வான்றோயமுதொத்தமருந்திடவோ
வூன்றோயுடனாயுறுகைப்பயிர்வாய்
கான்றோய்மலரோயுயிர்செய்கனியே.

உரை.— தேனின்பத்தை யுண்டு நாஞ் செய்தபாவத்தைத் தீர்க்கவானினின்றுவந்த வமுதினைப் போலு மருந்தினையிடவோ நீயெடுத்த சரீரத்தில்வருநோய் துன்பங்களின் கசப்பினையுண்பாய் வாசமலரோடு முயிர்தருங்கனியோடு மொத்தவனே.

மண்ணோர்கள்வருந்திலவாழ்வயிற
விண்ணோர்தொழுமோர்தனிவேந்தனநீ
புண்ணாகவுடற்றுயர் பூத்திடவோ
கண்ணோர்மணியேகனிவாருயிரோ.

உரை.— பூவுலகத்தார் துன்பமின்றி வாழ்வதற்கே வானுலகத்தாரால் வணங்கப்பட்ட தனிவேந்தனாகியநீ யுன்னுடம்பிலே காயங்கள்பட்டு நொந்து துன்பங்களையடைவாயோ கண்மணியே யெனக்கினியவுயிரோ.

பைநாகமெனப்பலமின்னலெழீஇக்
கைநாகமெனக்கடிதார்த்துநிறை
பெய்நாகமெனப்பிறிர்வந்தனைகன்
மைநாகமெனவுருகோமனநாம்.

உரை.— படம்விரித்தாடும் பாம்புபோல மின்னி மதயானைபோல முழங்கி நிறையப் பெய்கின்ற மேகமேபோல நீ வானினின் றிறங்கிவந்தாய், நாமோவென்றால் கல்மலை போல மனதிலேயுருகா திருக்கின்றோமே.

அறவீடுமிலாரறிவீடுமிலார்
திறவீடுமிலாரிடைசேர்பயனா
லுறவீடுமிலாவுறைவீடுமிலாப்
புறவீடுமிலாப்பிணிபூத்தழுவாய்.

உரை.— அறமுமறிவுந் திறமுமில்லாத மானிடரிடத்தே நீசேர்ந்ததினாலல்லோ வுறமுறையாருதவியு மில்லாமற் புறவுதவியுமில்லாம லிருக்கும் வீடுமில்லாமல் நொந்தழுவாய் சுவாமி.

புகையாடியகாடெனுமிப்புவியே
பகையாடியதல்லதுபண்புளதோ
நகையாடுவர்நாளியெனக்கனுதி
மிகையாடுவர்நின் விழைவாற்றுவரே.

உரை.— சுடுகாடாகிய விவ்வுலகமுனக்குப் பகையைச் செய்வதொழிய நன்மைசெய்யாது, மானிடரெல்லாரு முன்னை நகைப்பார், நாய்கள்போல மேல்விழுந்து நெருங்கித் துன்பங்களைப் படுத்துவார். நீ துரிதங்களைப்படுதற் காசையோடே வந்தாயே யுன்னுசையை நன்று யாற்றுவார்.

பிணியாசையிலெய் தினையோபிணியே
யணியாசையின் மேனிலையாக்குவரோ
கணியாவருள்மாகைகருத்திதுவோ
மணியாரணியேமறையின்றிருவே.

உரை.— துன்பங்களை யாசைப்பட்டு வந்தாயோ? அவ்வாசையின்மேலுந் துன்பங்களைச் செய்வா ருலகத்தார், வரைவறுக்கப்படாத தயையின் மாகையெடுத்த கருத்திது வென்பவோ? மணியாற்கோர்த்த வாபரணமே வேதத்திற் கொரு செல்வமே.

இடிமொய்த்தன வெல்வையிருங்கரிகள்
பிடியைத்தழுவிப்பிணியாற்றுவன
மடியுற்றிளங்குஞ்சுகள்மாழ்குமென
முடிமொய்த்துவறமுற்பெடைதாங்குவன.

நெடுமூவுலகாக்கிய நீயெனினுஞ்
சுடுசூழழலாற்றிடவுஞ்சுழலப்
படுவிண்மழைதாங்கிடவும்பரிவற்
றிடுமொன்றில தாமருமாகையிதே.

இவையிரண்டுமொருதொடர்.

உரை.— இடியிடிக்குங்காலத்துக் காட்டானைகள் முதலாய்த் தும்பிக்கையாலே பெண்ணானைகளைத்தழுவி யாறுதல் செய்யுமாம், மழைபெய்யுங் காலத்துத் தமதிளங்குஞ்சுகள்கெட்டுச் சாகுமென்று பேடைகள்மேல் நின்று மழையைத்தாங்குமாம். ஆகிலுமுலக மூன்றினையு நீ யுண்டாக்கினனுயிருந்து முனக்குறைத்த கோடையின் வேகத்தையாற்றவுஞ் சுழன்று பெய்த மழையின் சாரலைத் தாங்கவு மாறுதலாக வொன்று மில்லாம லாவதிதுவரியமாகைதானே.

பொய்யாவிதியோய் பொருவாவருளோ
யுய்யாவுலகென்னி லுனக்கிழிவோ
வய்யாபயனிற்கித ளுகுவதோ
கொய்யாவலியேகுறையாத்திருவே.

உரை.— பொய்யைக் கொள்ளாத விதிகளை யுடையவனே! ஒப்பில்லாததயாபரனே! இவ்வுலகெல்லாம் வாழாமற்

கெட்டாலு மிதனாலுனக்குக் கேடுண்டோ வில்லையே, ஐயா விதனாலுனக்கு மிலாபமொன்றுண்டோ வில்லையே, கெடா தவல்லமையுங் குறையாத செல்வமுமுடையவனே.

தூங்குகிறதாய்த் தோன்றுந் திவ்வியபாலனைத் துதித்த பாடல்.

இதனைக் குழந்தையாகிய சேசுநாத சுவாமியுடைய திருச்சுரூபத்தின் முன்பாகப்பாடத்தகும்.

(10-ம். படலம், 136-முதல்-148 மட்டும்.

மா, மா, காய், மா, மா, காய்.

இருளேயணுகாமலுறவணுகா விரவிக்கொளியாந்திருவிழியை
மருளேயணுகாமூடுகின்றான் வானுமண்ணும்வழுவாதா
ளருளேமருளாவிவ்வுலகிற் கயர்வுமாறவயர்வில்லான்
றெருளேமருளாமனந்துயிலாத் தினைநான்களிப்பத்துயில்கின்றான்.

உரை.— இருளுமறைவுங் கிட்டாமற் சூரியனுக் கொளியாய் நின்ற திருவிழியை மயக்கமின்றி மூடினனே,வானுலகத்தையும் பூவுலகத்தையும் வழுவின்றியாளுந் தயைமயங்காமற் பூவுலகத்தோர் கொண்ட வயர்வினைத்தீர்க்க வயர்வில்லாதநாதன் றன்னறிவுமயங்காமலுந் தன்மனந் தூங்காமலு நான் பூரணமாய்க் களிகூரத் தூங்குகின்றானே.

களித்தகாளிலரும்புந்தென் காலேயினிதிங்கரும்புதியே
துளித்தானத்தேனரும்பத் துணர்நாண்மலர்காளரும்புதிரோ
விளித்தாகுமாங்குயில்காள் வினைதேன்பாவையரும்புதிரோ
யளித்தநாதனுன்கவிய வன்புதுயிலாத்துயில்கின்றான்.

உரை.— களித்தநாளிலே வீசுந்தென்றலே யினிதாயிங்கேவீசு, துளிதுளியாய் வாசமதுவைப்பொழியு நன்மலர்களே மலருங்கள், அழைத்த விளங்குயில்களே யினிய பா

விசையாற்பாடுங்கள், நம்மையிரட்சித்த நாதனே நான் களி கூரத்தன்னன்பு தூங்காமற்றூங்குகிருன்.

கண்பட்டுறங்கக்கண்டேனே கருணாகரனேகளிக்கடலே
புண்பட்டுளையுநெஞ்சிற்கோர் பொருவாமருந்தேயருளன்பே
மண்பட்டலையுங்கடலன்ன மருளென்னெஞ்சிற்குயிர்நிலையே
யெண்பட்டுயர்ந்தசெல்வரசே யெம்மேலிரங்குந்தயையிதுவோ.

உரை.— கண்ணை மூடியுறங்க வுன்னைக் கண்டேனே கருணாகரனே யின்பக்கடலே! புண்ணாகத் துன்பப்பட்டுளை ந்த யாவர்க்கு நிகராத வினியமருந்தே யருளானிறைந்தவன் பே! பூவுலகத்தைச் சூழ்ந்தலையுங் கடலோடொப்ப மயங்கு மென்னெஞ்சிற்குயிரே! எண்ணப்படாத வுயர்ந்த செல்வங் களையுடையவரசனே! எங்கள்மே லிரங்கிக்காட்டின தயை யிதோ.

வான்றோய்நயங்கள்பயந்தோய்நீ மண்டோய்துயர்நீத்தளித்தோ [ய்நீ
தேன்றோயின்பத்தமைந்தோய்நீ சேண்மேற்புகழப்படுவோய்நீ
நான்றோயுணர்வினுயர்ந்தோய்நீ நானென்றாகவவதரித்தே [யோ.
யூன்றோயுடல்கொண்டனவன்பி னுணர்விட்டெனக்குப்பணியா

உரை.— வான்வீட்டிலுள்ள வின்பங்களை யுளவாக்கி த்தந்தவனீயே, பூவுலகிலுள்ள துன்பங்களைத் தீர்த்திரட்சி த்தவனீயே, அரியபேரின்பத்தி லமைந்தவனீயே, வான் மே ற்றுதிக்கப்பட்டவனீயே, நானூராய்ந்தவுணர் வின்மேலுயர் ந்தவனீயே, என்னைப்போலாக வவதரித் தூனுள்ள வுடலைக் கொண்ட வன்பின்றன்மையைக் கண்டு கொள்க வுணர் வினைத்தந் தெனக்குத் திருவுளம்பற்றாயோ.

கோவீற்றிருந்துமகிழ்வோய்நீ குலையாவயத்தொப்புகழ்ந்தோய்நீ
நாவீற்றிருந்தபுகழ்மிக்க நனுகாக்காட்சிக்கிறையோய்நீ
பூவிற்றிருந்துநாம்வாழப் பூவந்திடருற்றழுவோய்நீ
யாவிற்றிராயோவென்னிதயத் ததற்கேயுறுதிபுரியாயோ.

உரை.— வான்மேல் வீற்றிருந்து மகிழ்ந்தவனீயே, கு ன்றாதவல்லமையா னிகரற்றவனீயே, பாவலர்நாவில் வீற்றி

ருந்த புகழ்களைக்கடந் தொருவனலடையப்படாத காட்சி யின் கத்தாநீயே, பூவுலகினுங்கள் வாழ்ந்திருக்கப் பூவுலகில் வந்து துயர்களைக் கொண் டழுதவனீயே, ஆ! என்னிருத யத்திலும் வீற்றிராயோ வதற்குதவியைச் செய்யாயோ.

நூல்வாய்ப்புகழ்மேலுயர்ந்தோய்நீ நோய்வாய்மருந்திற்கனிவோ [ய்நீ
கோல்வாய்கோடாநீதிநெறி கொண்டெவ்வுலகும்புரந்தோய்நீ
வேல்வாய்க்குருதிபாய்ந்திறப்ப மெய்கொண்டாயோவிதையறியாக்
கால்வாயிலைப்போறியங்கியவென் கருத்திற்குணர்வையுணர்த்தா [யோ.

உரை.— நூலின்படியே சொன்ன புகழ்ச்சியின்மே லுயர்ந்தவனீயே, புண்ணையாற்று மருந்திலுங் கனிந்தவனீ யே, செங்கோல்வளையாத நீதியின்முறையா லுலகங்களை யெல்லா மாண்டவனீயே, வேல்முதற் பலகருவிகளாற் றிரு விரத்தத்தைச் சிந்தியிறக்கவோ விவ்வுடலைக் கொண்டா யிதைக்கண்டு கொள்ளாமற் காற்றின் முகத்திலிலைகளாடின தன்மையி னில்லாமலாடுமென் கருத்திற் கான வுணர்களைப் படிப்பியாயோ.

நீர்பாயுலகிற்குயிரோய்நீ நிமிர்வீட்டுலகிற்குயிரோய்நீ
சீர்பாய்பாவிற்குறையோய்நீ திறண்கொண்டாள்வார்க்கடலோய்நீ
யேர்பாயிரவிக்கொளியோய்நீயெம்மேலிரங்கிப்பிறந்தனைநாஞ்
சூர்பாய்துகளற்றுய்வதற்குன் றுணைதாடொழும்பண்புணரா [யோ.

உரை.— கடல்சூழ்ந்த பூவுலகத்தோர்க்கு முயர்வான் விட்டுலகத்தோர்க்கு முயிர்நீயே, சீரைத்தொடுத்த பாவிற் குறைநீயே, திறங்கொண்டாள்பவர்க்கு வல்லமை நீயே, அழகியபருதிக் கொளிநீயே, எங்கள்மேல்வைத்த விரக்கத் தினுல் மனிதனுய்ப் பிறந்தாயே, நாங்களுந் துன்பங்களைச் செய்யும் பாவங்களை யொழித்துவாழ வுன்றிருவடிகளைவண ங்கு முறையை யுணர்த்தாயோ.

தேறுந்தயையின்முனிவோய்நீ, சினத்திற்கருள்செய்கனிவோய்நீ
கூறுங்கலையற்றுணர்வோய்நீ கூறுந்தொனியற்றுரைப்போய்நீ

மாறும்பொருள்யாவிலுநின்றே மாறுநிலைகொள்மரபோய்நீ
யீறுந்தவிர்ந்துன்புகழ்கடலாழ்ந் தெனக்கேககைாகாட்டருளாயோ.

உ ரை.— தேறினதயையோடு சினந்தவனீயே, கோப த்திலேயு மினிதாயருளைச் செய்தவனீயே, ஒருவன் சொல் லக் கல்வியைப்படியாம லெல்லாத்தையு மறிந்தவனீயே, சத் தப்படாம லெல்லாத்தையு முணைப்பவனீயே, மாறிவரும் பொருள்களெல்லாத்திற்கு முள்ளே நின்றதெல்லா மாறும் போது மாறுமனிலைபெற்றவனீயே, முடிவில்லாத வுன்புக ழின்கடலுள் ளாழ்ந்திருக்குமெனக் கதின்கரையைக் காட் டாயோ.

ஒளிநாக்கொடுவான்சுடர்புகழ வொளிநாக்கொடுபன்மணிபுகழக்
களிநாக்கொடுபற்புள்புகழக் கமழ்நாக்கொடுகாமலர்புகழத்
தெளிநாக்கொடுநீர்ப்புனல்புகழத் தினமேபுகழப்படுவோய்நீ
யளிநாக்கொடுநானுனைப்புகழ வறியாமூகையுணர்த்தாயோ.

உரை.— வானிற்றிரியும் பலசுடர்கள் தங்கதிரானு நவ மணிகள் தம்மொளியாலும் பறவைகள்களித்த தங்நாவினு லும் பூமலர்கள் தம்வாசனையாலு மாறுகள் தெளிந்த தந்தி ரையாலுங் முன்னைப்புகழ்ந்து தினமேபுகழப்பட்டவனீயே, நானுமென்னன்பினை நாக்காகக் கொண் டுன்னைப்புகழ்வத ற்கறியாத வூமையாகியவடியேனைப் படிப்பியாயோ.

என்றும்போற்றப்படுவோய்நீ யெங்குநிழற்றோர்குடையோய்நீ
முன்றுன்பொழுதற்றுளனோய்நீ முக்காலத்தோர்பொழுதோய்நீ
குன்றுந்தன்மைத்துறைபின்றக் குணியாவருள்செய்தாயதற்கே
யொன்றுந்தேருவென்னிதயத் துணர்வின்காட்சியளியாயோ.

உரை.— எப்போதும் வணங்கப்பட்டவனீயே, எங்கு மொருகுடையாய்நின்று நிழலைச் செய்தவனீயே, உனக்கு முன்பொழுதில்லா லெப்போது மிருந்தவநாதிநீயே, இறந் தகாலம் வருங்கால நிகழ்காலமென்று மூன்றுகாலமு மின்றி யொருபொழுதாய் நின்றவனீயே, எங்கள்சொல்பற்றுமற் குறையாய்ப்பின்றி நிற்பச் சொல்லத்தக்க முறையைக்கடந் து நாங்கள்நினையாதகிருபையயைச்செய்தாயே, இதற்கு நா

னென்றுந் தேறுமலிருப்பதுகண் டென்னிருதயத்துக்குக் காட்சியைத்தாராயோ.

என்றழுதானுள்ளுருகி யின்பக்கடலாழ்ந்தன்றாழ்ந்தான்
குன்றாவிறையோன்றயைக்கடலுட் குளித்தானீந்திக்கரைகாணான்
சென்றானென்னமெய்மறந்தே சிறிதோர்கானின்றுணர்ந்தவைவா
னின்றார்கண்டுள்ளதிசயிப்ப நிகரிலன்பான்மீண்டுரைப்பான்.

உரை.— இன்னவை குசைமாமுனிசொல்லி யின்பத்தினாலழு துள்ளுருகி யின்பக்கடலுள்ளமிழ்ந்தி யமிழ்ந்தினனே, கத்தாகுறையில்லாதுசெய்யுந் தயையின் கடலினுள் குளித்து நீந்திநீந்திக்கரையைக் காணான், பிறகு கரையிற் சென்றவனைப்போல வசைவின்றித் தன்மெய்மறந்து சிறிது நேரமிருந்தப்பொழுது நினைத்ததெல்லாம் வானவர்கண் டுள்ளதிசயித்துநிற்ப நிகராதவன்புடைய குசை மீளவுஞ் சொல்வான்.

அறந்தாய்தந்தைசுற்றமுமற் றனைத்துநீயேகதிநீயே
பிறந்தாயுலகிற்குயிரன்றேப்பிறந் தெந்துயருமெம்பகையுந்
அறந்தாயெங்கள்சிறைதீர்த்தாய் துகள்பூட்டியவீட்டுயர்வாயில்
திறந்தாயிவையாவருமறியத் திறன்செய்தருள்செய்திரங்காயோ.

உரை.— அறமுந்தாயுந்தந்தையுஞ் சுற்றத்தாரு மற்றதெல்லாமுநீயே, பரமகதியுநீயே, பூவுலகிற்குயிராகப் பிறந்தாயே, பிறந் தெங்கள்துன்பங்களையும் பகையையு மகற்றினாயே, எங்கள் சிறையைமீட்டாயே, நாங்கள் செய்தபாவ மடைத்த வான்வீட்டுவாசலைத் திறந்தாயே, இதெல்லாத் தையு மெல்லாரு மறியும்படிக் குன்வல்லமையுந் தயையுங் கொண்டிரங்கிச் செய்யாயோ.

குருவாய்வந்தோயொளிப்பாயோ கோதாரிருடீர்வெஞ்சுடரின்
றுருவாய்வந்தோயொளியாயோ வுயர்வானிகரோமன்கனியக்
கருவாய்வந்தோயிக்கருணைக் கண்கொண்டெவருங்களித்தறியத்
தருவாய்வந்தோயிலவன்பின் றகவோய்திருவோயுனைத்தொழுதும்.

உரை.— குருவாகவந்தநீ யிங்கே யொளித்திருப்பாயோ, பாவத்தால் வந்தவிருளைத் தீர்க்கு ஞானச்சுட குரு

வாகவந்த நீயொளியாயோ, உயர்ந்தவானுலகிற் கொப்பாகப் பூவுலகுங்களிகூரக் கருப்பத்தின் முறையா லவதரித்து வந்தநீயிந்தக் கிருபையைக் கண்ணாலேகண் டெல்லாருமினி தாயறியும்படி செய்வாயே, ஓயாதவன்பின் மாட்சிமையுடையோனே செல்வத்திருவோனே யுன்னைவணங்கி யாராதிக்கிறோம்.

விவரம்.

திவ்வியபாலனம்மைப்பற்றிப் பிறந்ததாழ்ச்சி தரித்திரவு பத்திரியமுள்ள விதத்தைத் தியானித்து மன்றாடினு லிப்பாவிற்கேட்டவுணர்ச்சிகளைத் தந்தருளுவானென்பதற்குச் சந்தேகமில்லை.

சலப்பிரளையத்தை நினைத்து அவதரித்த விரட்சகனைத் துதித்த பாடல்.

(14-ம். படலம். 123, 124, 125.)

கருவிளம், கருவிளம், கருவிளம். கருவிளம்.
(ஈற்றடியீற்றுச்சீர் புளிமாவெனமுடிந்தது)

மருடருமறுவற மழைதருமடிவற
வருடருகுருதியி னடைமழைதருகுவை
யருடருகுருதியி னடைமழைதருகுநின்
சுருடருமதுமல ரிணையடிதொழுதும்.

உரை.— மயக்கத்தால்வந்த பாவங்களை யறுக்கும்படி முன்னாளிலே யளவின்றிப் பெய்தமழை தந்தகேடுகள் போயருளைப்பொழியு மடைமழையாக வுன் திவ்வியவிரத்தத்தைச் சிந்த மனிதனாய்வந்தவனே யிந்தத்தயையைப்பற்றி யுன்றுமனா மலர்ப்பாதத்தை வணங்குகிறோம்.

சினவழிதெரிகில நயைவழிதெரிகில
மனவழியடைகில மாபுயர்கடவுளே
மனவழியடைகில மாபுயர்கடவுணின்
றனவழியொளிரரு டகுமடிதொழுதும்.

உரை.— உன்சினத்தின்வழியு முன் றயையின்வழியு மொருவனுற் றெரியப்படாம லுணர்வெல்லாங் கடந்த வுயர்ந்த குணத்தையுடைய கடவுளே யத்தன்மையைப் பற்றிப் பொன்னுல் விளங்கி யருளைத்தரு முன்பாதத்தை வணங்குகிறோம்.

மெலியுலகழிவுற வெருவிடவெகுளினை
மலியுலகுயிருற மகவுருவடிவினை
மலியுலகுயிருற மகவுருவடிவநின்
வலியுலகுணர்வுற மலரடிதொழுதும்.

உரை.— பூவுலகெல்லா மெலிந்தழியும்படி யந்நாளிலே வெருவிட்டு வெகுண்டாயே, இந்நாளோவென்னி னுலகெல்லாந்தன் வினைதீர்த்து நல்லுயிரைப்பெறும்படி மனிதனையுதித்தாயே, உலகத்தையிரட்சிக்கும்படி யிங்ஙனம் வந்தவனே, உன்வல்லமையை யுலகெல்லாமறியச் செய்யும்படி யுன் மலர்ப்பாதத்தை வணங்குகிறோம்.

திவ்விய விரட்சகனைப் புகழ்ந்த பாடல்.

(14-ம். படலம். 139, 140, 141.)

மாங்காய், தேமா, மாங்காய், தேமா, மாங்காய், தேமா, புளிமா.

மாற்றாமாய்த்தகதநீதிமாற்றி மாற்றாயாற்றமனுவா
யேற்றாயேற்றவடுகோலநீக்கி யேற்றாயேற்றவிழிந்தே
தேற்றாயாற்றவமுதாவிவாழ்த தேற்றாயுய்ப்பமடிவா
யாற்றாயாற்றுமருளாய்ந்தியாரு னருவீரவாண்மையறிவார்.

உரை.— உன்னைப்பகைத்தவரைக் கொல்லும்படி சினந்த நீதியைமாற்றி யப்பகைவரை யிரட்சிக்கும்படி மனிதனு

யுன்னை வணங்காதவரை வெட்டியழிக்குங் காலம் போக்கி யவரையும் மோக்ஷக்கரையேற்றும்படி காலமாகி நீயிப்பூவுலகிலிறங்கித் தேறுதலின்றி வருந்தினரை யாறுதல் செய்து பேணும்படி நீயழுது தம்முயிர்பிழைக்கும் வகை யில்லாதரைப்பிழைப்பிக்கும்படி நீ யுன்னுயிரைச் செலவழித்து மடிவாயாறுதலில்லாத பாவிகளுக்காறுதல்செய்யுமித்தயையை யாராய்ந் துனதரியவல்லமையாரறியவல்லார்?

ஒருநாதனென்றுதனியேகனின்று மொருமூவரொன்றுபெயராய்க்
குருவாகிவந்துதணவாதகன்று குறுகாதுமெங்குமுளனுயப் [யா
பொருளாதியென்றுபொருடோறுநின்று பொருடோறழிந்துசிதை
யருவாகிநின்றுமுருவோயியாரு னருவீரவாண்மையறிவார்.

உரை.— நீதேவசுபாவ முறையாற் றுணையின்றி யொரோ யொருகடவுளா யேகனுமாய்நின்று மாள்வகையினல் மூவரிலொருவனாய் நின்று எப்பொழுது மெங்கு முளவனுயினு மொருகாலத்துக் குருவாகவந்தாயென்று முன்னிருந்தவிடத்தை விடாமலு மகன்றுயென்று முன்னளவிறந்த சுபாவங்குறுகாம லொவ்வொரு குறுகியவிடத்து முழுது நிற்பாயென்றுஞ் சொல்லப்படுவாய், பொரு ளெல்லாத்திற்கு மாதிகாரணமே நீயாகி யெப்பொருளிடத்திலு நிற்பாய், அப்பொருளழியுங் காலத்துக் கூடநின்ற நீ கூடவழியாய், அரூபியாய்நின்று மிக்காலத்துருவானாய், ஆதலா லிவ்வுலகிலுனதரியவல்லமையறியும்படி வல்லவரார்.

வினையொன்றுமின்றிவினைசெய்துசெய்த வினைதன்னிலொன்றும் [விழையாய்
நினைவொன்றுமின்றிமறவொன்றுமின்றி நிகிலந்தெரிந்தநிலவாய்
முனைவொன்றுமின்றிமுனிவாய்முனிந்து முதிர்கின்றவன்புமுயல் [வா
யனையொன்றுமின்றியுயர்வோயியாரு னருவீரவாண்மையறிவார்.

உரை.— வினையொன்றுங் கொள்ளாம லாக்கல் காத்தலழித்தலென்னும் வினையெல்லா நீயொருவனே செய்து செய்தவினைகளிலே யுனக்கிலாபந்தேடாய், இறப்பெதிர் நிக

மென்னு முக்காலமு முனக்கொன்று யெல்லா நிகழ்கால மாகி யெல்லாவற்றையு மப்பொழுதே யாகும்பொருளைப் போலக் கண்டறிந்தமையா லுனக்கு நினைவுமில்லை மறதியு மில்லை, இங்ஙன மெல்லாவற்றையு மறிந்தவொளியே! நீமய க்குவிக்குங் கோப மொன்றுமின்றிக் கோபிப்பாய், கோபி த்தவிடத்து நிறைந்த தயையைச் செய்வாய், இங்ஙன முவ மையொன்றின்றி யுயரிய குணங்களையுடையோனே! இவ் வுலகினுன தரியவல்லமையறியும்படி வல்லவரார்?

(15-ம். படலம். 183, 184, 185.)

கருவிளம், கருவிளங்காய், கருவிளம், கருவிளங்காய்.

மருடருவலியுருவே மருளறுசினவுருவே
யருடருதயையுருவே யளவறுதிருவுருவே
தெருடருகலையுருவே செயிரறுமனுவுருவே
பொருடருமணியுருவே பொழிமணவடிதொழுதேன்.

உரை.— பிறரஞ்சி மயங்குதற்குங் காரணமாகிய வல் லமையுடையோனே, தான் மயக்கமின்றிச் சினத்தைக் கொண்டோனே, அருளின்மிக்க தயையுருவோனே, அளவி றந்த செல்வத்தின் மிக்கோனே, தெளிந்த கல்வியினுருவே. பூவுலகங்கொண்ட பாவவினையறும்படி மனுக்கோலத்தை யெடுத்தோனே, பொன்னிற்பதித்த மாணிக்கவடிவோனே, உனதுவாசமலர்ப் பாதத்தைத்தொழுதேன்.

உரையிலகலைநிலையே யுயரறமடையுரையே
கரையிலபடர்கடலே கதியுயிர்பெறுகரையே
வரையிலசுகநிலையே வளர்தவமடைவரையே
புரையிலமனுமகனே பொதிமலரடிதொழுதேன்.

உரை.— காதிற்குப் புலனாகிய வொலியைக் கொண்ட வுரையொன்றின்றிக் கல்வியெல்லா முணர்த்து நிலையே! உயர்ந்தவறமொன்றே யடையுமுரையே. கரையில்லாத சக லநன்மை நிறைந்தகடலே. கதியிற்சென்ற வுயிர்களடையுங் கரையே, மட்டில்லாத சுகவானந்தநிலையே, வளர்ந்ததவ மொன்றே சேர்ந்தடையுமலையே, ஒப்பில்லாத தன்மைத்து

மனுமகனானவனே, உனது பொதியாய்மலர்ந்த திருப்பாதத்தைத் தொழுதேன்.

மருமலிமலர்நிழலே மறைமலியுயர்பயனே
திருமலிகாரமுகிலே சிவமலிதனிமுதலே
யிருமலியுலகுளரோ யிணைரொடுதொழுமடியே
குருமலியறநெறியே கொழுமலரடிதொழுதேன்.

உரை.— வாசமலர்ச் சோலை யொத்த வருளானிழல் செய்தளித்தவனே, வேதம்நமக்குப் பயன்றரும்படி வந்தவனே, செல்வ நன்மைகளைப் பொழியு மேகமொத்த கையுள்ளவனே, மோட்சத்தைத்தருந் தனிமுதலோனே, வானுலகத்தோரும் பூவுலகத்தோரு மலரைச்சாத்தி வணங்கப்பட்ட திருப்பாதத்தை யுடையோனே, ஈங்கவதரித்துக் குருவாக வந்து நல்லறத்தின் வழுவாநெறியே, உனது திருமலர்ப் பாதத்தைத் தொழுதேன்.

சேசுவென்னுந் திருநாமத்தைப் புகழும் பாடல்.

(11-ம். படலம். 97, 98, 99, 100. இவ்விருத்தங்களை 47, 48-ம் பக்கங்களில்காண்க.)

திவ்வியபாலன் எருசலேமாநகரத்துத் தேவாலயத்திற் காணிக்கையாக வொப்புக் கொடுக்கப்பட்ட திருநாளுக்குரிய பாடல்.

(12-ம். படலம், 80, 81, 82.)

வெண்பாவிற்குரியவோசையால்வந்த விருத்தங்கள்.

பாற்கடலென்னுள்ளப் பதுமமலரும்ப
நாற்கடலேயீங்குதித்தாய் நும்மலர்க்கண்முத்தரும்ப
நும்மலர்க்கண்முத்தரும்ப நோய்செய்வினைசெய்தே
மெம்மலர்க்கண்முத்தரும்ப வின்றுவினைதீர்த்தாய்.

உரை.— பாற்கடலிலே மலர்ந்த தாமரைபோல வென்னுள்ள மினிதாய் மலரும்படி வேத நூல்முதலிய நூலெல்லா மடங்கக்கொண்ட கடலாகியநீ யுன்கண்மலர் முத்தாகிய கண்ணீரைப் பொழியத் துன்பமடைதற்கு மனுவாய்த் தோன்றினையே, நீயக்கண்ணீரையமும்படி யுனக்கு நோகநாமெல்லாரும் வினைசெய்தோ மின்றோவென்னி லின்பமிகுதியால் நாமுங் கண்ணீரைவிடும்படி நம்முடைய வினையெல்லாம் நீயேயின்று தீர்த்தாய்.

வினைதீர்ப்பவெய்தி வினைகொண்டாய்பாவப்
புனைதீர்ப்பவிங்குமனுப் பூட்சிச்சிறைகொண்டாய்
பூட்சிச்சிறைகொண்ட புல்லென்னுயிர்போயுன்
காட்சிச்சிறைகொண்டு கண்டேன்கதிநிலையே.

உரை.— என்வினையைத் தீர்க்கும்படி வந்து நீதுன்பங்களைக் கொண்டாயே, பாவமெனக்கிட்ட தளைகளையறுத்தென்னை மீட்கும்படி நீ மனுவுடலைச் சிறையாகக் கொண்டாயே, நானித்தயையையாராய்ந் தடைந்தவின்ப மிகுதியாலென்புல்லுயிருந் தன்னுடற் சிறையை விட்டுன்னைக் கண்ட காட்சியே சிறகாகக் கொண்டுபோய்ப் பரமகதியினிலையைக் கண்ட தன்மைபோல வாயிற்று.

கண்டேன்கதிநிலையே கண்டியிரொன்பூண்பலினி
யுண்டேனுயிராயன் புன்னடியைச்சூடினே
னுன்னடியைச்சூடி யுனையணுகான்றன்வினையே
தன்னடியைச்சூழ்ந்துதைப்பச் சுட்டெரிவீழ்ந்தாழ்வானே.

உரை.— உன்னைக்கண்டு பரமகதியைக் கண்டதன்மை போலாகிக் கண்டபின்பு நானிவ்வுயிரை யினியேன் வைத்துக் கொண்டிருப்பேன், உன்றிருப்பாதத்தைத் தலையணியாயாகச்சூடி யுன்னன்பினை யுயிராக வுட்கொண்டேனே யித்தன்மைத் துன்றிருப்பாதத்தைச்சூடி யுன்னை யணுகாதவன் றன்வினையே தன்னடியைவிடாது கட்டிக் கொண்டு அவ்வினைதானே யவனையுதைத்துத் தள்ளுதலினவன்சுடு மெரிநரகில்விழுந் தாழ்ந்தமிழ்ந்துவானே.

மாசில்லாக் குழந்தைகளைப் பரகதியிற் சேர்த் திரட்சித்த தேவகுமாரனைத்துதித்த பாடல்.

(25-ம். படலம். 91, 92, 93, 94, 95, 96, 97, 98).

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

ஆலமேயமுதாக்கிய பான்மையாற்
சீலமேவிலன்செய் பகைதம்முயிர்
காலமேனியிறந்தனர்காந்திசெய்
கோலமேவுருக்கொண்டெழநல்கினாய்.

உரை.— என்னாண்டவனே யுயிரைக் கொல்லு நஞ்சினை நல்லமுதாகச் செய்தாற்போல நீதியொழுக்க மில்லாத வேரோதன்பகையாற் றம்முயிர்போ யுடலைவிட்டிறந்த விடத்து மாசில்லாக்குழந்தைக ளொளியைவீசு மழகிற் சிறந்த வுருக்கொண்டு விளங்கத் தந்தாய் நீயே.

தேரொழுங்கதிரோன்றிரிவான்றெருக்
காரொழுந்திருட்கால மோர்காலமோ
பேரொழுந்தயைபெற்றுனைச் சேர்ந்தனர்
சூரொழுங்கயர்துய்த்திலர்வாழ்வரோ.

உரை.— தேர்மேலெழுந்த சூரியன்றிரியும் வானுலகின் றெருவிடத்து மேகங்களெழுந் திருட்கால மொன்றுண் டோ வில்லையே, அத்தன்மைத்தல்லோ வுன்பெருந்தயை யைப்பெற் றுன்றிருப்பாதத்தைச் சேர்ந்தயாவரும் வருந் தும்படி கேடடையாமல் வாழ்வார்.

தணிவருந்தடத் தாமரைபூத்தென
மணிவருந்துருமைந் தனிறங்கிநீ
பிணிவருந்துயிர்பேணிய பெற்றியே
பணிவருங்கலையோரடைபான்மையோ.

உரை.— தாழ்ந்தகுளத்துட் டாமரை மலர்வது போல நீயுமிப்பூவுலகிலிறங்கி மணிகள் வருந்தும்படி யவற்றினு மழகிய வுருவினையெடுத்து மகனாய்ப் பிறந்து பாவப்பிணியால்

வருந்தின மனிதருயிர்கள் யாவையும் பேணியிரட்சிக்குந் தன்மையே கற்றசொல் வல்லவராயினுந் தாமடையுந்தன் மையோ?

அஞ்சினுலெனவிங்கு வந்தன்மினு
வெஞ்சினரிவர்க்கிங்கருளிந்துராய்த்
அஞ்சினுமெனவாங்கவர் தோன்றிவாழ்
நெஞ்சினுருயிர்நீடுற நல்கினுய்.

உரை.— அஞ்சியொளித்து வந்தாற்போல விங்கேயெ சித்து நாட்டிற் சென்றாய், சென்றவுடனே மெய்க்கடவுளை யறியாமையால் மெலியாநின்ற வெசித்தார் வணங்கின பொய்யான தேவர்களை யோட்டி இவர்க்குத் தயைச் செய்தாய், மீளவு நீவந்தொளித்தமையால் யூதேயாநாட்டில் வெட்டுண்டகுழந்தைகள் செத்தாரொன்று தோன்றி யெக்காலத்தும் வாழ்ந்தவராகிச் சாதற்கஞ்சா வுயிரையடையத் தந்தாய்.

வளிவிள்ளாமுகைகொய் தெனமாய்ந்ததேன்
றளிவிள்ளாமுகைத்தேந் தொடையாகநீ
யளிவிள்ளாதணிந்தம் மகார்யாவருங்
களிவிள்ளாவுயர் செல்கதிவாழ்வரோ.

உரை.— கொடுங் காற்றறுத்த மலராத வரும்புகளைப் போல வக்குழந்தைகளுஞ் செத்த பின்பு தேன்றுளிமாறுத வரும்புகளாற் கட்டப்பட்ட வாசமாலையாக நீயருள் விடாத வுன்மார்பணியாய்க் கொண்ட வக்குழவிகளெல்லாரும் பேரின்பம் பிரியாத செல்கதியி லெக்காலத்தும் வாழ்வார்.

எண்ணின்மேலெழுஞ் சூட்சியியற்றிநீ
விண்ணின்மேலெழும் வீடிடவந்தனை
மண்ணின்மேலெழு மாக்கள்பகைப்பரோ
புண்ணின்மேலெழுந் தீப்பொறியீட்டியே.

உரை.— அங்ஙன மனிதரையிரட்சிக்கும்படி எண்ணப்படாத சூட்சிகளை நடத்தி வான் மேல்வாழும் வீட்டை யெமக்குத்தரும்படி நீ மனிதனாய் வந்திருந்துப் பட்டபுண்

மேற் செந்தீயைக் குவித்தாற் போலத் தம்மையிரட்சிக்க நீ கொண்ட துயரின்மேலும் பூவுலகத் தோருன்னைப் பகைத்து வருத்தஞ் செய்வாரோ?

மின்னைக்காட்டியவேகத் துற் றெல்கிப்போய்க்
கொன்னைக்காட்டியகோலம் விரும்பினர்
பொன்னைக்காட்டழல் போன் றரிதுன் றயை
தன்னைக்காட்டினர் நோய்செயுந்தன்மையால்.

உரை.— அங்ஙன முன்னைப்பகைத்தாலு மின்றேன்றின சீக்கிரத்தொல்கி யொளித்துப்போய் வீணழகுள்ள பூவுலகின் வாழ்வுகளை விரும்பின மனித ரவ்வாசையா லுன்னையெண்ணும லுனக்குத் துயர்களை விளைவித்ததனுற் பொன்னைக்கெடாமற் பொன்றன் னொளியைக்காட்டுந் தீயைப் போல வவரு முன்றயையைக்காட்டுவார்.

கடல்வண்ணத்தமு தேகதிவாயிலே
யுடல்வண்ணத்தொளி யேயுயிரோயுயிர்க்
கடல்வண்ணத்தணியே யருளேயென
மடல்வண்ணத்தலர் தாளைவணங்கினேன்.

உரை.— கடலோடொத்தவமுதே கதியைச் சேர்வதற்கு வாசலே யெடுத்தவுடலின் வகையா லுயிராவிளக்கு மொளியே யாவர்க்கு முயிரோயுயிர்க்கெலாம் வல்லமையிடுமோரணியே யருளேயென்றுன்னை வாழ்த்தி மலர்ந்தவுன் றிருவடியை வணங்குகிறேன்.

திவ்வியவிரட்சகருடைய தயையைத் துதித்த பாடல்.

(34ம். படலம். 53, 54, 55, 56, 57, 58, 59.)

மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

என்றுன்மென்றுதேர்ந்தியகையா னிவையெல்லாஞ்
சென்றுங்குண்டாமாண்பினர் கேட்பத்தெளிவுண்டார்

பின்ருவன்பால்யாருமிரங்கப் பெரிதேங்கி
நின்றுரொன்ருயார்புகழ்மாலை நிரைசொன்ஞர்.

உரை.— அங்ஙனம் பூங்கொடியேந்திய சூசை சொன்ஞர், சொன்னதெல்லாவற்றையு மங்கேகூடின பெருமையோர் கேட்டவளவி லுணர்விற்றெளிந்து மிக்கொழியாதவர்போடெவரு மவதரித்தநாதற்கிரங்கி மிகவும் வருந்தி நின்றபின்ன ரொருப்பட வவனைப்புகழ்ந்து சொல்லத் துடங்கிஞர்.

தன்னேரில்லான்றன்வயனுகித் தனிவல்லோன்
முன்னேரில்லான்காரணனுகி முழுதொன்ருய்ப்
பின்னேரில்லான்ருன்மனுவாகிப் பெரிதேங்க
வென்னேராஞுனேவருஞுளோ விதுவென்ன.

உரை.— தனக்கோருவமை புறத்தில்லாதான் றன்ஞற்ருனுகி நிகராததிறத்தான் முன்னே மற்ருெருவனுடன் பாடின்றி யெல்லாத்துக்குங் காரணனுகிப் பின்னே நிகரொன்றின்றி மனிதனுகி மிகவும் வருந்த வென்னுடொத்தவனுனுனே? நினைத்தவருட் டொழிலை முடிக்கு நாளிதுவோ?

தன்பாலெல்லா நன்றுளனுகித் தகைவல்லோன்
பின்பாலில்லாதேதுளதுண்டோ பெறவஃதை
யென்பாலெல்லாநோயுளனுகி யிவணெய்த
வன்பாலெல்லாவொப்பிலனுய வரசன்ருே.

உரை.— தன்னியல்பாக வெல்லா நன்மையுடையனுகநின்ற பெருமையோன் பின்பு தனக்கில்லாத தொன்றினையடையவேணு மென்ருற் போல மனுவுடலையெடுத் தெல்லா நோயுடையனுகிப் பூவுலகிற் பிறந்தானே, இவனே யொவ்வாதவன்பி னரசனல்லவோ?

வாழநாமுந்தானமு வானேவளர்நீஞள்
மூழநாமுந்தான்மடிவானே முழுமுந்நீ
ராழநாமுந்தாழ்ந்துறினெந்தை யருளாழி
சூழயாருண்டோவிதிலுண்டோ துறையெங்கும்.

உரை.— நாமேவாழத் தானழுவானே? முடியாதவீட்டி னெடுநாட் கொண்டு நாமிருக்கத் தான் சாவானே? கட

லினுழ்ந்தாழ்ந்து நாமளந்தாலு மெம்மிறையோன் றயைக் கடலை யாராய்ந்தளக்க வல்லவருண்டோ? எவ்விடத்திலாவது அதற்கோர் துறையுமுண்டோ? இல்லை.

எல்லையில்லையென்றவனன்பிற் கிணைகூற
வல்லையில்லையென்றதுபொய்யோ வசைமண்ணர்
தொல்லையில்லையென்றுளநாளுந் துடர்தீதொப்
பில்லையில்லையென்றதுபொய்யோ விதுமென்ன.

உரை.—அளவெலாங் கடந்த திருக்குமாரனுடைய வன்பிற் கோரொப்புச் சொல்ல வல்லமை யில்லையென்றாற் பொய்யோ? மீளவும் வசையுடைய மனிதர் தொல்லை நாளன்றி யுளநாளெல்லாம் விடாமற் செய்யுந் தீவினைக்கு மோரொப்பில்லையென்று லிதுவும் பொய்யோவென்ன?

அன்பிற்குண்டோமாத்திரையாக வளவெம்பான்
முன்பிற்குண்டோவோர்பயன்வானுள் முதல்வற்கே
யென்பிற்குண்டோவெஃகுமோர்நன்றி யிவையாகிப்
பின்பிற்குண்டோமானிடராசை பெறப்பாரில்.

உரை.— அன்பிற்கு மாத்திரையாக வளவொன்றுண்டோ? சுவாமி நம்மைப்பற்றி யிவையெல்லாவற்றையுஞ் செய்ய முன்னம்மிடத்திற் பயனென்றுண்டோ? வானுலகளாநிற்கு முதலோனெடுத்த வுடலாற் றனக்கு வரவிரும்பத்தகுவதோர் நன்மையு முண்டோ? இவையெல்லாவற்றையு மாண்டவன் செய்தபின் னின்னமனிதர் பூவுலகத்தில் விரும்பத்தகுவ தொன்றுண்டோ?

அணியேயன்பேயன்பதுசிந்தே யருள்வேந்தே
மணியேயுன்பேரார்வநிகர்ப்ப வலருண்டோ
பிணியேகொண்டாய்பேரரசாகி மனிதர்க்கே
பணியேநின்றுயுன்றயையீதே பரிசன்றே.

உரை.— அணியேயன்பே யன்பின்கடலே யருளினரசனே யெங்களுக் கோர்மணியே யுன்னட்பறிந்து நிகராச் சொல்ல வல்லவருண்டோ? எங்களைப்பற்றித் துன்பங்களைக் கொண்டாய், அரசர்க்கரசனுகி மனிதர்க்குக் கீழ்ப்படிந் தேவலைச் செய்யாநின்றுயே, இதோ வுன்றயையின்றன்மை.

தேவநற்கருணை முதலிய தேவவரங்களைப் பற்றித் தேவகுமாரனைத் துதித்த பாடல்.

(32-ம். படலம். 48, 49, 50.)

வெண்பாவிற்குரியவோசையினால் வந்தவிருத்தங்கள்.

ஒன்றில்லாதெல்லா முளவாக்கினோனல்லா
னன்றில்லாவையத்தின் நன்றிசெய்வான்யாரோ
நன்றிசெய்வாரில்லா நாம்வாழத்தானிறந்து
வென்றிசெய்வானெமக்கு நீயல்லால்வேறியாரோ.

உரை.— ஒன்றில்லாதிருக்க வுதவியொன்றின்றி யெல்லாவற்றையுமுளவாக்கின சுவாமியல்லாவிப்பொழுதுமொரு நற்குணமில்லாத பூவுலகி லிந்த நன்மையெல்லாத்தையுஞ் செய்யத்தகுவனுரெனில், தனக்கு நம்மாலொருபயன் வாராதிருக்கக் கொள்ள நாமே வாழும்படிக்குத் தானுயிரிழந்து நமக்குச் செயங்கொள்பவனாகிய நீயேயல்லால் வேறுண்டோ?

அன்புடையரொன்பு மரிந்தளிப்பார்தன்னுயிரோ
டென்புடையமெய்யெல்லாமீந் துணைவென்பான்யாரோ
யீய்ந்துணைவென்றெவ்வுயிர்க்கு மெவ்வுணவுமீட்டியிவன்
வேய்ந்துணைத்தானுண்ணிரந்த நீயல்லால்வேறியாரோ.

உரை.— மீளவு மிக்கவன்புடையோர் வேண்டும் பொழுது தம்முறுப்புகளி லொன்றினை யறுத்துச் சிநேகிதர்க்கீவாரென்பார்களல்லோ? ஆயினுந் தன்னுயிரோடே தன்னுடனு மொருங்குடன் கூட்டித்தந் துண்ணச் சொல்லத்தகுவனுரெனில், எல்லாவகையுணவுளைத் திரளாய்க் குவித்தெல்லாவுயிர்களு முண்ணத்தந்தபின் றானிவ்வுலகிற் றேன்றித் தனக்குணவிரந்தவனாகிய நீயேயல்லால் வேறுண்டோ?

கைம்மாறிவண்வெஃகாக் காமுற்றிவையெல்லா
மெய்ம்மாறெமக்களிப்ப விஞ்சருட்சென்றேன்யாரோ

விஞ்சருட்சென்ருசறநா மீவாழத்தானேந்து
நெஞ்சருட்சென்றீங்கிறக்கு நீயல்லால்யார்யாரோ.

உரை.— தனக்கிங்கே யொருகைம்மாறு விரும்பாமற் றன்னன்பினளவாக விவையெல்லாவற்றையு முண்மையறியாத நமக்குச் செய்யும்படிக் கித்தொகைமிக்க தயை கொண்டவனுமெனில், அந்தமிக்கதயையாற் குறையொன்றின்றி நாமேல்வீட்டில் வாழும்படிக்குத் தானே வருந்தித் தன்னெஞ்சுள்ளதயை பின்சென் றுயிர்தந்திறக்க தகுவனுகிய நீயல்லால் வேறுண்டோ?

சேசுநாதருடைய திருக்காயங்களைப் பார்த்தவனைத் துதிக்கும் பாடல்.

(35-ம். படலம். 57- முதலச்சந்தமுடிவுமட்டும்.)
தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

ஐயாயிவ்வாறெங்கள்பொருட்டா லயர்வுற்ருய்
மெய்யார்துன்பத்தொன்றெனவுன்பால் விளைவுண்டோ
மையார்பெட்பாறீவினைசெய்த மனுவெல்லா
முய்யாவொன்றன்ருேவுயிர்சிந்த வுணர்வுற்ருய்.

உரை.— ஐயா விங்ஙனே யெங்களைப்பற்றி வருத்தங் கொண்டாயே, தடிப்புளவுடலைத் துடர்ந்துவருந் துன்பங்களி லொன்ருயினு மியல்பாகவுடலில்லாத வுனக்குண்டாகுமோ? ஆசையால் மயங்கித் தீவினைசெய்த மனிதரெல்லாருமுயிர்கெட்டழிவாரொன்றிரங்கியல்லோ வுன்னுயிரைத்தந்திறக்கத் துணிந்தாயே.

கோன்பானின்பாலென்றெதிரின்றிக் குறையின்றி
வான்பானின்ருேயெங்கணுநின்ருேய் மகிழ்கின்ரு
யூன்பானின்ருேர்மேனியெடுத்தா யுயிர்சிந்தத்
தேன்பானின்ருேரின்பமதென்ருய் திருவல்லோய்.

உரை.— செல்வத்திறத் துயர்ந்தோனே! அரசாள்வதுன்னியல்பாகி யெதிருங்குறையுமின்றி வானுலகாதியெ

ங்கு நின்று மகிழாநின்றாய், பின்புயிரைத்தந் திறக்கவேணு மென்றானுளதோ ருடலையெடுத்து வெடுத்தமேனியிற் சாதலையுனக்குத் தேனினுமினியதென்றாயே.

வாராயோவெம்மேலுமிரங்கி மறுவல்லற்
பாராயோவெம்பேயினம்வென்றே பகையெல்லாந்
தீராயோவென்றோநசையின்மேற் சிறைதீர்த்தாய்
தாராயோவின்றுன்றலையேத்தத் தகவன்றே.

உரை.— எங்கள்மேலிரங்கி யெங்களை யிரட்சிக்கவாராயோ? மனுக்குலங்கொண்ட துயரைப்பாராயோ? சினந்தபேயினங்களைவென் றெங்கள்பகையெல்லாந் தீராயோ வென்று நாங்களே மன்றாடினோ மல்லோ? இன்று நீயோவெனி லெங்களாசை யின்மேலுந் தயைசெய்தெங்கள்சிறையை நீக்கினாயே, இனியுன்றயை யியல்பறிந் ததை வணங்கும்படி யதற்குரியதன்மை யெங்களுக்குத் தாராயோ?

விண்மேல்வைத்தநன் றிவரூநாம் வினைசெய்ய
மண்மேல்வைத்தகாவனினக்கே வரைவின்றிப்
புண்மேல்வைத்ததீநிகர் துன்பம் புகுவித்தோ
மெண்மேல்வைத்தவெஞ்செயிராரா ரிணைசொல்வார்.

உரை.— வான்மேலெங்களுக் குன்னால்வைக்கப்பட்ட நன்மையை விரும்பாமல் நாங்கள் தீவினை செய்கையிற் பூவுலகிற் குக்காவலாய் நின்ற வுனக்கே மட்டில்லாத புண்களைப்படுத்தி யுள்ளேசெந்தீ யூட்டினாற்போல வுனக்குத்துன்பங்களை விளைவித்தோமே, எண்ணப்படாத வெங்கள் பாவங்களைத்தன்மைத்தென் றாரார்சொல்லத்தக்கார்.

வேண்டாவின்பம்வெஃகியதன்மை விளைதீதாற்
றுண்டாவின்மைகொண்டுபிறந்தாய் தகுதண்மை
பூண்டாய்புன்கண்பாலெனவுண்டாய் புரிவோங்கி
மாண்டாயோர்கைம்மாறுவழங்கக் கடவேமோ.

உரை.— விரும்பத்தகாத வின்பத்தை நாங்கள் விரும்பினதினால் விளைந்ததீவினை காரணமாக நீங்காததரித்திரத்தைக்கொண்டுபிறந்தாய், அதற்குத்தக்க தணிமையுங் கொ

ண்டாய், துன்பமேபாலாகவுண்டாய், கடையிலன்பின் மிகுதியாலிறந்தாயே, இதற்கு நாங்க ளோர்கைம்மாறு வழங்கக்கடவோமோ.

பொய்மாறுகின்ருயாசைவிளக்கும் புலையுய்த்த
மைமாறுகின்ருய்பேயுருநாக வயநூறிப்
பைமாறுகின்ருய்நிற்கெனவெம்மாற் பயனுண்டாய்க்
கைமாறுனக்கேயாங்கள்வழங்கக் கடவேமோ.

உரை.— உலகின்மொய்த்த பொய்யினிருளை மாற்றினுய், ஆசையால் விளைந்தபாவங்கள் கொண்டுவிட்ட மயக்கத்தை மாற்றினுய், பாம்பினுருவமாகத் தோன்றின பசாசின் றிறத்தைக்கெடுத்து விரித்தபடத்தைமாறச்செய்தாய் இனியுனக் கெங்களாலொருபயனுண்டாகி நாங்களேயுனக்குக் கைம்மாறுவழங்கக்கடவோமோ?

உன்னையுள்ளசேர்க்கறியோமே யுலகுள்ள
முன்னைபின்னையாமறியோமே முரியாம
வின்னையேத்திநன்னெறிநிற்ப வறியோமே
பின்னையோர்கைம்மாறுபிணிக்கக் கடவேமோ.

உரை.— உள்ளபடியே யுன்னையறியோமே, முன்னும்பின்னு முலகி லுள்ளதை யறியோமே, விடாம லுன்னை வணங்கிவழுவாமல் நன்னெறிநிற்பதறியோமே, இனியுனக்கோர் கைம்மாறிசைத்து வழங்கக்கடவோமோ?

தாயுநீயேதந்தையுநீயே தவருநன்
றீயுநீயேயென்றறிவோமே யிதுவல்லாற்
காயும்பாவத்தன்மையுநின்றன் கனியன்பு
மாயுங்காலத்தஃதறியோநா மறியோமே.

உரை.— எங்களுக்குத் தாயுநீயே தகப்பனுநீயே, கெடாத நன்மைகளையெங்களுக்குத் தருபவனீயேயென் றிதையறிவோம், இதொழிய மனஞ்சுடவந்த பாவத்தின்றன்மையுமினியவுன் னன்பின்றன்மையு மாராய்ந்தாலு முழுதுமறியோ மறியோமே.

பாயோர்செந்நீர்கொண்டு னதங்கப்படமீதே
நீயோநாமோவிவ்வரிவைத்த நிலையென்போ

மாயாவஞ்சத்திவ்வரிநாஞ்செய் வரியென்ரு
லோயாவன்பாலுன்வரியென்ரு லுளைபொய்யோ.

உரை—. உன்றிருமேனி யோர்படமாகக் கொண்டு பாய்ந்தகுருதியால் நீயோ நாங்களோ விவ்வரிகளை யெழுதினதென்போம், ஆயினும் விடாதவஞ்சத்துடனே நாங்களெழுதினவரியென்ருலு மோயாத வன்பின்மிகுதியால் நீயெழுதினவரியென்ருலு மிரண்டு சொல்லும் பொய்யோ?

பற்றக்கற்போர்நூற்பலகற்ருற் பயனென்னே
வொற்றக்கற்ருலிவ்வரியொன்றே யுணர்வெல்லா
முற்றக்கற்பாராயினுமெம்மால் முழுதாகா
கற்றக்கட்டாநுண்பொருள்காட்டாய் கலைவல்லோய்.

உரை. — ஆசைவைத்துப் படித்தவர் பலநூற்களைப் படித்ததினுல் வரும்பயனென்ன? உன்னுடற்படமே லெழுதப்பட்ட வரிகளை மாத்திர நன்ருய்ப் படித்தாலே யெல்லா விஞ்சையு முழுதும்படிப்பாரல்லோ? ஆயினு மெங்களாலாகாக்கருமமிதுவே, அதைப்படித் ததினுட் கட்டப்பட்ட நுணுக்கப் பொருட்களை நீயே கல்வித்திறத் தோனுக வெங்களுக்கிரங்கிக் காட்டக்கடவாய்.

நன்ருய்க்கற்ருேநின்றயைநாஞ்செய் நவைகற்ருேம்
பொன்ருயெம்மாற்பொன்றினையெந்தம் புனையெல்லாம்
வென்ருய்வென்ருய்நின்னருள்மிக்காய்ப் பெரிதன்ருே
வென்ருருள்ளத்தோவியிறைஞ்சி யெதிர்வீழ்வோம்.

உரை.— கேட்டபடியே யவ்வரி கொண்ட பொருளையாண்டவன் காட்டினு னென்ருற்போல மீண்டு சொல்லுந் தன்மையாவது: ஐயா வுன்றயையின் தன்மையுநன்ருய்க் கற்ருேம், நாங்கள் செய்த பாவத்தின் றன்மையுங் கற்ருேம், சாகப்படாதவனுகிய நீ யெங்களாற் செத்தாயே யெங்கள் பாவங்களை வென்ருய் வென்ருயே, யெங்கள் பாவங்களினு மளவொன்றின்றி யுன்றயை மிகப்பெரிதல்லோ வென்று சொல்லி மனதில் மிகவும் வருந்தியடிமுன் விழுந்து வணங்குகின்ருேம்.

நல்லோர்க்கு வருந்தின்மையை நன்மையாக்கு நாதனைத் துதித்த பாடல்.

(௨)

(26-ம். படலம். 180, 181, 182.)

மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.

கடுவுயிர்த்தடுங்கட் செவிநாகமே
கொடுமருத்துவர்கொல் விடங்கொல்லுவார்
வடுமருட்டியவஞ்சினர்செய்ததீ
யடுவினைக்கொடு நீயருளாற்றுவாய்.

உரை.— நஞ்சியுமிழ்ந்து கொல்லும் பாம்பினைக் கொண்டு வைத்தியர் மருந்தினையாக்கிக் கொல்லு நஞ்சினைக் கொல்வார். அத்தன்மைத்தே வஞ்சமனிதர் பாவத்தால் மயங்கிச் செய்தவுயிரைக் கொல்லுந் தீவினை கொண்டு நீயுயிரை வாழ்விக்குந் தயையைச் செய்வாய்.

தீயகம்வினைதீயர் முடித்தலாற்
றூயநல்வினைசூழ்ந்து முடித்தரு
ளாயநின்வினையாதர வாயினிக்
காயவெவ்வினைக்கையருக்கஞ்சவோ.

உரை.— தீயோர் நினைத்த தீய்வினைமுடித்த வழியிற்றானே நீ நினைத்த தூய்வினைமுடித்து நின்வினையாகிய தயையி னுதரவிருந்தா லுள்ளங்காய்ந்து பகைத்த நீசமனிதர்க் கஞ்சவேண்டு மோவில்லை.

உலகியாவுமுடற்றினு மஞ்சவோ
வலகியாவுமகன்ற ருளாற்றநீ
விலகியாவும் விளங்கியவெஞ்சுட
ரிலகியாரிருளிற்றது போலன்றோ.

உரை.— உலகெலா மொருப்பட வெதிர்த்துப் பகைத்தாலு மதற்கஞ்ச வேண்டுமோ வில்லையே, அதேனெனி லளவிறந்த தயையை நீசெய்தவளவி லவையெல்லாம் விலகி நீங்குவன, சூரிய னுதித்து விளங்கின வளவி லெங்கு நிறைந்த விருள்கெட் டொழிவது போலல்லோ.

மனுமக்களுக் குணவுதருகிற ஆண்டவனுக்குத் தோத்திர பாடல்.

(9-ம். படலம். 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68.)

மா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

பின்ருவல்லோய்பேணியவன் போய்பிரிவின்றி
யொன்ருய்நின்ருேயீங்குயிரெல்லா முணவீந்தோய்
குன்ருவன்பானம்பினையார்யார் குறையுண்டோ
மென்ருருண்டோவென்னுயிர்மாரு தினிதாள்வோய்.

உரை.— தொடுத்ததெல்லா முடிப்பதற் குரிதாகிப் பின்வாங்காத வல்லமையுடையோ யாவரையும் பேணுகின்ற வன்பினையுடையோய் தன்னிடத்தில் வேறுபாடொன்றின்றி யொருபொருளாய் நின்ருே யுயிரெல்லாம் பற்றின பலவுணவினைத்தையுந் தந்தோய் குறையாதவன்பினோ டுன்னை நம்பினவருள் யாராகிலுங் குறையாகவுண்டோ மென்றவருண்டோ மாருமலென்னுயிரை யினிதா யாள்பவனே.

வல்லாருண்டோவுன்னையலாதன் வலநம்பி
யில்லாருண்டோவுண்டிலருண்டோ விவையிங்கண்
கல்லாருண்டோகண்டவை யெண்ணிக்கரவாதேற்
சொல்லாருண்டோவுன்னருள்வாழ்த்துந் தொடைமிக்கோய்.

உரை.— உன்னையல்லாமல் வல்லவரொவரோ வுன்வல்லமை நம்பினவரு ளில்லாதவரு முண்ணுதவரு முண்டோ விவையெல்லாத்தையு மிங்கேயறியாத வொருவனுமுண்டோ கண்ட நியாயத்தை மனதிலெண்ணி யொளியாதிருந்தா விதைச் சொல்லியுன்னைப் புகழாதவருமுண்டோ வடைந்ததயை வாழ்த்தினபாவினு முயர்ந்தோய்.

நீர்தோய்பொன்னூர்தன்றலைநிட்ட நீநிர்த்தோ
னேர்தோய்மின்னூர்பொற்சிறையம்புள் ளினமெல்லாஞ்

சீர்தோய்தன்னுநின்புகழ்பாடச் செயிரின்றித்
தார்தோய்தேனுடேண்பலதந்தே தயைசெய்வோய்.

உரை.— இராவைநீக்குஞ் சூரியன் கடனீரிற்றோய்ந்த தன்பொற் றலைநீட்டியுதிக்குங்கா லழகினேடெழுதப்பட்டு மின்னும் பொற்சிறகுவிரித்த பறவைகளெல்லா மினியகுரலோடு தங்நாக்கவிழ்ந் துன்றிருநாமத் துதிகளைப்பாடவே நீ குறையின்றிப் பூமலர்பொழியுந் தேன்முதற் பலவுணவுகளைப் பறவைக் கெல்லாந்தந்து தயையைச் செய்வாயே.

காய்கான்செல்லலென்முந்தையருண்ணீர்க் கனிவில்லா
நோய்கான்றீட்டுந்தாகமவித்தே நுகர்வெய்தத்
தீய்கால்கல்லேதீம்புனல்காலத் திரிவார்தம்
வாய்கானெல்லாம்பின்செலவக்கல் மலிதுண்டார்.

உரை.— எசித்து நாட்டைவிட்டுக் காய்ந்த கானகத்தின் வழிவரும்போ தெம்பிதாக்களாகியயூத ருண்ணுந் தண்ணீரின்றி வருத்தஞ்செய்த தாக மவித்தருந்தற்கு நெருப்பைக் கொப்புளிக்குங் கல்லுதானே யினியதண்ணீரையுமிழ்ந்து தினந்தோறும் பயணமாய் நடந்த யூதரோடு கூடக் கானகத்திலெங்கு மக்கல்லு பின்சென்று போகையிலவர் நிறைய வுண்டார்.

அன்னாரந்நாளவ்வனவாய்வர் தமுதின்றிப்
பன்னுடன்னுலுள்ளியவின்பம் பலவீந்தோ
ருன்னுறுண்மாதேவவிதந்தாங் கொருகோடி
யின்னுதன்னேயொன்றிலவாழ்ந்தே யினிதுண்டார்.

உரை.— அந்த யூகர்தானே யந்தக்காலத்தி லந்தவனத்துவழிவரும்போ தருந்தவுணவொன் றில்ல ராயினு ரப்பொழுதவனவன் றுனினைத்தவின்பம் பொருந்தின சிறியதோர் தேவவுணவினைப் பல நாளுமவர்க்குத் தந்தேயங்கே யொரு கோடி மனிதரும் வருத்தஞ்செய்யு மொருநோயு மின்றி வாழ்ந்தினிதாயுண்டார்.

மாண்டோர்முனியேகான்வழியுண்ணு மயலுற்று
ஞண்டோரமரன்றந்தவோர்பிண்ட மயிற்கின்று

வீண்டோர்வழியேநாற்பதுநாள்போய் நிகரற்றான்
மீண்டோர்பசிதோன்றுதயர்குன்றின் மிசைசென்றான்.

உரை.— பின்னை மாட்சிமை பொருந்தின வெளியசாமுனி பெற்சபெய்கானகத்திற் போகிறபோ துணவில்லாமல் மயங்கிவிழுந்தா னப்பொழு தொருவானவன் கொண்டுவந்த சாம்பலிற் சுட்ட வடையைத்தின்று றுதவி னெடும் வழியே நாற்பது நாளுநடந்து நிகரின் றித்திரும்பிப் பசியாமலுயர்ந்த வொரொபென்னு மலையினுச்சியை யேறிச் சென்றான்.

கறித்துண்பைம்புல்லொன்றிலகாய்தல் கருதிக்கார்
மறித்துண்ணுதெண்ணுவுயிர்மாழ்ந்தே மருளெல்லாஞ்
செறித்துண்ணன்றார்யோகியவற்கே திளைபன்னாள்
பறித்துண்காகந்தாவுணவீகப் பரிவீந்தாய்.

உரை.— பசு மான் முதலியவை கறித்துண்ணும் பசும்புல் லொன்றில்லாமல் நிலமெல்லாங் காயவேணுமென்று நீயே மேகங்கள் பெய்யாததற்கு மறித்ததினு லுணவின்றி யெண்ணப்படாத பலவகையுயிர்கள் மாண்டிறக்க மயக்கந் தீர்ந்த நன்மையிற் சிறந்தயோகியாகிய வந்த வெளியசாமுனிக்கு நெடுநாளுமொருகாக்கை தான்பறித் துண்ணுங் குணத்தை விட்டு நாடோறு முணவுகொண்டுவந்து கொடுக்க விரக்கந் தந்தாயே.

நின்னலாமோர்நன்றதுவெள்ள நெடிதெண்ண
லென்னலாமோவென்னுயிர்வேந்தா வியல்தங்கை
தன்னலாமோர்புன்றொழில்சார்பென் றவர்வாழா
தன்னலாமோர்கற்றுணையோர்ந்தா ருயிர்வாழ்வார்.

உரை.— என்னாண்டவனே! இதெல்லா நீயருள்புரிந்து செய்ததல்லாதே யுன்னலாயின நன்மைகளின் வெள்ளத்தையாராய்ந்து விரிவாகவுரைப்ப தென்னலாகுங் கருமமோ? என்னுயிரையாளு மிறைவனே! தங்கையாலியன்ற புன்றொழிலை வாழ்வதற்குரிய சார்பென்றெண்ணு நீசரோ வாழாரன்றி யுன்னைத் துணையாக நம்பினவரினிதா யுயிர்வாழ்பவர்.

குற்றந்தேடேன்கோல்குடையென்னுங் குறைதேடேன்
சுற்றந்தேடேன்சூழ்ந்தெனவுள்ளஞ் சுடுவம்பொன்
பெற்றந்தேடேனம்பியவிம்மை பெரிதுய்க்கு
மற்றந்தேடேன்றேடுவனீசெய் யருளொன்றே.

உரை.— குற்றத்தால்வரும் நன்மையைத் தேடேன், ஆள்வார் கொண்டகோலுங் குடையு நீர்க்குமிழியோடொத்ததென்று தேடேன், சுற்றத்தாருதவியை நம்பித்தேடேன், அணியாகச் சூழ்ந்தாற்போல வுளத்தைச்சுடும் பொன் முதலாயின செல்வங்களைத்தேடேன். மனிதர்நம்பின மற்றப்பிரபஞ்ச வாழ்வுகள் சோர்வு நிறையக் கொண்டு 'விடுமென்றுதேடேனே, நீயிரங்கிக்காட்டின தயைமாத்திரமே எப்பொழுதுந் தேடுவேன்.

தேவமாதா வாண்ட வனைத் துதித்த பாடல்.

(26-ம் படலம். 40, 41, 42, 43.)

மா, மா, காய், மா, மா, காய்.

தெருளாறெளிந்தவென்னுளமென் றிருநாயகனைப்புகழ்ந்திறைஞ்ச [ப்ப
வருளாலுயவொன்னுயிரென்னை யளித்தோன்முகத்திற்கெழுந்தவ
மருளாறளர்ந்தவிவ்வடிமை மனந்தானிரங்கிப்பார்த்ததயைப்
பொருளாலெவருமுறைமுறையாற் புகழுற்றென்னைச்செல்வியென் [பார்.

உரை.— ஞானத்தாற் றெளிந்த வெனதுள்ளமே யென்னாண்டவனைத் துதித்து வணங்கவு மருளினாற் பொலிந்த வென்னுயிரோ யென்னை யிரட்சித்த நாதன் முகத்தி லெழுந்து மகிழவுந் தளர்ந்து மயங்காநின்ற விவ்வடிமையை யாண்டவன் மனமிரங்கிப்பார்த்த தயையின் பொருட்டாக வெல்லாரு மெல்லாத்தலை முறையோடு மென்னைப் புகழ்ந்து பாக்கியமுள்ளவளே யென்பார்.

விண்பால்முதன்மூவுலகமைக்கு மிடலின்மிக்கோனென்னிடத்துத்
தின்பால்வளமேசெய்தமையாற்றிருத்தன்னாமம்புகழ்படவே[ஞ்சா
நண்பாலிணையாக்குணத்தொலைகையோ னயங்கெஞ்ஞான்றுமுறையெ
மண்பால்தன்னைத்தொழுதஞ்சு மக்கட்கேதான்றயைசெய்வான்.

உரை.— வானமுதல் மூவுலகனைத்தையு மமைத்தற்குரிய வல்லமை மிக்கோன் மாட்சியுள்ள விவையெல்லாவற்றையு மென்னிடத்திற் செய்தமையா லவன் றிருநாமமே வாழ்த்தப்படுமாம். அங்ஙன மன்பினுனிகரப்படாத குணத்தோன் மனம்பொருந்தி யெக்காலத்துந் தப்பாமற் பூவுலகிடத்துத் தன்னைவணங்கியஞ்சா நிற்கு மனிதர்யாவர்க்குந் தயையைச் செய்வானல்லோ.

கேழ்வார்தடக்கைவலிகாட்டிக் கிளர்தீயுணர்விற்செருக்குளத்
துச் [கின்றான்
சூழ்வார்சிதைத்தான்வயத்துயர்ந்தோர் துகள்செய்நிவப்பினுக்கு
ரூழ்வாருயர்த்தான்பசித்தயர்வார் சாலநிறைத்தான்றிருமல்கி
வாழ்வார்வறியோராக்குகின்றான் மாறாநீதிவயமிக்கோன்.

உரை.— ஆண்டவனெக்காலத்தும் விளங்கிய தன்றடக்கையின் றிறத்தைக்காட்ட நடத்தின நீதிமுறை யெங்ஙனமென்னில், தீவினையுணர்ந்து மனதிலாங்காரத்தை நினைத்தவரைக் கெடுத்தான், திறத்தினுயர்ந்தோர் பாவத்தாற் கொண்டவுயர்ந்த விடத்தினின்று விழத்தள்ளினன், அறத்தைப்பற்றித் தாழ்ந்தவரையுயர்த்தினன், பசித்து மெலிந்தவரை நிரப்பினன், பொருட்செல்வ மொன்றினை நாடி மலிய வாழ்பவரைத் தரித்திரராக்கினன், மாறாத நீதிநெறியின் வல்லநாதன்.

அண்ணத்தலையின்முறைகடந்தே யபிராமுதன்மூத்தோர்க்குரைத்த
வண்ணத்தருந்தன்றயையுள்ளி வழுவாவன்பிற்பணித்தொழும்ப
னெண்ணத்தொழுகுமிசறயலை யிரங்கிக்கைக்கொண்டானென்றான்
கண்ணத்தகுதிகடந்தெனையாள் கருணைமிக்கவானரசாள்.

உரை.— அனுகுந் தலைமுறையெல்லாங் கடக்கும்படி தன் றயையை நமக்குச்செய்ய முன்னே யபிரமென்பவன் முதலாய் மற்ற மூத்தோர்க் கெல்லாஞ் சொன்ன தன்மை

யை யின்று நினைத்துத் தப்பாத முறையி லன்போடு தன் பணிவிடையைச் செய்யாநிற்கு மடிமைத்தனத்து நடந்து வரு மிசறயலாகிய யூதனை யிரக்கம் புரிந்துகாக்கும் படி கைக்கொண்டானென்று கருதுந்தன்மையைக் கடந்த கருணைமிகுதியா லென்னையாளாநிற்கும் வானுல கரசாளாகிய மரியென்பவள் சொன்னாள்.

இவ்வுலகத்துச் சிறப்பைப்பார்த்துப் பரலோகத்தை விரும்பும் பாடல்.

(1-ம் படலம். 58, 59, 60, 61, 62.)

காய், காய், காய், காய்.

விண்புதைத்தமலர்ப்பணைவாய் விளைகுளித்ததேனொழுகிக்
கண்புதைத்தவிருட்பொழில்கொள் களிகூர்ந்தநாடிதுவே
களிகூர்ந்தநாடிதுவேல் கண்கடந்தகவினுடி
களிகூர்ந்தநயனல்கும் வானுலகநாடேமோ.

உரை.— மேகத்துள்ளே புதைக்கப்பட்ட மலர்ந்தகொம்புகடோறு மணக்குந்தேனை விட்டுக் கண்ணைப்புதைக்கு மிருளைப்படர்ந்த சோலைகள் சூழ்ந்து களிகூர்ந்த நாடிதுவே. இப்படிகளிகூர்ந்த நாடிதுவென்றாற் கண்கடந்த வழகு கொண்டு குளுந்தவின்பங் கொடுக்கும் வானுலகந்தேடாம லென்ன.

நிழல்மூழ்கும்பூம்பொழில்கண் ணிறமதுகானின்பமலாற்
குழல்மூழ்குமிசைதுவைப்பக் கோடருஞ்சீர்நாடிதுவே
கோடருஞ்சீர்நாடிதுவேல் கோதெனக்கோள்புறத்திமைப்ப
வாடருஞ்சீர்மல்கியெழும் வானுலகநாடேமோ.

உரை.— நிழல்செய்யும் பூஞ்சோலைகளிற் கண்ணுக்கு நிறமும் வாய்க்குமதுவு மூக்குக்குவாசமு முடலுக்கின்பமுங் காதுக்குவீணை போலப் பறவையோசையுங் கிளம்பவே

கோடாத செல்வமுடைய நாடிதுவே. கோடாத செல்வமுடைய நாடிதுவென்றாற் குறையென் றுள்ளேயிருக்க வொட்டாமல் மீன்களைப்புறத்தில் விளங்கத்தள்ளி வாடாத செல்வங்களைக் கொண்ட வானுலகந்தேடாம லென்ன.

படநாகந்தோலுரித்த பான்மையின்கல்லூடுரிஞ்சித்
தடநாகந்தூங்கருவி தாவழகார்நாடிதுவே
தாவழகார்நாடிதுவேல் தாங்கயிலாதருட்பவ்வம்
வாவழகார்திருநிலைத்த வானுலகநாடேமோ.

உரை.— படம்விரித்தபாம்பு தன்றோலையுரித்தது போலக் கல்லுக்குள்ளேயுரிஞ்சி யுயர்ந்தமலையிலே தூங்கிவிழுமாறுபாய்ந் தழகுநிறைந்த நாடிதுவே. கொண்ட வழகினுனிறைந்த நாடிதுவென்றா லலையில்லாத கருணைக்கடல் பாய்ந்து வடிவுநிறைந்த செல்வநிலைகொண்ட வானுலகந் தேடாம லென்ன.

பகைதீர்ந்துசண்பகத்தின் றண்ணிழற்கீழ்ப்பள்ளிவர
மிகைதீர்ந்துபுறத்தெவர்க்கும் வேட்கைசெயுநாடிதுவே
வேட்கைசெயுநாடிதுவேல் விரிகாலத்திமிழ்குன்றா
வாட்கைசெயுநிலைமையுள வானுலகநாடேமோ.

உரை.— பகை யில்லாமையாற் குளுந்த சண்பகத்தினிழலிலே கிடந்து நன்னித்திரைவரவே துன்பங்க ளிங்கில்லாமையாற் பிறர்க்கெல்லா மாசைவருத்துவிக்கு நாடிதுவே. ஆசைவருத்துவிக்கு நாடிதுவென்றா லெக்காலமு மின்பங்குறையாத வாழ்வு செய்யுங் குணமுள்ளவானுலகந் தேடாமலென்ன.

நக்களவாய்நயன்கொண்ட நாட்டுநலநாடியகால்
மக்களவாமேனலங்கொள் வானுலகநாடேமோ
வானுலகநாடேமேல் மன்னுயிர்மன்னயன்வெஃகக்
கானுலகங்காட்டுநல மக்கவலைமாற்றுவதோ.

உரை.— நக்கத்தக்க தளவாக நன்மைகளைக் கொண்ட நாட்டுச் செல்வத்தைத் தேடினபோது மக்களாசைக்கு மேலுஞ் செல்வங்களையுள்ள வானுலகந் தேடாமலென்ன? வா

னுலகந்தேடாதேபோன லழியாதவுயிர்க ளழியாத வின்பம் விரும்பி யதினுற் காடுசூழ்ந்த விவ்வுலகங்காட்டும் நன்மை யையந்தவாசையாற்றுமோ வில்லை.

ஆண்டவனைச் சேவிக்கிறவர்க்குத் தீதண்டாதென்னும் பாடல்.

(19-ம். படலம். 18, 19, 20.)

வெண்பாவிற்குரிய வோசையுந் தளையும் பெற்று வந்த விருத்தங்கள்.

பாலையின்வெப்பம் பனிமருதத்தாக்கினையே
மாலையின்றுமத் தருணீதிவல்லோ
யருணீதிவல்லோ னடிசென்றாரிங்கண்
டெருணிதிரீங்காதார் தீதிடும்பைநண்ணாரே.

உரை.— தீச்சுடும் பாலையினிலத்தைப் பனியிற்குளிர்ந்த மருதவேலியின் றன்மைத்தாக்கினையே, மாலையினெழுங் குபடத் தம்முட்டுடோர்புவிடாத தயையு நீதியுமுடையவல் லோனே, இவ்வல்லமையுடையோன் றிருப்பாதத்தை யடைந்தவரொல்லாரு மிவ்வுலகிற்றெளிந் தறநீதிநெறியிற்றளரா மற்றீதுசெய்துன்பங்களை யெக்காலத்து மடையார்.

வீங்கோதநீர்நிலையாம் வெய்யநஞ்சின்னமுதா
மீங்கோதவொப்பிறந்த வெந்தையடிசென்று
லெந்தையடிசென்று ரெங்குமிடர்மொய்த்துலவச்
சிந்தைமகிழத்தார் தீதிடும்பைநண்ணாரே.

உரை.— பொங்கலைக் கடனு நிலைக்களமாகும், கொடியநஞ்சு முயிர்தருநல்லமுதாகும், நாமிங்கே சொல்லும்படி யொப்பில்லாத என்னுண்டவன் பாதத்தைச் சென்றோ மாயினப்பாதத்தைச் சென்றயாவரும் பூவுலகெங்கு மிடையூறு

கள் வெள்ளமாகப்பரந்து மூடினகாலத்து மவருள்மகிழ்ந்து தீதுசெய்துன்பங்களை யடையார்.

வான்வாழமரர் வணங்கித்தலையேற்றுந்
தேன்வாழடிசென்றோர் தீதிடும்பைகண்ணுரோ
தீதிடும்பைகண்ணுவரிச் சிறடிலையநாடாதால்
வாதிடும்பைவாழ்க்கை வழுக்கிவருந்தீயோரே.

உரை.— வான்மேலுலகில்வாழும் வானவர் விடாமல் வணங்கித் தலைமேலேற்றிய தேன்பொழியு மவன்மலர்ப் பாதத்தைச் சென்றவர் தீதுசெய் துன்பங்களை யடையாரோ, அத்துன்பங்களை யடைவா ரித்திருப்பாதத்தைத் தேடாமலாங்காரத்திடும்பை விளைவிக்கு மிப்பூவுலகில் வாழ்க்கையின் பொய்யான நன்மைகளை விரும்பின பாவிகள்.

மனந்திரும்பின பாவிகளும் ஞானதீட்சை பெற்றவஞ்ஞானிகளும் பாடத்தக்க தேவதோத்திரப் பாடல்.

(27-ம். படலம். 134, 135, 136.)

விளங்காய், கூவிளம், கூவிளங்காய், கூவிளம்.

தீயளித்தகாமுறித் தீதமிழ்ந்திமூழ்கியான்
பேயளித்தமாவிருட் பெற்றருச்செருக்குறித்
தாயளித்தவன்பினுஞ் சாற்றருந்தயாபரா
நீயளித்தகைக்கொடு நீசனாக்குராங்கினேன்.

உரை.— அழலிற்பொங்குங் காமத்துப்பாவத் தமிழ்ந்தி யுள்முழுகாநின்றவடியேன் பேய்களால் மயங்கி யிருண்டமனதிற் பொங்கிய வாங்காரத்துடனே தெளியாமலீரட்சித்த தாயினன்பின்மேலுஞ் சொல்லிலடங்காத தயாபரனே நீயேதந்தகையாற் றேவனொன்று நீசபேய்களை வணங்கினேனே.

கோவில்வீற்றிருந்தநீ கோதுகொள்ளெனைக்கொள
மேவிவீற்றிருந்தியான் வீட்டில்வாழமைந்தனுய்ப்
பூவில்வீற்றிருந்திராப் பொங்கரந்தைபூண்டியோ
நாவில்வீற்றிருந்தநா னூடிவாழ்த்தவன்பிதோ.

உரை.— வானுலகாண்டு வீற்றிருந்தநீயே பாவியென்னைக் கைக்கொள்ளத் தேடிவந்து நான் வான்வீட்டில் வீற்றிருந்துவாழும்படி நீ மனிதனுய்ப் பூவிடத்தாண்டிராமல் மிக்கதுயரைக் கொண்டாயோ? கற்றநூலோரும் வாழ்த்தத் தகு மன்பின்தன்மையிதோ.

ஆசெனும்பெருங்கட லாழ்ந்துநீந்தியேறினேன்
றேசெனும்பெருங்கதிர் செய்தெறித்தசோதியோய்
மாசெனும்பெருங்கறை மாறினுயெனுநினைத்
தாசெனும்பெரும்பெயர் தாங்கிவாழ்த்துவேனரோ.

உரை.— நானே பாவமென்னும் பெருங்கடலிலமிழ்ந்தியிருந்தேன், இன்று நீந்திக்கரையேறினேனே. ஒளிப் பெருங்கதிரை யெறிக் துளத்துவிளங்கிய பரஞ்சோதியே, தீவினையாகிய மாசெலா மென்னுளத்திற் றுடைத்தாயே, இனியுன் றாசனென்னும் பெருமையிற் சிறந்த பெயரைப் பெற்றேயாம லுன்னைவாழ்த்தா நிற்பேன்.

திவ்வியவிரட்சகருக்கு மவளையீன்ற மாதாவுக்கும் வளர்த்த தகப்பனுக்குந் தோத்திரமான பாடல்.

(12-ம். படலம். 87, 88, 89, 90, 91.)

விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.

தம்மியபொறிச்சுடர் துதைந்தெரியுசெந்தீ
விம்மியவிருட்புகை விளைத்தநரகெய்தாப்

பம்மியவினைப்பகை பரிந்துயிர்கள்காப்பப்
பொம்மியதுயர்க்கிறைவ பொன்றினைகொலன்றே.

உரை.— என்னாண்டவனே! புறப்படவிட்ட பொறிகள் நெருங்கும்படி கொழுந்து விட்டெரியுஞ் செந்தீயோடடர்ந்தெழுந்த விருண்ட புகையைவிடு நரகத்திலே நாஞ் செல்லாதபடி நாஞ்செய்த பாவத்தாற் படர்ந்த வினைகளை யறுத்து நம்முயிர்களை யிரட்சிக்கும்படி மிக்கதுயரைக் கொண்டு நீ மரித்தாயல்லவோ?

தீய்வினைசெய்காமகிழ வும்பர்தொழுசெல்வா
நீய்வினைசெய்மெய்க்கொடு நிலத்திலுலவாயோ
வீய்வினைசெய்மெய்யுளைய விண்ணிலெமையுய்க்குந்
தாய்வினைசெய்யுன்றயையை யாரறிவர்பாரில்.

உரை.— தீய்வினையைச் செய்தநாமே மகிழும்படி வானவரால் வணங்கப்பட்ட செல்வனே! நீ துன்பத்துக்கே துவாகிய வுடலைக்கொண் டிந்நிலத்திலே சாவாயோ? சாக மாட்டாதவனீ சாதற்கேற்க வெடுத்த திருமேனி யுளைந்து மெலிய நம்மை வானத்தின்மேற் சேர்க்கும்படி யன்புடைய தாயின்தன்மையாகிய வுன்றயையை யாரிங்கேயறிவார்.

தீயவமைதீயலெரி சென்றெரிவரொன்றுற்
காயவமையோர்குறைநின் கண்ணமைவதுண்டோ
தூயவமைவீட்டுவகை தோய்ந்தமனுவாழ்த
லாயவமைதிக்குநயன் யாதுநினக்காகும்.

உரை.— தீயவைசெய்த பாவிகள் தீயெரிநரகத்தில் விழுந்தாலுங் காய்ந்து நோகும்படி யுனக்கதனாற் குறையொன்றுண்டோ? தூயவீட்டின்பேரின்பக்கடலை மூழ்கிய மனிதரெல்லாரும் வாழ்ந்தபருவத்துக்கு முனக்குவரும்பயனேது?

வெவ்வினையறுத்துயிர் விளைத்தகனியாக
வுய்வினையெமக்கருள வுற்றனபிரானை
யெவ்வினையுமற்றமுறை யின்றவருடாயே
மைவ்வினையைகாங்கழிய வாழிநனிவாழி.

உரை.— தீவினையையறுத் துயிரைக் கொடுக்குங் கனி

யின் றன்மைத்தாகி நமக்குய்யும் வழியைத்தர வெழுந்தரு ளினநாதனைப் புறத்துமனுவுதவி யொன்றின்றிக் கன்னியா ய்ப்பெற்ற வருளானிறைந்ததாயே! நம்முடைய பாவவினை களை நாங்கழியும்படி மிகவும்வாழி வாழி.

ஆரணமெழுந்துபடர் கொம்பனையமார்ப
காரணனோர்மைந்தனை வளர்த்திடுகைத்தாதைப்
பூரணவரத்தமரர் நிற்புகழவின்ப
வாரணமமிழ்ந்திநனி வாழிநெடிதப்பா.

உரை.— வேதநூல் கொழுந்தாக மேற்படர்தற் கமை ந்த கொழுகொம்பினை யொத்தமார் பினையுடைய சூசையே யெல்லாத்திற்குங் காரணமாகிய கடவுளை யொருமகனாகவ ளர்க்கும்படி கைத்தாதையென்னுநீ பெற்ற பூரணவரத்தி னாலே வானவருன்னைப்புகழாநிற்க வின்பக்கடலிலே யமிழ் ந்தி நெடுநாளுங்குதியே வாழி தகப்பனேவாழி.

தேவமாதாவைத் துதிக்கும் பாடல்.

(8-ம். படலம். 66, 67, 68; 75, 76, 77.)

விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.

நீயொருதாயொருதாதையுநீயுயிர் நீயெவையாகிலுநீ
நீய்கனிவார்கடல்நீயொளியார்சுடர் நீயருளார்முகில்நீ
நீயிறையோனெழுமாசனநீநெறி வேதம்வழாநெறிநீ
நீய்முகிழாதநறுமலர்நீநிறை நூனிகராவுருநீ.

உரை.— எனக்குத்தாயுந் தந்தையு முயிருமற்றெவையு நீயே, இன்பத்தினானிறைந்த கடல்நீயே, ஒளியானிறைந்த சுடர்நீயே, தயையினானிறைந்த மேகநீயே, கடவுளெழுந் திருக்குஞ் சிங்காசனம்நீயே, நன்னெறிகாட்டினவேதத்தின்

வழுவாத நெறிநீயே, மலராதவாசப்பூமுகைநீயே, நிறைந்த ஞாலினு னிகராத சுரூபிநீயே.

ஏரணியேயிதயத்திலிருந்தென்னை யாளுடையானவளே
சீரணியேமதிவெண்குடையேதிரு மாரிவிடும்புயலே
யாரணியேகருணாகரியேயுயிர் யாவுமளித்தமுதார்
வாரணியேதனிநாயகியேநனி வாழுதிவாழுதியே.

உரை.— அழகு பொருந்திய வாபரணமே! என்னிருதயத்தி லிருந்தென்னை யடிமையாயுடையவளே, செல்வவணியே, சந்திரனைப்போல வெவர்க்குங்குளிர்ந்த நிழல்செய்யுங் குடையே, செல்வங்களெல்லா மாரியாகப்பெய்யு மேகமே, வேதரூபியே, கருணாகரியே, உயிரெல்லாங்காக்கு மமுதினு னிறைந்தகடலே, நிகரில்லாத நாயகியே மிகவும்வாழி வாழி.

வாழியனந்ததயாபரனுக்குரி வாய்ந்தருடாயவளே
வாழிவிசும்பிடைவாழுயரும்பரின் வாமவிராக்கினியே
வாழிமுகிண்டிலபூவனைகன்னிய மாதரையாளரசே
வாழியமுந்தருளேமறையேயற னேநனிவாழுதியே.

உரை.— அனந்த தயாபரனுக்குரிய வருளுடையதாயே வாழி, வானுலகில்வாழும் வானோர்க் கழகியவிராக்கினியே, வாழி, மலராதபூவொத்த கன்னிகைளையாளு மரசியே வாழி, நிறைந்தவருளே வேதமே புண்ணியமே வாழி.

புளிமா, கருவிளம், கருவிளம், கருவிளம், புளிமா,
கருவிளம், கருவிளம், கருவிளம்.

அரவினுருவொடுகெடிவிடுவிடமற வரிதினுயிர்தருமினிதமுதிவளென
விரவினிருளினும்வடுதருமிருளற விரவியொளியினுமொளிர்சுடரிவளென
வுரவிழ்வுமறவுயிரடுமிகலற வுறுதியிவளெனவுயிரிவளெனவிரி
புரவினிகரிலதயவினிகரில புணரியிவளெனவறைகுவர்நலவரோ.

உரை·— பாம்பினுருவங் கொண்டு பசாசுமிழ்ந்தநஞ்சற வரிதாயுயிரைக் கொடுக்கு மினியவமிர்த மிவளென்று மிராவினுள்ள விருளினு மிருளைத்தந்தபாவமறச் சூரியனொ

ளியினு மொளிர்ந்த சுடரிவளென்று மெம்மனமுற்ற கேட றவு மெம்முயிரைக் கொல்லும் பகையறவு முறுதியிவளெ ன்று முயிரிவளென்றும் விரிந்தவீகையிலுந் தயையிலு மொப்பில்லாத கடலிவளென்றுஞ் சொல்வார் நல்லோர்.

கடியினெடிதமரொழவுயிர்மெலிகுவர் கவலையடைகுவர்மகரிலவு
லைகுவர் [றியயர்குவர்
மிடியின்மெலிகுவர்பிணிகளின்மெலிகுவர் வெருவியுருகுவர்விளிவு
குடியின்மெலிவொடுமிருமையினிழிவொடு குழையவழுகுவர்சலுழு
[வர்மடிகுவர்
படியினனையவருதவியகலமலிபரவையிவளெனமொழிகுவரறவரோ.

உரை.— பசாசுகள்செய்யும் நெடும்போரினு லுயிர்மெ லிந்தவருங் கவலையடைந்தவரு மக்களில்லாமல் வருந்தின வருந் தாரித்திரத்தினுலு நோய்களினுலு மிளைத்தவரும் பய ந்தவருஞ் சாகுங்காலத்தி லயர்ந்து நொந்தவருங் குடிமெலி வினுலும் பெருமையீனத்தாலுங் குழைந்தழுத வரும் புலம் பினவரு மரணமடைபவரும் பூமியிலுள்ள மற்ற வனைவரு முதவியடையும்படிக்கு நன்மைநிறைந்த கடலிவளென்று சொல்லுவார் புண்ணியவான்கள்.

ஒளிகொளுலகமுமுதலியவுளபல வுலகுபொதுவறவனையவுநட
[விய
வளிகொணதிபதிதனைமகவெனவணி யரியகருவுடனுலகிடரொரியற
வளிகொள்கவரமுநிழறருகவிகையு மருவுமெமதரசியுமிவளெனவரு
டளிகொள்முகிலெனமணமலர்மதுமழை சொரியவடியிணைதொழு
[குவரொவருமே.

உரை.— விளங்கும் வானுலகமுதலுள வுலகங்களைத் தனியே யாண்டு நடத்தின தயையுடைய அதிபதியாகிய கடவுளைமகனுகச் சூற்கொண்டு பூவுலகிலுள்ள துன்பஞ் செ ய்யு மழலையவிப்பக் குளுந்த காற்றுவீசுங் கவரியுநிழலைச் செ ய்யுங் குடையுங்கொண்ட நமதுவிராக்கினி யிவளென்றும் தயையைத் துளியாகக் கொண்ட மேகமிவளென்றும் வா சமது மலரா மழையாகச்சிந்திய வவளிருபாதத்தை வண ங்குவரொல்லோரும்.

சூசை மாமுனியின் றயை.

(27-ம். படலம். 21, 22, 23.)

மா, கூவிளம், விளம், விளம், மா.

கைதளர்ந்தனர்க் கிரந்துதானளித் துநோய்கடுத்த
மெய்தளர்ந்தனர் மெலிவறுமருந்தெனப்பொறிசெய்
பொய்தளர்ந்தனர் புலனுறவிளக்கெனவெவர்க்கு
மைதளர்ந்தன மனத்துறித் துணையெனவானான்.

உரை.— அங்ஙனங் கைதளர்ந்த தரித்திரர்க் கெல்லாந் தானேயிரந்து கொடுப்பவனாகவும் பிணியால் வருந்தின வுடலிற் றளர்ந்தவர்க் கெல்லா மெலிவினைத் தீர்க்கத் தான் மருந்தாகவு மைம்பொறி களால்வரும் பொய்யிற்றளர்ந்த வுணர்வினர்க்கெல்லா நல்லறிவுறும்படி தான்விளக்காகவு மயங்கித்தளர்ந்த மனத்தவர்க்கெல்லா முறுதியாகும்படி தான்றுணையாகவும் நின்றான்.

கொடுங்தொற்புண்ணினைக் கொந்தழலாற்றின தனைய
சுடுஞ்சொற்கொண்டருந் துகள்வடுவாற்றுதல்வேண்டின்
விடுஞ்சொற்பூவென விள்ளியநயமுகத்தருளே
படுஞ்சொற்கொண்டுளம் பனிப்படக்குளிர்த்தினிதுரைப்பான்.

உரை.— ஓரோரிடத்துப் பழையதோர் கொடும்புண்ணினைத் தியாற்சுட்டாற்றுவவைப் போலத் தானுங் கொடியதோர் பழம்பாவத்தின் வடுவினைச் சுடுஞ் சொல்லா லாற்றவேண்டியதென்னி லப்பொழுதே மதுவிடும் பூவின் றன்மையால் மலர்த்த வின்பமுகத்தோடு தயைநிறைந்த சொல்லா லவர்மனங்குளிரும்படி கூடவே யினிதாய்ப் பேசுவான்.

தீயொக்குந்துயர் தீக்குளத்திழிமழையொக்கு
நோயொக்குங்கடை நனித்தநன்மருந்தொக்குமிருளைப்
பேயொக்குங்கடைப் பெயர்த்துளத்தொளிவிளக்கொக்குந்
தாயொக்கும்பயன் றருமறையொக்குந்தன்றயவே.

உரை.— அங்ஙனஞ் சூசையின்றய வெத்தன்மைத் தோ வெனில், தீயோடொத்த துயராற் சுட்டமனதிற்குப் பொழிந்த மழையொப்பாகவு நோய்வந்த விடத்து நன்மருந் தொப்பாகவும் பசாசுகள் மயக்குவித்தகாலத் தவ்விருளை யக ற்றி மனத்தைவிளக்குஞ் சுடரொப்பாகவு மொருநற்று யொ ப்பாகவு மெவர்க்கும் பயன்றரும் வேதமே யொப்பாகவு நின்றதவன்றயவு.

சூசைமாமுனியை மன்றாடி யண்டினவர்க் குண்டான வற்புத நன்மை யுபகாரங்கள்.

(36-ம் படலம். 45, 46, 47, 48.)

தேமா, கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.

தாயேயொக்க வருந்தயையொக்குமரு
நோயேயொக்க மருந்தினையொக்குறழை
பேயேயொக்கவரண்பிணை வொக்குமுயிர்
மீயேயொக்கவிடாத் துணையொக்குமிவன்.

உரை.— மிகவன்புடைய தாயைப்போல வெவர்க்குந் தயையைச் செய்து வந்தொழியாதநோ யொருவற்கு வந் தாலவனே நோய்தீருமருந்தாகவும் வஞ்சப்பேய் துரிதஞ் செய்யவந்தா லவனேபேய்க் கசையாத கோட்டையாகவு மெவ்வுயிர்யாவு மேற்கதிசேர வவனே பிரியாதவழித் துணை யாகவும் நிற்பான் சூசை.

தாக்கிவெம்பகைதந்த சவத்தையிவ
ஞேக்கிநண்பகல்முன்னிரு ணூறுவபோற்
போக்கியம்புவிபூத்தன புன்கணெலா
நீக்கியின்பநிழற்கொடி யாற்பரிவான்.

உரை.— உயிரைத்தாக்கி வெம்பகைசெய்ய வெதிர்த்த

பேய்களைச் ஞசைநோக்கின தன்மையிற் பகல்முன்னிரு ளொழிவதுபோல வப்பேய்களைப்போக்கித் தன்கொடி நிழ லி லெல்லாரையுங் காப்பான்.

நொந்தாலாதரவாமுறு நோயொழியா
வந்தாலுளொழிவன்று மருங்கிலுறிச்
சென்றாரானிழல்செய்து வழித்துணையாய்க்
கந்தாவான்கதியின்கரை யேற்றுவனால்.

உரை.— நொந்தார்க்கவனே யாதரவாகி வந்த நோ யொழியாமல் நாளொழிந் திறக்கக்காலம் வந்தா லவனே யண்டையிற் சென்று தன்பூங்கொடியா னிழலைச்செய்து வழித்துணையாகிக் கெடாத மோட்சக் கரையிலேற்றுவான்.

பின்ருதோர்நசையாற் பெயராதனுகிக்
குன்ருதோரருள்கொள்ளி வனம்பினருட்
பொன்ருதோர்துயர் பூத்தொழியாமெலிவி
னின்ருரோரொருவர் நிலமீதுளரோ.

உரை.— விடாதவாசையோ டவனைப் பெயராதண்டிக் கெடாததயையிற் சிறந்த விவனை நம்பினவர்களுள்ளே தீரா ததுன்பத்து மெலிவொழியாமல் நின்றவ ரிப்பூவுலகி லொரு வருண்டோ.

திருக்காவலூர்

அடைக்கல நாயகிமேல்

வெண் கலிப்பா.

மீனுருமெழிற்சிரத்திவெண்மதியார்மலர்ப்பதத்தி
பானுருங்கதிர்ப்படத்திபரகதியாளரும்வரத்தி.

ஈரறத்தியருட்டிறத்தியிணையகற்றுங்கொடைக்கரத்தி
சீரியற்றித்தயைபுரிந்தாள்திருக்காவலூர்வயத்தி.

அவ்வுலகேநின்றிறையோனனுகிரமையமைந்தளிப்ப
இவ்வுலகேயொருமகவாயிணைதுணைமுற்றிலதுயிர்த்தி.

வானவரோபணிகேட்பவானவர்கோன்மடியுறங்க
ஈனவரோபணிந்திரப்பஎவ்வுயிர்க்குமடைக்கலத்தி.

இன்பருளிப்பூநிழல்சூழியைகாவலூரகத்தே
அன்பருளிநீயெனையுமடைக்கலங்கொண்டாயிலையோ.

நெஞ்சிலஞ்சியனுகாநானின்றக்காலருளொடுநீ
அஞ்சலஞ்சலென்றணைத்தஅரும்பாவிநானன்றோ.

ஐம்பொறிவாய்மனம்போக்கி அவாப்பொங்குந்திறத்தழற்ற
வெம்பொறிவாய்வினைச்சுரத்து வேட்கையின்றோர்மிசைதிரி
[ந்தேன்.

தேரொழுந்ததுகளும்வாத்தீயெழுந்தபுகையுமெழீஇ
நேரொழுந்தசுருதியொளிநிசியாகவொளித்தனவே.

என்னையளித்தாதரித்தவிறைமறந்தேனறமறந்தேன்
உன்னையொளித்தடைக்கலத்தா யுயிராய்நின்னடிமறந்தேன்.

மந்திரமுமோதலிலேன்வாடியவென் னுயிருய்யுந்
தந்திரமுமுற்றுமிலேன் தகுங்கதிசேர்தடமறந்தேன்.

ஏடிழந்தேசுடுகாட்டிலிழிபடச்சேர்மாலையெனு
வீடிழந்தபேயினங்கள்மெய்யிறைவனைத்தொழுதேன்.

தாய்தந்தைமறந்தனனோர்சங்கையிலேன்பகையோங்கி
நோய்தந்தேயறிவெல்லாநுகர்சினத்தின்சுரம்புகுந்தேன்.

செறிவிச்சைபொய்களவுநீதனைத்தும்புடைநெருங்க
அறிவச்சநிறைநாணமவையெல்லாமகன்றனவே.

பழிபாவம்பகைநிந்தைபரிவிவையேவழிகாட்டக்
கழிகாமம்பொங்கியவோர்கானியாறடுத்தனனே.

பூத்தனபோற்சுடும்வினைதீப்புனல்குளித்தேனமுதமுயிர்
காத்தனபோலுயிர்கொல்லுங் கைப்புகுத்தநஞ்சயின்றேன்.

நள்ளிருளேவிற்றிருக்குநறுந்தவிசென்றிருட்குழலோ
டுள்ளிருளேமலிகாடாவொளித்தொன்னாருயிர்பறித்தார்.

கான்பொழிந்ததேன்பொழியுங் கருங்குவளையென்றனகண்
ஊன்பொழிந்தவேலெனவென் னுயிரருந்தப்பட்டழுதேன்.

தீமுகத்தேமெழுகிணையாச்சிதைந்துயிரோநொந்துருகப்
பேய்முகத்தேயிளையாகப்பெரிதழுங்கிக்கிடந்தனனே.

அன்றன்றோதாயுனையேயகத்துணர்ந்துன்றயைமிதவை
என்றன்றோசிக்கெனக்கொண்டெளிதினிதினீந்தினனே.

வாய்பொய்யாமறைவிளக்கேமல்கிருணீத்தறநோக்கித்
தாய்பொய்யாவடைக்கலநீதருங் காவலூர்ச் சென்றேன்.

அனமாடிவிளையாடுமம்புயமார்வாவியின்றிப்
புனமாடிமதிதாங்கும்புண்டரிகவடிகண்டேன்.

கண்டஞ்சியருகணுகாக்கலுழ்ந்திடநானீகருணைக்
கொண்டஞ்சலெனத்தேற்றிக்குறுகவெனாவழைத்தனையே.

தேம்பியழுங்கண்ணருவித்திருக்கையாற்றுடைத்தனையே
ஓம்பியழுந்திட்டனபல்லுயிர்வடுவுள்ளாற்றினையே.

வாடியவென்னுயிருவப்பவானமிர்தமூட்டினையே
நாடியவென்னாசையறநயங்காட்டியளித்தனையே.

தாயேநீயன்றுசெய்ததையொருநாள்மறப்பேனோ
நோயேகொண்டொழியினுநானுன்மலர்த்தாளொழிவேனோ

அருந்தியநஞ்சிடத்தினிமை யமையுமெனவிரும்புதலால்
வருந்தியநெஞ்சதுகாணு வகைமிகமுன்னெந்தழூதேன்.

காய்ந்துயிர்கொல்விடம்விரும்பிக் கைப்பென்றேவெறுத்தறி
மாய்ந்துயிர்கொல்லாசைமலி மங்குலிடுமாயையிதே. [வு

இன்றுநீதருவிளக்கே யெறிப்பவுளந்தெளிந்தமையால்
அன்றுநான்விரும்பியதீ தந்தமிலாவெறுத்தழுவேன்.

நான்செய்ததீவினையு நயந்தருளித்தாயேநீ
தான்செய்தவாதரவுஞ் சாற்றுதுமெந்நாளுமென்றே.

தாமவருணம்பரியே தயாகிரணவிதுசரணே
வாமவுடுசேகரியே வான்விளைபூம்பூடணியே.

உலகனைதேவாம்பிகையே ஒருத்தியமலோற்பவியே
அலகையிகற்சாசனியே யரியவமலேஸ்வரியே.

துன்பநோய்க்குயிர்மருந்தே துயர்க்கடலினிலைக்கரையே
இன்பவீட்டுயர்வழியே யிருள்மயல்கொளுயிர்க்கொளியே.

வழுவார்க்கு நீநிலையே மருள்வார்க்குநீதெளிவே
அழுவார்க்குநீகளியே அயர்வார்க்குநீதிதியே.

கல்லார்க்குக்கலைக்கடனீ கடவார்க்குநிலைத்திறனீ
இல்லார்க்குமிரணியநீ யெல்லார்க்குமெல்லாநீ.

நன்னையேயாதரவே நண்பொழியாத்தயைக்கடலே
அன்னையேயடைக்கலமே யடிமையெனையாளரசே.

ஆடினுநான்றுறைத்துணைநீ யருந்தினுநானுயிர்ச்சுவைநீ
பாடினுநானுரைப்பொருணீ படுக்கினுநானுயிர்ச்சுகநீ

பகைப்படநானரணலநீ பசியுறநானமுதெனநீ
மிகைப்படநானுறுதனீ விளிவுறநான்கதித்துணைநீ.

எவ்விடமுநீயுதவி யென்றனக்குன்றிருநாமம்
வெவ்விடமுமமுதாக்கி விரும்பியெனைக்காப்பதுநீ.

காக்கினுமித்துயர்க்கடலிற் கரையாமுன்சேவடியை
நோக்கினுமல்லாதிவனோர் நொடிவாழ்வதெனக்கரிதே.

எக்காலுமடிப்பணிசெய் திருக்கவெனக்கினிக்குறித்த
அக்காலமெக்கால மதுகாணுநொந்தழுவேன்.

மறைநலமுந்தயைக்கடலும் வான்கதிசேரிருவழியும்
இறைவனையுமென் னுருவோ டெனக்கினிதிற்காட்டினையே.

நனிநெருங்கிமதிபணியுன் னளினத்தாடொழவடியார்க்
கினியிரங்கிக்காட்டாயோ வின்னுயிராமுன்னுருவே.

மீனலமேகடந்தொளிருன் விழிக்கமலங்காண்பேனோ
தேனலமேகடந்திமிழுன் றேமொழியைக்கேட்பேனோ.

ஒளிப்பாயோதிருவடியை யுவந்தெனக்கேயளிப்பாயோ
சுளிப்பாயோபாவியெனுத் தொண்டனெனக்களிப்பாயோ.

அணிவேனோவுன்மலர்த்தா ளடும்வினையாலுனையிழந்து
தணிவேனோவெனவச்சந் தாங்கிலனுய்வழியறியேன்.

எக்காலமோர்காலம் யான் சென்றுன்னடிபணிசெய்
அக்காலம்வருமெனநா னறிந்தாலேமனம்பொறுப்பேன்.

முப்பகைசூழ்ந்துயிர்ப்பகைக்க முற்றுமுளத்தஞ்சுகின்றேன்
அப்பகைசூழ்ந்திரங்கியநீ யடிமையைக்கைக்கொள்ளாயோ.

நீமறந்தானின்னடிமை நிலத்துயிரோடுய்யுமதோ
தாய்மறந்தாலிளங்குழவி தானுயினுமுய்யயேனே.

வினைநீக்கியடிமையெனை விழைந்துற்றதுன்றயையே
முனைநீக்கியுன்னடிப்பின் முழுதணைத்தலுன்கடனே.

தெளித்தேற்றவெவருமுனைத் தினமெவணுமுன்றயைநான்
களித்தேற்றலென்றன்கடன்.

முற்றிற்று.

அடைக்கலமாலை.

காப்பு.

வெண்பா.

உடைக்கலமாமீன்மதிபா னுற்றலகைவெல்லும்
படைக்கலமாவெவ்வாமும் பற்றி-யடைக்கலமா
வன்னையேயுன்ருட் கடைக்கலமாமாலையைக்கொண்
டென்னையேகாத்த லியல்பு.

உலா.

மூவுலகுமேந்து முழுமுதலோன்ருட்பணிந்து
தேவுலகுமேற்றுந் திருக்கன்னி-பூவுலகு. 1

மேற்றித்துயர்க்கிவளை யெஞ்சாவடைக்கலங்கொண்
டாற்றிவழுவா தரிதுவப்பத்-தேற்றி. 2

யடைக்கலஞ்செய்மாதா வடிமேலணிய
வடைக்கலமாமாலை யறைவா-மடைக்கலமா. 3

எவ்வுலகுந்தோற்றுவித்தே யெவ்வுலகுமாளிறையோ
னிவ்வுலகுந்தாங்கி யினிதளிப்ப-வவ்வுலகு. 4

நீங்கிநமைத்தேடுதற்கு நீணிலத்துத்தான்மனுவாத்
தாங்கிநமைவாழ்விக்கத் தான்வருந்தி-யேங்கினனுய்த். 5

துன்பமிகவன்புமிகத் துஞ்சிநமையளிப்ப
வின்பமிகுமாலயமே யீங்கவற்காய்-முன்பிணையாச். 6

சீராளுந்தாயாய்த் திருக்கன்னிமாறிலளாச்
சோராதடைக்கலமாஞ் சூல்வயிற்ருள்-பாராரு 7

மின்னுவொழுத்தளிப்ப வெங்கையிளம்பிறைபோ
லுன்னுவிடர்கொண் டுதித்தனகா-றன்னு. 8

னுலகெல்லாமுவிரலா னுய்த்தேந்தியானு
மிலகெல்லாநாதனைத்தா னேந்தி-யலகெல்லா. 9

மில்லாவரத்தோங்கி யீங்கவற்கேயென்மொழியாற்
புல்லாவடைக்கலமாம் பூங்கரத்தாள்-செல்லாரும். 10

விட்புலத்துவாழினமு மெய்யகத்துவாழினமு
மட்புலத்துப்பல்லுயிராய் வாழினமு-நட்புளத்து. 11

நாடுமுணவெல்லா நல்குமிறையவற்கே
வீடுபெறத்தானமிர்த மீந்தனளாய்-நீடுடைத்தம். 12

எவ்வுயிர்க்குமாதரவா மின்னிலையாமாருயிரா
மவ்வுயிர்க்குங்கொங்கையடைக்கலத்தாள்-செவ்வுயிர்க்கு. 13

ஞானமிகவன்புமிக நம்மைப்புரந்தளிப்பத்
தானமிகவோயாத் தயவுமிக-மானமிகச். 14

சீர்த்தவஞ்சீர்பொறைநூற் சிலமெல்லாமுள்ளடக்கி
நீர்த்தவடைக்கலஞ்செய் நெஞ்சத்தாள்-கூர்த்தகதிர். 15

தும்மிமுடியாகச் சூழிலங்குமீனினத்துப்
பொம்மியடைக்கலஞ்செய் பொற்சிரத்தாள்-பம்மிவளர். 16

வெற்பிலெழுஞ்சுடர்செய் வேந்தனைப்பட்டாடையெனப்
பொற்பிலடைக்கலமாய்ப் பூணுடலாள்-முற்பிறையு. 17

முற்றியுலகெங்கு முழுதெரிப்பத்தானதனைப்
பற்றியடைக்கலங்கொள் பாதத்தா-ளுற்றிவளைச். 18

சூழ்வார்க்கிணையிவடாட் சூடித்தொழும்வான்மேல்
வாழ்வார்க்கடைக்கலமாம் வானரசா-டாழ்வார்க்குத். 19

தஞ்சவடைக்கலமே தாரணியாள்வார்க்காண்மை
விஞ்சவடைக்கலஞ்செய் மேன்மையினு-ளெஞ்சி. 20

வழுவார்க்கிவணிலையே மாறுத்துயர்கொண்
டழுவார்க்கிவள்களிசெய் யன்பே-மழுவாரி. 21

சேர்ந்தார்க்கிவள்கரையே சேர்நோய்க்கிவள்மருந்தே
சோர்ந்தார்க்கிவளோர் துணைத்திதியே-கூர்ந்தாற்று. 22

இல்லார்க்கிவடிருவே யெல்லார்க்கிவடிறமே
கல்லார்க்கிவளோர் கலேக்கடலே-யெல்லார்க்கு. 23

நன்னேயேயா தரவே நண்பேநயக்கதியே
அன்னேயேபொய்யா வடைக்கலமே-பின்னேயே. 24

இத்தனேயுந்துன்பமற வின்பமிகவுன்னடியே
யத்தனேயுமோம்பி யடைக்கலமாய்-மொய்த்தணியாய். 25

வைத்தமுடியத்தனேயும் வைத்தமணியத்தனேயும்
வைத்தமலரத்தனேயும் வைத்ததொடை-யத்தனேயும். 26

வைத்தகவியத்தனேயும் வைத்தபுகழத்தனேயும்
வைத்தபதமத்தனேயும் வைத்தபொரு-ளத்தனேயும். 27

வைத்தசிரமத்தனேயும் வைத்தகரமத்தனேயும்
வைத்தவிழியத்தனேயும் வைத்தமன-மத்தனேயும். 28

வைத்தவறமத்தனேயும் வைத்தவரமத்தனேயும்
வைத்தநலமத்தனேயும் வைத்திருக்க-மொய்த்திமைக்கும் 29

வானிருக்கமண்ணிருக்க வாய்ந்தவைநின்ருளிருக்க
யானிருக்கவாங்கிடமொன் றில்லேயோ-பானிருக்க. 30

வோரிருளுமில்லே யுதவிநின்ருளிருக்கச்
சேரிருளுமில்லேச் செயிரில்லேப்-போரில்லே. 31

யேவில்லேக்கொல்லு மிகலில்லேவாதில்லே
நோவில்லேத்தாழ்வில்லே நொந்துயிர்கொல்-சாவில்லே. 32

இன்மையிலேபஞ்சமிலே யீநமிலேதஞ்சமிலே
தின்மையிலேவஞ்சமிலேச் சீற்றமிலே-பன்மையிலே. 33

கேடில்லேக்கோதில்லேக் கேளடிசேர்ந்தார்க்கெனக்கு
மீடில்லேவாங்கிடமொன் றில்லேயே-பாடில்லா. 34

ஞானக்கலேயுண்டா நன்றுண்டாம்பேறுண்டா
மானவொளிவுண்டாம் வாழ்வுண்டாந்-தேனுண்டாம். 35

பேரின்பமுண்டாம் பெலமுண்டாநோகுமுயிர்
தேரின்பமுண்டாந் திணக்கதிவீட்-டாரின்பம். 36

ஆங்குண்டென் றுன்று ளடைக்கலமாய்வந்தேனே
யீங்குண்டெனக்கிடமொன் றில்லையோ-வோங்கிமிக. 37

உண்டுண்டெனக்குமிட முண்டுண்டடைக்கலமே
யுண்டுண்டெனக்குநிலை யுள்ளுவப்ப-வுண்டென். 38

றடிசேர்ந்தேன்கண்டே னணிந்தேன்பணிந்தேன்
மிடிதீர்ந்தேன்பேரின்ப வெள்ள-முடியாக். 39

குளித்தேன் றுதித்தேன் குளிர்ந்தேன்மலர்த்தா
டுளித்தேன்சுவைத்தேன் சுகித்தேன்-களித்தேனே. 40

காண்டற்கரியனவுங் கண்டேனேகண்டனபின்
றீண்டற்கினியனவுந் தீண்டினனே-யீண்டி. 41

மதியுமுடுவும் வனையுமடிகள்
துதியுமலர்செய் தொடையு-மதித. 42

ரடியிலணிய வளவில்வளைய
முடியிலிலக மணிகள்-படிய. 43

விழுவரனுகி வியல்வர்நசையி
ெழுழுவரிணையி ெழுழுவர்-குழுவி. 44

யுலவியனுகி யுகளியுதவி
கலவியிரவி கதிரி-னிலவி 45

இரிவரணிவ ரிமிர்வர்பணிவர்
புரிவர்புணர்வர் புகழ்வர்-பிரியர் 46

நியோகிவிநோதி யிருதவிலாபி
தியாகிமெஞ்ஞானி தியானி-யியாகி. 47

படாதநிலாவி பகாததயாபி
விடாதபுராண வினவி-கெடாத. 48

நிசாதிதவாத நிவாணிதொகாத
விசாலியெனுவல் விடாம-னுசாவி. 49

யெழுந்துவிளங்கி யியைந்துமுழங்கி
விழுந்துவணங்கி விரும்பி-யமுந்து. '50

பதங்கள்பணிந்து பதங்கணவின்று
சதங்கள்வியந்து சதங்களதிர்ந்து. 51

சயங்கள்குயின்று சரங்கள்குவிந்து
வயங்கள்புகழ்ந்து மனங்க-ணயந்துல. 52

வாரியசோபன மாயிரமாயிரம்
வேரியமாலைகள் வீசினர்-வாரினர். 53

நாமமுமாயிர நானமுமாயிரம்
வாமமுமாயிரம் வாரினர்-தூமமு. 54

வாடினரூதின ராவினரோதினர்
பாடினர்பாசினர் பாவினர்-கூடினர். 55

விஞ்சியவெஞ்சில விஞ்சையிலெஞ்சென
வஞ்சியநெஞ்சன ரஞ்சலி-யஞ்சிட. 56

வொத்தெனபற்றுட னுற்றனவற்றன
மித்தனையித்தலை யிட்டிடவே-யத்தனையுங். 57

கண்டேனுவந்தேன் களிகூர்ந்தடைக்கலமே [ன. 58
கொண்டேனுயிர்கொண்டேன் கோதொழித்தே-னுண்டா

வின்னவுபகார மென்னெஞ்சறிந்திறைஞ்ச
வுன்னமகிழ்ந்தடியே னூமையுமாய்ச்-சொன்ன. 59

வடைக்கலமாலை யடைக்கலமாதா
வடைக்கலமாய் வைத்தவணி. 60

முற்றிற்று.

தேவாரம்.

கருணாம்பரப் பதிகம்.

பண்—ஆந்தளகுறிஞ்சி.

இராகம், சவுராஷ்டகம்,—ஆதிதாளம்.

மா, மா, காய், மா, மா, காய்.

மூவாமுதலாமுற்றிணையா மூவாளாயோர்மெய்ப்பொருளாய்த்—தாவாநயனாய்த்தயைக்கடலாய்த் தானாய்த்தனிமுத்தொழிற்பானாய்க்—காவாநின்றென்னுளத்தரசாய்க் கருணாம்பரமாயாதிபரா—ஆவாயுன்னையனைவருமுன் னலர்த்தாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 1

நேராநிலையிற்றன்வயத்தாய் நெடுங்காற்கடந்தேயென்றுமுளாய்ச்—சூராருடல்செய்யுருவிலனாய்த்தொக்கநன்மையாவுமுளாய்ப்—பேராதனுகாதெங்குமுளாய்ப் பின்மூவுலகோர்காரணனா—யோராதிவற்றையுலகெல்லா முன்றாட்பணியாயாவாறென்னே. கருணாம்பரம். 2

வான்கொள்ளொளிசெய்சுடர்படைத்தி மண்கொள்பலநல்லுயிர்படைத்தி — கான்கொள்கனியோடலர்படைத்தி கதிர்கொண்மணியோடணிபடைத்தி—யான்கொள்ளவையுநீபடைத்தியிவைசால்பன்றென்றுனைத்தந்தி—யூன்கொள்ளுருநீயாயினயின் னுன்றாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 3

தனிமைத்தலைமையுனதென்பார் தயையின்மிக்குள்ளன்புணர்ந்தோ—ரினிமைத்தலைமையுனதென்பா ரிணையாச்சீர்கொள்ளுநன்குணத்தாற்—கனிமைத்தலைமை யுனதென்பார் கவினேகளியேயுனையென்பார் — நனிமெய்யிஃதாயனைவருமுன் னற்றாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 4

பொருளேசெய்தெப்பொருளினுமுட்புணர்ந்தப்பொருள் கெட்டழியாய்நீ—யருளேபுரிந்துசெய்பொருளா லாமோர் பயனும்வேண்டாய்நீ—மருளேயறியாய் தயைமறவாய்மாறு நட்பெம்மேலொழியா—யிருளேமிகவீ துணராவுன் னிணைத் தாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 5

சுவையேயூட்டியளிப்போய்நீ தொன்னோய்மாற்றுமருந் தோய்நீ—நவையேநீக்கிக்களிப்போய்நீ நசையேயாற்று மினியோய்நீ—யவையேபுகழினுயர்ந்தோய்நீ யமரர்புகழப் படுவோய்நீ—யிவையேயுண்டாய்ப்.பின்னுலகுன் னிணைத் தாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 6

ஒளியேநலதேஎவ்வொளியை யொளித்துக்கடந்த வொ ளியோய்நீ—களியேநலதேலாசையறக் கசடற்றொழியாக் களியோய்நீ—தெளியேவருநூற்கலைநலதேற் றிரநூலுணர் த்துந்தெளியோய்நீ— வெளியேயிவையோர்ந்தனைவருமுன் மென்றாட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 7

கானார்மலர்பெய் துன்றிருத்தாட் கருத்திற்கொள்வார் துய ர்கொள்ளார்—நானுவழியேநனிவாழ்வார் நயமும்புகழுமிக் கனபின்—வானார்பயன்கொள்வாரொன்றாய்மாறுமெய்யிஃதா கியிவண்—டேனாரின்ப நக்குவருன் றிருத்தாட்பணியாவா றென்னே. கருணாம்பரம். 8

மலையேயுன்னல்லாணிலையா மதுவேயமுதே கொல்நஞ்சா ங்—கலையேவெளிறுமொளியிருளாங் களியே துன்பமாந்தி ருவி—னலையேவற்றிநல்குரவா மடலேவலியேகுறையாமிங் —கிலையேயாகியுலகெல்லா நின்றாட்பணியாவாறென்னே.

கருணாம்பரம். 9

கார்சேர்மின்னேயிங்கிளமை கடல்சேர்திரையேயிங்கு டைமை—நீர்சேர்நுரையேயிங்கினிமை நிசிசேர்நுளம்பேயி ங்கொளிமை—சீர்சேருன்னைச்சேர்ந்தவர்க்கே திறம்பாவொ ழியாவாழ்வுளதாம்—பார்சேரொவரு மிஃதறிந்துன்பணித்தா ட்பணியாவாறென்னே, கருணாம்பரம். 10

வல்லாரில்லையுனையல்லால் வாழ்வாரில்லையுனைச்சேர்ந்தா—லில்லாரில்லைநீயிரங்க விவணீமுனியக்கெடாரில்லை—செல்லார்வானோர்தொழுதேத்துஞ் செல்லற்கரியவுன்பெருமைக்—கல்லாருண்டோரபின்புலகுன் கவின்ருட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 11

வான்மேலமரரத்தனையு மண்மேலரசரத்தனையு—நூன்மேலுயர்வோரத்தனையு நுண்மாண்பறிவோரத்தனையுங்—கான்மேன்முனிவரத்தனையுங் கன்னிமடவாரத்தனையு—மேன்மேலிறைஞ்சமற்றுலகுன் மென்ருட்பணியாவாறென்னே. கருணாம்பரம். 12

முற்றிற்று.

சர்வேஸ்வராய நம.

திருக்காவலூர்க் கலம்பகம்.

காப்பு

கட்டளைக்கலித்துறை.

பாற்கடற் கன்னிச்சங் கிங்க ணரிதிற் பயந்தளித்த
மேற்கடற் றேவ திருமுத்தம்பூண்டு விரிதமிழ்ப்பா
நாற்கடற் றொல்லக் துறைசேர்ந்துகாவலூர்நங்கையெனு
நூற்கடற் றேவமு தள்ளி நுகர்வ னுவன்றிடவே.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

நான்கடித்தரவிரண்டு.

பார்மேவும்பழிநீப்பப் பகர்ந்தடங்காப்பரிவுள்ளிச்.
சீர்மேவுந்திருவுளத்தைத் தெளிந்தமராருளம்பனிப்ப

வுருவில்லானுருவாகி யுலகிலொருமகனுதிப்பக்
கருவில்லாக்கருத்தாங்கிக் கன்னித்தாயாயினையே.

விண்ணுலகம்புகழ்ந்தேத்தி வியந்தலர்சேவடிவருட
மண்ணுலகந்துயர்நீங்க மன்னுயிர்கள்சிறந்துவப்ப.

வான்றளங்கள்புறங்காப்ப வானரசர்பணிகேட்ப
மீன்றளங்களணிமதிபோல்விண்ணரசாளாயினையே.

நான்கடித்தாழிசையாறு.

தண்சுடர்க்கான்மதிக்குழவி தாங்கியபூவடி விளங்கத்
தெண்சுடர்க்காலுடுவணைந்த திருமுடிகொள் சிரமிசைப்பப்

பனியுயிர்த்துமனங்குளிர்க்கப் பருதியுடுத்துடலிலங்கத்
தனியுயிர்த்துமரசணியாத் தரிப்பதுநின்விருதாமோ.

கனைபூத்தசோணாட்டுக் காவிரியின் வடகரைமேற்
சினைபூத்தநிழற்பொழில்வாய்ச் சிங்கநெடுங்கொடிநிழற்றுந்

திருக்காவலூரகத்துத் திகழொளிவாய்மணிக்கோயி
லருட்காவலியற்றிநமை யளிப்பதுநின்றயையாமோ.

உள்ளுருவாக்கவசமென வுத்தரிகத்துடன்மருடீர்
தெள்ளுருவாமணிமாலை சிறந்தேந்துங்கைநீட்டி

வாய்பொய்யாமறைத்திசையாம் வடதிசையேதனிநோக்கித்
தாய்பொய்யாவடைக்கலமே தருவதுநின்புகழாமோ.

கான்பொதுளும்பூம்புகையுங் கமழ்பூவுமணந்தேங்க
மீன்பொதுளுமொளிமணியார் விமானத்துளெழுந்தருளிப்

பார்பூத்தவினையறநீ பயந்தநலத்திவ்வுலகுஞ்
சீர்பூத்தவானெனப்பச் செய்வதுநின்சிறப்பாமோ.

தாண்மலரோதலையரும்பத் தரும்பணிகேட்டுளம்பனிப்பச்
சேண்மலரோயுன்வரத்தாற் றிருக்கடலூடினிதாழ்ந்து

வானவருங்கனைகாண மனந்தேற்றுப்புன்பாவா
லீனவருள்யானீந்தற் கியைந்ததுநின்றிறமாமோ.

யாழ்குரலேயினிதென்னாவின்றாட்கேதன்மகன்சொற்
றாழ்குரலேயினிதென்ற தகைமைத்தோமனதிரங்கித்
துவர்வாய்ப்பொங்கலைமணிபோற் றொடர்புளதாய்நீயென்ற
னுவர்வாய்ப்புன் புகழுரைகொண் டுவப்பதுநின்பரிவாமோ.

ஈரடி அராகம் நான்கு.

உயருலகடிதொழ வுயிரினுமுவகையே
துயருலகுளியுள துகளொழியுறுதியே
யுலகினையருளிய வொருவனையருளலி
னலகினையறவர மமைதனியரசினை
வினையிடுமிருளற வெயிலிடுமறையினை
முனையிடுபகையற முயலிடுமுடலினை
மறையருளிறைவனை மறைவிலவருளினை
யிறையருள்கதியினை யினிதருடுணையினை.

ஈரடித் தாழிசை யாறு.

ஆதியிலாவந்தமிலா வனைத்துயிர்க்குங்காரணற்கே
யோதிலெலாநிகர்கடந்த வுற்பத்தியாயினைநீ.

பூவாதிமூவுலகின் புலத்தடங்காவனையொழிக்குந்
தேவாதிதேவனைநின் றிருவயிற்றிலடக்கினைநீ.

வானவர்க்குந்தெளியாத வடிவொளியான்வினையிருணீத்
தீனவர்க்குந்தெளிவதற்கே யென்னுருவொன்றாக்கினைநீ.

மூவுலகுமூவிரலான் முகந்தேந்துமுதலோனைத்
தேவுலகும்வியந்திறைஞ்சச் செங்கரமேலேந்தினைநீ.

பொருள்சுரந்தீனுயிர்க்கொல்லாம் பொழிந்தூட்டிவளர்த் [தோனை
யருள்சுரந்ததிருக்கொங்கை யமுதூட்டிவளர்த்தனைநீ.

யனைத்துலகுமேவலைக்கொண் டசைத்ததனியாணையினா
னினைத்துலகும்வியப்புறவிந் நிலத்தேவல்கொண்டனைநீ.

பல்வகை அம்போதரங்கம்.

உந்தையையின்றுநீ யொருவற்கிங்கரும்
வந்தையோடன்னையு மகளுமாயினை.
கனியரும்பயனொடு கலந்தபூவினைத்
தனியருள்கன்னியுந் தாயுமாயினை.

வேறு.

தொற்பழியுரகமிதித்தனை துகட்பழியுலகிறுடைத்தனை.
கற்பழியலகையடக்கினை கதிக்கதவகலவியக்கினை.

வேறு.

விண்டிறந்தனை யெண்டிறந்தனை
பானணிந்தனை மீனணிந்தனை
மதிபதத்தினை கதிபதத்தினை
யருள்வலத்தினை பொருளிடத்தினை.

எனவாங்கு தனிச்சொல்.

இனி-அகவற் சுரிதகம்.

தண்டிருக்காவலூர்த் தடம்வளர்ந்தொளிபெற
மண்டிருமலரடி வைத்தபின்னெங்கணும்
வினையிராப்பரந்து விளைந்தவவாவிரு
டனையிறமறையொளி தருந்திருப்பகலோன்
வந்துயிர்விளக்க வருநாளிதுவென
நந்துயிருய்ய நகைக்கதிர்பரப்பிக்
கொதித்தனைத்திருளினைக் கொய்தீங்
குதித்தனைநீயோ ருதயமீனே. 1.

நேரிசை வெண்பா.

மீனேதலையரும்ப வெண்மதியேதாளரும்பப்
பானேயுடலரும்பப்பாங்குருவைத்—தானே
ருடைத்தா டிருக்காவ லூரகத்துவைத்தா
டுடைத்தாள் வினைத்துயரைத்தொக்கு. 2.

கட்டளைக்கலித்துறை.

தொக்கநலமெலாம்பெய்திடியாதரு டோய்முகிலாய்ப்
புக்கநிழல்கொண் டிருள்புக விற்பொழிற் பொங்கலைநீ
ரொக்கவனாயா வரங்கொண்டுவரில வோர் நிலையா
யக்கமகிழக்கண்டேன் றிருக்காவலூரங்கனையே. 3.

ஆசிரியச் சந்த விருத்தம்.

அங்கனைவருமரு மறையறையயிர்வன விளியுள முயிருண வையையியக்கினை பொய்யைவிலக்கினை மெய்யைவிளக்கினை—யொளிவேந்தே.

இங்கனைவருமருமிடிமடிவிழிவெழு துயரயரொழிகுப வின்பமுயிர்த்தனை துன்பமொழித்தனை யிம்பர்களித்தனை—யுயிரீடாய்ச்

சங்கனையனநின கரமிகுவனவின மணியணிகுவரவர் தாவருநோயற மேவருமானுற யாவருநேரிற—வாழ்வாரால்.

பங்கனையனநின திருதிரு வடிசிர மடியனமணிகுப பாவிகளண்டினை காவலிலொன்றினை மேவியுமுன்றனைக்—காட்டாயோ. 4.

ஆசிரிய விருத்தம்.

தனைக்காட்டத்தன்றிறஞ்சேர் தயைஞானமற்றருந்தன் றகுதிகாட்டத்-தகும்வழியாற் றகாச்செல்வோ னுனைப்படைப்பக் கருதிப்பின் றரணியெங்கு—முனைக்காட்டவிரவிமதியுடுவினங்கணவமணிமற் றெளியின்சால்பு-முரிமணமூவகை மலர்ப்பூவொண்கனிதே னமுதினிமையுகுத்தயாவு—மினைக்காட்டப்பெய்தமுகில் வியன்கடனீர்தழகு வேய்ந்தவெல்லாம்-விண்ணிடத்தும்மண்ணிடத்தும்விருப்பங்கொண்டுனையுள்ளி விதித்தானன்றோ—நினைக்காட்டவெழில்காட்டுமிவை கண்டுன்னடி தொழுநா னிறையவாழ-நினைக்காட்டாயோமரியே திருக்காவலூர்நிலையே நிமலத்தாயே. 5.

கட்டளைக்கலித்துறை. [யனுன்

தாயுனைக்கொண்டா னனைத்தும்படைத்தவோர் தந்தை
காயெனப்பூவெனத் தன்றிருமாட்சியைக் காட்டுவபோற்
சேயுனைக்காட்டலினிவ்வளவுன்புகழ் செப்புவரா
ரோயிலகாவலிறைவிபொருயென் னுனைவெளிறே 6.

புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

வெளிமதிகதிருடுக்குல மணிநிதியொளிமுகத்தவை மலர் க
னியரிதுமற்றைய பலவுலகுளவனைத்தையு— மீறிலாதெ
ங்கணு மருளிப்பயந்தன,
வெளியமைசுரர்முதற்பல வினையமைநரரினத்தொடு விரிபல
வுலகனைத்தினு முளபல வுயிரனைத்தையு—நாளுமாறின்
யரிதுயிர்த்தமைந்தன,
வினைவிளைபுவிபகைத்தன முழுதுளதுகடுடைத்திட விரிமுகி
லிடியிடித்தரி துயர்மலைமுடியொளித்திட —மாரிமாறுன்
றிவ் வுலகிற்பொழிந்தன,
விரவிய விரகமுற்றிய வினையொடுவெகுளிபற்றிய வழலெழு
முகிலியற்றிய சுடுமெரியுலகழற்றிய—மாரியாலைம்புர மெ
ரியச்சினந்தன.
தெளிமறையவர்செலப்பிரி கடலிருமதிலெனக்கடி திருபுடை
யெழுநிறுத்தின நிலையெழுதிரைாகவிழ்ந்தெதிர்—நேரலார்
நைந்துயி ரொழியங்கடிந்தன,
திகிரியதுயர்குவட்டிழி திரைநிலையுறநிறுத்துபு மலைமிசை
மலையடுக்கென வலைமிசையலையடுக்குபு—யோருதானுநதி
நடைதடுத் துயர்ந்தன,
செருமிகுசெறுநர்மொய்த்துறை முகிறவழரண் மதித்துயர்
பொடியெழவடிபெயர்த்தொரு படையிலநகர்தகர்த்திரு
—ஞாலமேயஞ்ச மிகுகத்ததிர்ந்தன,
சிதைவழிசிதைதசினக்கர- னரசுடனுயிரறப்பல கரிபரியலது
முப்படி யுறழ்வுமபயர்முற்றுறு — நூறுநூறன்றொழிய
வதைத்தெறிந்தன.
ஒளியெழுமுருணடத்தின நிலையுறவுருணிறுத்தின பிறகுற

வுருளிழுத்தன பகலிடையுருளொளித்தன—மாயிராவெ
ன்றல இருளகற்றன,
உயரியவரைமுகட்டிடை யழலெழவிடி முழக்குட னதிர்வ
னவுலகுவப்புற விருசிலைமிசைதிருத்திய— வேதநூலன்
புடனெழுதிப்பரந்தன,
உலகுயிர்களியவொத்தரு வுடனுறியடைசயக்கொடு யென
வெரு சிறுவைகட்டிட வுயர்மலைமுகடுபற்றுளி—வானு
ளோரஞ்சி வெருவுறச்சிவந்தன,
வொருவிலபடையெனப்பொறை யொருபொழுதெமதுயிர்
ப்பகை யெனமுகிவிலவுடற்றிய வெறியினமுழுதடக்கி
ய— வாகையேகொண்டிடருலகிற்பரிந்தன.
களியறவுடனுணக்கிய பிணியறமிடிபெருக்கிய துயரறவினை
யியற்றிய குறையறவரிதியக்கிய—வீரவாயுண்ட புதுமை
யிற்சிறந்தன,
கடிதெழுவளியடக்கின பகமலைபுவிநடுக்கின பகலிடை வெ
ளியிருட்டின கனல்குளிரிடநிலைத்தன—நீருமாயைந்தை
யு மரிதிற்புரந்தன,
கதிபெறு மறையுரத்தொடு கொடையருடவநலத்தொடு
பொறைதுணிவறவயத்தொடு பொருணயநலமனைத்தையு
—ஞாலமீதெங்கனு மலியப்பயந்தன,
கசடிடர்முழுதொழிப்பன வொழிவிலகனியுயிர்ப்பன—நரக
கல்கதவடைப்பன கடையிலகதியினுய்ப்பன—காவலூரங்
கனைமகன்றன் புயங்களே. 7.

தவம்-கட்டளைக்கலித்துறை.

புயங்கவுருவால்வினைநஞ்சுமிழ்ந்து புழுங்கியபே
யுயங்கமிதித்துத்தவத்தால்வென்றுயென வொண்மதிய
மயங்கார்பகையினுக்கஞ்சிவந்துன்றவ வாகையிற்றன்
முயங்கவடைக்கலங்கொண்டதோர் காவலூர்மூதுயிரோ. 8.

(நேரிசைவெண்பா.)

உயிராந்தயையானை யோம்பனந்தத் தானை
யயிராமறைமொழி யானை—பயிராருஞ்

சிந்துசேர்காவலூர்ச் சேர்ந்தாளைப்பாடினே
னிந்துசேர் தாட்சேர யான். 9.

கலி நிலைத்துறை.

யானரும்பும்பதத்தழகி மதியரும்பும்பதத்தழகி யினியவில்வாய்ப் [ல்கா
பானரும்பும்படத்தழகி தேனரும்பும்படத்தழகி பகலிற்று
மீனரும்புஞ்சிரத்தழகி விண்ணரும்புஞ்சிரத்தழகி விரிவான்வீட்டைத் [ளே. 10.
தானரும்புமுகத்தழகி தயையரும்பக்காவனலூர் தங்கிஞ

தாழிசை.

தங்கடேகமதங்கடீர மறங்கடேயுக தாழ்வெலா
மங்கவேதவறங்கடேற மனங்கடேர வழுங்கிவா
னங்கிலாபமடைந்துவாழ வடங்கலேதிருக்காவலூர்
நங்கைசேவடி நம்பினாளு நயந்துசூடுக நாடியே. 11.

வஞ்சி விருத்தம்.

நாடியமேற்கதி நலங்காணு
வாடியதென்னுள மலிநெஞ்சே
தேடி யணங்கறு திருக்காவற்
பாடியணங்கடி பணியாயோ. 12.

காலம்-ஆசிரிய விருத்தம்.

பணியாதகாமமுதிர்வேனிற்காலம் பட்டாற்றுகமுங்கட்கார்
காலமாகிக்—கணியாத நரகச்சமுகுக்குங்கூதிர்க்காலத்துண்
ணடுங்கியபின் வுனேயுநோயுங்—தணியாதபனிமுன்பின்கால
மும்போய்த்தவஞானம்பூப்பவிளவேனிற்கால—மணியாததி
ருக்காவலூராளன்னை யடிக்கடிமைப்பட்டுற்றகாலமாலோ.
13.

இடைச்சி-ஆசிரிய விருத்தம்.

மாலுகுத்தசெஞ்சொல்லிடைச்சியே வாயமிர்தமோடெய்த
வுள்ளியே—பாலுநீருநூல்வாயமிர்தெனுப் பால்கலந்தநீர்

விற்ப வெய்தினுய் — நீலமுண்டகின்கண்ணிலொன்றுமெய்ந்
நீர்மையன்றியிங்குன்பொய்செல்லுமோ — சிலவன்னம்மாள்
காவலூரிலே சேர்ந்தபாலினீர் தோன்றிநாணுவாய். 14.

மறம் — தாழிசை.

நாணிபூட்டிய சாபமேந்திய வீரவெங்கரவேடனர்
நாணிவுட்கடுதிபசொற்கொடு நம்மையெள்ளின ராரடா
சேணிபூட்டியகொம்பரோந்தியதேறலூட்டியகாவலூர்ச்
சிரினுளொருதேவமாவெருசியமேகருவுற்றகாற்
பாணிபூட்டிய வெங்கடார்மலைபற்றியெங்குடி லெய்தினுள்
பாதமூன்றிய வாயிருமனைபூத்தகாடென வாயடா
தூணிபூட்டிய வம்புபோலவள் புக்கசிற்றி லலர்ந்தபூ
தூயதேனுகவின்னும்வாடில சூழ்ந்துவாழ்த்திட வண்ட
[ரோ 15.

வஞ்சித் துறை.

வண்டிமிரும் வாய்மலர்க்காக்
கண்டிமிருங் காவனலூர்ப்
பண்டினிதாள் பாவைபணிந்
தண்டினரோ யண்டரரோ. 16.

கட்டளைக்கலித்துறை.

அண்டவெள்ளம்புலியேந்தவரக்கவி ழம்புயத்தாள்
கண்டகண்விம்மிதங் கொண்டிமைப்பாமோர்கதிர்க்கலையாள்
விண்டவழ்மீன்முடியாடிருக்காவலூர் மேவரசாண்
மண்டமுகுண்டகனும்பர்களென்று மகிழ்வனவே. 17.

ஆசிரிய விருத்தம்.

மகிழாருலகி னனுகார்கதியின் மடிவார்துயரிலருளாருன்
[ருட்
புகழாதவரோபணியாதவரோ புடைநீகாவா துய்யாவுயிரோ
திகழார்மணிபோலணிபூஞ்சினைக்காத் திருக்காவனநல்லூ
ரூர்ந்தவரோ 18.
நிகழாவருளுநமிகழாமருளு நிசியற்றுயிரோ விளங்கும்பானே.

தாழிசை.

பானெழிபூம்பொழினிழலே பாவொளிபுட்குரலோதையே
தேனிழிமும்மலர்வாசமே சேர்ந்தணிசெய்திருக்காவலூர்
வானிழிந்திங்குறவும்பரும் வானுறவிம்பரும்வீதியாய்
மீனெழிலூர்சிரநாயகி வீற்றிவணெய்தியகாலையே. 19.

ஆசிரிய விருத்தம்.

காலையொடு மாலைவிது வொத்திருள்கெடுத்தருள்
கொடுத்துயிர் களிந்தனன்றோ
சோலையணி காவலினள் கோவிலினள் சோதிமடி
சோமனடி தாரைமுடியாள்
வேலையலைவற்றினு மிடற்கனல் குளிர்ப்பினும்
விரிச்சிக னிருட்டினுநான்
மாலையிருடிங்களொரு பாதியிருபாதமொரு
வாதவிரு மாலையொருவேன். 20.

கைக்கிளை-கட்டளைக்கலித்துறை.

ஒருவாதிங்கராள்குளிர்ம்பூந்தாளணிந்தா ளொருகலையாய்த்
திருவாய்முகமொத்தாயார்ந்தகலையாய்ச் செகங்குளிர்க்குந்
தருவாய் நிழற்காவலூர்வதிந்தாயினித் தான்சுடவோ
மருவாதெக்காலமு மிங்கிலைக்கைக்கிளை மாலையதே. 21.

மடக்குத் தாழிசை.

மாலைவாங்கவந்தனன் மாலைதந்துபோயினன்
மாயமாறவந்துதான் மாயமேறியேகினன்
வேலையுண்டுமாண்டருள் வேலைநல்கினன்கையில்
விண்டுயிர்த்துமீண்டடி விண்டிலூன்றியேறினன்
பாலைபுக்குநோற்பகை பாலைநீக்கிநோற்றனன்
பாசம்வீக்குபாசமாய்ப் பாசமாய்ந்துமாய்ந்தனன்
காலைவேந்தனைத்தநின் காலையாரறிந்துளார்
காவலார்ந்தகாவலூர்க் காவலாயகாந்தையே. 22.

வண்டு-நேரிசைவெண்பா.

காந்தட்கைக் கஞ்சத்தாள் காவிக்கண்ணும்பல்வாய்
வேய்ந்தலர்ந்த காவனலூர் மென்கொடியே— யீந்தமது
வுண்ணளிகாள் சொன்மினி ரொத்துளதோ பூவுலகிற்
பண்ணளிபூந் தீந்தேன் பனித்து. 23.

நேரிசை யகவல்.

பனிமதுப்பதுமந் தன்னிகன்மறந்து
குனிமதிப்பிறைமேற் கொங்குமிழ்ந்தலரவுந்
தொல்லையந்தற்பகை யொழிந்துசூடொழிந்
தெல்லையுமென்னுளத் திளம்பனிவீசவுந்
தொற்பகைப்பரிதி சுடாமுன்றோலா
நற்பகனண்ணிய வுடுவொளிநல்கவு
மவையொருங்கனிதே வருங்கொடியலரிருச்
சுவையொருங்கமைகனி சுமந்துயர்நிமிரவும்
பெருந்திருக்கலாபப் பீலிகளாடவு
மருந்திருக்காவலூ ரகத்துக்கண்டேன்
கண்டுளம்பிணித்துருகுங் கனிதே
னுண்டுளம்பிரிவினி யூழியுமரிதே. 24.

குறம்-ஆசிரியச் சந்த விருத்தம்.

அரித்தையறிந்த திடத்தையறைந்த குடத்தியருங்குற மம்
மேகேள்—வரித்தனவண்டணி பற்றியவங்கை வரிக்குறிக
ண்டுழி காவலூர்—தரித்தவணங்குமிதித்தெழுதிங்க டரித்த
பதந்தொழுகையெனுப்—பரித்தவணங்கிய பற்றளவொண்
பொருள் பற்றியொருங்குயிர்வாழ்வாயே. 25.

கட்டளைக் கலித்துறை.

வாழாவழங்காவினைக்கடனீந்தா வருந்துவிர்கா
டாழாதிருக்காவலூர்சென்றணுகத் தழுங்கியநீ

ராழார்கலிக்களவுண்டெனுமில்லை யமரர்தொழுங்
கேழாரடியணங்கின்புறங்கேண்மை கிளர்கடற்கே. 26.

நேரிசை வெண்பா.

கடற்கரைசூழ்கானுக் கருத்தழிக்கும்பாவ
வுடற்கரைசூழாவி யுளைவீர்-மிடற்கரைகொண்
டாவலூர்வான்கதிசேர்ந் தாங்குவப்பீர் நாயகிசேர்
காவலூர்ச்சேர்ந்த கடை. 27.

ஆசிரியச் சந்த விருத்தம்.

கடைந்தமணியணிகடந்தவடிவொளிகலந்தவுருவொடுநீபயந்
தடைந்ததிருமகனகன்றபொழுதுயி ரகன்றவுடலெனநோவ
வுள் [லூர்
ளுடைந்தவுனதிடருணர்ந்துநமதிட ருழங்கலொழிகுபகாவ
மிடைந்தவருணலம்விளைந்திருமகன் மிளிர்ந்தவடிவடிகாட்ட
[வே. 28.

கட்டளைக் கலிப்பா.

காட்டினிற்பிணுமூவுலகேந்திய கையிலேயடைநின்மகனேந்
தியன்—பூட்டியின்சுவையாகவையாயிர ருண்டுவாழவிருந்
துவழங்கினு—னுட்டிலாண்டுநின்காவலிதாகவே நாகுதிங்க
ளணிபணிதாளியுன்—வீட்டிலென்னை விளித்தொருநாளை
யோர் விருந்தளிப்பவெனக்கிரங்காய்கொலோ. 29.

இரங்கல்-ஆசிரிய விருத்தம்.

இரங்கொழியா வினைக்கடலை நீந்தவுன்னன்
பெனுமிதவையேறிமறை விளக்கேநோக்கி
நெருங்கொழியா வவாவிரவினீந்தியப்பா
னீயாளுந்திருக்காவலூர்சென்றின்ப
மொருங்கொழியா மனத்திருளேயொழிந்துமேல்வா
ழும்பர்நாட்டெழுங்கரையைக் கண்டேனென்றேன்

மருங்கொழியா வாதவனுமதியுமீனும்
வனைந்தணிந்தவுன்வடிவங் கண்டபோதே 30.

தழை-கட்டளைக் கலித்துறை.

போதவிழ்பூங்கொடியாய்செங்கதிர்பூண்டாள் பொற்றழை
யா—மீதவிழ்மீன்றழையாக்கொண்டாண்மஞ்ஞையாய் வெ
ண்மதியைத்— தாதவிழ்தாமரைத்தாட்டழையாவுற்று டாயரா
சாள் — சீதவிழ்முத்தழைநீழலிற்காவலூர் சீர்த்ததுவே. 31.

அம்மானை.

சீர்த்ததிருக்காவனலூர்த் தேவணங்குதாட்கமல
நீர்த்ததிருத்திங்கண்மே னின்றனகாணம்மானை
நீர்த்ததிருத்திங்கண்மே னின்றனவென்றுமாகில்
ஆர்த்ததிருவண்டுவப்ப வாங்கலராவம்மானை
போர்த்ததிருச்சோதியின்பப் போதலருமம்மானை
போதலருந்தன்சினைக்காப் பூங்காவலூரரசி
யாதவனைத்துசா யணிந்தனள்காணம்மானை
யாதவனைத்துசாயணிந்தனளென்றுமாகின்
மாதலர்பூமேனிநலம் வாடாதோவம்மானை
மாதருணிர்மூழ்கிரவி வாய்குளிருமம்மானை
வாய்குளிர்பூங்காவனலூர் வாழவரம்பெய்யிறைவி
மீகுளிர்வாய்மீன்முடியை வேய்ந்தணிந்தாளம்மானை
மீகுளிர்வாய்மீன்முடியை வேய்ந்தணிந்தாளாமாகிற்
றாய்குளிர்வாய்மீகதிர்முன் றோன்றுமோவம்மானை
தாய்குளிர்வாய்ச்சார்ந்தார்க்குத் தாழ்வில்லையம்மானை. 32.

நேரிசை வெண்பா.

மானெய்தான்வான்பெற்றான் வான்பெறுன்காவலூர்
மானெய்தான்மானுப் வரம்பெற்றுத்—தானரியை
யானைமுனர்வைத்தின்று ளாயிரம்வாள்வேந்தனையோர்
தானையாக் கொண்டெழுந்தா டான். 33.

ஆசிரியவிருத்தம்.

தானகத்தடங்காதாய் மேனகத்தடங்காவார் தனையன்ரு
[யோ
னகத்தானகத் திழிந்துதவவெழுந்துதவ வுரிமைகாட்டி
வானகத்தேனகத் திருவரங்கடருவரங்கே வந்தாரன்றே
கானகப்பூநாகத்தரும்புதிருவிரும்புதிருக் காவலூரே. 34.

ஆசிரிய விருத்தம்.

காவலகத்தாளுந் தேவமுகத்தாளுங்
கடவுளுயிர்த்தாளு மடவுளுயிர்த்தாளு
மோவலறுத்தாளு மாவல்வெறுத்தாளு
முலகுபுரிந்தாளு மலகுபரிந்தாளுந்
தேவவரத்தாளுங் காவகரத்தாளுந்
திசையையளித்தாளு நகையையொளித்தாளும்
பாவிகணித்தாளு மாவிபிணித்தாளும்
பண்டினையற்றாளுந் தொண்டனையுற்றாளே. 35.

ஆசிரிய விருத்தம்.

தாளணிந்தமதிமுதலாத் தமியனுமக்கமலத்தா டாங்கிலே
னே—கோளணிந்தகுழலணிதார் குடைவண்டாப்புகழ்பாடி
மதுவுண்ணேனே—வாளணிந்தவினைப்படைவெல் வலிச்சிங்
கமீன்றவொரு மானய்வந்தாள்—கேளணிந்தகாவனலூர்க்
கிளர்புனத்துப் பசும்புல்லாக் கிடவேனனே. 36.

கட்டளைக் கலித்துறை.

கிடந்தேன்வினைக்கடன்மூழ்கிநீதூக்கக் கிளைத்ததுயர்
கடந்தேனீயாடிருக் காவலூர்சேர்ந்தேன் கடிமலர்க்கா
நடந்தேனறம்பொருளின்பமெதிர்கொண்டே னண்ணியுன்
[ரு 37.
ளடைந்தேனினிவீடடையேனே வென்னுயிராரொளியே.

சமுக வுல்லாசம்-ஆசிரிய விருத்தம்.

ஒளியுளியெனவின மணியணிகொடிகொணர் வானவர்நூறு
ஞ் சிறந்ததொருபா, லுயிர்தருநிழலம ரொளிதருகுடை
கொணர் வேறொருநூறுந் திரண்டதொருபா, லருமணி
யணியுருவினரிடுவெளிவழி சாமரைநூறுஞ் செறிந்ததொ
ருபால்,

துளியுளிமுகிலென முரசொடுபறையொடு பாடினர்நாமம்
புகழ்ந்ததொருபால், துளையுளகுழலொடு குரலுகள்கல
மொடு வீணைகள்யாவுந் தெளிந்ததொருபால், தொனியுள
வலையலை வனவெனமணியணி வானவர்சூழப் பணிந்த
தொருபால்,

வெளியுளியிருளற வெயிலரசெழுமென வாதவனுருங் களிங்
கவடிவாள், வினையறமனையுற மருளடவருளிட வாகனமா
மிந் தெழுந்துவரவே, விரைவடிவடியடி யுறையுறுமறு
வறு காவனலூரின்வதிந்தனுகினள்,

களியுளியருள்பொரு ணிகழ்புகழ்கலைநிலை நாடுவிர்யாருந்
துதைந்ததுயராய்க், கழலிலகரமில மகரிலநிகரில நோகு
விர்யாருந் திரண்டுமருவீர், கருணையள்கதியினள் கனிவி
னள் கடையிலள் பூவடிநாளும் பணிந்து தொழுவீர். 38.

நேரிசை வெண்பா.

தொழுவாய்த்தொழுவாரிற் றொற்பகைநோய்தீரா
தழுவாரழுவாரிங் கில்லைச்—செழுமாதின்
காவலினையுற்றார் கழிகுலத்தாரேனும்வான்
காவலனையொப்பார் களித்து. 39.

விருத்தம்.

களிவிளைத்தனள்கலிவதைத்தனள் கதியமைத்தனளாயினள்
வெளிவிளக்கினவெயிலுதித்தன விரைமுகத்தனகாவலூ

ருளியுதித்துளியுடலிடுக்கணு முயிரிலக்கணுநீத்தவா
விளிவிளைத்தனளிகல்வடுப்பகை யிடரொருப்படவொழியு
[மே. 40.

கட்டளைக் கலித்துறை.

ஒழியாமுதலாய்த்தேவாதிக்கநீதிதா னுற்பவமா
யழியாதொருவற்கேதாயுமகளுமா யாரமுதாய்ப்
பழிநாகவெவ்விடமாற்றுமருந்தாய்ப் பரகதிக்கோர்
வழியாய்த்துணையாய்நமைக்காப்பக்காவலூர்வைகின
[ளே. 41.

மருட்பா.

வைகலெனவந்து மன்னுயிரார்கங்குலறும்
வைகலைச்செய்தேயொளியை வாய்த்துயிர்த்தே-வைகினள்
காவலூருறை காதலார்துறை
யோவலிர்களி யோதியாரொழி
தெளித்தநூலி திறத்தசிலி
களித்தமாலை கயத்தவேலை
மந்திரமறைமொழி மண்டலகுறையொழி
சந்திரவடியினள் சந்துடுமுடியினள்
காதனாயகி கதிதரும்
வேதநாயகி மெல்லடியணிவமே. 42.

ஆசிரிய விருத்தம்.

அணிவளங்கணுள்மணிவளங்கணு ளருடுதைத்தனண்மருள்
வதைத்தனள்—பணிவளங்கணுள்கணியணங்கனுள் பழிவி
லக்கவும்வழிதுலக்கவுந் — துணியவீரமாயணியவாரமாய்ச்
சுருதிவாயினுள்பதிரிவேயினுள் — கணியலங்கலாள்மணிவில
ங்கலாள் காவலூரினுடேவநாரியே. 43.

ஆசிரியச் சந்த விருத்தம்.

நாரியிவணய வாரியிவடயை நாரியிவடிரு மாரியிவளுறைகா
வலூர்ச்—சாரிவாறரு தேரினிருபுடை தாரினமரர்கள் வே

ரிமதுமலர் தாழ்விலா—வாரியிமிர்குழ றேரியெழுபுகழ் மாரி
கொடிகுடைமாரிகவரிகள் வாயெலா—நேரிலெழிலெழு காரி
னெனியவீ நீரினெளிமிகு தேரினிவள்வருமாவமே. 44.

நேரிசை வெண்பா.

அரவம்படவெழுந்தா ளாகம்படுத்து
மரவம்படச்சி றடியா—ளரவத்தாற்
பாருலகும்பேருலகும் பாவனையாத்தானனுகி
நேரொளியுங் காவனலூர் நீர் 45.

இரங்கல்-ஆசிரிய விருத்தம்.

நீராருந்தடமே தடஞ்சூழுங்கியமே
ங்கியமாளுந்திருவே திருச்சேருங்காவ
லூராரும்பொழிலே பொழிலாருமுழையே
யுழைபாயுங்களியாற் களியேனேநானே
யாராருந்துயராற் றுயரோறவழியுற்
றழியாதகதியிற் கதியாளமதியோர்
தாராருமடியே கதிராருமடியே
தாராருமுடியே யுயிர்மாசில்சுடரோ. 46.

நேரிசை வெண்பா.

சுடர்முடியாயோர்குகையு ணீயீன்றதோன்றற்
படர்முடியாவந்து பணிந்தா—ரிடர்முடியா
தின்றுணர்வார்காவனலூ ரெய்திப்பணியாரோ
குன்றுமெனக்கொண்டகோது. 47.

கட்டளைக் கலித்துறை.

கோதெனயாவுமுளத்தறக்கொய்மினிர் கோண்முடியாள்
போதெனப்பூத்தசெந்தாளணிந்தேத்தவே பொய்ப்பொருள்
[சேர்

காதலுங்காமமுங்கோபமுங்காவற் களிச்செருக்குந்
தீதெனச்சேராதிருக்காவலூரம்மன் சீரடியே. 48.

வஞ்சிப்பா.

சீர்விளக்கியசெல்வியாய்ப் பார்விளக்கியபாவையே
தென்காவிரிதிரண்டொலிப்ப மன்காவிரிமலர்கமழப்
பூந்தாதகில்புடைநிழற்றத் தீந்தாதகில்சினைகுளிர்ப்ப
வருட்காவலூரமைந்தளிப்பத் திருக்காவலூர்சேர்ந்தனளே,
—சேர்ந்தபின் (தனிச்சொல்.)

நானேபூண்பழி நையவெண்மதி
தானேபூண்பதந் தான்றராளோ
திருவடியொளிவுளந் தெளிவுறக்கண்டாற்
கருவடியிருளறக் கண்டு
மருவடிமலரடி வான்கதியந்தமே. 49.

சித்து-ஆசிரிய விருத்தம்.

அந்தமிலாவன்னமிலா வாடையிலாநல்குரவுற் றழுநைந்தீர்
காள்—சுந்தரனுனிழற்காவலூரிருக்குமருஞ்சித்தன் றெழி
லைக்கேண்மி—னிந்தநின்வெண்கலமூன்றுஞ் செம்பொன்
றுங்கஞ்சத்தா ளிரண்டுஞ்சேர்த்திச்—சந்ததம்வெண்பித்த
ளையுமிரும்புஞ்செம்பொன்னாக்கித் தருவான்கண்டீர். 50.

சம்பிரதம்-கட்டளைக் கலித்துறை.

ஈரிடத்தியத்தைவெட்டிடவெள்ளியா யீவன்றரா
நேரிடப்பித்தளைமாசறப்பொன்னென நேர்நிறையாய்
நீரிடும்வித்தைக்கிவையாக்கிக்காவலூர் நீர்த்தினிதாள்
நாரியின்கண்ணிரந்துண்பேனிச்சம்பிரத நான்செயவே. 51.

நேரிசை வெண்பா.

நானுத்தயைதளிர்ப்ப ஞானநிழற்குளிர்ப்பத்
தேனூர்வரமரும்பச் சீர்கனிய—வானுரு

மஞ்சலிசெய்யுன்று ளருட்காவனாயகியே
யெஞ்சிலதோர்சோலை யெனக்கு. 52.

ஆசிரிய விருத்தம்.

நக்கனமுத்தேயொப்பமுகைத்தேநக்குமிழற்காகாவன லூர்ப்
புக்ககொடிக்கேதக்கவெழிற்கோர் பொற்புவமித்தே புகரி
[வாரா
ரக்கமலர்க்கேமுத்துநகைக்கே யத்தமுதற்கேயரிகாகத்
தொக்களவிற்கே மிக்ககவிற்கே தொக்கவனைத்தேதோற்பன
[வே. 53.

விருத்தம்.

அனமாடுந்தடவாயினலமாடுமடக்கோயின்மேலார்ந்த
கனமாடுங்கொடியாடக்கனமாடுமுடியாளைக்காண்பேனே
மனமாடுமறவாழிவடிவாகவறவாழி சேர்ந்தாடப்
புனமாடுந்திருக்காவற் புனமாடிப்பெருக்காவலாற்றேனே.
54.

வெளி விருத்தம்.

ஆற்றார்களிப்பவினைத்தியாற்றுமே நாயகியே
தேற்றார்தெளிப்பமறைநூல்தேற்றுமா நாயகியே
மாற்றார்வினைநீத்துயிர்நோய்மாற்றும்வானாயகியே
யூற்றார்காவனலூர்க்கின்பூற்றுமா நாயகியே. 55

காப்பியக் கலித்துறை.

மானாரஞ்சவஞ்சனிமண்பேய் மயலஞ்சக்
கானார்காவலூரிடைகண்டே னொருமானை
மானாரோதோவித்திறமென்றேன் மடமானாய்
வானாரேத்துங்கோளரியின்றாள் வரத்தென்றார். 56

நேரிசை வெண்பா.

தாராகத்தண்மதிப்பூந் தாளணியவென்னெஞ்சே
யாராய்ந்துவுன்குறைகண் டஞ்சற்க—பாராயோ

வானுள்வாள்காவலூர் வந்தெழுந்தாடாளணியாக்
கூனுங்குறைமதியைக் கொண்டு. 57.

தாழிசை.

கொண்டலாடிவிலங்கல்கொண்ட குளிர்ந்தகொண்டல்பரந் தொழக் கொடிபடர்ந்துவளர்ந்தமுல்லைநகைத்துவாசமுகை த்துரா—யுண்டதேறலுமிழ்ந்தகொம்ப ரொசிந்துவண்டுமு முங்கலே டுளியொருங்குமகிழ்ந்துகான முகைத்துநீரியகா வலூர்—விண்டளங்கள்விரும்பியண்டிவிளங்கிமண்டிவிசும்பு லாம் விதுவணிந்தபதங்கடாழ விழைந்துபாடவணங்கிநா—மண்டநூலிவியந்தலுலி விரிந்தசிலிவழங்குதே வரியமாரிபா ந்தவாரி புரந்தநாரிதொழேங்கொலோ. 58.

தென்றல்-கழிநெடில் விருத்தம்.

கொல்லாவலர்ந்த படர்கிழுனடிக் கொண்டொலிவந்துபுக் கொடுங்கக்—கொந்தழல்புழுங்கிப் பேயின்றேருந்திக் கொ தித்துலாஞ்சுடுவனசுரத்துத் —தொல்லாவிஞ்சுந்திருவடியா ளே துன்னியவேல்வையவ்வனமே—தொடையணிபூண்ட மணமகளாகத் தொகைநகைமுகநகைத்துவப்ப—வொல்லா வருவித்தீம்புனலோடவொசித்துவண்டினங்கள்யாழொலிப் ப—வுயர்குயில்பாடத்துணைமயிலாட வுலாவியநறுஞ்சிறுகா லே—செல்லாவொளிப்பத்திருப்புகழ்தொழுமத் தெரிவை யாள்காவலூரொய்தித் – தீவினையழற்றுமென்மனங்குளிர்ப்ப த் தென்றலேயூர்தியோய்விலவே. 59

ஆசிரிய விருத்தம்.

ஓயவணங்கிடரோயநெடும்பிணி யோயவுடன்றிடுபேய்
காயவருந்தியகாமவருந்துயர் காதலழுங்கியநோய்
தேயவழங்கியதேகமலங்கொடு தீயவொருங்கறவே
நேயவணங்குறைகாவனலூர்கிழ னேடிவதிந்துறைவீர். 60.

ஊசல்.

உறைவழங்குங்காவனலூ ரரசாளின்ற
வொப்பிலநாலோனடிதாழ்ந்தரும்பாவல்லீர்
துறைவழங்குஞ்சிரொழுந்தே யசையிற்றீட்டித்
தொடைவிருத்தங்கட்டிலடி பந்தம்பூட்டி
கறைவழங்குங்கலிவெள்ளை சவரம்வீச
காளுமருட்பாவைமகற் காட்டிரூசல்
முறைவழங்குந்தாழிசையால் வஞ்சிபாட
மொய்த்தமயிலகவலினே டாடிரூசல். 61.

ஆட்டியருட்செல்வியெனுந் தேவதாயா
மருங்கன்னிநலம்பாடி யாடிரூசல்
காட்டியநற்றவவீட்டிற் பொறிகளென்னுங்
கதவடைத்தேயொழுக்கத்தாட் கடுகிப்பூட்டி
மீட்டியதேவருள்விரித்த வுளத்தின்மஞ்ச
மேந்தியவன்பெனுங்கயிறிட் டாட்டிரூசல்
நாட்டியசெல்வத்திணையாக் காவலூரா
ணங்கைதிருப்புகழுறைந்தே யாடிரூசல். 62.

நேரிசை வெண்பா.

ஊசல்கொண்டாடி யுயிர்வருந்தயாவருமே
பாசங்கொண்டாடுமவர் பட்டலைவார்—பூசல்கொண்
டார்த்திடமேலோர்புகழு மன்னையாள்காவனலூர்
நீர்த்தடமேயாடா நிலைக்கு. 63.

தாழிசை.

நிலையானதிலையென்று நிலையாகநின்று
ணிகராதவருள்கொண்டு துணையாயதிலதேற்
சிலையானமலைநைந்து சிதராடிநலியத்
திரையானகடலின்று திடனுகநிலையா
யலையாத நிலமென்றுநடவாயதறிவே
லலராருநிழல்கொண்டு வளர்காவலமரூர்த்

தலையானவனையென்று தமியோருமலையாத்
தயவாகநிலைதந்து திதியாகவெளிதே. 64.

கட்டளைக் கலித்துறை.

எளியர்க்கிரங்கிக்கதியேறவானே ரிடும்வடமோ
தெளிவற்றதீவினைக்கொய்தேறும்பாசமோ தேவருளாற்
களியன்புயிளைப்பிணிக்குந்தனைகொலோ காவனலூ
ருளிநங்கையங்கையிலேந்துமணிமாலை யொப்பிலதே. 65.

ஆசிரியச் சந்த விருத்தம்.

ஒப்பநிகரிலநூலியுற்றவரமொருவேலி யொத்தவளைவிலசிலி
கதிசேரச்—செப்பமருளியவேதிசித்தமருளறுசோதி சித்தி
விளைவனநீதிதிளைசூழ — வெப்பகையுமொழிவாகையுத்தா
ணிகனியோகை யிரத்தரணிவிளையீகையரசாள— வப்பதியர்
தொடராவலிப்பதியர்தொடர்காவலப்பதியிலமர்தேவ மக
[ளே. 66.

கலி விருத்தம்.

மகளெனவாதித்தாயினள் வனமுடிதாரகைசூடினள்
பகலவனுருமாடையள் பனிமதிநீவுதாளினள்
அகமலருருதேரின ளருடருகாவலூரின
ளுகமெனயாவுநானிவ ளொழிகிலெனூழியூழியே. 67.

நேரிசை வெண்பா.

ஊழியொழியினுநா னுன்றுளொழிவேனே
சூழியணிகாவனலூர்ச் சுந்தரியே—கேழிமையா
மண்டவிர்ந்தவிண்டளங்கள் வந்தணிந்துகொண்டிறைஞ்சி
யெண்டவிர்ந்தவின்புமிழ்ந்த வென்று. 68.

கட்டளைக் கலித்துறை.

என்றுயர்க்கின்பமரிதைம்பொறிக்கிளை தேடுவைபின்
கொன்றுயராற்றிலவாடுவையென்னெஞ்சே கூப்பியகை

சென்றுயர்காவலூர்நாயகிபோற்றிலை தேடிலைநொந்
துன்றுயர்கூறிலைதன்புகழ்பாடிலை யோதிலையே. 69.

வஞ்சி விருத்தம்.

ஓதிமிகுந்தாளோகைமிகுத்தா ளுருவாக
வாதிபயந்தாளாவிவியந்தா ளகிலாளும்
கோதிலளென்பாள்கோதிலரன்பாள் கொழுங்காவற்
சேதிமமைந்தாள்சேமமடந்தை தேறோனே. 70.

ஆசிரிய விருத்தம்.

தேர்ந்தனையோவறீர்ந்தனைகாவ லிருந்தினைமருந்தினைநிகரன்
பார்ந்தனைமருளினீர்ந்தனையருளு மரங்கினையிரங்கினையினிதி
ற் [யெனையு
சார்ந்தனைபுகரோபோர்ந்தனைநிகரோ தவிர்ந்தனையவிர்ந்தனை
மோர்ந்தனையிலையோதேர்ந்தனையிலையோ வுறுப்பினைவெறு
ப்பினையினிதே. 71.

தாழிசை.

இனிதணங்கறுதானவனந்தமே யிருபதந்தொழுதானவனந்
தமே—முனிவர்தாழ்ந்தணிபாதவரத்தமே முத்திகாட்டுமெ
ன்பாதவரத்தமே — தனிநலோர்பெறுவாவியதஞ்சமே தயவி
னென்னுளவாவியதஞ்சமே—கனிபிரான்மருவாரணவாழியே
காவலூர்தயைவாரணவாழியே. 72.

இணைக்குறளாசிரியப்பா.

வாழியவும்பர்வணங்கிய-வணங்கே
வாழிவானொளியே-வாழிபாருயிரோ
யாதியையீன்றனை-நீதியையூன்றினை
பானொளியணிந்தனை-மீனொளிபுனைந்தனை
குறைமதிமிதித்தனை-மறைமதிவிதித்தனை
மேதினிகாத்தனை-தீதினைநீத்தனை
கதிக்கதவாயினை-திதிக்கனிவாயினை
வானோர்களித்தனை-யீனோரளித்தனை
தொழுமுளத்துள்ளுறை-சோதியை

யமுமுளத்தாதர-வோதியை
நீரகத்தம்புயநேரினை-யாரகத்தம்பரநீரினை
வானவர்-வாழ்த்தலாயினை
யீனவர்வாழவிங்-கெய்தினை
யாவலூர்வழியார்திருக்-காவலூரருங்காதலே
யன்புணர்நீயிவ-ணமைந்தபின்
பொன்புணருலகொடு-பூவுலகொத்ததே. 73.

கட்டளைக் கலித்துறை.

ஒத்தவடிவந்தமண்டலத்துள்ளதோ யோரிரதம்
வைத்தமதிமீன்சுடரொன்றொளிவிட மாமரியே
மொய்த்தவின்புற்றென்கண்வாழநான்கண்டனன் மூவணிநீ
மெய்த்திறத்தேந்தித்தேர்மேல்வருங்காவலூர்வீதியிலே. 74.

தாழிசை.

வீதிமந்திரநூலியே யாதிதந்திரவேலியே
வென்றிதந்தமடங்கலே நன்றிதந்தவடங்கலே
நீதிசுந்தரகோலியே கோதிலந்தரசீலியே
நிந்தைநீங்குமனந்தமே யெந்தையீங்கருளந்தமே
பாதியிந்தணிபாதியே சோதிவந்தணிசோதியே
பங்கநீத்தலர்கஞ்சமே பங்கநீத்தமர்தஞ்சமே
யோதிலம்பரஞானமே யேதிலும்பரமானமே
யோவலின்றெனதன்பளே காவலூரரசென்பளே. 75.

நேரிசை வெண்பா.

என்பவக்கான்யாறு நீந்தியெரியாசைத்
துன்பச்சுரங்கடந்து வாழேமோ—வன்பிலதா
யென்றுணர்ந்தாய்நெஞ்சே யியைகாவலூரன்னை
முன்றுணராவாழ்நாண் முகந்து. 76.

தாழிசை.

நாண்முகத்துநறவுலாவி நளினமீதிலனமுலாவி
நடனமாடநயனநாகர் நயநயத்தகாவலூர்ப்

பாண்முகத்துமுரலவிணை பார்முகத்துவளரவோதை
பாய்முகத்துவினையவோகை பார்முகத்துங்கிரிலா
தூண்முகத்துங்மிருமாடை சுடர்முகட்டிறுவசமாட
வடிதுதித்கசுரர்கள்பாட நரர்களித்துநாடமீன்
பூண்முகத்துமுடிவணங்கு பூமுகத்தவடியணங்கு
பூதலத்திலணுகியாளும்பொன்னகைத்தகோயிலே. 77.

விருத்தம்.

கோயிலன்புடையா டாயிலின்புடையாள்
கூன்மதியடியாள் கோண்மலிமுடியாள்
வாயினைத்துடைப்பா ளேயினைத்துடைப்பாள்
வருந்தினர்களிப்பாண் மருந்துநேரளிப்பாள்
பேயடக்கடலாள் மீயடக்கடலாள்
பெரும்புவனத்தே யரும்புவனத்தாள்
தீயுளத்தகல்வா டீயுளத்தகலா
டேவலூர்வணங்குங் காவலூரணங்கே. 78.

கட்டளைக்கலித்துறை.

அணங்காலங்தூயமுதாகுமணங்கே யனைத்துயிர்க்கு
மணங்காலத்தேன்காலுங்காவனைகாவலூர் வங்தெழுந்தா
ளிணங்காதவெவ்வினையாற்றவித்தேவ விருட்பொழில்செய்
யுணங்காங்ழல்வனத்துழியேகாய்வ ருளங்கெடவே. 79.

ஆசிரிய விருத்தம்.

கெடவோவெஞ்சாதழவோதஞ்சங்கிளர்தாட்கஞ்சம்புனையா
ய்நெஞ்சே—சுடவிஞ்சியவஞ்சகவெஞ்சுரமார் துயராற்றினி
திகதிபெற்றெழுநாம்—படமாங்கதிருங் குழலூடுடுவும் பத
மார்மதியும் பதமேற்றவருத்—தடமிட்டுவிளக்குபகாவன
லூர்த் தலமேவினண்மேலினமேவரசாள். 80.

கட்டளைக் கலித்துறை.

மேவித்தயையன்பெனேர்பூட்டிவேதநூல் வித்துவிதைத்
தாவியைவாட்டுமவாக்களைக்கட்டி யடைக்கலஞ்சூழ்
தாவியவேலியாய்நல்வினைபூத்துமீன் ருர்முடியாள்
காவனலூரிற்செய்பைங்கூழ்கள்பேரின்பங்காய்த்திடுமே. 81

பாண்-கழிநெடில் விருத்தம்.

இடும்புகழேபடப்பாடற் கரும்பொருளேதேடியபாண் மக
ளேகேளா—யெலாமுனாகொண்டாக்கினனே மழைத்தி
ரள்கொண்டழித்தனனே கடனீர்சூழ்கிப்
படும்பகற்றேர்நிறுத்தினனே யேழடிபின்னிழுத்தனனேயடி
யேகாணப்—படர்புணரிபிரித்தனனே யலைநிலைமேனடங்
தனனே பூங்காவொப்பச்
சுடும்படர்தீக்குளித்தனனே பகலுமிரவாக்கினனே தொன்
ஞேய்நீக்கித்—துகைத்திறந்தாரொழுப்பினனே மலைநடுங்
கப்பிளந்தனனே யினையபாடி
நெடும்புகழார்நாயகிதேன் றருங்காவலூர்வதிந்த நயமாதின்
ற—நிமலனிவன்விளையாடும் படியிதுதானெவ்வுலகுங் க
னியமாதோ. 82.

ஆசிரிய விருத்தம்.

கனிமாலை சினையேந்தத் தீந்தேனேந்துங்
காவலூராவலூர்ந் தணுகிப்போற்றும்
பனிமாலையேந்திரவி கதிர்செய்மாலைப்
பற்றிரண்டாள் பற்றினர்வாழ் நாளிற்ருகத்
துனிமாலைதோன்றியுயிர்க் கந்திமாலை
தோன்றுமுன்றுதிமாலை கொண்டுபைம்பொ
னனிமாலைதிருக்கோயி லிடத்தாடேவ
நங்கைதிரு வங்கைதரு மாலைசூடீர். 83.

மடக்கு ஆசிரிய விருத்தம்.

சூடிமலர்விழ்நீர்க்கயலே துள்ளுங்காவலூர்க்கயலே
நேடியுறைசீர்க்கலிப்புணரி னோரவுறைநீர்க்கலிப்புணரி
யாடியவிர்மீன்பூண்டாளை யண்டிமதியைப்பூண்டாளை
நாடிக்காண்கின்முகந்திருப்பீர்நையாநாளுமுகந்திருப்பீர். 84

நேரிசை வெண்பா

இருந்தேத்தல்செய்கேனோ மூகைசூழேங்கிவ்
வருந்தேன்போல்வந்து வருந்தேனோ-வருந்தேவ
காவலூர்கோதைகட் கானேகைப்பற்றவென்
னுவிக்கோர்தேன்றுளியே யாங்கு. 85.

வஞ்சி விருத்தம்.

ஆங்கமலத்தேங்கமல மாய்நிலாத்
தாங்கவிருபாங்கவிரு தாளெழீஇ
நீங்கவலையாங்கவலை நீசவென்
றீங்குவகைநீங்குவகை சேர்ந்ததே. 86.

ஆசிரிய விருத்தம்.

சேர்ந்தார்மதிபூண்சேர்ந்தாளவளே சேர்ந்தாளெனவேசேர்
காவனலூ—ரார்ந்தார்சுருமார்ந்தார்நரு மந்தாதியவென்ற
ந்தாடொழவே—தேர்ந்தாரொவருந்தீர்ந்தார் துயருந் தேன்று
ரொழுகுந்தேன்றூரணியை—நேர்ந்தார்மகிழாநின்றூரினிதே
நேர்ந்தார்மூழ்கி நீந்தார்நெடிதே. 87.

ஆசிரியச் சந்த விருத்தம்.

நெடிதுலைப்பனதுயரயர்வறவற நிலைபயப்பனவருடகவரு
நிசிமறுப்பனபழியழிவொழிதர வாயெலாங் [டரு
கடியுதைப்பனவிவறியநகையசை கடலடைப்பனவமரரும்
கதிதிறப்பனநிகரிலநலமுல காரவே [விழைவன

அடிதுவைப்பவு மிசைபெறுபுகழெழு தொனிதொனிப்பவு
[முடிவிலதொழுபவர்
துதியொலிப்பவு முகிலினுமொலியெழு காவலூர்
படியனைத்திலுமெழுநனியருளியை பரிவடைக்கலமெனவிவ
[ணெழுவன
பனிமுகத்தமுதொளிவிரிமதியெழு பாதமே. 88.

தாழிசை.

மதியெழுந்தபாதமே மதிகடந்தவேதமே
மருண்மறந்தநீதமே யருள்சிறந்தசீதமே
துதியெழுந்தசிலியே விதிவிரிந்தமாலியே
துணையெழுந்தசூலியே திணையமைந்தவேலியே
கதியரும்புகமலமே நிதியரும்புமமலமே
கடவுடந்தபதவியீங் கிடவுயர்ந்தவுதவியாய்
நதிவழங்குகாவலூர்ப் பதிவழங்குகாவலே
நன்னையாகமுன்னையா ளென்னையாளுமன்னையே. 89.

நேரிசை வெண்பா.

அன்னயேநீயல்லா லன்புற்றென்னையறிந்தீங்
கென்னையேயார்யா ரினிக்காப்பார்—தொன்னேய்
பெருக்காவறீரப் பெருமருந்தாநீயா
டிருக்காவலூர்விளையுந் தேன். 90.

கழிநெடில் விருத்தம்.

தேன்வீற்றிருக்கும்பனிநறும்பூஞ் சினைக்காநிழற்றுங்காவன
[லூர்த்
திருவீற்றிருக்கும்பொற்கோயிற் றீம்பாற்கதிர்க்கூன்மதி
[க்குறட்டே
மீன்வீற்றிருக்குமணங்கநலாள் விரிவாய்த்தொளிவாய்விதா
[னத்துள்
விண்வீற்றிருக்குந்தளந்தொழுது விரும்பிச்செய்யும்பணி
[கேட்ப
வான்வீற்றிருக்குஞாயிறுபோல் வையமெங்குமருணீக்கி
வாழ்வீற்றிருக்குமுகிற்கையால் வரையாநயன்பெய்வான
[ரசா

டான்வீற்றிருக்குமென்மனமே தழைப்பநோக்கவேண்டியவ
டயைவீற்றிருக்குந்திருவடியென் றலையவேயென்றலைய
[வே. 91.

குறம்-விருத்தம்.

என்றலையெண்ணேயோ டம்மைபழங்கலையீங்
தென்குறமன்பொடுகேளீர்காவனலூர்
மின்றலையாடரு மாலையோடுத்தரியம்
வேட்டனர்வேட்டலர் வீட்டறவிட்டுயர்தாய்
தன்றலைமீனெடு பூணிருவான்சுடருந்
தாமணிவாரிரு ளுள்ளணியாத்தெளிவார்
துன்றலையம்புவி யாண்டபினம்புவிபோற்
றேன்றினர்வானர சாள்பவர்வேதமிதே. 92.

தாழிசை.

வேதவிளக்கெனவந்தாள் விரதவிளக்கெனநின்றாள்
சீதமுகிற்கிணையீந்தா டிருவினிகற்கிணைதந்தா
ளோதமெனக்கரையில்லா ளுயிரினெனக்கருணல்லாள்
காதலூர்க்கதியானாள் காவலூர்ப்பதியாளே. 93.

மதங்கி-விருத்தம்.

பதியுகிர்வெம்பருந்தெடுப்பப் பசுங்கிள்ளைபதைத்தழைப்ப
வதியருள்கொண்டுதவியதே வனமாளுந்திருக்காவற்
றுதியருளொண்குயில்பாடத் துணையாடுமயிலல்லான்
மதிமருண்மற்றொருமதங்கி மருவாதிங்கெழுந்தகையே. 94.

ஆசிரிய விருத்தம்.

எழுந்தடிகிழ்க்குழவிமதியமுதிறைப்பக்குழலணிமீ னிமைத்
துப்பூப்பச்—செழுந்திருவின்மார்பிலணிசெங்கதிரினொளிதி
யங்கச் செங்கைநீட்டிக்—கழுந்தகைவான்வீட்டமுகுகாட்
டுதற்கேகாவனலூர்க் கனிசென்றாளோ—வழுந்தொளிவாய்
க்கெழுந்துளிவார் கமலத்தாளமலத்தாளரும்பாகல்லாள். 95.

தூது-கட்டளைக் கலித்துறை.

அரும்பாமுகைத்தேவகன்னிதவமறி யாதனவோ
விரும்பாமனத்தூதுரைகூறவுற்ருய் வியப்பனகே
டிரும்பாமுகைசேர்கனியொப்பக்கன்னியாய் தேவமைந்தற்
றரும்பான்மைகூறுந்தூதாயினேன்காவலூர் தாயிழைக்கே.
[96.

ஆசிரிய விருத்தம்.

இழைவளர்கோயி லுழைவளர்தாயி லின்புடைக்கிழத்திவெ
ன்புடைகிழற்றி—யுழைதிரிகாவின் மழைதிரிகாவ லூருழி
சேர்ந்தாள்சூருழிதீர்ந்தாள்—வழைகிழலகத்தென்பிழையழ
லகற்ற வான்வரம்பொழியுந் தான்வரம்பொழிவாள்—கழை
பொழிவாயாள் மழைபொழிகையாள் காவியுண்விழியென்
ருவியுண்விழியே. 97

வலைச்சி-ஆசிரியச் சந்த விருத்தம்.

விழிக்கயலோகுழிக்கயலோ விலைச்சிலைவான்வலைச்சியரோ வி
ற்பவுற்றீர்—பிழிக்கயலாம்பொழிக்கயலாம் பெருக்காவற்றி
ருக்காவற் பெயர்கொண்மூதூர்—வழிக்கயலுள்ளுழிக்கயலு
ண்குருகியலையருகியலை மதியாதுற்றீர்—பழிக்கயலாம்விழிக்
கயலாஞ்சோர்வற்ருரவர்சேர்வர் பணித்தடத்தே. 98.

ஆசிரியச் சந்த விருத்தம்.

தடமலிதருவுயர்தருமலர்தருமது நறவுமிழ்நிழலுமிழ்காவலூ
ரிடமலிவருநயமருள்பொருளிறையறை மறைபொறைதயை
[யியையீகையாய்
விடமலிவினைமலிமிகையறமிகைமலி நகையறவசையிறநோ
[யெலாம்
படமலிதயையினள்பரவியபரிவினள் பரமனையருளினள்பா
[டினேன். 99.

நேரிசை வெண்பா.

பாடிப்புகழ்ந்து படர்காவலூர்நங்கை
நாடிவணங்கு நரொல்லாங்—கேடிலரோ

மண்ணவருண்மாசிலராய் வாழ்ந்திவண்மற்றொப்பிலராய்
விண்ணவருள்விற்றிருந்தொப்பார். 100.

மானுக்கன்-விருத்தம்.

இருள்விற்றிருக்குமிழற்பூங்கா விடைபூண்காவலூரகத்தே
பொருள்விற்றிருக்குந்திருக்கோயிற் பொன்னசனத்திற்பொ
லிந்தாள [ன்
மருள்விற்றிருக்குமணிமார்பி னணங்கைப்பாடியடிபணிந்தா
றெருள்விற்றிருக்குமெய்ச்சுருதிதெளிக்கும்விரமாமுனியே.

திருக்காவலூர்க் கலம்பகம்.

முற்றிற்று.

அன்னையழுங்கல்

அந்தாதி.

வெண்பா.

வானிருந்துபாரின்மிசை வந்துதித்தோன் பொற்றாளை
யானுவந்தேனுள்ளத்தி னேத்தலுற்றேன்—றுனியற்று
நோயவிழ்த்துத் தாயுளத்தி னைந்ததுயர்ப்பாடல்
வாயவிழ்த்துத் தான்முடிக்கவந்து.

கலித்துறை.

வளைகனிவாதி வணங்கினர்மாநில மன்னுயிர்கட்
கொருகனிசெய்வடு தீர்ப்பக்குருதியி னோர்நதியாற்
றிருகனிகாய்த்த சிலுவைக்கணார்நிழற் சேர்ந்தெழுந்த
மரியழும்பான்மையுளைப்பாமனமெழப் பாருளரோ. 1.

பாருளர்யாரும்பனிவளைசேர்ந்து பதம்பணிந்தே
நேருளதாயின்கணீரோடெமதுகண் ணீர்விரவாக்
காருளவெம்முண்ணகவடியாவுங் கழுவியரு
நாருளநாதனிறையருணீக்குமிந் நாட்டிடரோ. 2.

இடருற்றஞாலமும்வானுமுளவுயி ரொன்னெவையு
மடிவற்றுவாழமனுவுடற்போர்த்து மறவினையாற்
றிடனற்றகூளிகொடுங்கோற்றுறந்தெமைத்தேற்றுவிப்பான்
படியுற்றுவந்தருள்சேசெனுநாமம் படைப்பவனே. 3.

அவனியர்யாருமியற்றியதீவினை யையனெடுத்
தெவனினுமாற்றுக்கொடுமையைத்தீர்ப்ப விகலவர்கீழ்ச்
சிவணியர்தாமுஞ்செறிந்தேபிணிபடச் சீருளமாய்
நவமரமீதறையுண்டானயனரு ணாயகனே. 4.

நாயகனுயினுமீண்டுதனக்கோர் நறுமகனைத்
தாயவளோங்குசிலுவையிற்கண்டு தனித்துயரா
ஞேயகலாழியினுழ்ந்துகரைபெற நோக்கியபோற்
சேயுடலோடுபிணித்தாலெனச்செழுங் கண்ணுறலே. 5.

உறலரிதாணியின்கூடவறைந்தோ வுடலமெலாங்
கறையுறுகாயநெருக்கினிற்புக்கோ கணையனையாப்
பிறழ்சிரமேலறைமுள்ளினுட்பட்டோ பிணிமகனை
மறுமறுபார்த்தும்மலர்விழிவாங்கரி தாகுதலே. 6.

குதலைமொழியாள்குருமணிக்கண்ணுற் குடித்துனுநோ
யிதயம்பொருமையின்வாய்விட்டுமிழ விருந்துயர்த்தாய்
முதலங்கடவுளைநோக்கியுரைத்த முருகவிழ்பூ
மதுவின்கனிசொலைக்கேட்பாமறுவற மானிடரோ. 7.

மானிடருற்றவடுவினைக்கண்டு மனமிரங்கி
யீனிலமேல்வழிகாட்டவிரக்கமில் வெய்தரிதா
யூனமிலுன்னுடரிலறுமோரிறை யுன்புதல்வற்
ருனிழிவுள்விடலாமோதயையுறு தற்பரனே. 8.

தற்பரனுக்குறையறவீன்ற தடமகனை
யற்புதக்கன்னிதகுதியைச்சேர்த்தி யருமுறையா
னுற்பவமீந்தித்துயரைப்படவோ வொருமகளாக்
கற்புடன்ருயெனவீன்றேன்கடருடு காசினிக்கே. 9.

காசினிக்காகக்கடியொளியென்னகை கான்மதிய
மாசறத்தண்ணமவிர்குடையன்னநின் ருர்கருணை
மாசறத்தெய்வஞ்செயும்போழ்தெனக்கென் மறமதியார்
பாசறைசெய்யுந்தழலாப்படுத்திய வாறரிதே. 10.

அரிதெனவான்வாழருளைப்பெறலா னவிர்குடைக்கீழ்ச்
சுருதியினுயத்துகடீர்முறையென் ருெகினுழையா
வொருமகளாயதமியேனுலகின ருய்த்துவப்பத்
திருவருணின்னைப்பயந்தேனெனக்கொரு சேயெனவே. 11.

சேயெனயாவும்படைத்தானையீன்ற செழுநயனுன்
ருயெனையாருஞ்சிறந்தவளென்ருர் தவழ்கடல்சூ
ழாயகல்பாரிலுளரீரொன்னையனை யார்தளரல்
நோயெனயாவுமுள்ளுட்டேறத்தேர்ந்துநொடித்துமினே 12

நொடித்தரிதாயதுயரொடுகள்வரு ஞேயுயிர்க்கு
மெடுத்தரிதாயமரத்தினிறப்பன வோவிமகன்
வடித்தரிதாயதுனியோடிருமட மாவிடையிற்
படைத்தரிதாயகுமரியுமாயும் பயந்தனனே. 13.

பயந்தேன்வளர்த்தேன்பரித்தேனனிமுலைப் பாலளித்தே
னயந்தேன்சுடர்முகநாடிச்சிறந்தே னறுமலர்வீழ்
கயந்தேனனைகிளர்கண்ணீர்துடைத்தேன் கடிசுரமார்ந்
தியன்றேன்பினர்நினையன்ருேவிடுத்தே னிகலவர்க்கே. 14.

இகலவன்வேந்தன்கொடுங்கோல்வெருவி யெகிப்தெனுநா
டகறரச்சேர்ந்துநிறைமறைஞான மருளறியாத்
திகையவர்நாப்பண்புரந்தனளந்தோ சினக்கொடியார்
மகனையின்றெள்ளுடன்கொல்வான்மயக்குறக் கண்டனனே.
15.

கண்டுவியர்ந்தமடநவிர்வந்தயிற் கண்கவர்ந்த
பண்டுவனப்பெழிற்பான்மையைப்பார்மின் பணியுறுங்கால்
வண்டுவரிச்சிறைமெல்வளியானவிழ் வார்மடற்சே
யிண்டைமலர்வாடனையாயிளமுக மாறினதே. 16.

மாறினுங்கஞ்சமலரனையைந்து மணிவிரற்கை
பீறியபேரயிலாணிபொகுட்டாப் பெருகவிழ்தீந்
தேறலைவீழ்கறைசில்லவொன்ருவென் மனத்தொறுக்கும்.
வீறெனனுன்னையறிகுவன்யான்பினர் வேறிலையே. 17.

இலையேமதிவெண்ணிலவேயுடைந்தன வேர்புயத்தை
யலையேதொழும்பார்கொடுமிகலாரு மடித்தவிழ்வாய்க்
கலையேயனையவர்க்கோதியதனுருக் கண்டெனக்கோ
ருலையேயுமிழுந்தழலானுளத்திடு காடிவணே. 18.

இவனுமுவாமலெரிமீனினைப்போழ் திருவிழிசெய்
துவரவிழ்வாயுடன்றேன்றும்வதனஞ் சுடரொவனே
வவிர்நுதல்வாயின்வடிகறையாற்சிவந் தஞ்சுடரோன்
புவிவிடுமாலையனையாயெனக்கிருள் போர்த்ததுவே. 19.

வேனிலவார்ந்தசுடரினைவென்ற விழிமலரான்
மானிலமன்னுயிர்தன்னுயிராமென மாண்பெறநீ
பானலம்வென்றபரிவுடன்பார்த்துப் படுந்துயர்செய்
கானலின்வேமெனைப்பாராமலென்னவென் காதலனே. 20.

தலவேனபொருவித்தடநெடுங்கண்ணெனத் தாரகைசெய்
நிலவேமறைந்துநுதல்கொள்புருவ நிகரிலநீள்
சிலையேவிழியினுருவுமுள்ளம்பெனச் சேர்த்திவிட
விலதேயெனதுளத்தெய்தாவிணையிறுன் பெய்தினனே. 21.

எய்தினவார்ந்தவிடும்பையுளாற்று திகலுவப்பச்
செய்திகழ்சோர்ந்ததலைகுனித்தந்தோ செழுமுயிர்வாழ்
மெய்துறந்தேகுதலோவேனையின்பம் விரித்துளைப்பா
னைதிகழ்சேயின்விழிக்குதலோவென் றறிகிலையே. 22.

அறிகிலையானெனவின்னமுளரி யலரனையா
யெறிதுவர்மேனிபரந்தவிளர்ப்பு மிருவிரும்பா
னுறைபடுகாலினையுற்றகுளிர்ப்பு மொளையுமின்றிப்
பெறலரிதாவிடலாலெனப்பிறழ் கின்றனவே. 23.

நவையறுவான்சுடர்யாவும்வகுத்தநன் னாயகனீண்
டவனியர்க்காகமரித்ததினன்றோ வருமுறையா
னிவரிடரானிருஞ்சேணிடைத்தோன்று மிரவிநிலாக்
கவினொளித்தார்வமன்மாநிலத்தார்க்குருக் காட்டியதே. 24.

காட்டியவார்வமழியாமறமன்னர் காசினியி
னூட்டியதின்சிலையிவ்வளைப்பார்மி னடுங்கியுளாய்க்
கோட்டலைகொள்ளாதுடைந்தாலிதுதனிற் கோட்டியஞர்
சூட்டியதோரன்பிலரொன்சுடுவினை யெண்ணலரோ. 25.

எண்ணாளுமெண்ணியுறுதிதுணையென் றெவருமில்யான்
கண்ணுமிழ்நீர்செய்கடலிடையாழ்ந்து கருத்திலனே
யுண்ணிகழ்ந்தாவிநயந்தினிதேறு முறையுறையாப்
புண்ணுறுவேலென்றுளதாமிடையிடை பூத்தவையே. 26.

அவைகொளெவர்க்குமருமறைநூலறைந் தைம்பொறிசூழ்
தவரிறைவிற்சிமையோனவன்சாற்றிய தாரைவைவாள்
சிவணியுளமிள்ளுருவியபான்மையிற் சிந்தையளுக்
கவலையடைந்தனளந்தோகடையி னிறப்புவனே. 27.

இறப்புவதாயவிடும்பையினின்னை யிழந்தனளாய்
வெறுப்புடனுன்முன்றிருந்தனனல்லோ விரியறிவான்
மறப்பிலநீயேமுழுதெனைவிட்டு மனமிரங்காப்
பொறுப்பரிதாயவுளநோய்பொழிதலென் னீண்டெனக்கே. 28.

எனக்கோர்சிறுவனுந்தெய்வமுநீயிருந் தேந்தருளா
னினக்கோர்பயந்தாளெனைவிட்டிறந்ததென் னின்னையலான்
மனக்கோருறுதுணையின்றியுனையிலண் மண்ணிடையான்
பினர்க்கோர்பொழுதிருப்பேனோவெனதுயிர்ப் பேருயிரோ. 29.

உயிரிடராயபெருங்கடன்மூழ்கினி னுள்ளுடைந்தா
டயெறிதீயினுட்பெய்தளிர்போலத் துனிபடுங்கா
லயிலவிரீட்டியின்மைந்தன்விலாவை யவைக்குவரோ
செயிர்வினைக்கண்டதுயராற்சிதைந்து மயங்கினளே. 30.

மயங்கிவிழவுமரிதோழியர்நண்ணி வன்கரமே
லியங்கவிருப்புடன்றாக்கியழுங்கின ரின்னுயிர்போய்த்
தயங்குவிழியான்சிறுவனைப்பின்றொடர் தாயுயிரும்
வியங்கொணிலம்விட்டிறந்தனளோவென விம்மினரோ. 31.

விம்மினதோழியர்கையிற்கிடந்த விளர்மரியாள்
செம்மலின்வாயினருள்பெற்றருந்தவன் சென்றினிதோர்
கம்மதுதேனிற்கனிந்தசுவைகொள் கனிமொழியாற்
பொம்மெனத்தாயையினிப்பார்த்திரங்கிப் புரிந்தனனே. 32.

புரிந்துமெனையோர்மகனெனக்கொண்ட பொழுதினில்யான்
வருந்தியழுங்கவெனைவிடலாமோ மனுவுடலான்
விரிந்துநிலத்திடைவேய்ந்தனைக்கோர் வியன்மகன்சே
ரிருந்தண்மொழியைமறந்தனையோவென் றியம்பினனே. 33.

இயம்புதல்வார்குழைவாயினிதய மிடைநுழைந்தே
வியன்புவியாவும்புரக்குந்தன்சேயின் விரிபெயரா
னயம்படவுண்ணிகழ்ந்தாவிதடநெடு நாட்டமவிழ்ந்
துயங்குதலானெட்டுயிர்ப்போடுயெழுந் தாண்மரியே. 34.

அரியசிறுவையிருகையின்மார்பி னணைத்தனளா
யுரியவுயிரையருந்தினள்போல வுயர்மரத்திற்
கரியதுயரொடுதூங்குஞ்சிறுவனைக் கண்ணுறப்பின்
றெரிவைமுயன்றுபுலம்பாற்சிலமொழி செப்பினளே. 35.

நளினமவிழ்வாய்நறுமிதழ்வென்ற நகையுடல
மளிகலம்யாவுமகநுறந்தாவி யருமருளாற்
களிநிகழ்ந்தாயெனைக்காக்கவெனதுளங் கண்வதிந்தால்
விளிவெனத்தீர்ந்தநயனும்விரிகுடை வேந்திறையே. 36.

இறையோன்விதித்தவெரிவான்றவழ்ந்தார்ப் பெறிகடல்சூழ்
பொறைதோன்றணிநயன்யாவுமறந்தே புரைவினையாற்
கறைதோன்றுளமிடைநீவிர்கொடிய கருத்தயர்ந்தோர்
மறுதோன்றியவசைகைம்மாறிதுபழி மண்ணவரோ. 37.

மண்ணவர்யாவருயிரைப்புரப்பான் மனமிரங்கித்
தண்ணளியாற்றுமிவனன்பளவுந் தழல்வினையா
னண்ணியநீவிர்செயுங்கோளளவு மலகிடுவா
னெண்ணிடினிம்மரங்கோலாமிடுநன் றறிவிலரோ. 38.

அறிவிலர்நீயிரடுந்தொழிலாற்று மலகையையோ
ரிறையெனப்போற்றித்தொழுதலினன்றோ விருமளியாற்
பொறையுளயாவும்புரக்குங்கடவுள் புரைமரத்தி
னிறையறையுண்டுமரித்தானிசிமறு விசனரோ. 39.

ஈசற்றகைவிலரீசனொனத்தொழு தேத்தியநீர்
தேசினடந்தரிகொண்டதினன்றோ சிறுவையின்மேற்
காசுமுடிசூழ்பிதாவின்கொடிய கதந்தணிப்பா
னூசுதவிரும்பலியாங்கருள்வ னருஞ்சுதனே. 40.

சுதனுறவார்ந்தசெருக்குநினைவினிற் சூட்டரிதா
யதருறுந்தியகடவையினன்றோ வவிர்கறையோர்
நதியுறத்தூயசிரத்தைநெடுமுண் ணவைமுடியாற்
சிதையுறமூடியமறைந்தார்செயிருறு மாற்றலரோ. 41.

மாற்றலரிதெனக்காமமுழைந்த மனமுறக்கண்
ணூற்றும்வடுவெனப்பார்வையினன்றோ வலர்ந்தளிதேன்
றாற்றுங்கமலவிழியிடைமுள்ளுறத் தோன்றிடா
னேற்றுமிமையைக்குவித்தாங்கெனக்குளிருண்டதுவே. 42.

உண்டெதிருதுமளியினஞ்சூழ்ந்தவொண் ணூர்கமழ்தேன்
றெண்டுவாரம்பல்செறிந்துமிழ்போலச் சிறிதுணைத்தா
லண்டர்கடேடுமமுதுமிழ்செல்வா யரிலுறுந்தீக்
கொண்டசொற்கோடனையன்றோகொடியகைப் புற்றதுவே.
43.

உற்றகுனிசிலைநாணியனைய வுறுப்பினைநீள்
பெற்றசிறுவையினீட்டியிழுத்தனர் பேரிரும்பாற்
கொற்றக்குடையினருளுமிருகை கொடுங்கடியார்
முற்றுமருளில்வினையான்முடிக வறைந்தனரோ. 44.

தனகவிரார்வத்தகைவயமார்பன் றளர்ந்தினுமார்
மனவருள்காட்டப்பகுவாயலென்ன மனுக்குலத்தா
ரனலெனக்காமவெம்வேண்டலினன்றோ வயினெடுவேல்
வினைபொரச்சாலத்துயரான்விலாவைத் திறந்ததுவே. 45.

துவர்துகிரோடுகலந்தவெண்முத்தங்கொ டுப்பெரிவா
யவிர்தழலாம்பல்கிழிந்திதழ்நீரோ டவிழ்மதுவே
கவினுறக்கிண்டவிலாக்கறையோடு கமழுமிழ்நீர்
நிவர்தகையான்மடநல்லீர்நுமக்கணி யாகுவதே. 46.

அகுவதோர்வழியற்றைம்புலனிய லாற்றுமைவிட்
டேகுவதோர்செயுந்தீவினை தீர்ப்ப விரங்கருளான்
போகுவதோரரும்விதிகடந்த புரிவவிர்தா
ணுகுவதோரமறந்தோ றனைசயஞ் சேறினதே. 47.

சேற்றினிறியவிரகஞ்சுகமெனத் தேடுமவர்
வீற்றிருந்தாற்றுமிகழ்வினையானும் விரிதலைப்பா.
ரோற்றியநன்வனப்பெல்லாமொருவடி வென்றுருகி
யாற்றியமேனிவளையாதடிமிதிப் பட்டதுவே. 48.

பட்டவடுவின்பரந்தகுருதி படுமுடன்மேற்
பெட்டகருணையையாவர்க்குங்காட்டப் பிணைபெறுஞ்சீர்
விட்டவெனக்கிதுகாட்டுந்துயரினை மேவியதா
னட்டரறிகுவரல்லானவின்றிட லூங்கரிதே. 49.

லூங்கரிதாயசுரந்தொடர்கின்ற வொன்றாருளா
ரீங்கிவனீந்தவினிதன்புகண்டு மிருவளாமே
லாங்கடுமாவிலதிககொடுவினை யாற்றலைநீர்
நீங்கிலாதனிலையோநிசிமறந் தந்தகோ. 50.

தகவுமிலாளைத்தகமதியென்றினி தாழியராய்ப்
பகைவருமார்வமுளரும்பகைத்துப் பலநிலையாய்
நகுவினைநாடிகைபுறங்கூறி நனிகவர்ந்தார்
துகடருதீவினையாற்றொடராப்பயன் றோன்றுவதே. 51.

தோன்றுந்துயரந்திளைப்பநிகரி றுயரினள்யா
னின்றவுடலிடைநீங்கியவின்னுயி ரின்னமுமீண்
டான்றநயமெய்ப்புகுந்தபுனையி னடைதுயரான்
மான்றவிடல்வேண்டுவதோமறுவுறு தோட்டுளரோ. 52.

தோட்டுமலர்க்கரத்தாணிகுருதியிற் றோய்த்தடியே
ணுட்டைப்புரக்குமுறைவன்கருணையு நானிலநீர்
கூட்டுமரத்தின்கொடுமையும்யாருங் குறிப்பறிவான்
றீட்டியிரண்டிலதிகமியாதெனச் செப்புமினே. 53.

செப்புமின்மேனிசிறப்புயிர்விட்டுத் தினையினுளா
யொப்பிகந்தோனுமிறந்தனனன்றோ வொலிபடவாங்
கப்புமின்னுழியனைவிலக்தார்க்கு மருளமைவாங்
துப்புமின்காந்துடைப்பானூறுயர்மெய் யிறக்குமினே. 54.

மின்னெடுங்கண்ணழுதேரிழந்தாங்குழை யாயமெய்தா
வென்னிடுஞ்சொல்லானிரங்கியசில்ல றொறியுயர்வான்
றுன்னிடுமினைவெல்மேனியிறக்கித் துயரலையான்
முன்னிடைமூழ்கித்தளர்தாய்முனர்கொடு வந்தனரோ. 55.

கொடுவந்தமேனியையன்னைமடியினிற் கொண்டனளா
யிடைவந்ததேவனைவென்றவிடுக்கனு ளெய்துவச்சூழ்
புடைவந்ததோழியர்ப்பாராமொழியும் புரிந்திலளாய்ப்
படிவந்ததெய்வமகன்மேனிபார்த்தங் கிருந்தனளே. 56.

இருந்தவிருவுடல்வண்ணம்பொருவிடின் சேசுவினுல்
வனைந்தவிருநறுஞ்சித்திரமென்பவர் வடிதழலார்
கரிந்தமனத்துயராற்றுகக்கண்ணிரு நெட்டுயிர்ப்பும்
புரிந்தவுயிரியவில்லாள்புரியுடைத் தாயவளே. 57.

தாயவளுள்ளுருகித்தடங்கண்ணீர் தருந்தழலாற்
சேயவன்காயநனைந்துவப்பெய்தச் சிறப்பிகழ்தாய்
நோயலையானிங்கருத்திலண்மாழ்ந்தொண் ணுதல்குளிர்ப்ப
வாயுயிர்போய்மகன்மெய்யாங்கடைந்ததென்பார்சிலரோ. 58.

சிலர்தேற்றுவாருஞ்செறித்தகண்ணீரைச் செழுந்துகிலாற்
சிலர்மாற்றுவாருமருந்துயரானுஞ் சிதையவெந்தீ
சிலராற்றுவாருமுடறுறந்தாவி திரும்புதற்கே
சிலர்போற்றுவாருமடியர்திதியரு டெய்வதமே. 59.

வதனமிதழும்வனப்புச்சிலையமை வாணுதலுங்
கதழவிர்மீன்வேற்கணுந்துவர்வாயுங் கவின்மடல்சேர்
பதுமமென்மேனியனைத்தும்பாரந்தொழிற் பான்மையிலா
விதயம்விட்டாவியிறந்தாளெனச்சிலர் சாற்றினரோ. 60.

சாற்றியபாசுரங்கேட்டுநனுகித் தகையுழுந்தேன்
னூற்றியவாய்துடிக்கின்றதுமல்கித் துவன்றியநீ
ரூற்றியகண்ணிமைக்கின்றதும்பார்த்தெணி னுண்ணிகழ்ந்த
தேற்றிலதாவிதுறந்தாளலள்சிலர் செப்பினரோ. 61.

பினரோனசெப்குவரோண்ணிமகனுயிர் பின்றொடர்ந்தாய்
துனியனவாழியின்மூழ்கியிறந்தன டோன்றுதலா
னனியழுதோழியர்நீக்கிவருத்தஞ்செய் நற்புதல்வ
னினிதாத்தூக்கிச்சிலர்போய்த்தழுங்கி யெடுத்தனரோ. 62.

எடுத்தனர்போகையிலெய்தியதோர்நய னன்றிழந்து
விடுத்தனர்போற்பயந்தாளெழுந்தோவென விம்மியகாற்
கடித்துணர்தாமரைவாய்குவிந்துட்செங் கதிரடைபோ
லடுத்தனர்சேயைத்துகிலாலடக்குதல் பார்த்தனளே. 63.

பார்த்துநயந்தார்செயுந்தொழிலானும் பயந்தனடா
வீர்த்ததுயரழலாற்றவிடாவிடு நெட்டுயிர்ப்பாய்ப்
போர்த்ததுகிலாற்கவிந்துபிறழ்தரு பெமொழின்மெய்
கூர்த்துமுயன்றுதொடர்ந்தாளிணங்கியர் கூழையினே. 64.

இனிதிமிர்பாணிகர்வண்டினம்பாடு மெரிமலர்த்தேன்
பனியுமிழ்தாருநிழற்றியசோலையின் பார்நிலங்கீழ்
வனைசிலையானவியோரறைக்குள்ளாய் மனுவுடலா
னனையிலமாண்டமகன்சேசதுமெய் யடக்கினரோ. 65.

அடக்கினர்போயினுமாங்குவிடலில ளாயவிர்செங்
கடிக்கதிர்போதலிற்றாமரைபோலக் கவினிகந்தாய்
தடக்கைப்பார்ப்பிழந்தோதிமம்போலத் தடநெடுங்கண்
விடுத்திடுநீரொடுமீண்டாள்புலம்பி விளம்பினளே. 66.

விளம்பினகிடம்விரத்தாநறவுமிழ் வேரியம்பூ
விளம்பனித்தாருபொலிந்திருசோலை யெவையுமொவ்வா
வளம்படுசோலையிதுவெனல்வேண்டு மனுப்புரப்பா
னுளம்புரிந்தீண்டென்மகன்சேசுடலம் புதைத்தபினே. 67.

பின்றொடர்மன்பதைக்கோட்டிவிளியப் பிணியளித்த
துன்புடையோர்கனிகாய்த்ததொல்சோலைத் துரிதமெலா
மின்பரிதூற்றுமலர்பொதுளுஞ்சினை யிப்பொழிரு
னன்றெனத்திர்த்துநிலம்புரப்பானிழ னல்கியதே. 68.

நல்கியவன்புடைத்தெய்வமெனக்குச்செய் யார்நிழற்கிழ்
மல்கியகன்னித்தமியேன்பயந்த மனுவுடலோ
டொல்கியநாதனைக்கொண்டதினென்று முறுபுகழை
நல்கியபேறுடையன்றோநகலுமிக் கல்லறையே. 69.

அறைமாடிருமழைசேர்முடிமீதி லணுகிநிலாப்
பெறுவான்சிலைகள்விழுத்தகத்தூங்கிய பேரொழில்வா
னிறைமாமணிசெய்யழகோன்கொலின்று நிமிரிருளாற்
பொறையானயாவுமினிதளித்தோ னுடல் பூத்ததற்கே. 70.

கேடிலவீட்டிற்கெழுமுயர்வாயில் கிடக்கையர்க்கார்
பீடுளவின்னபிறழுறையாகிப் பெறலரிதாம்
வீடுசெய்யாறந்நயத்தினைக்கொண்டு விடுந்துயரா
னீடிகழ்தாயென்றனக்கோரிருணில மொத்துளதே. 71.

உளம்விளக்கொண்கதிரோனெனவின்ன வொளிருடலம்
விளிவிருட்பாய்ந்தபகுவாய்ப்பிளந்துள் விளங்கியதான்
வளமொழியில்லாதெனதுளந்தீக்கு மலிதழலைத்
தளர்வுறயாண்டுமிழாருளைப்பத் தகைவிலையே. 72.

தகைவிலமாற்றலர்கொன்றவென்றேவத் தடமகனே
டகலறையூடேனைப்பெய்தக்குறையோ டடக்கினிரோ
லிகலிலவீடிவ்வறையெனக்காகு மெனதுயிரைத்
திகழருளானுமனுப்பீர்செழுநெடுங் கண்ணியரோ. 73.

கண்ணியரியலினின்பங்கனிந்த கடிமொழியான்
றண்ணங்கருணையைக்காட்டியதெய்வதந் தாரணியார்
விண்ணென்றுலகிறைசேர்ப்பவியற்றிய மீயருளு
ளெண்ணியிவனைத்தொடர்ந்தோரில்யாரையுங்காண்கிலையே.
74.

காண்கிலையென்பதென்கண்டேனெழிலி கவிழ்வளைமே
னுண்கமழ்யாக்கையொ ருத்துகக்கண்ட னயனெழிந்தோர்
சேண்கடையோதைசெறிந்தழத்தெய்வ சிறுவனைத்தா
மாண்டிழிவாடுகக்கேட்டேனறிவின் மனுக்குலமே. 75.

மனுக்குலத்தானுன்மடமாவிரண்டடை வந்துதித்தா
னினக்குலத்தாளையிழந்தான்பிறநாட் டிவர்ந்திருந்தா
னளிக்குலத்தாளைநயந்தான்பரகதி நல்கியவா
றனைக்குலத்தார்க்குமுளைத்தானருளுமத் தாரவனே. 76.

தாரவிழ்தேனிற்கனிந்தவின்சொல்லான் றணைந்தவர்கே
கூரியதேற்றமுளைத்தானெவர்க்குங் கொடுமையெலாந்
தீரருளீந்தான்செறிந்துயிர்வாடுஞ் சிலகுருநோய்
பாரிடைத்தீரமுதானுன்பரிவுடைத் தெய்வதமே. 77.

தமரினிதாகத்தடவருளோடு தனிபுரப்போ
னமரரிதார்வத்துக்கைம்மாறெவனோ வருமுறையாக்
குமிழ்மறிந்தோடியகண்ணாந்தகர்க்குக் கொடுத்ததற்கோ
விமையவன்கையையறைந்தீர்சிலுவையி னேற்றினரோ. 78.

நரம்பிசையாழெனநன்றுறுமாற்ற நவின்றநன்றுன்
விரும்பியன்மூகைக்குநாவவிழ்த்தற்கோ விரிதிரைசூ
ழிரும்படியாரிலிரணமர்நீவி ரெதிர்த்தவனை
மரம்புடைமீதிலறைவான்மறுமறு விம்மினிரோ. 79.

இரவிகிளரவிருளகல்போல விடனையெல்லாம்
புரியுமருளொடுதீர்த்தகைம்மாறு பொழிதலறு
முருகுநறியமுளரியமேனியை முற்றவுநீர்
துரிதமிலவிடமில்லாச்சுவடாய் வருத்தினிரோ. 80.

வருத்தினநோயின்மரித்தனர்மீண்டினி வாழ்ந்துவப்பான்
றிருப்பியவாவிசிறந்தவுடலிடை சேர்த்ததற்கோ
முருக்கினமேனியிலின்னுயிர்நீங்க முழுதுயிரைப்
புரத்தினைக்கொன்றுவிடுத்தீர்புலியினும் பூதியரோ. 81.

பூதியரோ னும்புரிவமர்கோனென வென்புதல்வ
னுதரமோடுநிமைத்தொடர்ந்தானென வாங்கடியேன்
பேதுறவோங்குபிறங்கலிற்கண்டேன் பினருமையாந்
தீதுறவின்றிகல்வேறோவெனதுளந் தேறுதற்கே. 82.

தேறுதலின்றிச்சிறுவனுந்தாயுந் திளைத்தவரும்
வீறெனத்துன்பம்விடுத்திடலால விபுலையெலா
மாறிலசூழுவடுத்துயர்யாவும் வகுத்திடுமோ
ராறெனத்தீவினையன்றோவனைவர் பகைப்பநன்றே. 83.

நன்றெனுந்தூயவமிழ்தெனுந்தீவினை நஞ்சறியா
நின்றுளத்தார்ந்துநுகர்ந்தனரந்தோ நிலாவொளிகோ
னின்றருந்தீவினையாற்றுயரெய்தி யிருமாத்திற்
பொன்றலைக்காண்டினமூவிரொன்றோடு பொருந்தியரோ. 84.

பொருந்தியவாயத்துணையெனச்செய்குநர் பூவனத்தில்
வருந்தியதாயெனத்தேற்றுவிப்பாரிலை வானகத்தி
லிருந்தியல்பாகவருமாவனமென வீண்டிரங்கி
யரந்தையர்போலவழுங்கக்கண்டாற்றுணை யோதுயர்க்கே. 85.

துயர்க்கோருறுதிதுணையுமையெண்ணிச் சொலாலடங்கா
வுயர்க்கோட்கடவுண்முகமமைந்தோரோ யுறுந்துயரான்
மயற்கோருரியுருக்கொண்டவர்கம்பலை வாய்ந்தனர்போற்
கயற்கோரிணையகண்ணீர்விடல்காண்குறு கின்றனனே. 86.

நனியருடெய்வம்பழிச்சுகின்றோரி னலஞ்சிறந்த
தனியன்கபிரியலென்றவனீமுனர்த் தற்பரனு
லெனதுழைத்தூதுவந்தென்னைச்சிறந்தவ ளென்றுகந்தே
துனியடைஞான்றிலென்னைவிடலாமோ துணையிலளே. 87

துணையிலடாயுங்குமரியுஞ்சேர்ந்தனள் சூலுழையா
விணையிலசேயைப்பயந்தனளன்றோ விணையிலநோ
யணையிலவாழுயலையினலைவகண் டாங்குனாத்த
திணிநயன்றேற்றமுனாத்தாற்சிறப்புறுந்தேர்ந்துளத்தே. 88.

தேர்ந்துளங்கூரச்செழுமுடல்காபிரியல் சேர்த்தினனுக்
கூர்ந்துளமாற்றவழுங்கியமாதின் குளிரிணைதா
ளார்ந்துளம்போற்றியமுதிற்கனித்த வரிபயில்வான்
கூர்ந்துளந்தேறத்துவர்வாயவிழ்ந்தினிக் கூறறையே. 89.

அறையலையாழிபனியிற்பெருகுத லாகுவதோ
பொறையெனயாவும்பொறுவறவோச்சிப் புரந்திடுநீ
யிறைவியென்றுதினைதுளத்தெய்த வெனதாரைநின்
னுறையகந்தேற்றலாமோவுலகேத்து மொண்ணுதலே. 90.

நுதலிதழ்வாடக்கறைநீர்வழிந்துநுண் கண்டுடிப்பக்
கதலிவெல்மேனிதழலுடலிற்போற் கடுப்பவுநீ
ததையிகழ்ந்தெய்துவெதுப்பினைக்கண்டு தளர்வுடன்யான்
விதவுரையேனும்விதிப்பாம்விரியருட் கோமகளே. 91.

மகளாய்ப்படியின்மறமக்கட்கின்றவோர் தெய்வமக
னிகழ்வாயிறந்தானெனநீவருந்தே லெரியழன்செய்
பகையானபந்தமடக்குலமென்னும் படியுறைவோர்
தகையானினிதெனவுய்தாற்குறையோ தயாபரியே. 92.

பரிப்பரிதாயசெருக்கொடுகூளி பழித்திழந்த
வுரைப்பரிதாயநயங்கொள்ககியி னுலகினுளா
ரருப்பரிதாயவிருப்புடனுன்மக னர்ச்சனையாய்
வரிப்பரிதாய்த்துதிசெய்வனெனமகிழ் வாய்த்தொடியே. 93.

தொடியரினிருழைந்தின்றமனுவுட றெட்டுதித்த
கடவுளைவியக்கனுற்றுவருந்தேல் கடறெடுபா
ருடையுயிர்யாவுமளித்ததின்மூன்று முறைமகற்கா
மடிவிலவாய்மையமிகிலேயோமட வார்க்கொளியே. 94.

ஒளிநகுமார்ந்தநகையுளிராவி லுயரருளான்
களிநகுயாண்டுநிகரகலாவி கடிகொடுங்கோ
ளிளிநகுமேனியிடைப்புக்குலகிடை யீண்டிரவி
திளைநகையாவும்விளக்குதல்போலுனந் தேற்றிடுமே. 95.

தேற்றிடும்வாண்முகத்தீட்டிப்பார்த சிறப்பெழில்யான்
சாற்றிடலாமோவுலகிடைமூன்றிற் றனக்குவமை
யாற்றிடவொன்றிலதொண்மணிமோத மவிழ்மலர்வா
ஞற்றிடுமீனினமெல்லாமுடைத்த நறுமெழிலே. 96.

எழிலிபெய்மாரியின்வெள்ளம்பெருகி யினைகடன்மே
லொழுகிவல்லோடுமுடுகியவாறிணை யுன்மகற்கே
யழகெனயாவுமளித்திடுவாய்மை யடுத்தடுக்கும்
விழைவியகாலதுவானததனை விதிப்பரிதே. 97.

விதிப்பரிதாயவடிவைப்பலகின் விரியுளத்தாற்
சிதைப்பரிதாயதயவுடன்கண்டு திகழுயர்வான்
மதிப்பரிதாயமுறையெழப்பார்த்து மனமகிழ்வா
யெதிர்ப்பரிதாயசெழுமைநல்லாயென வோதினனே. 98.

ஓதியமாற்றஞ்செவியிடைகேட்ப வுடல்பதைப்ப
மாதுளத்தின்புடன் றுன்பிகன்றுலென வாடியருப்
போதுறலாகிப்பெருங்கடலாழ்ந்து பிறழ்விழியான்
யாதெனுமோதுதலில்லாளிருந்ததி விட்டனளே. 99.

விட்டவிருநதிதாயவண்மூழ்கலு மேற்கடலிற்
சுட்டுச்சுடரவன்மூழ்கலுங்கண்டு துணைப்புடைசூழ்
நட்டரிவளைமனைக்கொடுபோகுநற் றேறுதலா
னுட்டங்குறுதியுளைப்பருறவர் வளைவளையே. 100.

அன்னையமுங்கல் அந்தாதி

முற்றிற்று.

வீரமாமுனிவர் செய்த வண்ணம்.

தான தந்தன தான தனுதனு தன-தானதந்தன தான தனு
தனு தன தந்தா தனதன தானதன தானன-தந்தா தன
தன தானதன தானன—தனனதனன தனனத் தானனு.

காரகன்றெளிவானி லெலோனெலோனிரு-டரவங்கிடுதீப
நிலாநிலாவிரு—ளண்டாவொளியின னீறிலனாதிய-னு
ண்டாயவையமை தானொருவனுதிய—னேரமொன்றில
னேர வினுவினுவின-னேரமைந்தொருபாதி தகாதகாரிய
—னொந்தாபரனருடவிய தயாபர-னந்தாநளினக லாபர
பராபர—காரணன்குறையாவுமிலானிலானென-வாறருங்
குணபாவு முளானுளானென மங்காவறிவுடை ஞாபக
வியாபக-னெங்காவலனொரு வாவலிமனுயுதன்—பொருவு
முருவுமிலன்முற் றேகனே.

காயநின்றிழிமாரி திமீதிமீயென-பாயும்வேண்டிரையோதை
குபீர்குபீரென—செந்தாமரைமலர் வாவிகள்சிவேலென-
பைந்தாதவிழ்பொழி னீணிலங்கறேலென—வீயினங்கு
ழனுநி யிமீயிமீயென-மேயனஞ்சிகியாடி ஞுருஞுருவெ
ன—சிந்தேபரவியநீர்நுரைவிளேலென வந்தேயுழியுழி பூ
வயல்பசேலென—காடுமண்டினவாடு மொலீர்மொலீரெ
ன-பாயும்வன்றகரோதைபடீர்படீரென — கன்றுமிரபல
வாழைகள்சரேலென-வின்றேனொழுகுறும் பூதநளிநாடி
னன்—பொலியமருவிமனுவுற்றனரோ.

சூரவும்பர்விடாது பளீர்பளீரென-சூரியன்கதிராடை மளீர்
மளீரென—மின்றாரகைமுடியாகமதிமேவடி-யுன்றுயென
வரு வாயுருவதாயினை— சாரலொன்றியகூகை குகூகுகூ
வென-வாரவொன்றியகோழி கொகோகொகோவென—
சிந்தாமணியெனயாம நடுவேளையில்- வந்தாயொருகுகை
வானவர்கடாடொழ—சூழிறைஞ்சியகோவ ரிரீரிரீரென-

கோளெழுந்தொருமீனும் வரீர்வரீரென—மின்றார்முடியினர் நாடியடிதாழவு-நின்றாரனைவரும் வாழியெனவாழ்தரு—வெருவிலளவிலருணாற் சிதனே,

சோனையங்கரமாரிகொளீர்கொளீரென-வூரிறந்தொழிவானை யெழிலொழீரென—நந்தார்மகிழ்வுற நோய்வினையைமாறினை-நந்தாரயமுலகாரவருளாயினை—வானிழுந்தனதீய விடீர்விடீரென-வேனைநன்றெனயாவு நடீர்நடீரென—பின்றா நெறிநடைவேதமுறையோதினை-யொன்றாமிறைமையினு மங்கிலைபேணினை—தாயுடம்பிழிசோரி குபீர்குபீரென-வாழைகண்டதிர்பூமி பகீர் பகீரென—நொந்தாயெனதுயிர் வாழவுயிர்வீயினை-யெந்தாயதிபரி பாலபரநாயக—கவிஞர் கவிதையினின்ற சேசுவே,

நேரெழுந்துமபாத ஞோல்ஞோலென - சேரவத்திருதாளை விடேன்விடேனென—கண்டாவியபுன லோடவை விளாவினள்-தண்டார்நறுங்குழ ளோடிநதிநீவினள்—நீவியொன்றியவாயும் விளேல்விளேலென-காவியன்றிரள்பூசியநறாவென—நந்தாமுறைகமழ் நானவிளாவீசினள்-பைந்தாதவிழ்மலர் பூமியடிநேடினள்—நேடியுன்பதமாலை யிறேனிறேனென—நீடுகண்டிலளாகி யுயேனுயேனென—சென்றாளருகுகபாலமலைமீதினை-யுன்றாளணிமத லேனை யெனுமானினி—யொருவிலருநல்வினையிற் கோதையே,

நேயநின்றிருநாம விழாவிழாவென-தூயநின்றிரிபாணர் தனுதனுவென—சங்கிதமருவு தாளநிலைவீணைக-ளங்கிதமோடுனை நாளுநனிபாடின—ளீடுபண்படுமோதை செனுசெனுவென-நாடுநின்பெயர்மாலை தனுதனுவென—தண்டாதலர்முக மாமைமிகவாயித-மொண்டாமனாமதுவீகவிழி நீருக — நீருகந்தனைமேவியெழேலெழேலென - சேரவந்தகைநாடி நலீர்நலீரென—தன்காவலனொடு மேவருளையாவையு- முன்காவலிடுசெ சிவியெனுமாதவ—னுயிரினுமுனையணைபொற்பாவையே,

ஆரமுண்டெழுவீர முழாமுழாவென-கூரொழுந்ததிரோதை
முடாமுடாவென — வெஞ்சூலமழுவில் வாளிவசிவேலி
வை-யஞ்சாதெதிரொரு பாதையுனையாவின—ளாவிகொ
ண்டினியானு மிரோனிரோனென-மேவிவந்துறநீயு நிலே
னிலேலென — வன்பூழியபுகழாசிமொழிவாயின-ளின்பூழி
யவரு டேவகருணைசனி—யாசனம்பொலிராச னடராட
ரென-கூசவெம்படைசால தொடர்தொடரென— வந்தே
கொடியர்கை வேல்வெருவிலாடலை-தந்தேயுனதடி மேவி
யபராபரா—செருவிலரியின்விறலிற் பேதையே,

ஆயமஞ்சனயாய நிலாநிலாவென-தூயநின்புகழ்நேரம் விலா
விலாவென — வம்பேரிளமயில் ஞானமுதிர்பேதையள்-
பொம்பேரொனுமலை மீதுதவமேவினள்—மேவலன்பதிகா
வ லிடரிடரென-நேர்விடுங்கணைகூற கலீர்கலீரென — நின்
றேதலையற வீமமிலநீடின-ளொன்றேநிகரற வீரசயமாடி
ன—ளாடியும்பரும்வானில் அஆஅஆவென-பாடியங்கனை
வோரும் ஒஓஒஓவென—விண்டாயினதலை தானிருகை
யேமிசை-கொண்டாளுனதடி நாமமுடிசூடினள்—திருவு
மருளும் பெறுகித்தேரியே.

முற்றிற்று.

பொருளட்டவணை.

முதற் பிரிவு.

ஞானோபதேசத்துக்குரிய பாடல்கள்.

2-ம். பிரிவு. திருப்பாடல்கள்.